
கடோபநிஷத்

ஸ்ரீ சங்கரரின் உரை



தமிழாக்கம்

டாக்டர் பி.கே.சுந்தரம்

வானதி பதிப்பகம்

கடோபநிஷத்

(ஸ்ரீ சங்கரரின் உரை)

தமிழாக்கம்

டாக்டர் பி.கே. சுந்தரம்

வானதி பதிப்பகம்
13.தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : *மார்ச், 2002*

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 40.00

DETAILS OF PUBLICATION

Title	:	Kathopanishad
Tamil Translator	:	Dr. P.K. Sundaram
Language	:	Tamil
Subject	:	Spirituality
Edition	:	First Edition, MARCH 2002
No of Pages	:	Viii+190 = 198
Published by	:	Vanathi Pathippakam 13, Deenadayalu Street T. Nagar, Chennai - 600 017.
Price	:	Rs. 40.00
DTP Typesetting	:	Sri Maruthy Laser Printers 200 (173) Peters Road Royapettah, Chennai - 600 014 Phone : 8522656 / 8524256

Printed at : NOVENA OFFSET PRINTING CO., CHENNAI - 5 ✆ 8446891/8446166

உ

Chennai Book Fair
11 JAN 03

பதிப்புரை

''எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு''

என்பது தமிழ் மறை. பார்க்குமிடந்தோறும் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்திருப்பது இந்தச் செம்பொருள்; ஒவ்வோர் உயிரிலும் நுணுக்கரிய நுண்ணுணர்வாகத் தன்னை இனங் காட்டிக் கொண்டு விளங்குவதும் இந்த உண்மையே. இதே பொது உண்மைதான், 'காக்கை குருவி எங்கள் சாதி' என்று மகாகவி பாரதியைப் பாடவைத்தது. எல்லா உயிரும் உண்மையில் ஒருயிர் என்றால் மனிதரும் தேவரும், விலங்கும் பறவையும் ஒரே இனம் என்றுதானே பொருள்படும்! இதனால் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்!'' என்று உலகச் சமுதாயம் ஒன்று மொத்தமாக மலர்கிறது.

பாரத நாட்டின் உயிர்நிலை என்று சொல்லப்படும் பெருமை உடையவை உபநிடதங்கள். வேதங்களின் முடி, அல்லது முடிந்தமுடிபாகத் திகழ்கின்றவை இவை. 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்!' என்ற மூதுரையும், உபநிடதங்களும் ''உண்மை ஒன்றே; அதன் வடிவங்களே நாம் எல்லாம்'' என்று, உலக வாழ்க்கையின் ரகசியத்தை எடுத்துக்காட்டி, நம்மை நெறிப்படுத்துகின்றன.

இத்தகைய உபநிடதங்களுள் சிறப்பானவை பத்து. இவற்றிற்கு ஆதி சங்கரர் உரை எழுதி, இவற்றின் நுட்பங்

களையும் உட்பொருளையும் மனிதச் சமுதாயத்தின் மீதுள்ள அக்கறையால் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இவை சம்ஸ்கிருத மொழியில் இருக்கின்றன. இவற்றின் மொழி பெயர்ப்புக்கள் பல மொழிகளிலும் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழ் மொழியிலும் இவற்றில் சில, மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றன.

ஆனால் பத்து உபநிஷதங்களுக்கும் ஆதிசங்கரர் செய்த உரைகளையும், ஒரு தொகுதியாகத் தமிழில் வெளியிட வேண்டும் என்று ஓர் எண்ணம், இறைவன் திருவருளாலும் குருவின் திருவருளாலும் எனது உள்ளத்தில் தோன்றியது. இது வளர்ந்து செயலில் நிறைவேறும் காலமும் வந்து கூடியது.

இதன் விளைவாக, சென்னைப் பல்கலைக் கழகத்தில் பல ஆண்டுகள் தத்துவத் துறையில் பேராசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற டாக்டர் பி.கே. சுந்தரம் அவர்களோடு ஒருநாள் பேசினேன். அவரும் ஆர்வத்தோடு இந்த மொழிபெயர்ப்பைச் செய்து தரும் பணியை ஏற்றுக்கொண்டார்.

முதலில், ஈசாவாஸ்ய உபநிஷத்தும், கேனோப நிஷத்தும், கடோபநிஷத்தும், ஸ்ரீ சங்கரரின் உரைகளோடு அவரால் தமிழாக்கம் செய்யப்பட்டன. இவை மூன்றும் தனித்தனிப் புத்தகங்களாக இப்போது வெளியிடப்பட்டுள்ளன. சம்ஸ்கிருத மொழியிலுள்ள மூல நூல்கள் இவற்றில் தரப்படவில்லை. அவை எங்கும் கிடைக்கும் என்பதாலும், மொழி பெயர்ப்பைப் படித்து, அதன் பின்னர் மேலும் இவற்றை மூலநூலின் வழியே பயில வேண்டும் என்ற அவாவினை உண்டு பண்ணுவது மட்டும் எனது சிறப்பு நோக்கம் என்ப தாலும், மூல சம்ஸ்கிருத உரை இவற்றில் தரப்படவில்லை.

கூடிய வரையில் பழகு தமிழில் இந்த மொழி பெயர்ப்பு தரப்படவேண்டும் என்று மொழி பெயர்ப்பாசிரியர் முயற்சி செய்திருக்கிறார். ஆங்காங்கு நேர்ந்திருக்கக் கூடிய இலக்கணப் பிழைகளை ஆசிரியர் உணர்ந்து (எதிர்பார்த்து) தமிழுலகம் மன்னிக்கவேண்டும் என்றும் என் மூலமாகக் கேட்டுக் கொள்கிறார்.

இந்நூலைப் படித்துத் திருத்தங்கள் சொய்துகொடுத்த மயிலை ஸம்ஸ்கிருதக் கல்லூரி வேதாந்தப் பேராசிரியர் திரு. விஜயராகவ சாஸ்திரிகள், மாநிலக் கல்லூரி முன்னாள் இந்திப் பேராசிரியர் டாக்டர் என். ஸ்ரீதரன் ஆகிய இருவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைப்போலவே மற்ற உபநிடதங்களும் ஸ்ரீ சங்கரரின் உரைகளோடு வெளிவர இருக்கின்றன.

வானதி பதிப்பகத்தின் இம்முயற்சியினைத் தமிழுலகம் வரவேற்று மேலும் இப்பணியைத் தொடர ஊக்குவிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்

வானதி திருநாவுக்கரசு

முகவுரை

பன்னரும் உபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை ஏதொரு நூலிது போலே

- மகாகவி பாரதியார்

பத்து உபநிஷத்துக்களுக்கு ஸ்ரீ சங்கரர் இயற்றிய உரைகளைத் தமிழில் தரவேண்டும் என்று, எனது மதிப்பிற்குரிய அருமை நண்பர் திரு. வானதி திருநாவுக்கரசு எனக்கு ஓர் அன்புக் கட்டளையிட்டார். இதை ஏற்று, முதலில் ஈசாவாஸ்ய-உபநிஷத்திற்கும், கேன-உபநிஷத்திற்கும், கட-உபநிஷத்திற்கும் ஸ்ரீ சங்கரரின் உரைகளைத் தமிழாக்கம் செய்து, இந்த மூன்று மெய் நூல்களும் வானதி பதிப்பகத் தாரால் இப்போது வெளியிடப்பட்டுள்ளன.

கூடிய வரையில் சொல்லுக்குச் சொல் நேராக மொழி பெயர்க்க வேண்டும் என்று முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. இது முற்றும் நிறைவேறமுடியாமல் போயிருக்கலாம். அன்பர்கள் மன்னிக்க வேண்டும். இது தவிர, இந்த மொழிபெயர்ப்புக் களில் நேர்ந்திருக்கக்கூடிய குற்றங்களையும் பிழைகளையும் பெரியோர்கள் மன்னித்து-குணங்கள் இருந்தால் ஏற்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் மற்ற ஏழு உபநிஷத்துக்களையும் மொழி பெயர்க்கும் பணியைத் தொடர்ந்து முடித்து விடவேண்டும்

என்று திரு. வானதி திருநாவுக்கரசு உறுதி பூண்டிருக்கிறார். இப்பணி செவ்வனே முடிய குருவருளையும் திருவருளையும் வேண்டுகிறோம்.

பத்து உபநிஷத்துக்களையும் வரிசைப் படுத்தும் முறை சிறிது வேறுபடுவதுண்டு. கீழ்க் கண்ட வரிசையைக் கடைப் பிடிக்கலாம் என்பது எங்கள் திட்டம்.

ஈச-கேன-கட-ப்ரச்ன-முண்ட-மாண்டூக்ய - தித்திரி: ।
ஐதரேயம் ச சாந்தோக்யம் ப்ருஹதாரண்யகம் தச ॥

இந்தப் பத்து உபநிஷத்துக்களின் உரைகளையும் ஒரு தொகுதியாகத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்குத் தரவேண்டும் என்பது வானதி பதிப்பகத்தாரின் உயரிய நோக்கம். அது இனிது நிறைவேறுமாக. இந்த நூல்களை ஸ்ரீ சங்கரரின் பாதத் தாமரைகளுக்குப் பணிவான காணிக்கை ஆக்குகிறோம்.

இந்தத் தமிழ் மொழி பெயர்ப்புக்கள் வெளிவர வேண்டிய தேவையை உணர்ந்து, என்னை இம் முயற்சிக்கு வெகு நாட்களுக்கு முன்பே தூண்டியவர், நண்பர், இந்தியன் வங்கியில் பெரும் பொறுப்பில் இருந்து ஓய்வு பெற்ற திரு எம். திருநாவுக்கரசாகும். அவருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மூன்று உபநிஷத்துக்களின் மொழி பெயர்ப் பையும் சிறந்த முறையில் அச்சிட்ட வானதி பதிப்பகத் தாருக்கும் என் பாராட்டுக்கள்.

பி.கே. சுந்தரம்

பொருளடக்கம்

மொழிபெயர்ப்பாளரின் முன்னுரை

1:1

சிறுவன் நசிகேதஸ்ஸுக்குத் தருமதேவதை உபதேசித்த மெய்ஞ்ஞானம் அடங்கியது இந்தக் **கட-உபநிஷத்**. இது **கிருஷ்ண-யஜுர்** வேதத்தைச் சேர்ந்த உபநிஷத்தாகும். இது இரண்டு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அத்தியாயமும் மூன்று வல்லீகளாகப் பிரிகின்றது.

வாஜசிரவஸ் என்னும் பெரியவர் **விச்வஜித்** என்ற பெயருடைய ஒரு வேள்வியைச் செய்தார். இந்த வேள்வியின் சிறப்பு என்னவென்றால், இதைச் செய்பவர்கள் தங்களது எல்லா உடைமைகளையும் நன்கொடையாகப் பிறருக்குக் கொடுத்து விட வேண்டும். வாஜசிரவஸ்ஸும் இப்படிக் கொடுத்தார்.

வாஜசிரவஸுக்கு ஒரு மகன் இருந்தான். இளம்பாலகன். இதையெல்லாம் அவன் பக்கத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான். தந்தை பசுக்களைப் பிறருக்குத் தானமாகக் கொடுத்த பொழுது, ''இதென்ன? பயன்தர இயலாத பசுக்களைத் தானமாகக் கொடுக்கிறார் தந்தை? இதனால் அவருக்குப் பாவம் அல்லவா வந்து சேரும்?'' என்று மனதில் ஏற்பட்ட ஆதங்கத்துடன் தந்தையிடம் சொன்னான்: ''பிரியமான உயர்ந்த பொருளை யல்லவா தானம் செய்ய வேண்டும்? என்னை தானமாகக் கொடுங்கள் அப்பா! யாருக்கு என்னைத் தானம் செய்வீர்கள்?''

ஒரு தடவை! இரண்டு தடவை!! திரும்பத் திரும்பக் கேட்டான்.

இதனால் எரிச்சலடைந்த வாஜசிரவஸ் ''உன்னை யமனுக்குத் தானமாகக் கொடுத்துவிட்டேன்'' என்று கடுமை யாகப் பேசிவிட்டார். சிறிது நேரத்திற்கெல்லாம் ''ஐயோ! கோபத்தில் இப்படியெல்லாம் தாறுமாறாகக் குழந்தையிடம் பேசிவிட்டேனே!'' என்று தந்தை பச்சாத்தாபப்பட்டார்.

சிறுவன் நசிகேதஸ்ஸுக்கு இது வருத்தமளித்தது. தந்தை யைச் சமாதானம் செய்து யமலோகம் சென்றான். யமன் அங்கு அப்பொழுது இல்லை. எனவே அங்கு மூன்று இரவுகள் யமனுடைய இல்லத்தின் வாயிலில் தங்கவேண்டியிருந்தது.

வீடு திரும்பிய யமன், ஒழுக்கத்தில் சிறந்த சிறுவன் நசிகேதஸ்ஸைப் பார்த்து: ''மூன்று இரவுகள் என் இல்லத்தில் எனக்காக உன்னைக் காக்க வைத்ததற்குப் பரிகாரமாக, மூன்று வரங்களைத் தருகிறேன் கேள்!'' என்று பரிவுடன் சொன்னான்.

நசிகேதஸ் கேட்ட மூன்று வரங்களாவன: (i) என்னு டைய தந்தை என் மீது கோபம் தணிந்து என்னைப் பற்றிய கவலையில்லாமல், நான் திரும்பி அவரிடம் போகும்பொழுது என்னை மறந்துவிடாமல் என்னோடு எப்போதும் போல் பேச வேண்டும். (ii) சுவர்க்கத்தை (விண்ணுலகத்தை) அளிக்கும் அக்கினியைப் பற்றி எனக்குச் சொல்லவேண்டும். (iii) உலகத்தில் ஒரு மனிதன் இறந்தபின் அவனது ஆத்மா தொடர்ந்து இருக்கிறது என்று சிலரும், அது தொடர்ந்து இல்லை என்று மற்றும் சிலரும் சொல்லுகிறார்கள். இதில் எது உண்மை என்று நீர் எனக்குத் தெளிவாகச் சொல்லவேண்டும்.

இதில் இரண்டாவது வரமாக நசிகேதஸ் கேட்ட, அக்கினியைப் பற்றி யமதருமன் விளக்கியதை நசிகேதஸ் தெளிவாகத் தெரிந்துகொண்டு அதை அப்படியே பிழை யில்லாமல் யமதருமனிடம் திரும்ப ஒப்பித்தான். இதனால்

மகிழ்ந்த யமன், ஒருவரத்தைத் தானாகவே மனமுவந்து நசிகேதஸ்ஸுக்குக் கொடுத்தான். நசிகேதஸ் யமனைக் கேட்டு அறிந்த அக்கினி, உலகத்தில் நசிகேதஸ்ஸின் பெயராலேயே 'நாசிகேத-அக்னி' என்று புகழ்பெறும் என்று யமன் கொடுத்த கூடுதல் வரத்தையும், யமனே முன் வாக்களித்த மூன்று வரங்களையும் சேர்த்து மொத்தம் நாலு வரங்களை நசிகேதஸ் பெற்றான். அதாவது - அவனாகக் கேட்டுப் பெற்றது மூன்று; யமனாக மகிழ்ந்து கொடுத்தது ஒன்று, மொத்தம் நான்கு.

தந்தையைப் பற்றியும், அக்கினியைப் பற்றியும் நசிகேதஸ் கேட்ட வரங்களைக் கொடுப்பதில் யமனுக்கு எந்த விதமான சிரமமும், தயக்கமும் ஏற்படவில்லை. ஆனால் அவன் கேட்ட மூன்றாவது வரத்தைக் கொடுப்பதில் யமனுக்குச் சிக்கல் ஏற்பட்டது.

எனவே, யமன் அந்த வரத்தைத் மாற்றித்தரும் நோக்கில் நசிகேதஸ்ஸுக்குப் பல ஆசைகள் காட்டி, அதைக் கேட்காமலிருக்கும்படிச் செய்ய முயன்றான். அதற்காக யமன் பின்வருமாறு வாதாடினான்:

''நீ கேட்ட இந்த விஷயத்தைக் குறித்து தேவர்களுக்கிடையே கூட பெரும் ஐயப்பாடு இருந்தது. அவர்களுக்கும் நிச்சயமாகத் தெரியவில்லை. நசிகேதா! இந்த வரத்தைத் தவிர சந்தேகத்துக்கு இடமில்லாத வேறு ஏதாவது வரத்தைக் கேளேன். கடன் கொடுத்தவன், கடன் வாங்கினவனைக் கட்டாயப்படுத்தி, 'கடனைத் திருப்பிக் கொடு' என்று நெருக்குவது போல என்னை வற்புறுத்தாதே!

''உலகத்தில் சாதாரணமாக எங்கும் கிடைக்காத இன்பங்களை எல்லாம் உனக்குத் தருகிறேன். தேர்களையும், பணியாட்களையும், இசைக்கலைஞர்களையும், இசைக்கருவிகளையும், ஆடல்வல்ல அழகிகளையும் உனக்கு இப்போதே கொடுக்கிறேன். இவைகளைக் கொண்டு மகிழ்ச்சியில்

திளைத்திரு. ஆனால், மரணத்திற்குப் பின்னர் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி மட்டும் கேட்காதே. என்னை விட்டுவிடு'' என்று யமன் கெஞ்சினான்.

இவ்வாறு ஆசை காட்டப்பட்டாலும், நசிகேதஸ் சிறிதும் கலங்காமல் சொன்ன பதில் மிகவும் புகழ் வாய்ந்தது. நசிகேதஸ் சொன்னான் :

''தருமதேவதையே! நீ கொடுப்பதாகச் சொல்கிற இத்தனைச் சிற்றின்பங்களும் நிலையானவையல்ல. அவை என்னுடைய ஆற்றலையெல்லாம் அழித்து விடும். அறிவையும் ஆற்றலையும் புகழையும் கொண்டுபோய் விடும். எல்லா உயிர் வாழ்க்கையும் கொஞ்ச காலம்தான். பிரம்மாவாகவே இருந்தாலும், அவரது ஆயுளும் ஒருநாள் முடிந்துவிடும். உன்னுடைய தேர்களையும், ஆடல்பாடல்களையும் நீயே வைத்துக் கொள்.

''மனிதன் பணத்தினால் திருப்தி அடைவதில்லை; அவனது ஆசைக்கோர் அளவுமில்லை. மேலும், உன்னைக் கண்ணாரக் கண்ட பிறகு, செல்வத்திற்கு என்ன குறைச்சல்? எவ்வளவு நாள் நாங்கள் வாழ வேண்டுமென்று நீ தீர்மானித்திருக்கிறாயோ அவ்வளவு நாள்தான் நாங்கள் உயிர் வாழ முடியும். ஒரு நிமிடம் கூட அதற்குமேல் உயிரோடிருக்க முடியாது. மரணத்தை நிச்சயிக்கும் காலதேவனான உன்னைக் கண்ணால் பார்த்தபிறகு, உயிர் வாழ்வதைப் பற்றி என்ன கவலை இருக்கமுடியும்? யுகம் யுகமாகக்கூட சாகாமல் உயிர் வாழலாம்.''

''ஆனால் அப்படி உயிர்வாழ்வது முக்கியமென்று நான் நினைக்கவில்லை. நீண்டகாலம் உயிர்வாழ்வதில், புத்தி யுள்ளவன் எவனும் ஆசை வைக்கமாட்டான். வீடு, வாசல், மக்கள், சுற்றம் என்று பாமரர்கள் ஆசைப்படுவதைப் போலவே புத்தி உள்ளவனும் செய்தால், அப்புறம் புத்தி இருந்து என்ன

பயன்? எனவே, மெய்ப்பொருள் பற்றிய உண்மையை நீ சொல்லவேண்டும் என்ற இந்த வரத்தைத் தவிர வேறொன் றையும் மனத்தினால் கூட நான் நினைக்கமாட்டேன்'' என்றான் சிறுவன் நசிகேதஸ்.

இந்த வரலாறு கடோபநிஷத்தின் முதல் அத்தியாயத்தில் முதல் வலலீயில் சொல்லப்பட்டது.

1:2

இனி கடோபநிஷத்தின் - முதல் அத்தியாயத்தின் இரண்டாவது வல்லீயில் கூறியவற்றைக் காண்போம் -

நசிகேதஸ்ஸின் மனஉறுதியைச் சோதித்து அறிந்த யமதருமன், மெய்யறிவிற்குத் தகுதியுடையவன் இந்தப்பிள்ளை என்று நிச்சயமடைந்து, அந்த மெய்யறிவை அவனுக்கு எடுத்துரைத்தான்:

''நசிகேதா! மனிதன் விரும்ப வேண்டியது என்பது ஒன்று; ஆனால் அவன் விரும்புவது வேறொன்று. இந்த இரண்டு இலட்சியங்களுமே வெவ்வேறு பயன்களை உடைய வை. விரும்ப வேண்டியது விடுதலை; இதை விரும்புகின்ற வர்கள் மிகுந்த நன்மையை அடைகிறார்கள். இதற்கு மாறாக, தங்கள் மனத்திற்குப் பிடித்த சிற்றின்பங்களை விரும்புகின்றவர் கள், துன்பத்தை அடைகிறார்கள்.''

''இந்த இரண்டு இலட்சியங்களும் இரண்டு வெவ்வேறு வகையான மனிதர்களால் வேண்டப்படுபவை. முக்திநிலை - அறிவை முன்னிட்டுக்கொண்டு வருவது. உலக இன்பங்களோ அறியாமையை ஆணிவேராக உடையவை.''

''அன்னப்பறவை நீரையும் பாலையும் பிரித்து, பாலை மட்டும் உட்கொள்வது போல, அறிவுடைய ஒருவன் இந்த இரண்டு இலட்சியங்களையும் பகுத்தறிந்து, முக்தியை மட்டுமே

விரும்புகிறான்; அறிவில்லாதவன் பகுத்தறிவின்றிச் சிற்றின்பங் களையே நாடுகிறான். நசிகேதா! நீ முதல் வகையைச் சேர்ந்தவன். நீ சிற்றின்பங்களை வேண்டாமென்று உதறித்தள்ளி விட்டு, முக்தியையே தேர்ந்தெடுத்தாய்! மெய்யறிவையே வேண்டுமென்று என்னிடம் கேட்டாய்! உன்னுடைய விவே கத்தை என்னவென்று சொல்வேன்!

''இந்த உலகத்தில் பார்ப்பதே நிச்சயம்; மறுஉலகம் என்பது ஒன்றும் இல்லை'', என்று எண்ணிக்கொண்டிருப் பவர்கள் திரும்பத்திரும்ப மரணத்தின் வலைக்குள் வந்து வீழ்கிறார்கள். பெண்ணும், மண்ணும், பொன்னுமே வாழ்க்கை என்று நினைப்பவர்கள் யமனான என்னிடம் வந்து அப்புறம் மீள்வதில்லை. பிறவிச் சுழலில் சுற்றிச் சுற்றி முடிவில்லாமல் அலைகிறார்கள்.

''மெய்யறிவைப் பெற்று, மெய்ப்பொருளை உணர் வதற்கு, ஓர் ஆசிரியரை அண்டித்தான் ஆகவேண்டும். அந்த ஆசிரியரும், தானே மெய்யுணர்ந்த பெரியவராக இருக்க வேண்டும். மற்றவர்கள் மூலம் இந்த மெய்யறிவு வராது. தகுந்த ஆசிரியரிடம் உபதேசம் பெற்று, உண்மை தெரிந்த பிறகு - எந்த ஒரு சந்தேகமும் இருக்காது.

''மேலும், தன்னுடைய ஆத்மாவான மெய்ப்பொருளை உணர்ந்த பிறகு, தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றும் மிச்சமிருக்காது; மீண்டும் மீண்டும் பிறவி, மரணம் என்று மாறி மாறி வருவது நின்றுவிடும்.

''வெறும் வறட்டு ஆராய்ச்சியினாலோ, திறமையி னாலோ மெய்யறிவு வராது. குருமுகமாகவும், வேதத்தின் மூலமாகவும்தான் அது கிட்டும்.''

''அவரவர் உள்ளத்திலே வீற்றிருக்கும் மெய்ப் பொருளான ஆத்மாவை, அவரவர் எப்பொழுதும் சிந்திக்க வேண்டும்.

''நசிகேதா! உனக்கு இன்னொன்றும் சொல்லுகிறேன். 'ஓம்' என்றப் பிரணவ ஒலியே மெய்ப்பொருளின் பெயரும் சின்னமும் ஆகும். இதை ஒருவன் எப்பொழுதும் சிந்தித் திருக்கவேண்டும். மெய்ப்பொருளான பிரம்மத்தை மனத்தில் வாங்கிக்கொள்வதற்கு, இந்த 'ஓம்' என்ற ஒலியை சிந்திப்பதை விட வேறான வழி கிடையாது.

''மெய்ப்பொருள் பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை. அது வேறு ஒன்றினின்றும் உண்டாகவில்லை, அதிலிருந்து வேறு எதுவும் உண்டாகவுமில்லை. அது அணுவிற்கும் அணுவானது; பெரியதையெல்லாம்விடப்பெரியது. அது அவர வர் இதயத்துக்குள்ளேயே பிரகாசிக்கிறது. தூய மனம் உடைய ஒருவன் அதை நேரடியாக உணரலாம்.

''இந்த மெய்ப்பொருளைப் பேச்சுத் திறமையாலோ, மேதாவிலாஸத்தினாலோ, நிறையப் படிப்பதனாலோ அறிய முடியாது. ஆனால் மனத்தூய்மையோடு அதைத் தெரிந்து கொள்ள விரும்புகின்றவனுக்கு, அது தானாகவே தன்னை வெளிப்படுத்திக் காட்சி தருகிறது.''

1:3

இனி கட-உபநிஷத்தின் முதல் அத்தியாயத்தில் மூன்றாவது வல்லீயில் சொல்லியிருக்கும் செய்திகளாவன:

உடலில் வசிக்கும் மெய்ப்பொருளை ஜீவன் அல்லது சிற்றுயிர் என்று அழைக்கிறோம். இதுவே வினைகளின் பலனை அநுபவிக்கிறது. இந்த வினைகளிலிருந்து விடுதலையடைவதா அல்லது அவற்றினால் கட்டுண்டு கிடப்பதா என்பதை இந்தச் சிற்றுயிராகிய மனிதன் தான் நிச்சயிக்க வேண்டும். விடுதலை பெற்றுத் தன் மெய்ந்நிலையை திரும்ப அடைவதா அல்லது உடற்கூட்டிற்குள் அடைபட்டுச் சிற்றுயிராகவே தொடர்ந்து வளையவருவதா என்பதை இந்தச் சிற்றுயிர்தான் தீர்மானிக்க வேண்டும்.

இதை நன்கு தெளிவாக்குவதற்காக ஒரு தேரை உதாரணமாக உபநிஷத் காட்டுகிறது.

உடல் ஒரு தேர் என்றால், உயிர் அந்தத் தேரின் சொந்தக்காரன். புத்தி அதைச் செலுத்தும் தேரோட்டி. மனமே குதிரைகளுக்கு லகான். கண், காது முதலிய புலன்களே குதிரைகள். அந்தப் புலன்களுக்குரிய பொருட்கள்தான் தேரோடும் பாதைகள். உயிர் என்ற சொந்தக்காரன் இந்த உடல், புலன், புத்தி, மனது முதலியவற்றோடு கூடிப் பல அநுபவங்களைப் பெறுகிறான். இவற்றை நன்கு கட்டுப்படுத்திக் கையாண்டு செலுத்தும் உயிர், முக்திக்குத் தகுதி பெறுகிறது. அவ்வாறு இல்லாவிட்டால், உலக வாழ்க்கையிலேயே தொடர்ந்து உழல்கிறது.

இந்த உடல் முதலியவற்றை மெய்யறிவினால்தான் வெற்றிகொள்ள வேண்டும். இதை வகைப்படுத்திக் காட்டுகிறது உபநிஷத்.

கண், காது முதலிய புலன்களைவிட அவற்றால் தெரிவிக்கப்படும் பொருட்கள் நுட்பமானவை. உதாரணமாக, கண்ணைவிட அதுகாட்டும் காட்சி நுட்பமானது. காதைவிட அது கேட்கும் ஒலி நுட்பமானது.

புலனாகும் எல்லாப் பொருட்களையும்விட மனம் நுட்பமானது. மனத்தைவிட புத்தி நுட்பமானது. தனிப்பட்ட ஒருவனின் புத்தியைவிட எல்லாப் புத்திகளின் மொத்த வடிவான மஹத் என்ற ஆதார புத்தி இன்னும் நுட்பமானது. இந்த மஹத்தைவிட, காரியமாக இன்னும் மலராமல் காரணமான கருநிலையில் ஒரு மரத்தின் விதைபோல் இருக்கும் மாயை இன்னும் நுட்பமானது. இந்த மாயையைவிட மெய்ப்பொருள் நுட்பமானது. ஆனால் மெய்ப்பொருளைவிட நுட்பமான ஒன்று கிடையாது. அதுவே வீடுபேறு; எல்லாவற்றிற்கும் முடிவான இடம்.

நுண்ணறிவினால் படிப்படியாக உட்சென்று மெய்ப் பொருளை இந்த முறையில் அறியலாம். இதற்குரிய ஒரு யோக சாதனமும் உபநிஷத்தில் சொல்லப்படுகிறது. அது வருமாறு :

மெய்யறிவை விரும்புபவன், முதலில் தனது பேச்சை மனத்தில் ஒடுங்கச் செய்யவேண்டும். அந்த மனத்தைப் புத்தியில் ஒடுக்கவேண்டும். தனிப்பட்ட புத்தியை மஹத் என்ற மொத்த புத்தியில் ஒடுக்க வேண்டும். அந்த மஹத்தை மெய்ப் பொருளாகிற ஆத்மாவில் ஒடுக்க வேண்டும்.

இவ்வாறு வரிசைப்படுத்தி யோகப் பயிற்சியைச் சொல்லிவிட்டு, உபநிஷத் எல்லோருக்கும் உரத்த குரலில் கட்டளையிடுகிறது: ''எழுந்திருங்கள்! விழித்துக் கொள்ளுங் கள்! தக்க ஆசிரியரை அடைந்து அறிவு பெறுங்கள்! இந்தப் பாதை மிகவும் கடினமானது. தீட்டிய கத்தியின் முனைபோல் கூரானது. குணங்குறிகளற்றதும், தன்னைத் தவிர வேறொன்று இல்லாததுமான 'மெய்ப்பொருளே நான்!' என்று உணர்ந்து விடுதலை பெறுங்கள்!'' என்று உபநிஷத் அழைக்கிறது.

யமதருமனால் நசிகேதஸ்ஸுக்குச் செய்யப்பட்ட இந்த நாசிகேத உபாக்கியானம் என்னும் உபதேசத்தைச் சொல்லுபவர் களும் அதைக் கேட்பவர்களும் பரம்பொருளை அடைவார்கள். மூதாதையர்களுக்குச் செய்யும் சிராத்தம் என்ற சடங்கின்போது கடோபநிஷத்தின் இந்தப் பகுதியைப் படிப்பவர்கள் உயர்ந்த பலன்களைப் பெறுவார்கள்.

2:1

இனி, கடோபநிஷத்தின் இரண்டாவது அத்தியாயத்தின் முதல் வல்லீயில் சொல்லப்பட்டிருக்கும் செய்திகள் வருமாறு:

எல்லோரிடத்தும் மெய்ப்பொருள் என்ற ஆத்மா உறைவது உண்மையெனில், அதை எல்லோரும் உணர முடியாமல் தடுப்பது எது என்று கேட்டால், நம் கண், காது முதலிய புலன்களே - எனக்கூறலாம். அவை தங்களுக்கு

வெளியே உள்ள பொருட்களை மட்டும் பார்க்கும்படியாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் தனக்கு உள்ளேயே இருக்கும் மெய்ப்பொருளை ஒருவரும் உணரமுடிவதில்லை ஆயிரத்தில் ஒருவர், தம் பார்வையை உள்முகமாகத் திருப்பி அந்த மெய்ப் பொருளை அறிந்து முக்தி அடைகிறார்.

'உள்ளிருக்கும் மெய்ப்பொருளை அறிய வேண்டும் என்று சொல்கிறீர்கள்; அதுவே எல்லாவற்றையும் அறியும் அறிவு என்றும் சொல்கிறீர்கள். ஆனால் பொதுவாக எல்லோரும் தம்மைப் பற்றி உடம்பு, புலன்கள், மனம், புத்தி என்று தான் நினைக்கிறார்களே தவிர, இவற்றைத் தவிர வேறு ஒரு மெய்ப்பொருள்தான் உண்மை என்றோ எல்லாவற்றையும் அறிகின்ற அறிவு அது என்றோ நினைப்பதில்லை. ஆகவே, மெய்ப்பொருள் என்ற ஒன்று இருப்பதாக நம்பவேண்டிய தில்லை' என்று சிலர் சொல்கிறார்கள்.

ஆனால் இது சரியன்று. அறியப்படும் பொருட்களான ஒலி முதலியவற்றைப் போன்று, உடம்பும் ஓர் அறியப்படும் பொருளாகத் தான் இருக்கிறது. எனவே அது அறியும் அறிவாக இருக்க முடியாது. மேலும் ஒலி முதலிய உயிரற்ற மூலப் பொருட்களால்தான் உடம்பும் ஆக்கப்பட்டிருக்கிறது. எனவே ஜடமான ஒலி முதலியவற்றை ஜடமான உடம்பு அறியமுடியு மானால், ஒலி முதலியவையும் ஒன்றையொன்று அறியக்கூடிய சக்தியையும், தம்மைத் தாமே அறியக்கூடிய சக்தியையும் பெற்றிருக்கும். ஆனால் இப்படி உலகில் நடப்பதில்லை.

காய்ச்சப்பட்ட இரும்புத் துண்டு மற்றப் பொருட்களை எரிக்கும்போதும், எரிப்பது உண்மையில் நெருப்பு தான், இரும்பல்ல என்று தெரிந்து கொள்வதுபோல உடம்பு, கண், காது முதலிய புலன்களும், மனது, புத்தி முதலிய அறிவுக் கருவிகளும் வேலை செய்யும்பொழுது, மெய்ப் பொருள் என்ற அறிவுச் சக்தியினால்தான் இவை அறியும் சக்தி பெறுகின்றன

என்பதும், தாமாகவே அறியும் சக்தி அவற்றிற்குக் கிடையாது என்பதும் நன்கு தெரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது.

மேலும், உலகத்திலுள்ள அத்தனை சக்திகளும் மெய்ப் பொருளின் சக்தியினால்தான் இயங்குகின்றன. சூரியன் உதிப் பதும் மறைவதும் மெய்ப்பொருளைச் சார்ந்தே நடக்கிறது. இதேபோல் எல்லா தெய்வங்களும் இந்த மெய்ப்பொருளில் அடங்கி விடுகின்றன.

மெய்ப்பொருளாகிற பிரம்மம் தான் இந்த உலகங் களாகத் தோன்றுகின்றது. பற்பல வேற்றுமைகளை பொய்யான மாயத் தோற்றங்கள் என்று அறியாமல் அவற்றை உண்மை யென்று நம்பி ஏமாந்து போகிறவன், மரணத்திலிருந்து மரணத்தை அடைந்து, எல்லாப் பிறப்பும் பிறந்து இளைக் கின்றான். நன்றாகச் சிந்தித்து இந்தப் பேருண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்.

மலையுச்சியிலிருந்து பாயும் ஓர் ஆறு, பலபாறைகளில் விழுந்து சிதறுண்டு போவது போல, மெய்ப்பொருளைப் பற்றித் தெரியாமல், அதன் தோற்றங்களை உண்மையென்று நம்பி, மனிதன் தனது அறிவை அவற்றில் சிதறுண்டு போகச் செய்கின்றான்.

தூய நீரைத் தூய நீருடன் கலந்தால் அவற்றுள் வேற் றுமை இல்லாமலிருப்பதுபோல, மெய்ப்பொருளை அறிந்தவன், மெய்ப்பொருளாகவே ஆகிவிடுகிறான்.

2:2

கடோபநிஷத்தில் இரண்டாவது அத்தியாயத்தில் இரண்டாவது வல்லீயில் கூறப்படும் கருத்துக்கள் வருமாறு:

இந்த உடம்பு, மெய்ப்பொருள் என்னும் தலைவன் அரசு புரியும் நகரம். இதற்கு பதினோரு வாயில்கள் உண்டு; வாயிற் க்ாப்போர், சேனை, சேனைத் தலைவர்கள் என்ற அரசாங்கம்

உண்டு. ஒரு நகரம் அதன் அரசனுக்காகவே ஏற்படுத்தப் படுகிறது. ஆனால் அரசாங்கத்தில் அரசன் அடங்கமாட்டான். அதற்குத் தலைவனல்லவா அவன். மற்றதெல்லாம் அவனுக் காகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவனோ சுயேச்சையாக அவற்றை ஆள்பவன்.

இதுபோலவே இந்த உடம்பு என்னும் நகரத்திற்கும் பதினோரு வாயில்கள் உண்டு. இவற்றில் ஏழு - தலையிலும், உடலின் கீழ்ப்பாகத்தில் மூன்றும், தலையின் உச்சியில் ஒன்று மாக மொத்தம் பதினோரு வாயில்கள். இதற்கும் புத்தி, மனம் போன்ற சேனைத் தலைவர்கள், கண், காது முதலிய வாயிற் காப்போர்கள் எல்லாம் உண்டு.

இதில் ஒளிரும் மெய்ப்பொருள் இதற்கு அரசன். இந்த அரசனை நன்கு சிந்தித்துத் தெளிவு பெற்றால் துயரங் களிலிருந்து மீளலாம்; அச்சமின்றி இருக்கலாம். இந்த உயிர் வாழ்க்கையிலேயே, ஆசாபாசங்களிலிருந்தும், கடமை கட்டுப் பாடுகளிலிருந்தும் விடுதலையாகி நிற்கலாம். பின் இந்த உடலென்னும் சிறைக்குள் மறுபடி வரவேண்டியதேயில்லை.

ஆயினும் மெய்ப்பொருளுக்குரியது ஒரு நகரம்தான் என்பதில்லை. அதற்கு எத்தனையோ நகரங்கள் உண்டு. சூரியன், விண்ணுலகம், பூமி, வேள்வியில் அளிக்கப்படும் ஸோமக்கொடியின் சாறு, அது வைக்கப்படும் கிண்ணம், மனிதர், தேவர், ஆகாயம், நீர், மலை, காடு என்ற இவை யெல்லாம் கூட மெய்ப்பொருளின் நகரங்கள் தான்.

இறந்தபின் உயிர்கள் எங்கு செல்கின்றன என்று நசிகேதஸ் கேட்டானல்லவா? அதற்கு உபநிஷத் பதில் சொல்லு கிறது. உண்மைகள் தெரியாமலே, அறியாமையிலேயே மூழ்கி வாழ்ந்து விட்டவர்கள் மறுபடி மறுபடி தாயின் வயிற்றுக்குள் வந்து பிறக்கிறார்கள். இவர்களிலும் ரொம்பத் தாழ்ந்த

நிலையில் உள்ளவர்கள் மரம், புல், பூண்டாகப் பிறக்கிறார்கள். அவரவர் எப்படியெப்படி நடந்து கொண்டார்களோ, எவ்வளவு தூரம் அறிவைப் பெற்றிருந்தார்களோ, அதற்கேற்ப பிறவிகளை அடைகிறார்கள்.

இனி, உலகில் பலவாறாகக் காணப்படும் வேற்றுமைத் தோற்றங்கள் எப்படி உண்டாகின்றன - என்பதை, உபநிஷத் உவமைகள் மூலமாக எடுத்துக்காட்டுகிறது.

நெருப்பு எந்தப் பொருளை எரிக்கிறதோ, அந்தப் பொருளின் வடிவத்தை எடுத்துக் கொள்கிறது. 'மரம் எரிகிறது' 'மட்டை எரிகிறது' என்றெல்லாம் பேச்சுவழக்கு இதனால் ஏற்படுகிறது. ஆனால் நெருப்பு ஒன்றுதான்.

இதுபோல, மெய்ப் பொருள் ஒன்றாக ஒரே விதமாக இருந்தாலும், உலகில் பல் வேறு வடிவங்களில், காணப் படுகிறது. இதனால் 'மனிதன்' 'மாடு' என்று, பேச்சு வழக்கு ஏற்பட்டிருக்கிறது.

தோற்ற வேற்றுமைகளுக்குள்ளும் ஒரே உண்மை இருப்பதை யார் அறிகிறார்களோ, அவர்கள்தான் அமைதியும் ஆனந்தமும் பெறுகிறார்கள். இந்த மெய்ப்பொருள் ஒன்றின் ஆணைப்படி மற்றதெல்லாம் ஒழுங்காக நடக்கின்றன. சூரியனும், சந்திரனும், மின்னலும், நெருப்பும் இதனால் ஒளிபெறுகின்றன. மெய்ப்பொருளோ எதையும் சாராமல் தன் னொளியினாலேயே விளங்குகிறது.

2:3

இனி கடோபநிஷத்தின் இரண்டாவது அத்தியாயத்தில் மூன்றாவது வல்லீயில் கூறப்படும் செய்திகள் வருமாறு –

ஒரு மரத்தின் பூவைப் பார்த்து, அந்த மரத்தின் ஆணிவேர் வரைக்கும் ஊகித்து அறிவது போல, இந்த உலகம் என்ற மரத்தை நன்கு ஆராய்ந்தால், அதன் ஆணிவேரான பரம்பொருளை அறியலாம்.

ஆனால் இந்த உலகம் என்ற மரம் அதிசயமானது. இதற்கு வேர்கள் மேலேயும் கிளைகள் கீழேயும் படர்ந்திருக் கின்றன. தூய பரம்பொருளே இதன் வேர்.

மரத்தை விருக்ஷம் என்று வடமொழியில் சொல்வார்கள். 'வெட்டிச் சாய்க்கப்படக் கூடியது' என்ற குறிப்பு அந்தப் பெயரில் அடங்கியிருக்கிறது. அதேபோல் வர்ணிக்கப்பட்ட உலகையும் ஏன் வெட்டிச் சாய்க்க வேண்டும் என்றால், அது பல தீமைகளுக்கு இடமாயிருக்கிறது. பிறவி, மரணம், முதுமை, துயரம் முதலியவை இதில் ஏற்படுகின்றன.

இந்த மரம் ஓயாமல் மாறிக் கொண்டே இருக்கிறது. மாயாஜாலம் போலவும், பாலைவனத்தில் கானல் நீர் போலவும், மேகங்கள் ஒரு நகரம் மாதிரித் தோன்றுவது போலவும் இந்த மரம் நாம் பார்த்துக்கொண்டிருக்கும்போதே மாறுகிறது; கடைசியில் இல்லாமலேயே போய்விடுகிறது. வாழைமரத்தின் தண்டைப் போல சத்தும் சாரமுமில்லாமல் எளிதில் முறிந்து விடுகிறது.

எல்லாவிதமான சந்தேகங்களுக்கும் இடமாயிருக்கிறது. இதைப் பற்றிய உண்மையை மெய்யறிந்த சான்றோரே அறிவார்கள். அறியாமை என்பதே இந்த மரத்தின் வித்து; ஆசை என்னும் நீர் இதை வளர்க்கிறது. கண், காது முதலிய புலன்கள் மூலம் பெறும் செய்திகளே இதன் இளம் தளிர்கள்.

வேதங்களும், சாத்திரங்களும், கல்வியும் இதன் இலை கள். வேள்விகளும், தானமும், தவமும் இதன் அழகிய மலர்கள். இன்பமும் துன்பமும் இதன் பழங்கள்.

இதன் கிளைகளில் ஏழு உலகங்களும் பறவைகளின் கூடுகள் போல் கட்டப்பட்டிருக்கின்றன. பறவைகளின் இரைச் சலைப் போலவே இதிலும், ஆடலும் பாடலும், இசைக் கருவி களின் இனிய ஓசைகளும், கைகொட்டிச் சிரித்தலும், அழுதலும் ''ஐயோ! அப்பா!'', ''என்னை விட்டுவிடு, என்னை விட்டு விடு'' என்ற துயரக் கூப்பாடுகளும் - ஓலங்களும் - ஒன்று கலந்து, ஒரே சந்தடியினால் நிரம்பியிருக்கிறது இந்த மரம்.

பரம்பொருள் ஒன்றே உண்மை; மற்றதெல்லாம் மாயை என்ற அறிவுதான் இந்த மரத்தை வெட்டிவீழ்த்தும் கோடறி யாகும். ''நாளைக்கு இருக்காது'' (அச்வத்தம்) என்னும் பெருமையுடையது இது. என்றைக்கு உண்டாயிற்று என்று காலக்கணக்கைக் கண்டுபிடிக்க முடியாததும்கூட.

மண்ணிலிருந்து பானை தோன்றுவது போல, பரம் பொருளிலிருந்து இந்த உலகம் தோன்றியிருக்கிறது. மண்ணி னால் ஆன பானையில் மண்ணைத் தவிர வேறொன்றும் கிடை யாது. இதேபோல, பரம்பொருளினாலான உலகத்தில் பரம் பொருளைத் தவிர வேறொன்றும் கிடையாது; உலகம் பிரம்ம-மயம்.

இதை இந்த வாழ்க்கையிலேயே உணர்ந்து கொண்டால், மனிதன் தெய்வமாகிறான். அவன் ஜீவன் முக்தன் (உயிர் வாழும் போதே விடுதலைபெற்றவன்)

இந்த உலகத்திலே உயிர்வாழும் பொழுதே மெய் யுணர்வது, கண்ணாடியில் நம் உருவத்தைக் காண்பது போல அவ்வளவு தெளிவாக இருக்கும். மற்ற உலகங்களிலோ மங்கலாக கனவுக் காட்சிகள் போல குழப்பமாக இருக்கும். எனவே, இந்த உலகத்திலே உயிரோடு இருக்கும்போதே உண்மையை அறியப் பாடுபடவேண்டும். முஞ்சைப் புல்லி லிருந்து அதன் தண்டைப் பிரித்து எடுப்பதைப் போல, ஆத்மா என்ற மெய்ப்பொருளை, மற்றவற்றிலிருந்து பிரித்து அறிந்து இங்கேயே முக்தி பெற வேண்டும்.

சிறுவன் நசிகேதஸ் தருமதேவதையிடமிருந்து நேராக இந்த உபதேசத்தைப் பெற்று, உண்மையை அறிந்து முக்தி பெற்றான். இதைப் போலவே ஒவ்வொருவரும் இந்த வாழ்க் கையிலேயே முக்திபெறலாம் என்பது, சங்கரர் வாக்கு.

❄ ❄ ❄

कठोपनिषत्

கடோபநிஷத்
ஸ்ரீ சங்கரரின் உரையுடன்
(சாந்தி மந்த்ரம்)

ॐ

सह नाववतु । सह नौ भुनक्तु ।
सह वीर्यं करवावहै ।
तेजस्वि-नावधीतमस्तु । मा विद्विषावहै ॥

ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

ஓம்

ஸஹ நாவவது । ஸஹ நௌ புனக்து ।
ஸஹ வீர்யம் கரவாவஹை ।
தேஜஸ்விநாவதீதமஸ்து । மா வித்விஷாவஹை ॥

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

தெய்வம் நம் இருவரையும் சேர்த்தே காக்கட்டும்;

(தெய்வம்) சேர்த்தே இருவரையும் நம் அறிவின் பலனைப் பெற அருளட்டும்! நாம் இருவரும் சேர்ந்தே வலிவு பெறுவோம் ! நாம் படிக்கும் எல்லாம் நமக்கு ஒளியைத் தரட்டும்! நாம் இருவரும் ஒருவரையொருவர் பகைக்காமல் இருப்போமாக !

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி! (இந்த வேண்டுதல் ஆசிரியரும் மாணவனும் சேர்ந்தே செய்வதாக அமைந்திருக் கிறது).

கடோபநிஷத்

சங்கரரின் இறைவணக்கம்

ஓம்! சூரியனின் மகனும், மெய்யறிவைப் புகட்டுபவனுமான பகவான் யமதருமனுக்கு நமஸ்காரம்! அவனுடைய மாணவனான நசிகேதஸ்ஸுக்கும் நமஸ்காரம் !

சங்கரரின் முன்னுரை

கடோபநிஷத்தின் பொருளை எளிதில் புரிந்து கொள்வதற்காக வேண்டி, அதன் பல்வேறு பகுதிகளின் விளக்கம் இப்பொழுது தொடங்கப்படுகிறது.

'உபநிஷத்' என்னும் சொல் மூன்று பகுதிகள் கொண்டது. 'உப' (அருகில்) 'நி' (உறுதியாக) என்ற முன் இரண்டு பகுதிகளும் 'ஸத்' (அழிப்பது, 'அடைவது', 'தளர்த்துவது') என்னும் கடைசிப் பகுதிக்கு முன்னால் சேர்ந்து 'உபநிஷத்' என்ற சொற்றொடர் உண்டாகியிருக்கிறது. இதன் கருத்து என்ன வென்றால், 'ஆசிரியருடைய அருகில் இருந்து, உறுதியான மெய்யறிவைப் பெற்று, அறியாமையை அழித்தல்' என்பது தான்.

கடோபநிஷத் என்னும் இந்த மெய்ந்நூலில், மெய்யறிவின் இயல்பு விளக்கப்படப் போகிறது. அதாவது, உபநிஷத் என்ற நூலில், உபநிஷத் என்ற மெய்யறிவு விளக்கப்படும் முறை எடுத்துக் காண்பிக்கப்படுகிறது. மெய்யறிவை விளக்குவதால், இந்தப் புத்தகத்துக்கும் 'உபநிஷத்' என்ற பெயர் வந்து விட்டது.

மெய்யறிவானது உலகப் பற்றுக்களை வேரோடு உடைத்தெறிகிறது; அவற்றைக் கலக்கி அழிக்கிறது. உண்மை தெரியாமல் மறைக்கும் அறியாமையினுடைய வித்தினைப் பொசுக்கிவிடுகிறது. பற்றுக்களை அழித்து விடுதலையை விரும்பும் மனிதர்கள், இவ்வுலகத்துச் சிற்றின்பங்களையும்,

விண்ணுலகத்துச் சிற்றின்பங்களையும் ஒருங்கே தூரத்தள்ளி, 'உபநிஷத்' என்ற பெயருள்ள மெய்யறிவை நாடுகிறார்கள். இதன் இயல்பு எத்தகையது என்பது இனி எடுத்துச் சொல்லப் படும். இந்த மெய்யறிவின் இயல்பு என்ன என்பதைத் தெரிந்து கொண்டபின், அதை மனத்தில் நிலைநிறுத்தி உறுதியாக அதையே சிந்தித்திருக்க வேண்டும்.

''மெய்ப்பொருளை உணர்ந்து, மரணத்தின் வாயி லிருந்து ஒருவன் விடுபடுகிறான்'' என்று பின்னால் கடோப நிஷத் (I-3.15) சொல்லப்போகிறது. ('உபநிஷத்' என்னும் மெய்ப்பொருள் பற்றிய அறிவு, 'உபநிஷத்' என்னும் மெய்ந் நூல்களில் கூறப்படுவதால், இரண்டுமே 'உபநிஷத்' என்னும் பெயரைப் பெற்றுவிட்டன).

அல்லது, இன்னொரு வகையிலும் இதைச் சொல்லலாம். மெய்ப்பொருளைப் பற்றிய மெய்யறிவு 'உபநிஷத்' என்று அழைக்கப்பட்டதற்குக் காரணம், அது விடுதலையை விரும்பி ஆசைகளைத் துறந்த மனிதர்களை, அந்த மெய்ப்பொருளிடத் திலே கொண்டு சேர்க்கும் வலிமையை உடையதாக இருப்பது தான். இதையே கடோபநிஷத்தும் (II-3.18) ''நல்லது, கெட்டது, ஆசை, அறியாமை என்ற இவற்றிலிருந்து விடுபட்டு ஒருவன் மெய்ப்பொருளை உணர்ந்தான்'' என்று பின்னர் சொல்லப்போகிறது.

மெய்ப்பொருளை அடைவது என்பது ஒருபுறம் இருக்க, அக்னி தேவதையைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ளும் அறிவிற்கும் 'உபநிஷத்' என்று தான் பெயர். இந்த அக்னி தேவன் உலகங்களெல்லாம் தோன்றுவதற்கு முன்னமே இருப் பவன்; பரம்பொருளிலிருந்து தோன்றியவன்; மெய்யுணர்ந்த பெரியவன். இத்தகைய அக்னி தேவதையைப் பற்றிய அறிவை நசிகேதஸ் என்ற சிறுவன், தருமதேவதையிடமிருந்து தனது இரண்டாவது வரமாகக் கேட்டான். இதைக் கடோபநிஷத் (I-1.13) சொல்லுகிறது.

விண்ணுலகம் என்ற பேற்றை, அக்னி தேவதையைப் பற்றிய அறிவு அளிக்கிறது. தாயின் கருவில் பிறப்பது, மூப்பு முதலிய எண்ணிலடங்காததும் தொடர்ந்து வருவதுமான துன்பங்களைக் கலக்கி, அவற்றின் பலத்தை அந்த அறிவு குறைப்பதால் அது 'ஸத்' எனப்படுகிறது. ''விண்ணுலகத்தில் இருப்பவர்கள் இறவாமையை அடைகிறார்கள்'' என்று இதே கடோபநிஷத் கூறவும் போகிறது.

இங்கு ஒரு கேள்வி எழக்கூடும். ''உபநிஷத்'' என்னும் சொல்லினால் சில புத்தகங்களை அல்லவா நாம் எல்லாம் குறிப்பிடுகிறோம்? ''நான் இந்த உபநிஷத்தை வாசிக்கிறேன்,'' ''நான் அந்த உபநிஷத்தை (மாணவர்களுக்குக்) கற்பித்து வருகிறேன்'' என்றெல்லாம் வழக்கமாகப் பேசுகிறோமே? நீங்கள் ஏதோ மெய்யறிவைக் குறிப்பிடுவதாகச் சொல்லு கிறீர்களே?'' என்று கேட்டால், அதற்குப் பதில் சொல்லு கிறோம்.

உலகத்துப் பற்றுக்கள், அறியாமை முதலியவற்றைக் களைவது என்ற பொருளையுடைய ஸத் என்னும் சொல், வெறும் புத்தகத்துக்குப் பெயராக இருக்க முடியாதுதான். அது மெய்யறிவிற்குத் தான் பொருந்தும். எனினும், இது முற்றும் தவறல்ல. ஏனெனில், 'உபநிஷத்' என்ற புத்தகங்களும் கூட, மெய்யறிவைப் புகட்டும் நோக்கம் உடையவைதான். அதனால் தான் உபநிஷத்துக்களைப் படிக்கிறோம்; கற்கிறோம். உதாரண மாக, ''நெய் என்பது உயிர் வாழ்க்கை'' என்று ஒருவர் சொன்னால், 'நெய் சாப்பிட்டால் நீண்ட நாள் வாழலாம்' என்பது தான் அதன் கருத்தே தவிர ''நெய் என்ற சொல்லே நீண்ட ஆயுள்'' என்ற பொருளுடையது என்று நினைத்து விடக்கூடாது. அதுபோலவே இங்கும் ''உபநிஷத்'' என்ற சொல் மெய்யறிவை நேரடியாகக் குறிக்கிறது; (கடோபநிஷத்) போன்ற புத்தகங்களையும் மறைமுகமாகக் குறிப்பிடுகிறது.

எனவே, சில சிறப்பான தகுதிகளைப் பெற்றிருக்கும் ஒருவர், மெய்யறிவு பெறுவதற்கும் தகுதியுடையவராகிறார் என்பது உபநிஷத் என்ற சொல்லிலிருந்தே புரிகிறது.

இந்த மெய்யறிவின் விஷயம் பரம்பொருள்; அதுவே எல்லாவற்றுள்ளேயும் இருக்கும் ஆத்மா. இதுவும் இங்கு தெரிவித்தாயிற்று. இந்த உபநிஷத்தைக் கற்பதன் பலனோ, பிறவிப் பிணி முற்றிலும் நீங்குவதேயாகும். விடுதலையே இதனால் அடையும் பெரும்பேறாகும். மெய்யறிதலுக்கும் இந்தப் பெரும்பேறான விடுதலைக்கும் உள்ள தொடர்பும் இதனாலேயே கூறப்பட்டு விட்டது.

இவ்வாறு (i) இந்த உபநிஷத்தின் அத்தியாயங்களே இதைக் கற்கும் தகுதி பெற்றவர்களுக்காக ஏற்பட்டவைதான் என்பதும், (ii) மெய்யறிவிற்குரிய சிறப்பான விஷயம் இவற்றில் இருப்பதும், (iii) அதற்கு ஒரு சீரிய பலன் ஒன்று இருப்பதும், (iv) இவற்றிற்கு எல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்பு இருப்பதும் தெளிவாயிற்று. இவை முறையே (i) தக்கவர் (ii) பொருள் (iii) பலன் (iv) தொடர்பு எனப்படும்.* இந்த உண்மையை உள்ளங்கை நெல்லிக்கனி போல எடுத்துக் காட்டுகின்றது இந்த உபநிஷத். இதை முடிந்தவரை விளக்குவோம்.

இந்த மெய்யறிவைப் புகழும் முறையில் ஒரு சின்னக் கதையை உபநிஷத் சொல்லுகிறது.

* இவை நான்கும் அநுபந்த-சதுஷ்டயம் எனப்படும். ஒவ்வொரு நூலுக்கும் இருக்கவேண்டிய நான்கு அமைவுகள் இவை. இவை முறையே (i) அதிகாரி (ii) விஷயம் (iii) பிரயோஜனம் (iv) ஸம்பந்தம் எனப்படுகின்றன.

அத்தியாயம் 1

முதல் வல்லீ

மந்த்ரம் 1

ॐ । उशन् ह वै वाजश्रवसः सर्ववेदसं ददौ ।
तस्य ह नचिकेता नाम पुत्र आस ॥

ஓம். உசன் ஹ வை வாஜச்ரவஸ: ஸர்வவேதஸம் ததௌ ।
தஸ்ய ஹ நசிகேதா நாம புத்ர ஆஸ ॥

முன்னொரு காலத்தில், வாஜச்ரவரின் பிள்ளையான வாஜச்ரவஸர் என்பவர், பல நன்மைகளை வேண்டி விச்வஜித் என்ற யாகத்தைச் செய்தார். அப்பொழுது தனது உடைமை களையெல்லாம் பிறருக்குத் தானம் செய்தார். அவருக்கு நசிகேதஸ் என்ற மகன் இருந்தான் என்பது வரலாறு.

சங்கரரின் உரை

'ஹ' 'வை' என்ற சொற்கள், ஏற்கனவே நடந்த வரலாற் றைக் குறிப்பிடுகின்றன. 'வாஜ-ச்ரவர்' என்பது, அவர் வருவோருக்கெல்லாம் இல்லையென்னாது உணவளித்துப் புகழ் பெற்றவர் என்பதால் காரணப் பெயராயிற்று அல்லது அது அவரது இயற்பெயராகவும் இருக்கலாம். அவருடைய மகன் வாஜச்ரவஸ். இவர்தான் விச்வஜித் என்னும் வேள்வி யைச் செய்தார். இந்த வேள்வியைச் செய்து முடிப்பவர்கள் தமது சொத்துக்களையெல்லாம் தானமாகக் கொடுத்துவிட வேண்டும். அப்படி இவரும் செய்தார். இவருடைய பிள்ளை தான் நசிகேதஸ் என்று வரலாறு கூறுகிறது.

மந்த்ரம் 2

तँ ह कुमारं सन्तं दक्षिणासु नीयमानासु ।
श्रद्धाविवेश सोऽमन्यत ॥

தம் ஹ குமாரம் ஸந்தம் தக்ஷிணாஸு நீயமானாஸு
ச்ரத்தாவிவேச ஸோऽமன்யத ॥

(வேள்வியில்) கொடுக்கப்படும் தக்ஷிணை எனப்படும் காணிக்கைகளை வேதியர்களுக்காக எடுத்துச் செல்லும் பொழுது, சிறுவனான (நசிகேதஸுக்கு) மனதில் ஓர் ஈடுபாடு உண்டாயிற்று. அவன் சிந்தித்தான்.

சங்கரரின் உரை

இன்னும் வயது வராத பிராயத்தினனான சிறுவன் நசிகேதஸினிடத்தில் ஓர் ஈடுபாடு (சிரத்தை) உண்டாயிற்று. தன்னுடைய தகப்பனாருக்கு, நன்மை உண்டாகவேண்டும் என்னும் விருப்பத்தினால் அந்த ஈடுபாடு ஏற்பட்டது. வேள்வியில் அந்தணர்களுக்கும் வேதவிற்பன்னர்களுக்கும் தானமாகக் கொடுப்பதற்காகப் பசுக்களையெல்லாம் கொண்டு செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்தானல்லவா? அப்பொழுது அவன் சிந்தித்தான்.

என்ன சிந்தித்தான் என்பது அடுத்த மந்த்ரத்தில் வரும்.

மந்த்ரம் 3

पीतोदका जग्धतृणा दुग्धदोहा निरिन्द्रियाः ।
अनन्दा नाम ते लोकास्तान् स गच्छति ता ददत् ॥

பீதோதகா ஜக்தத்ருணா துக்ததோஹா நிரிந்த்ரியா: ।
அநந்தா நாம தே லோகாஸ்தான் ஸ கச்சதி தா ததத் ॥

தண்ணீர் குடிக்கக்கூடச் சக்தியற்றவைகளும், புல்லைத் தின்னக்கூட முடியாதவைகளும், பால் வற்றிப்போனவைகளும், புலன்கள் மங்கியவைகளுமான இந்தக் கிழட்டுப் பசுக்களை, தானம் செய்பவர்கள் இன்பங்களே இல்லாத உலகங்களுக்குத்தான் போவார்கள்.

சங்கரரின் உரை

தந்தை அந்தணர்களுக்குக் கொடையாகக் கொடுக்கப் போகும் பசுக்கள் என்ன இப்படி இருக்கின்றன? தண்ணீர் குடிக்கவும் தெம்பில்லாமல், புல்லைத் தின்னவும் வலுவில்லா மல், பால் வறண்டுபோய், உடலின் உறுப்புக்களெல்லாம் தளர்ந்து, குற்றுயிரான இந்தப் பசுக்களைத் தானம் செய்பவர்கள் மகிழ்ச்சி என்பதே இல்லாத உலகங்களுக்கு அல்லவா போவார்கள்? (இப்படி எண்ணினான் நசிகேதஸ்).

மந்த்ரம் 4

स होवाच पितरं तत कस्मै मां दास्यसीति ।
द्वितीयं तृतीयं तँ होवाच मृत्यवे त्वा ददामीति ॥

ஸ ஹோவாச பிதரம் தத கஸ்மை மாம் தாஸ்யஸீதி ।
த்விதீயம் த்ருதீயம் தம் ஹோவாச ம்ருத்யவே த்வா ததாமீதி ॥

தந்தையைப் பார்த்து ''தந்தையே ! என்னை யாருக்குத் (தானமாகக்) கொடுக்கப்போகிறீர்கள்?'' என்று (நசிகேதஸ்) கேட்டான். ஒரு தரம் கேட்டான்; இரண்டு மூன்று தரம் கேட்டான். தந்தை சொன்னார்:

''நான் உன்னை யமனுக்குத் தருகிறேன்.''

சங்கரரின் உரை

''வேள்வியில் ஏற்பட்ட குறையின் பயனாய் என் தந்தைக்குப் பெரும் தீமை வரும். இதை நான் தடுக்க வேண்டும். நான் அவருக்கு நல்ல மகன். என்னையே கொடுத் தாவது நான் இந்தக் குறையை நீக்கி வேள்வியை நிறைவுற்ற தாகச் செய்வேன்'' என்று மனத்தில் எண்ணி, தந்தையிடம் சென்றான் நசிகேதஸ். அவரைப் பார்த்து ''தந்தையே! இங்குள்ள வேதியருக்குள் யாருக்கு என்னைத் தானமாகக் கொடுக்கப் போகிறீர்கள்?'' என்று கேட்டான்.

தந்தை இதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அதனால் ''யாருக்கு என்னைத் தானம் கொடுக்கப் போகிறீர் கள்?'' ''யாருக்கு என்னைத் தானம் கொடுக்கப் போகிறீர்கள்?'' என்று ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம் கேட்டான் நசிகேதஸ். தந்தைக்குக் கோபம் வந்துவிட்டது. இதென்ன? நமது மகன் இப்படி முறைதவறி நடக்கிறானே!' என்று சினந்த அவர், தம் மகனை நோக்கிச் சொன்னார்: ''உன்னை யமனுக் குத் தானமாகக் கொடுக்கிறேன்.''

தந்தை இப்படிச் சொன்னதைக் கேட்ட மகன் மனம் வருந்தி, தனியாகப் போய் யோசித்தான். இதை அடுத்த மந்த்ரம் சொல்லுகிறது.

மந்த்ரம் 5

बहूनामेमि प्रथमो बहूनामेमि मध्यमः ।
किं स्विद्यमस्य कर्तव्यं यन्मयाऽद्य करिष्यति ॥

பஹூனாமேமி ப்ரதமோ பஹூனாமேமி மத்யம: ।
கிம் ஸ்வித்யமஸ்ய கர்த்தவ்யம் யந்மயா(அ)த்ய கரிஷ்யதி ॥

பல (மாணாக்கர்களுள்) நான் முதலாவதாக இருக் கிறேன். பல (மாணாக்கர்களுள்) நான் நடுவில் இருக்கிறேன். யமனிடத்து என்னை அனுப்புவதால், என் தந்தை என்ன சாதிக்கப்போகிறார்?

சங்கரரின் உரை

''பல மாணாக்கர்களுள் அல்லது என்னைப் போல இருக்கும் அவருடைய பிள்ளைகளில், நான் முதன்மை பெற்றிருக்கிறேன். என்னுடைய நன்னடத்தையால் நான் அந்த

முதலிடத்தைப் பெற்றிருக்கிறேன். (குறைந்த பட்சம்) சாதாரண மான மாணவர்களுக்குள்ளேயாவது நான் ஒருவனாக இருக் கிறேன். என் நடத்தையினால் அப்படி இருக்கிறேன். ஆனால் நான் ஒருபோதும் கடையனாக நடந்துகொண்டதே கிடை யாது.[1]

''இவ்வாறு நான் நல்ல பண்புடையவனாக இருந்தும், 'உன்னை யமனுக்குத் தானம் செய்துவிட்டேன்' என்று சொல்லிவிட்டார். யமனிடம் போய் நான் என்ன செய்ய வேண்டும்? தந்தைக்குத்தான் இதனால் என்ன காரியம் ஈடேறப் போகிறது?

''என் மேல் உண்டான ஏதோ கோபத்தினால்தான் தந்தை இப்படிச் சொல்லியிருக்க வேண்டும். வேறு எந்த நோக்கமும் இருக்க முடியாது. எது எப்படியிருந்தாலும், என் தந்தை சொன்ன சொல் பொய்யாகக்கூடாது.'' இப்படி எண்ணிய நசிகேதஸ், துயரத்துடன் தந்தையைப் பார்க்கப் சென்றான் தந்தையோ ''ஐயோ! மகனிடத்தில் என்னென் னவோ பேசிவிட்டேனே'' என்று மிகவும் உள்ளம் நொந்து போயிருந்தார்.

மந்த்ரம் 6

अनुपश्य यथा पूर्वे प्रतिपश्य तथाऽपरे ।
सस्यमिव मर्त्यः पच्यते सस्यमिवाजायते पुनः ॥

அனுபச்ய யதா பூர்வே ப்ரதிபச்ய ததா(அ)பரே ।
ஸஸ்யமிவ மர்த்ய: பச்யதே ஸஸ்யமிவாஜாயதே புன: ॥

---

1. தந்தை சொல்லாமலே குறிப்பறிந்து அவருக்குப் பணிவிடை செய்கின்ற மகன் தலைமையானவன். அவர் சொல்லிப் பிறகு செய்பவன் இடைப்பட்டவன். அவர் சொல்லிய பிறகும் அதைச் செய்யாதவன் கடையன்.

''(தந்தையே)! தங்கள் முன்னோர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்று சற்றுப் பின்னோக்கிப் பாருங்கள்! இன்று மற்றவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதையும் எண்ணிப் பாருங்கள்! மனிதன் வயற்காட்டுப் பயிர்களைப் போலே, வாடி மடிந்து போகிறான்; அப்பயிர்களைப் போலவே மறுபடியும் முளைக்கிறான்.''

சங்கரரின் உரை

''தந்தையே! காலஞ்சென்ற தங்களது முன்னோர்கள், பாட்டனார், தகப்பனார் இவர்களெல்லாம் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதையெல்லாம் முறையாக எண்ணிப் பாருங்கள். எண்ணிப்பார்த்து, அவர்களது வழியில் நடப்பது தான் தங்களுக்குப் பெருமை. இதேபோல், மற்றப் பெரியவர் கள், சான்றோர்கள் எல்லாம் இப்பொழுது எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதையும் நினைத்துப் பாருங்கள். அவர் களது நடத்தையில் ஒரு குற்றமும் இருந்ததில்லை. இதற்கு நேர் எதிரானது கெட்டவர்களின் நடத்தை. அவர்கள் உண்மைக்கு நேர் மாறாக நடப்பவர்கள்.

''மேலும், சொன்ன சொல்லை நிறைவேற்றுவதை தள்ளிப்போடுவதால், முதுமையினின்றோ மரணத்தினின்றோ விடுபடமுடியாது. மனிதன் பயிர்களைப் போல முதிர்ந்து வாடிப் பின் மடிந்து போகிறான். மரணத்திற்குப் பின்னர் அந்தப் பயிர்களைப் போலவே மீண்டும் பிறக்கிறான். நிலையற்ற இந்த மண்ணுலகத்தில் சொன்ன சொல்லை மீறிவிட்டு, என்ன நன் மையை ஒருவன் பெற முடியும்? உங்கள் சொல்லை உண்மை யாகச் செய்து, என்னை யமலோகத்துக்கு அனுப்புங்கள்.'' இது தான் இங்கு சொல்லவந்த கருத்து.

மந்த்ரம் 7

சங்கரரின் முன்னுரை

மகன் இப்படிச் சொன்னதைக் கேட்ட தந்தை, தன் சொல்லைக் காப்பாற்றும் பொருட்டு, அவனை யமனுடைய உலகத்துக்கு அனுப்பினார்.

மகன் நசிகேதஸ், யமனுடைய இருப்பிடத்துக்குச் சென்றான். ஆனால் அங்கு யமன் வெளியே எங்கோ சென்றிருந்ததால், நசிகேதஸ் அவனுடைய வீட்டு வாசலில் மூன்று இரவுகள் தங்க நேர்ந்தது. யமன் திரும்பி வந்தபோது, அவனுடைய அமைச்சர்களும் மனைவிமார்களும் அவனுக்கு ஆலோசனை சொன்னார்கள்.

वैश्वानरः प्रविशत्यतिथि-र्ब्राह्मणो गृहान् ।
तस्यैताँशान्तिं कुर्वन्ति हर वैवस्वतोदकम् ॥

வைச்வாநர: ப்ரவிசத்-யதிதிர் ப்ராஹ்மணோ க்ருஹான் ।
தஸ்யைதாம் சாந்திம் குர்வந்தி ஹர வைவஸ்வதோதகம் ॥

''ஓர் அந்தணன் வீடுகளுக்கு விருந்தாளியாக வருகின்றான் என்றால் அவனை நெருப்புக்குச் சமமாக நினைக்கவேண்டும். அவனை மகிழ்விப்பதற்காக (அவனுக்கு) முதலில் குளிர்ந்த நீர் அளிக்கவேண்டும். எனவே, யம தருமனே! நீரை எடுத்துச்சென்று அவனுக்கு அளியும்!''

சங்கரரின் உரை

''ஓர் அந்தணன் வீட்டுக்கு விருந்தாளியாக வரும்போது, நெருப்பைப்போல வருகிறான். வீட்டையே எரித்துவிட வருவது போல நுழைகிறான். அவன் மனத்தை மகிழ்விப்பதற்காக, நல்ல மனிதர்கள் அவனுக்குக் கால் அலம்ப நீர்கொடுத்து, உட்கார இருக்கையளித்து உபசரிக்கிறார்கள். தீயை

அணைப்பதற்கு என்னவெல்லாம் செய்வார்களோ அதெல்லாம் செய்கிறார்கள். இப்படிச் செய்யத்தவறினால் பல தீமைகள் அவர்களுக்கு உண்டாகும் என்று வேதம் எச்சரிக்கிறது. (முண்டக-உபநிஷத் I-2.3) அதனால், ஓ தருமதேவதையே! நசிகேதஸுக்கு கால் அலம்பத் தண்ணீர் கொண்டு போய்க் கொடுங்கள்'' என்று, யமதருமனை அவனுடைய மக்கள் வேண்டிக் கொண்டார்கள்.

மந்த்ரம் 8

आशाप्रतीक्षे संगतँ्सूनृतां चेष्टापूर्ते पुत्रपशूँश्च सर्वान् ।
एतद् वृङ्क्ते पुरुषस्य अल्पमेधसो
यस्यानश्नन्वसति ब्राह्मणो गृहे ॥

ஆசா-ப்ரதீக்ஷே ஸம்கதம் ஸூந்ருதாம்
சேஷ்ட்டா-பூர்தே புத்ர-பசூம்ஸ்ச ஸர்வான் ।
ஏதத் வ்ருங்க்தே புருஷஸ்ய அல்பமேதஸோ
யஸ்யானச்னன் வஸதி ப்ராம்ஹணோ க்ருஹே ॥

யாருடைய வீட்டில் ஓர் அந்தண விருந்தாளி, உணவு அளித்து மதிக்கப்படவில்லையோ, அந்த வீட்டுச் சொந்தக் காரன், இந்த அறிவுக் குறைவினால், நம்பிக்கையையும் ஆசைப் பட்டதையெல்லாமும் இழந்து, நல்லவர்களின் நட்பையும் நல்ல பேச்சுக்களையும் இழந்து, வேள்விகளையும் நல்ல பணி களையும் கைவிட்டு, மக்களையும் ஆடுமாடுகளையும் இழந்து தவிப்பான்.

சங்கரரின் உரை

விரும்பத்தக்க பொருட்களை அவாவுதல் ஆசை எனப்படும். இவை அடையக் கூடியவையாகவும் இருக்க வேண்டும். இவை ஏற்கனவே ஒருவனுக்கு அதுவரை தெரியாத

பொருட்களாகக் கூட இருக்கலாம். இது ஆசை எனப்படும். நன்கு ஏற்கனவே தெரிந்ததாகவும், அதே சமயம் முயன்றால் பெறக்கூடியதாகவும் உள்ள பொருட்களின் மேல் உண்டாகும் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் ப்ரதீக்ஷா எனப்படும். இவையிரண்டும் முறையே ஆசையும் நம்பிக்கையும் ஆகும். நல்லவரோடு சேர்தலினால் வரும் பலன் ஸங்கதம் எனப்படும். அவர்களுடைய பேச்சைக் கேட்பதும் ஒரு பெரும் பலன். வேள்விகளைச் செய்தல், சமூகப்பணிகளைச் செய்தல் இவை யிரண்டும் முறையே இஷ்டா என்றும் பூர்த்தம் என்றும் சொல்லப்படும். இவற்றின் பலன்களும் நலம் தரும். இதே போல் மக்களும், ஆடு மாடுகளும் ஒருவனின் செல்வமாகும். இவையெல்லாம், தன் வீட்டிற்கு விருந்தாக வந்த அந்தணனுக்கு உணவு அளிக்காத வீட்டுச் சொந்தக்காரனுடைய அறிவுக்குறைவின் காரணமாக அடியோடு அழிந்து போகும். எனவே ஒரு விருந்தாளியைக் கவனிக்காமல் இருக்கக்கூடாது என்பது இங்கு தெரிவிக்கப்பட்ட கருத்து.

மந்த்ரம் 9

சங்கரரின் முன்னுரை

இப்படி எச்சரிக்கப்பட்ட யமதருமன் நசிகேதஸை மிகுந்த பயபக்தியுடன் அணுகிச் சொன்னான்.

तिस्रो रात्रीर्यदवात्सीर्गृहे मे अनश्नन् ब्रह्मन्नतिथिर्नमस्यः ।
नमस्तेऽस्तु ब्रह्मन् स्वस्ति मेऽस्तु तस्मात्प्रति त्रीन्वरान्वृणीष्व ॥

திஸ்ரோ ராத்ரீர் யதவாத்ஸீர்-க்ருஹேமே
அநச்னன் ப்ரஹ்மன் அதிதிர் நமஸ்ய: ।
நமஸ்தேஅஸ்து ப்ரஹ்மன் ஸ்வஸ்திமேஅஸ்து
தஸ்மாத் ப்ரதி த்ரீன்வரான் வ்ருணீஷ்வ ॥

''அந்தணரே! உணவுகூட அருந்தாமல் மூன்று இரவுகள் என் வீட்டில் தங்கிவிட்டீர். என்னுடைய விருந்தாளி நீர்; வணக்கத்திற்குரியவர். உமக்கு நமஸ்காரம்! அந்தணரே! எனக்கு நன்மை உண்டாகட்டும். எனவே, ஒவ்வொரு இரவிற்கும் ஒன்றாக, மூன்று வரங்களைக்கேளும்.''

சங்கரரின் உரை

''அந்தணரே! என் வீட்டில் மூன்று இரவுகள் வசித்து விட்டீர். உணவும் உட்கொள்ளவில்லை. நீர் எனது விருந்தாளி. எனது வணக்கத்துக்குரியவர். அதனால் உமக்கு எனது நமஸ் காரங்கள். அந்தணரே! எனக்கு நல்லது அருள்வீர். உணவின்றி எனது வீட்டில் கவனிப்பாரின்றி வசிக்க நேர்ந்த குற்றத்தினால் எந்தத் தீமையும் எனக்கு உண்டாகாமல் அருள்வீராக! உமது பரிவினால் எல்லா நலன்களும் எனக்கு உண்டாகிவிடு மென்றாலும், நான் உம்மை இன்னும் மகிழ்விக்க விரும்பு கிறேன். உணவின்றித் தங்கிய மூன்று இரவுகளுக்கும், ஓரிரவிற்கு ஒன்றாக, மூன்று வரங்களைக் கேளும். ஏதேனும் உமக்கு வேண்டிய மூன்றைக் கேளும்!'' என்றான் யமன்.

மந்த்ரம் 10

இதற்கு நசிகேதஸ் பதிலளித்தான் :

शान्तसंकल्पः सुमना यथा स्यात् वीतमन्युर्गौतमो माऽभि मृत्यो ।
त्वत्प्रसृष्टं माऽभिवदेत्प्रतीत एतत् त्रयाणां प्रथमं वरं वृणे ।

சாந்த ஸங்கல்ப: ஸுமனா யதா ஸ்யாத்
வீதமன்யுர் கௌதமோ மாஅபி ம்ருத்யோ ।
த்வத் ப்ரஸ்ருஷ்டம் மாஅபிவதேத் ப்ரதீத
ஏதத் த்ரயாணாம் ப்ரதமம் வரம் வ்ருணே ॥

''யமதர்மராஜனே! நீ தருவதாகச் சொன்ன மூன்று வரங்களிலே நான் முதல் வரமாக இதைக் கேட்கிறேன். எனது தந்தை கௌதமர் (வாஜச்ரவஸர்) மனக்கவலை நீங்கியிருக் கட்டும்; அவர் அமைதி அடையட்டும்; என்னிடத்து அவருக்கு உண்டான கோபம் தணியட்டும்; உன்னால் விடுவிக்கப்பட்டு நான் மீண்டும் அவரைச் சந்திக்கும்பொழுது என்னை அவர் தெரிந்துகொள்ளட்டும்; என்னிடம் பேசட்டும்.''

சங்கரரின் உரை

நசிகேதஸ் சொன்னான்: ''யமதர்மராஜனே! எனக்கு மூன்று வரங்கள் கொடுக்க நீ விரும்பினால், என்னுடைய தந்தை கௌதமர் (வாஜச்ரவஸர்) என் காரணமாக ஏற்பட்ட மனக்கவலை நீங்கியிருக்கட்டும். 'எமனிடத்தில் சென்றிருக்கிற எனது மகன் அங்கு எவ்வாறு நடந்து கொள்கிறானோ' என்ற கவலை அவருக்கு இல்லாமலிருக்கட்டும். அப்பொழுதுதான் அவருக்கு மன அமைதி ஏற்படும். என்மீது அவருக்கு உண்டான கோபம் தணியட்டும். என்னை நீ விடுவித்தபின், வீட்டிற்குத் திரும்பிப் போகும்பொழுது, அவர் என்னிடம் முகம் கொடுத்துப் பேசட்டும். என்னை அடையாளம் தெரிந்து கொள்ளட்டும். 'இதோ என் மகன் திரும்பி வந்துவிட்டான்' என்ற ஞாபகம் அவருக்கு உண்டாகட்டும். நீ தருவதாகச் சொன்ன மூன்று வரங்களிலே இதுதான் நான் கேட்கும் முதல் வரம். எனது தந்தை நிம்மதியடைவதுதான் முதலாவதாக நான் வேண்டுவது.''

மந்த்ரம் 11

யமதர்மராஜன் சொன்னான் :

यथा पुरस्तात् भविता प्रतीत औद्दालकिरारुणिर्मत्प्रसृष्टः
सुखँरात्रीः शयिता वीतमन्यु-स्त्वां ददृशिवान्मृत्युमुखात् प्रमुक्तम् ॥

யதா புரஸ்தாத் பவிதா ப்ரதீத
ஔத்தாலகிர்-ஆருணிர்-மத் ப்ரஸ்ருஷ்ட: ।
ஸுகம் ராத்ரீ: சயிதா வீதமன்யுஸ் -
த்வாம் தத்ருசிவான் ம்ருத்யுமுகாத் ப்ரமுக்தம் ॥

''உன்னை அடையாளம் தெரிந்து கொண்டு, உன் தந்தை (ஔத்தாலகி ஆருணி என்ற பெயருடைய) வாஜச்ரவஸர் முன் எப்பொழுதும் அன்போடு இருந்ததுபோலவே இனியும் இருப்பார். மரணத்தின் பிடியிலிருந்து மீண்ட உன்னைக் கண்டவுடன் அவருடைய கோபமும் தாபமும் மறைந்துபோகும். என்னுடைய அநுமதியினால், இனி வரும் இரவுகளில் நிம்மதியாக உறங்குவார்.''

சங்கரரின் உரை

(யமதருமன் சொன்னான்): ''உன்னுடைய தந்தை (ஔத்தாலகி ஆருணி) வாஜச்ரவஸர் உன்னிடம் முன் எப்போதும் போலவே பரிவும் அன்பும் காட்டுவார். உன்னை, இன்னார் என்று அடையாளமும் கண்டுகொள்வார். அருணனின் பிள்ளையாதலால், (உன் தந்தைக்கு) ஆருணி என்ற பெயர் உண்டு. ஆருணிக்கு ஔத்தாலகி என்ற பெயர் உத்தாலகரின் பிள்ளை என்பதால் ஏற்பட்டது. உன் தகப்பனாருக்கு (வாஜச்ரவஸர், கௌதமர், ஔத்தாலகி, ஆருணி) என்றெல்லாம் பெயர்கள் உண்டு.

''என்னுடைய அநுமதியினால், உன் தந்தை இரவுகளில் சுகமாக, நிம்மதியாக உறங்குவார். உன்மேல் ஏற்பட்டிருந்த கோபமும் நீங்கிவிடும். மரணத்தின் பிடியிலிருந்து விடுபட்டு மீண்ட உன்னைப் பார்த்தவுடன் என் மகன் உயிருடன் மீண்டும் இதோ வந்துவிட்டான்! என்று மிக மகிழ்ச்சியடைவார்.''

மந்த்ரம் 12

இப்பொழுது நசிகேதஸ் கூறினான் :

स्वर्गे लोके न भयं किंचनास्ति न तत्र त्वं न जरया बिभेति ।
उभे तीर्त्वाऽशनायापिपासे शोकातिगो मोदते स्वर्गलोके ॥

ஸ்வர்கே லோகே ந பயம் கிஞ்சனஅஸ்தி
ந தத்ர த்வம் ந ஜரயா பிபேதி ।
உபே தீர்த்வாஅசனாயாபிபாஸே
சோகாதிகோ மோததே ஸ்வர்கலோகே ॥

''விண்ணுலகில் பயம் என்பது இல்லை. (மரணம் என்ற) நீயும் இல்லை. அங்கு ஒருவரும் முதுமையைக் கண்டு அஞ்சுவதில்லை. பசியையும் தாகத்தையும் அடக்கி வென்று, துன்பத்தைத் தாண்டி, விண்ணுலகை அடைந்தவன் இன்புறுகிறான்.''

சங்கரரின் உரை

''விண்ணுலகில் அச்சம் என்பது இல்லை. நோய் நொடிகளினால் வரும் பீதி இல்லை. மரணதேவதையே! நீயும் அங்கு இல்லை. முதுமைப் பிராயத்தில் திடீர் திடீரென எதிர் பாராதபோது நீ வந்து தாக்குவதில்லை. மண்ணுலகில் நடப்பதற்கு இது முற்றிலும் மாறானது. ஒருவரும் உன்னைக் கண்டு நடுங்குவதில்லை. மேலும், பசியையும் தாகத்தையும் கடந்து, துன்பத்தையும் தாண்டி, மனத்தில் துயரங்களேதுமில்லாமல், விண்ணுலகத்தில் இருப்பவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள்.''

மந்த்ரம் 13

स त्वमग्निँस्वर्ग्यमध्येषि मृत्यो प्रब्रूहि त्वँश्रद्धधानाय मह्यम् ।
स्वर्गलोका अमृतत्वं भजन्त एतद् द्वितीयेन वृणे वरेण ॥

ஸ த்வமக்னிம் ஸ்வர்க்யமத்யேஷி ம்ருத்யோ
ப்ரப்ரூஹி த்வம் ச்ரத்ததானாய மஹ்யம் ।
ஸ்வர்கலோகா அம்ருதத்வம் பஜந்த
ஏதத் த்விதீயேன வ்ருணே வரேண ॥

''மரண தேவதையே ! விண்ணுலகம் என்னும் பேற்றைத் தரும் அக்னியைப் பற்றி நீ அல்லவோ அறிவாய்! மிகுந்த நம்பிக்கையோடு நான் வேண்டுகிறேன். அந்த அக்னியைப் பற்றிச் சொல்வாயாக! விண்ணுலகத்தில் வசிப்பவர்கள் மரணமில்லாதவர்கள். இதுவே நான் கேட்கும் இரண்டாவது வரம்.''

சங்கரரின் உரை

''மரணதேவதையே! பெருமை வாய்ந்த அப்படிப்பட்ட நீ, விண்ணுலகத்தை அடையும் வழியான அக்னியைப் பற்றி நன்கு அறிவாய். விண்ணுலகம் எல்லா இன்பங்களும் நிறைந்தது. அதைப் பற்றி எனக்கு நீ சொல்லவேண்டும். நான் ஆர்வத்தோடு கேட்கிறேன். நான் விண்ணுலகத்தையும் விரும்பு கிறேன். அதை அடையும் வழியாகிய அக்னியைப் பற்றி எனக்குச் சொல். அந்த அக்னியைப் போற்றி, வேள்விகளைச் செய்து அதன் பலனாக விண்ணுலகத்தை அடைந்து மரண மிலாப் பெருவாழ்வைப் பலர் அடைந்திருக்கிறார்கள்.

''இந்த அக்னியைப் பற்றிய விவரமான அறிவை நான் இரண்டாவது வரமாகக் கேட்கிறேன்.''

மந்த்ரம் 14

யமதருமன் இப்போது உறுதியாகச் சொன்னான் :

प्र ते ब्रवीमि तदु मे निबोध स्वर्ग्यमग्निं नचिकेतः प्रजानन् ।
अनन्तलोकाप्तिमथो प्रतिष्ठां विद्धि त्वमेतं निहितं गुहायाम् ॥

ப்ர தே ப்ரவீமி தது மே நிபோத
ஸ்வர்க்யமக்னிம் நசிகேத: ப்ரஜானன் ।
அநந்தலோகாப்திமதோ ப்ரதிஷ்ட்டாம்
வித்தி த்வமேதம் நிஹிதம் குஹாயாம் ॥

''நசிகேதஸ்ஸே ! விண்ணுலகத்தை அடைவிக்கும் அக்னியைப் பற்றி நான் நன்கு அறிவேன். ஆதலால், உனக்கு அதைப் பற்றிச் சொல்லுகிறேன். கவனத்துடன் நான் சொல்வதைக் கேட்டுக்கொள். விண்ணுலகத்து இன்பங்களைப் பெற வழியாக இருப்பதும், உலகங்களுக்கெல்லாம் ஆதாரமாக இருப்பதுமான அக்னி, மனிதர்களுடைய புத்தியில் நிலை பெற்றுள்ளது.''

சங்கரரின் உரை

''நசிகேதஸ்ஸே! நீ கேட்டுக் கொண்டபடி நான் உனக்கு எல்லாம் சொல்லுகிறேன். நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டு, அந்த அக்னியைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொள். அந்த அக்னியே விண்ணுலகத்தை அடைவிக்கும் வழியாகும். இதைப்பற்றி நான் நன்கு அறிவேன்.'' 'நான் உனக்குச் சொல்லுகிறேன்,' 'கவனமாகக் கேட்டுத் தெரிந்துகொள்' என்று யமதருமன் சொன்னதெல்லாம், நசிகேதஸ்ஸுடைய கவனத்தை ஒருமுனைப்படுத்துவதற்காகச் சொல்லப்பட்டவை.

இதன்பின் யமதருமன் அந்த அக்னியைப் புகழ்கிறான். ''எல்லையில்லாததொரு உலகத்தை அது அடைவிக்கிறது. அதாவது, விண்ணுலகத்தை அடைவிக்கிறது. நான் உனக்குச் சொல்லிக்கொண்டு வரும் அந்த அக்னி உலகத்துக்கெல்லாம் ஆதாரமாகும். அதனால் அது உலகவடிவமாகி நிற்கும் தெய்வம் (விராட்) என்று அழைக்கப்படுகிறது. இந்த அக்னி அவரவர் புத்தியிலேயே மறைந்து நிலைபெற்றிருக்கிறது'' என்று யமதருமன் சொன்னான்.

மந்த்ரம் 15

சங்கரரின் முன்னுரை

உபநிஷத்தே நேரடியாக நமக்கு அதற்கு மேலே நடந்த வரலாற்றைச் சொல்லுகிறது.

लोकादिमग्निं तमुवाच तस्मै या इष्टका यावतीर्वा यथा वा ।
स चापि तत्प्रत्यवदद्यथोक्तं अथास्य मृत्युः पुनरेवाह तुष्टः ॥

லோகாதிமக்னிம் தமுவாச தஸ்மை
யா இஷ்டகா யாவதீர்வா யதா வா ।
ஸ சாபி தத்ப்ரத்யவதத் யதோக்தம்
அதாஸ்ய ம்ருத்யு: புனரேவாஹ துஷ்ட: ॥

யமதர்ம ராஜன் அந்த அக்னி எப்படி உலகங்களுக்கு எல்லாம் ஆதாரமானது என்றும், அதில் எந்த வகையான செங்கற்களை எத்தனை உபயோகப்படுத்தவேண்டும் என்றும், அவற்றை எப்படி அமைக்க வேண்டும் என்றும், எடுத்துக் கூறினான். இதை நன்கு கேட்டுப் புரிந்து கொண்ட நசிகேதஸ், யமதருமன் சொன்னதை ஒன்றுகூட விடாமல் அப்படியே ஒப்பித்தான். இதனால் மிகவும் திருப்தியடைந்த யமதர்மன் மறுபடியும் சொன்னான்.

சங்கரரின் உரை

யமதருமன் நசிகேதஸ்ஸுக்கு மீண்டும் அந்த அக்னியைப் பற்றிச் சொன்னான். அதைப்பற்றித்தானே நசிகேதஸ் கேட்க விரும்பினான்? அந்த அக்னி, உலக வடிவமாக நிற்கும் விராட் எனப்படுகிறது. உலகம் தோன்றுவதற்கு முன்னரே அது இருக்கிறது. அதுதான் உருவந்தரித்த முதல் பொருளாகும்.

மேலும், (வேள்விக் குண்டத்தில்) பயன்படுத்தப்படும் செங்கற்களின் வகை, அவற்றின் எண்ணிக்கை, அவற்றை எப்படி அடுக்கி அமைப்பது என்பதையெல்லாம் யமதருமன் எடுத்துச் சொன்னான்.

நசிகேதஸ்ஸூம் யமதருமன் சொன்னதை நன்கு மனதில் வாங்கிக் கொண்டு, அதில் ஒன்றுகூட விடாமல் அப்படியே திரும்ப ஒப்பித்தான். இதனால் மனம் மகிழ்ந்த யமதருமன், ஏற்கனவே தந்த மூன்று வரங்களைத்தவிர இன்னும் நான்காவது வரம் ஒன்றைக் கேட்கும்படி நசிகேதஸ்ஸை வேண்டினான்.

மந்த்ரம் 16

तमब्रवीत् प्रीयमाणो महात्मा वरं तवेहाद्य ददामि भूयः ।
तवैव नाम्ना भविताऽयमग्निः सृङ्कां चेमामनेकरूपां गृहाण ॥

தமப்ரவீத் ப்ரீயமாணோ மஹாத்மா
வரம் தவேஹாத்ய ததாமி பூய: ।
தவைவ நாம்னா பவிதாஅயம் அக்னி:
ஸ்ருங்க்காம் சேமாம் அநேகரூபாம் க்ருஹாண ॥

மிகவும் உளம் மகிழ்ந்த, பெருந்தகையான யமன் நசிகேதஸ்ஸைப் பார்த்து ''உன்மேல் ஏற்பட்ட அன்பினால், நான் உனக்குக் கொடுத்த வரங்களைத் தவிர இன்னும் (நான்காவதாக) ஒரு வரம் தருகிறேன்.[1] நான் உனக்கு உபதேசித்த இந்த அக்னி இனி உன் பெயராலேயே 'நாசிகேத அக்னி' என்று அழைக்கப்படும். இதோ இந்த அழகிய வேலைப் பாடமைந்த (தங்கச்) சங்கிலியையும் ஏற்றுக்கொள்!'' என்று கூறினான்.

1. மூன்றாவது வரத்திற்கு முன்னால், இடையில் இந்த வரம் கொடுக்கப்பட்டது.

சங்கரரின் உரை

யமதருமராஜன் எப்படிப் பேசினான்? மிகவும் உளம் மகிழ்ந்து, பூரித்துப் பேசினான். அவன் தகைமைசால் பெரியவன்; குறுகிய புத்தியில்லாதவன். தனக்கு மாணவனாக அமைந்த நசிகேதஸ்ஸின் தகுதிகளையெல்லாம் கண்டு அவன் ஏற்கனவே மிகுந்த மகிழ்ச்சியடைந்திருந்தான். நசிகேதஸ்ஸைப் பார்த்து ''உனக்கு இப்போது நான்காவது வரமொன்றைத் தருகிறேன். நான் உனக்கு உபதேசித்த இந்த அக்னி உன் பெயராலே அழைக்கப்பட்டு மிகுந்த புகழ்பெறும். மேலும், பல வண்ணங்களில் பல்வகையான மணிகள் அமைக்கப்பட்டு, ஒலிக்கின்ற இந்தச் சங்கிலியை ஏற்றுக்கொள். (அல்லது வேறு வகையாக யமனுடைய சொற்களுக்குப் பொருள் கொண்டால்). பல வைதிகச் சடங்குகள் கொண்டதும் தாழ்வில்லாததுமான ஒரு சங்கிலித்தொடர் போன்ற பல காரியங்களின் அறிவை உனக்குக் கொடுத்தேன். பெற்றுக்கொள்வாயாக. இவற்றின் பலன்களும் பலவகைப்பட்டு உனக்கு நன்மை தரும்.''

மந்த்ரம் / 7

சங்கரரின் முன்னுரை

பின், யமதருமன் வேதங்கள் நமக்குக் கட்டளையிடும் செயல்களைப் புகழ்ந்து பேசினான்.

त्रिणाचिकेतस्त्रिभिरेत्य सन्धिं त्रिकर्मकृत्तरति जन्ममृत्यू ।
ब्रह्मजज्ञं देवमीड्यं विदित्वा निचाय्येमाँशान्तिमत्यन्तमेति ॥

த்ரிணாசிகேதஸ் த்ரிபிரேத்ய ஸந்திம்
த்ரிகர்மக்ருத் தரதி ஜன்மம்ருத்யூ /
ப்ரஹ்மஜக்ஞம் தேவமீட்யம் விதித்வா
நிசாய்யேமாம் சாந்திமத்யந்தம் ஏதி //

''மூன்றுடன் சேர்ந்து, நாசிகேத அக்னியை மூன்றுமுறை வளர்த்து, மூன்று வகையான காரியங்களை எவன் மேற் கொள்ளுகிறானோ அவன் மரணத்தைக் கடக்கிறான். பிரம்மா விடமிருந்து பிறந்தவரும், எல்லாம் அறிந்தவருமான விராட் புருஷனை நன்கு அறிந்து உணர்ந்து, அவன் மனச்சாந்தியை முழுவதும் பெறுகிறான்.''

சங்கரரின் உரை

''மூன்றுடன் சேர்ந்து'' என்றால், தாய், தந்தை, ஆசிரியர் என்ற மூன்று பேரிடமிருந்து உபதேசங்களைப் பெற்று என்பது பொருள். உண்மையான அறிவிற்கு இந்த மூவருந்தான் பிறப் பிடம். இதை பிருஹதாரண்யக உபநிஷத் (IV-1.2) சொல்லு கிறது. 'தாயும் தகப்பனும் ஆசிரியனும் உடைய ஒருவன்' என்று அது குறிப்பிடுகிறது.

அல்லது ''மூன்றுடன்'' என்பதற்கு ''வேதங்கள், வேதத்தை ஒட்டிய மெய்ந்நூல்கள், நல்லவர்கள்'' என்றும் பொருள் கொள்ளலாம்.

அல்லது நேரடியாகக் கண்ணால் பார்ப்பது, இவற்றைக் கொண்டு ஊகித்து மனத்தினால் அறிவது, வேத மெய்ந்நூல்கள் சொல்வதைத் தெரிந்துகொள்வது என்ற மூன்றும் மூன்றுடன் என்பதால் குறிப்பிடப்படுவதாக சொல்லலாம். ஏனெனில் இந்த மூன்றிலிருந்து தான் ஒருவன் செய்து முடிக்க வேண்டிய கடமைகளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும் என்பது கண்கூடு.

நாசிகேத அக்னியை மூன்றுமுறை வளர்ப்பவன் ''த்ரி-நாசிகேதன்'' எனப்படுகிறான் அல்லது அந்த அக்னியைப் பற்றிய விவரம் அறிந்தவன், அதைப் பற்றிக் கற்பவன், அதை வேள்வியாகச் செய்து முடிப்பவன் என்ற மூன்றினால் அவன் 'த்ரி-நாசிகேதன்' என்று சொல்லப்படுகிறான்.

''மூன்று வகையான காரியங்களை மேற்கொள்பவன்'' என்றது வேள்விகள் செய்தல், வேதம் ஓதுதல், தான தருமம் செய்தல் என்ற மூன்று காரியங்களை மேற்கொள்பவன் என்ற பொருளில் சொன்னதாகும். அப்படி மேற்கொள்பவன் முதுமையையும் மரணத்தையும் கடக்கிறான்.

மேலும், வேதங்களின் மூலம், நான்முகப் பிரம்மாவினிட மிருந்து தோன்றிய விராட் என்ற உலகத்தையே தன் வடிவங் கொண்டவரும், எல்லாம் அறிந்தவருமான தேவனை அறிந்து, அவரைத் தனது ஆத்மாவாகவே மனத்தால் தொடர்ந்து தியானித்து வருபவருக்கு, உலகப் பற்றுக்கள் முற்றும் விலகு கின்றன; உயர்ந்த அமைதியும் உண்டாகிறது. அந்த விராட் புருஷரைத் 'தேவன்' என்றழைப்பதற்குக் காரணம், அவரது ஒளியாகும்; அவர் பேரறிவு படைத்தவர்; எல்லோராலும் வணங்கத் தகுந்தவர்.

விராட் என்ற அவரை வேள்விகளாலும் தியானத்தாலும் வழிபட்டு, ஒருவன் விராட் புருஷனாகவே ஆகிவிடுகிறான்.

மந்த்ரம் 18

சங்கரரின் முன்னுரை

இப்பொழுது அக்னியைப் பற்றித் தெரிந்து கொள்வதன் பயனையும், அதை வளர்க்கும் முறையையும் சொல்லி, இந்த விளக்கத்தை முடிக்கிறார்.

त्रिणाचिकेतस्त्रयमेतद्विदित्वा य एवं विद्वांश्चिनुते नाचिकेतम् ।
स मृत्युपाशान् पुरतः प्रणोद्य शोकातिगो मोदते स्वर्गलोके ॥

த்ரிநாசிகேதஸ்-த்ரயமேதத் விதித்வா
ய ஏவம் வித்வாம் சினுதே நாசிகேதம் ।
ஸ ம்ருத்யுபாசான் புரத: ப்ரணோத்ய
சோகாதிகோ மோததே ஸ்வர்கலோகே ॥

மேலே சொன்ன மும்மூன்று வகைகளையும் அறிந்து தேர்ந்து நாசிகேத அக்னியை வளர்த்து வழிபடுபவன், மரணத்தின் வலையிலிருந்து விடுபட்டு, துயரங்களைக் கடந்து, விண்ணுலகில் மகிழ்கிறான்.

சங்கரரின் உரை

முன்னரே சொன்ன மூன்றையும், அதாவது, வேள்வியில் பயன்படும் செங்கற்களின் வகைகளையும், எண்ணிக்கையையும், அவற்றை அடுக்கி அமைக்கும் முறையையும் நன்கு அறிந்து தேர்ந்த ஒருவன், நாசிகேத அக்னியை மூன்று தடவை வளர்த்தவனாகிறான். இந்த அக்னியையே விராட் என்றும், தானே அது என்னும் பாவிப்பவன், தீயநடத்தை, அறியாமை, ஆசை, வெறுப்பு முதலியவற்றாலான மரணத்தின் பிடியிலிருந்து உயிருடனிருக்கும்போதே விடுபட்டு, துயரம் என்ற மன உளைச்சலைத் தவிர்த்து, விராட் புருஷனின் உலகமாகிய விண்ணுலகை அடைந்து, அந்தத் தேவனுடன் ஒன்றாகக்கலந்து மகிழ்கிறான்.

மந்த்ரம் 19

एष तेऽग्निर्नचिकेतः स्वर्ग्यो यमवृणीथा द्वितीयेन वरेण ।
एवमग्निं तवैव प्रवक्ष्यन्ति जनासस्तृतीयं वरं नचिकेतो वृणीष्व ॥

ஏஷ தேஅக்னிர் நசிகேத: ஸ்வர்க்யோ
யமவ்ருணீதா த்விதீயேன வரேண ।
ஏவமக்னிம் தவைவ ப்ரவக்ஷ்யந்தி ஜனாஸஸ்
த்ருதீயம் வரம் நசிகேதோ வ்ருணீஷ்வ ॥

யமதருமன், ''நசிகேதஸ்ஸே! நீ கேட்ட இரண்டாவது வரத்தினால் நீ பெறும் அக்னி இது. இது விண்ணுலகத்தை அளிக்கும். இந்த அக்னியை உனக்கு உரித்தானதாகவே இனி

மக்கள் பேசுவார்கள். நசிகேதஸ்ஸே! மூன்றாவது வரத்தை இப்போது கேள்!'' என்றான்.

சங்கரரின் உரை

''நசிகேதஸ்ஸே! விண்ணுலகை அளிக்கும் அக்னியைக் குறித்து நீ கேட்ட இரண்டாவது வரம் உனக்குத் தரப்பட்டது'' என்றான் யமதருமன். யமனுடைய இந்த முடிவு முன்னரே சொன்னதுதான்.

மேலும், ''இந்த அக்னியை உன்னுடையதாகவே இனி மக்கள் பேசுவார்கள். உன் பெயராலேயே அதை அழைப்பார்கள். இது நான் உனக்கு எனது மனமகிழ்ச்சியால் நீ கேட்காமலேயே கூடுதலாக நானாகக் (கொடுத்த) நான்காவது வரம். நசிகேதஸ்ஸே! (நான் முதலில் கொடுப்பதாகச் சொன்ன மூன்று வரங்களில் இரண்டைக் கொடுத்தாகிவிட்டது.) இப்போது மீதமுள்ள மூன்றாவது வரத்தைக் கேள்!'' என்று யமதருமன் சொன்னான்.

''நான் சொன்னபடி மூன்று வரங்களையும் கொடுக்காவிடில் நான் உன்னிடம் கடன்பட்டிருக்கும் நிலைமை அப்படியே நிற்கும்'' என்பது யமதருமன் சொன்னதன் கருத்து.

மந்த்ரம் 20

சங்கரரின் முன்னுரை

ஏற்கனவே தந்த இரண்டு வரங்களினால், 'செய்' என்று வேதம் இடும் கட்டளை, செய்யாதே என்று அது விதிக்கும் தடை என்ற இரண்டும் அடங்கிய, மந்த்ரம், பிராம்மணங்களினால் எது அடையக்கூடுமோ அவ்வளவுதான் அடைய முடியுமே தவிர, மெய்ப்பொருளைப் பற்றிய உண்மையறிவை அடைய முடியாது.

1. நாம் செய்யவேண்டிய நல்ல கடமைகளை 'செய்' என்று கூறும் வேதத்தின் கட்டளை 'விதி' எனப்படும். தீயசெயல்களைச் 'செய்யாதே' என்று தடுக்கும் வேதத்தின் கட்டளை 'நிஷேதம்' எனப்படும்.

2. மந்த்ரங்கள் என்பவை வேதங்களில் வரும் வாசகங் களாகும். குறிப்பாக, அவை தோத்திரங்களாகும். இவற்றை விளக்கி, வேள்வி முதலிய சடங்குகளில், அவற்றைப் பயன்படுத்தும் முறையைச் சொல்வது 'ப்ராம்ஹணம்' என்ற வேதத்தின் மற்ற பகுதிகளாகும்.

இயற்கையாகவே ஒவ்வொருவருக்கும் வாய்த்திருக்கும் அறியாமைதான் உலகத்தில் பிறந்து நாம் வாழும் வாழ்விற்குக் காரணம். காரியங்கள் செய்வது, காரியம் செய்பவனாக தன்னைப் பற்றி எண்ணுவது, அதன் பலனாக வரும் இன்ப துன்ப உணர்வுகளை அநுபவிப்பது போன்றவற்றை, (இவை யொன்றுமில்லாத) ஆத்மாவான மெய்ப்பொருளின்மேல் தவறாகப் புரிந்துகொள்ளும் நிலைதான் அறியாமையாகும். 'செய்' என்ற கட்டளைகள், 'செய்யாதே' என்ற தடைகள் என்ற இவற்றைத் தன்னுள் கொண்டது இந்த அறியாமை. இந்த அறியாமையை நீக்கி அழிப்பதற்கு ''நாம் மெய்ப்பொருளே யன்றி வேறல்ல'' என்ற ஒருமைப்பாட்டினை அறிந்துகொள்ள வேண்டும்.

இந்த மெய்யறிவு அறியாமைக்கு எதிரி. காரியங்கள் செய்வது, காரியங்கள் செய்பவனாகத் தன்னை எண்ணிக் கொள்வது, அப்படி எண்ணுவதன் பலன்களை நுகர்வது இவை யொன்றும் அந்த மெய்யறிவில் கிடையாது. முழுமையாக விடுதலை பெறுவதே அந்த மெய்யறிவின் நோக்கமாகும். எனவே, இனிவரும் உபநிஷத் பகுதிகள் இந்த நோக்கத் திற்காகத் தொடங்கப்படுகின்றன. மெய்ப்பொருளைப் பற்றிய அறிவின்றி மேற்சொன்ன இரண்டு வரங்களைப் பெற்று விட்டதால் யாதொரு நித்திய பலனுமில்லை. எனவே இந்த

மெய்யறிவுதான் மூன்றாவது வரத்தினால் பெறப்படப்போவ தாகும் என்று ஒரு கதை வடிவில் இது சொல்லப்படுகிறது. வைதிகச் சடங்குகளைச் செய்து அதனால் பெறும் பலன்கள் ஒன்றும் நிலைத்து நிற்காது. அதனால் அந்தச் சடங்குகளில் ஆழ்ந்து விடாமல் துறவு மனப்பான்மை உள்ளவன் மெய்யறி விற்குத் தகுதியுடையவனாகிறான். யந்திரம் மாதிரிச் செய்யும் சடங்குகளையும், அவற்றின் பலன்களையும் இகழ்வதற்காக, நசிகேதஸ்ஸின் மனத்தில், மக்களைப் பெற்றுச் சுகமாக வாழ்வது போன்ற ஆசைகளை, யமதருமன் உண்டாக்க முயற்சிசெய்கிறான்.

''மூன்றாவது வரத்தைக் கேள்!'' என்று யமதருமன் கூறியவுடன், நசிகேதஸ் சொல்கிறான்.

येयं प्रेते विचिकित्सा मनुष्येअस्तीत्येके नायमस्तीति चैके ।
एतद्विद्यामनुशिष्टस्त्वयाऽहं वराणामेष वरस्तृतीयः ॥

யேயம் ப்ரேதே விசிகித்ஸா மனுஷ்யே-
அஸ்தீத்யேகே நாயமஸ்தீதி சைகே ।
ஏதத் வித்யாமநுசிஷ்டஸ் த்வயாஅஹம்
வராணமேஷ வரஸ் த்ருதீய: ॥

''ஒரு மனிதன் இறந்தவுடன், 'அவனது ஆவி இருக் கிறதா இல்லையா' என்ற ஐயம் எழுகிறது. சிலர் 'இருக்கிறது' என்றும் மற்றும் சிலர் 'இல்லை' என்றும் கூறுகிறார்கள். நீ இதை எனக்குத் தெளிவாக்க வேண்டும். எல்லா வரங்களிலும் மேலாக இதுதான் நான் கேட்கும் மூன்றாம் வரம்'' என்று நசிகேதஸ் சொன்னான்.

சங்கரரின் உரை

''ஒரு மனிதன் இறந்தவுடன், அவனது ஆத்மா தொடர்ந்து இருக்கிறதா இல்லையா என்று சந்தேகம் எழுகிறது. உடம்பு, புலன்கள், மனது, புத்தி இவற்றைவிட வேறாக,

இன்னொரு பிறவியை எடுத்து, ஒரு புது உடலோடு சேரும் ஆத்மா ஒன்று உண்டு என்று சிலர் சொல்கிறார்கள். வேறு சிலர் அப்படி ஒன்றும் கிடையாது என்று மறுத்துக் கூறுகிறார்கள்.

''எனவே, இதில் எது உண்மை என்று அறிவதற்கு முடியவில்லை. கண் முதலிய புலன்களாலும், ஊகத்தாலும் இதை நிச்சயிக்க முடியவில்லை. இதில் தெளிவான அறிவு ஏற்பட்டால்தான் மனிதவாழ்வின் உயர்ந்த நோக்கம் நிறை வேறும். ஆதலால், உன் மூலம் நான் இதை அறிய விரும்பு கிறேன். மொத்தம் நீ தந்த மூன்று வரங்களில் இது மீதமிருக்கும் மூன்றாவது வரம்'' என்று நசிகேதஸ் யமதருமனை நோக்கிக் கூறினான்.

மந்த்ரம் 21

சங்கரரின் முன்னுரை

உடலிலிருந்து வேறான ஆத்மாவைப் பற்றிய அறிவை மனதில் வாங்கிக்கொள்வதற்குரிய தகுதி நசிகேதஸ்ஸுக்கு உண்மையில் இருக்கிறதா என்று சோதித்துப் பார்க்க யமதருமன் விரும்பினான். அந்த ஆத்மாவைப் பற்றிய மெய்யறிவு அல்லவா மனித வாழ்க்கையின் நிறைவான முக்தியை அடைய வழி! யமதருமன் சொன்னான்:

देवैरत्रापि विचिकित्सितं पुरा न हि सुविज्ञेयमणुरेष धर्मः ।
अन्यं वरं नचिकेतो वृणीष्व मा मोपरोत्सीरति मा सृजैनम् ॥

தேவைரத்ராபி விசிகித்ஸிதம் புரா
ந ஹி ஸுவிக்ஞேயம் அணுரேஷ தர்ம: ।
அன்யம் வரம் நசிகேதோ வ்ருணீஷ்வ
மா மோபரோத்ஸீரதி மா ஸ்ருஜைனம் ॥

''இது குறித்து தேவர்களுக்கும் முற்காலத்தில் ஐயப்பாடு இருந்தது. ஏனெனில், ஆத்மா என்ற இந்த உண்மைப் பொருள் மிக நுட்பமானது; அவ்வளவு எளிதில் அறியமுடியாதது. நசிகேதஸ்ஸே! வேறு ஏதாவது வரம் கேள்! என்னை வற்புறுத் தாதே. என்னிடம் நீ கேட்கும் இந்த வரத்தை விட்டுவிடு'' (என்று யமதருமன் கூறினான்.)

சங்கரரின் உரை

''முற்காலத்திலேயே இது குறித்து தேவர்களுக்கும்கூட ஐயப்பாடு இருந்தது. ஆத்மா என்ற மெய்ப்பொருள் மிகவும் நுட்பமானது. அதனால் அறிதற்கரியது அல்லவா? அதுவும் சாதாரண மக்களுக்கு அதை அறிதல் கடினம். எவ்வளவுதான் அதைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தாலும் அதை அறிய முடிவதில்லை. எனவே, நசிகேதஸ்ஸே! நீ வேறு ஏதேனும் வரத்தைக் கேள்! ஐயத்திற்கு இடமில்லாத வரமாகக் கேள். என்னை வற்புறுத்தாதே! கடன் கொடுத்தவன் கடன் வாங்கிய வனை நெருக்குவது போல் என்னை நெருக்காதே! நீ கேட்ட இந்த வரத்தை விட்டுவிடு. என்னைக் கட்டாயப்படுத்தாதே.''

மந்த்ரம் 22

சங்கரரின் முன்னுரை

யமதருமனது இந்தச் சொல்லைக் கேட்ட நசிகேதஸ் இப்பொழுது பேசினான்:

देवैरत्रापि विचिकित्सितं किल त्वं च मृत्यो यन्न सुज्ञेयमात्थ
वक्ता चास्य त्वादृगन्यो न लभ्यो नान्यो वरस्तुल्य एतस्य कश्चित् ॥

தேவைரத்ராபி விசிகித்ஸிதம் கில
த்வம் ச ம்ருத்யோ யந்ந ஸுக்ஞேயம் ஆத்த ।
வக்தா சாஸ்ய த்வாத்ருக் அன்யோ ந லப்யோ
நான்யோ வரஸ்துல்ய ஏதஸ்ய கஸ்சித் ॥

''யமதருமனே! தேவர்களும்கூட இந்த விஷயத்தில் ஐயமுற்றிருந்தனர். (மெய்ப்பொருள்) அறிதற்கரியது என்று நீயே கூறுகிறாய். அப்படியிருக்க உன்னைத் தவிர இதுபற்றி எடுத்துக் கூறக்கூடியவர் வேறு யாரும் இருக்க முடியாது. எனவே நான் ஏற்கனவே கேட்ட இந்த வரத்திற்கொப்பான வேறு வரமும் இல்லை.''

சங்கரரின் உரை

(நசிகேதஸ் யமனைப் பார்த்துச் சொன்னான்):

''யமதருமனே! இந்த (மெய்ப் பொருளைப் பற்றிய) விஷயத்தில் தேவர்களுக்கும் கூட ஐயப்பாடு இருந்தது என்று நீயே கூற நான் கேட்டேன். இந்த மெய்ப்பொருள் அறிவதற் கரியது என்று நீயே கூறுவதால், மிக்க அறிவாளிகளுக்கும் அதை அறிவது இயலாது என்பதும் தெளிவு. அதைப் பற்றி விளக்கமாக அறியவைப்பதற்கு உன்னைப் போன்ற மேதை தேடினாலும் கிடைக்கமாட்டார். நான் கேட்ட இந்த வரமோ வாழ்க்கையின் மிக உயர்ந்த பயனான முக்தியை அடையும் வழியாக இருக்கிறது. எனவே, வேறு எந்த வரமும் கேட்பதற் கில்லை. அதை ஒத்த வேறு வரமில்லை. மற்ற வரம் எல்லாம் நிலை யற்ற பலன் களைத்தான் தரும்.'' இதுதான் (நசிகேதஸ்ஸின்) கருத்து.

மந்த்ரம் 23

சங்கரரின் முன்னுரை

இவ்வளவு சொல்லியும், யமதருமன் இன்னும் நசிகேதஸ்ஸின் மனத்தில் (சிற்றின்ப) ஆசையை மூட்டி விடுவதில் முனைந்தான்.

शतायुषः पुत्रपौत्रान्वृणीष्व बहून्पशून् हस्तिहिरण्यमश्वान् ।
भूमेर्महदायतनं वृणीष्व स्वयं च जीव शरदो यावदिच्छसि ॥

சதாயுஷ: புத்ரபௌத்ரான் வ்ருணீஷ்வ
பஹூன் பசூன் ஹஸ்திஹிரண்யம் அச்வான் ।
பூமேர் மஹதாயதனம் வ்ருணீஷ்வ
ஸ்வயம் சஜீவ சரதோ யாவதிச்சஸி ॥

''நூறு வயது வாழக்கூடிய பிள்ளைகளையும் பேரப் பிள்ளைகளையும் வரமாகக் கேள். பசுக்கள், யானைகள், குதிரைகள், பொன், பூமண்டலம் முழுவதும் கேள். நீயும் எத்தனை காலம் வாழவிரும்புகிறாயோ அத்தனை காலம் வாழலாம்.''

சங்கரரின் உரை

''நூறு வயது வாழக்கூடிய பிள்ளைகளையும் பேரப் பிள்ளைகளையும் வரமாகக் கேள். இன்னும் பசுக்கள், யானைகள், குதிரைகள், பொன் இன்னும் பல பிராணிகள் இவற்றைக் கேள். பூமண்டலத்தில் பரந்த ராஜ்யம், விரிந்த நிலங்கள், இடங்கள் இவற்றைக் கேள். இன்னும் இவையெல்லாம் இருந்தும், நீ அற்பாயுள் உடையவனாக இருந்தால் என்ன பயன்? எனவே, நீயும், வலுவான உடலில், உறுதியான உறுப்புக்களோடு எவ்வளவு காலம் வாழவிரும்புகிறாயோ, அத்தனை காலம் உன் விருப்பப்படி வாழலாம்!''

மந்த்ரம் 24

யமதருமன் மேலும் சொல்வான் :

एतत्तुल्यं यदि मन्यसे वरं वृणीष्व वित्तं चिरजीविकां च ।
महाभूमौ नचिकेतस्त्वमेधि कामानां त्वा कामभाजं करोमि ॥

ஏதத் துல்யம் யதி மன்யஸே வரம்
வ்ருணீஷ்வ வித்தம் சிர-ஜீவிகாம் ச ।
மஹாபூமௌ நசிகேதஸ் த்வமேதி
காமானாம் த்வா காமபாஜம் கரோமி ॥

''இதை ஒத்த வேறு வரம் ஏதேனும் இருப்பதாக நீ நினைத்தால் அதைக்கேள். செல்வத்தையும் நீண்ட ஆயுளையும் கேள். பரந்து விரிந்த பூமிக்கு நீ அரசனாக இரு. இன்பங்கள் அநுபவிப்பதற்கு வேண்டிய ஆற்றலுள்ளவனாக உன்னைச் செய்கிறேன்.''

சங்கரரின் உரை

யமன் மேலும் சொல்வான்:

''இந்த வரத்திற்கு ஈடான வேறு ஏதேனும் வரமிருப்ப தாக நீ எண்ணினால் அதையும் கேள். பெருஞ்செல்வத்தையும் அணிமணிகளையும் கேள். நீண்ட ஆயுளையும் கேள். செல்வத்தோடு நீண்ட ஆயுளையும் சேர்த்தே கேள்.

''சுருக்கமாகச் சொன்னால், நசிகேதஸ்ஸே! பெரும் ராஜ்ஜியத்துக்கு நீ அரசனாக இரு. இன்ப நுகர்ச்சிக்கு வேண்டிய அத்தனை சக்தியையும் உனக்குக் கொடுக்கிறேன்; அந்த இன்பங்களில் திளை. மனித உலகத்து இன்பங்கள் மட்டுமின்றி, தேவலோகத்து இன்பங்களையும் தருகிறேன். நான் நினைத்தது வீண் போகாது. அத்தகைய தெய்வ சக்தி உள்ளவன் நான்.''

மந்த்ரம் 25

ये ये कामा दुर्लभा मर्त्यलोके सर्वान् कामान् छन्दतः प्रार्थयस्व ।
इमा रामाः सरथाः सतूर्या न हीदृशा लम्भनीया मनुष्यैः ।
आभिर्मत्प्रत्ताभिः परिचारयस्व नचिकेतो मरणं माऽनुप्राक्षीः ॥

யே யே காமா துர்லபா மர்த்ய லோகே
ஸர்வான் காமான் சந்தத: ப்ரார்த்தயஸ்வ ।
இமா ராமா: ஸரதா: ஸதூர்யா
ந ஹித்ருசா லம்பநீயா மநுஷ்யை: ।
ஆபிர்-மத்ப்ரத்தாபி: பரிசாரயஸ்வ
நசிகேதோ மரணம் மாஅநுப்ராக்ஷீ: ॥

''ஆசைப்படக்கூடிய, ஆனால் - எளிதில் அடைய முடியாத, மனத்துக்குகந்த பொருட்களை எதெது வேண்டுமோ அதையெல்லாம் உன் மனத்திற்குத் தோன்றிய படி கேள். இதோ! இந்த மாதர்கள், அவர்களுடைய ரதங்களோடும், இன்னிசைக் கருவிகளோடும் இருக்கிறார்கள். இதெல்லாம் அற்ப மானிடர் களுக்குக் கிடைக்காது. நான் இவர்களை உனக்குக் கொடுக் கிறேன். அவர்களால் பணிவிடை செய்யப்பட்டு மகிழ்வாயாக. ஆனால், நசிகேதஸ்ஸே! மரணத்தைப் பற்றியும் அதன்பின் என்ன நடக்கிறது என்பதைப் பற்றியும் மட்டும் கேட்காதே'' (என்று யமதருமன் கெஞ்சினான்.)

சங்கரரின் உரை

''விரும்பத் தக்கவை, ஆனால் மனிதர்களால் அடைய முடியாதவை என்ற எல்லாவற்றையும் இச்சைப்படி கேள். இதோ! விண்ணுலக மாதர், அப்ஸரஸ்ஸுகள் இருக்கிறார்கள். இன்பம் ஊட்டுபவர்கள் (ரமயந்தி) என்பதால் ராமா: எனப்படு பவர்கள். தத்தம் ரதங்களோடும், இன்னிசைக் கருவிகளோடும் இங்கு இருக்கிறார்கள். எங்களைப் போன்ற தெய்வசக்திகளின் தயவால் அன்றி சாதாரண மனிதர்களால் அடையமுடியாதவர் கள். என்னால் உனக்குத் தரப்படுகிற இந்தப் பணிப்பெண்கள் உன் காலை அலம்பிவிடுவது போன்ற சேவைகளைச் செய்வார்கள்.

''ஆனால், நசிகேதஸ்ஸே! மரணத்திற்குப் பின் ஏதாவது இருக்கிறதா இல்லையா என்பது போன்ற கேள்விகளை மட்டும் கேட்காதே. அத்தகைய கேள்விகளால் எந்தப் பயனுமில்லை. காக்கைக்கு எத்தனை பற்கள் என்று பரீட்சை செய்வது போலத்தான் இருக்கும் இதுவும்.''

மந்த்ரம் 26

சங்கரரின் முன்னுரை

இப்படி யமதருமன் ஆசை காட்டியும், பெரிய ஏரிபோல், நிலை குலையாமல் நின்ற நசிகேதஸ் கூறுவான்:

श्वोभावा मर्त्यस्य यदन्तकैतत् सर्वेन्द्रियाणां जरयन्ति तेजः ।
अपि सर्वं जीवितमल्पमेव तवैव वाहास्तव नृत्यगीते ॥

ச்வோபாவா மர்த்யஸ்ய யதந்தகைதத்
ஸர்வேந்த்ரியாணாம் ஜரயந்தி தேஜ: ।
அபி ஸர்வம் ஜீவிதமல்பமேவ
தவைவ வாஹாஸ் தவ ந்ருத்யகீதே ॥

''யமதருமனே! நீ சொன்ன இந்தச் சிற்றின்பங்களெல்லாம் நிலையற்றவை. இவற்றைச் சுவைக்கின்ற மனிதனுடைய உயிர்ச்சக்தியை இவை உறிஞ்சி விடுகின்றன. எல்லாவித வாழ்க்கையுமே சிறிது காலத்திற்குப்பின் முடிவடைந்து விடக் கூடியதுதான். நீ சொன்ன தேர் முதலிய இவையெல்லாம் உன்னிடமே இருக்கட்டும். பாட்டும் கூத்தும் நீயே வைத்துக்கொள்.''

சங்கரரின் உரை

''யமதருமனே! மரணத்தின் தேவதையே! உன்னால் குறிப்பிடப்பட்ட சிற்றின்பங்களெல்லாம் இன்று இருந்து நாளை இருக்குமோ, இருக்காதோ என்ற சந்தேகத்துக்குரியவை. மேலும், இன்பந்தரும் தேவலோகத்து மாதர் முதலியவர்கள், ஒருவனது உயிர்ச்சக்தியை உறிஞ்சிவிடுகின்றனர். எனவே, இந்த இன்பப் பொருட்கள் எல்லாம் தீமையை உண்டுபண்ணுபவை. நற்குணம், வலிமை, அறிவு, ஆற்றல், புகழ் எல்லாவற்றையும் அவை அழித்துவிடும். நீண்ட ஆயுள் என்று ஏதோ நீ

தர விரும்புவதாகச் சொன்னாயே, அதைப் பற்றியும் சிறிது சொல்கிறேன் கேள். எல்லா உயிர்வாழ்க்கையும், பிரம்ம தேவனது ஆயுள் உட்பட, குறுகிய காலந்தான் இருக்கும். மனிதனுடைய உயிர் வாழ்க்கையைப் பற்றிக் கேட்பானேன்? அதனால், தேர்களையும் ஆடல் பாடல்களையும் நீயே வைத்துக்கொள்.''

மந்த்ரம் 27

न वित्तेन तर्पणीयो मनुष्यो लप्स्यामहे वित्तमद्राक्ष्म चेत्वा ।
जीविष्यामो यावदीशिष्यसि त्वं वरस्तु मे वरणीयः स एव ॥

ந வித்தேன தர்ப்பணீயோ மநுஷ்யோ
லப்ஸ்யாமஹே வித்தமத்ராக்ஷ்ம சேத்வா ।
ஜீவிஷ்யாமோ யாவதீசிஷ்யஸி த்வம்
வரஸ்து மே வரணீய: ஸ ஏவ ॥

''மனிதன் செல்வத்தினால் திருப்தி அடைவதில்லை. நாங்கள் உன்னைச் சந்தித்து விட்டதனால், எங்களுக்கு இனிச் செல்வம் வந்து குவியும். நீ ஆணையிடும் வரையில் நாங்கள் உயிர் வாழ்ந்திருப்போம். எனினும், நான் விரும்பிக் கேட்பது நான் மூன்றாவதாகக் கேட்ட அதே வரம் தான்.''

சங்கரரின் உரை

பணம் எவ்வளவு இருந்தாலும், மனிதன் ஒருநாளும் போதும் என்று சொல்லமாட்டான். வெறும் பணத்தைச் சேர்த்துவைத்து இந்த உலகத்தில் ஒருவனும் 'இதுபோதும்' என்று திருப்தி அடைந்ததாகத் தெரியவில்லை. ஒருவேளை எங்களுக்கு அப்படிப் பணத்தில் ஆசை வருமானால் அதை அடைவோம் என்பதில் ஐயமில்லை. உன்னைப் பார்த்த பிறகு செல்வம் எங்களுக்குத் தானாகவே வந்து குவியும். இதேபோல், நீ ஆணை செலுத்தும் இடத்தில் இருக்கும் வரை

நீண்ட ஆயுளையும் நாங்கள் பெறுவோம். உன்னைப் பார்த்த பிறகு, எவன் ஏழையாகவோ அற்ப ஆயுள் உள்ளவனாகவோ இருப்பான்? எது எப்படியிருந்தாலும் நான் விரும்பிக் கேட்கக் கூடியதென்னவோ (நான் ஏற்கனவே கேட்ட மூன்றாவது வரம் தான்) மெய்ப் பொருளைப் பற்றிய அறிவுதான்.''

மந்த்ரம் 28

अजीर्यताममृतानामुपेत्य जीर्यन्मर्त्यः क्वधस्थः प्रजानन् ।
अभिध्यायन् वर्णरतिप्रमोदान् अतिदीर्घे जीविते को रमेत ॥

அஜீர்யதாம் அம்ருதானாம் உபேத்ய
ஜீர்யன் மர்த்ய: க்வதஸ்த்த: ப்ரஜானன் ।
அபித்யாயன் வர்ண ரதிப்ரமோதான்
அதிதீர்கே ஜீவிதே கோ ரமேத ॥

''இறவாத தேவதைகளுக்கு அருகில் வந்து சேர்ந்த பிறகு, மண்ணுலகில் வாழ்ந்தாலும் உயரிய குறிக்கோள்களைத் தெரிந்து கொண்டுள்ள எந்த மனிதன் தான் நீண்ட காலம் உயிர் வாழ்வதில் மகிழ்ச்சி அடைவான்? இசை, கேளிக்கை, சிற்றின்பம் என்ற இவையெல்லாம் பயனற்றவை என்பது தெரிந்தும் நீண்ட ஆயுளை எவன் பெரிதாக நினைப்பான்.''

சங்கரரின் உரை

''முதுமையே இல்லாத அமரர்களிடம் வந்து சேர்ந்த பிறகு, நல்ல பேறுகளை இவர்களிடமிருந்து பெறலாம் என்பது தெரிந்தும் முதுமையும் மரணமும் பீடிக்கும் இந்த மண்ணுலகத்து மனிதன், பிள்ளைகள், செல்வம், பொன் என்ற அழியக்கூடிய இவற்றை எப்படி வேண்டுவான்? நிலைத்தது நிலையாதது என்ற பகுத்தறிவு இல்லாத மனிதனல்லவா அதை யெல்லாம் ஆசைப்பட்டுக் கேட்பான்? அல்லது (இந்த மந்த்ரத்திற்கே வேறு

வகையாகப் பொருள் கொண்டால்) வாழ்வின் உயர்ந்த இலக்கு களை அடைய வேண்டுமென்று விரும்புகின்றவன் எவன்தான், அவற்றை அடைவது மிகுந்த சிரமம் என்று தெரிந்தாலும், பிள்ளை, சொத்து, சுதந்திரம் என்று இவற்றில் ஆழ்ந்து ஈடு படுவான்? இவற்றினால் ஒரு பயனுமில்லை என்பதை அறிந்த எவனும் அவற்றைத் தேடி அலையமாட்டான். ஒவ்வொரு மனிதனும் மேலும் மேலும் உயர அல்லவா விரும்புவான்? எனவே, பிள்ளைகள், செல்வம் என்றெல்லாம் சொல்லி எனக்கு ஆசை காட்டவேண்டாம். மேலும், தேவமாதரிடம் பெறக்கூடிய பாட்டும், கேளிக்கையும், கொண்டாட்டமும் விரைவில் மறையக்கூடியவை என்று அவற்றைப் பற்றிய உண்மையைப் புரிந்து கொண்ட எந்த அறிவுள்ள மனிதன் நீண்ட காலம் வாழ்வதில் மகிழ்ச்சி யடைவான்?''

மந்த்ரம் 29

यस्मिन्निदं विचिकित्सन्ति मृत्यो यत्सांपराये महति ब्रूहि नस्तत् ।
योऽयं वरो गूढमनुप्रविष्टो नान्यं तस्मान्नचिकेता वृणीते ॥

इति काठकोपनिषदि प्रथमाध्याये प्रथमा वल्ली ॥

யஸ்மிந்நிதம் விசிகித்ஸந்தி ம்ருத்யோ
யத்-ஸாம்பராயே மஹதி ப்ரூஹி நஸ்-தத் ।
யோஅயம் வரோ கூடமநுப்ரவிஷ்டோ
நான்யம் தஸ்மாந்-நசிகேதா வ்ருணீதே ॥
இதி காடகோபநிஷதி ப்ரதமாத்யாயே ப்ரதமா வல்லீ ॥

''யமதருமனே! மரணத்திற்குப்பின் உயிருக்கு ஏற்படும் கதியைப் பற்றிய ஐயப்பாடுகள், அதைப்பற்றிய அறிவினால் அடையப்பெறும் உயர்ந்த பலன்கள், அறிதற்கு அரிய நுட்பமான இதைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற

இந்த வரத்தைத் தவிர வேறு ஒரு வரத்தையும் நசிகேதஸ் கேட்கவில்லை.''

சங்கரரின் உரை

''எனவே, நிலையற்ற பொருட்களைத் தருவதாகச் சொல்லி எனக்கு ஆசை காட்டவேண்டாம். நான் கேட்டது மெய்ப் பொருளைப் பற்றிய அறிவு. அதைப்பற்றித் தான் இருக்கிறதோ இல்லையோ என்ற சந்தேகம் எல்லோருக்கும் இருக்கிறது. அதைப் பற்றிய உண்மையான அறிவுதான் உயர்ந்த பயனைத்தரும்; சுருக்கமாகச் சொன்னால், நாம் பேசிக் கொண்டிருக்கும் இந்த மெய்ப்பொருள் மிகுந்த நுட்பமானது, உள்ளார்ந்தது. இதைக் குறித்து நான் விரும்பிக்கேட்ட வரத்தைத்தவிர வேறு எந்த வரமும் உன்னைக் கேட்கவில்லை. உண்மையில் இல்லாத பொய்யான விஷயங்களை அறிவு குறைந்தவர்கள் வேண்டுமானால் கேட்கக்கூடும். இந்த நசிகேதஸ் கேட்க மாட்டான். அதைக் கேட்க வேண்டுமென்று மனதால் கூட நினைக்கமாட்டான்.'' (இந்தக் கடைசி வாக்கியம் உபநிஷத் கூறுவது; நசிகேதஸ்ஸே பேசினதன்று).

கடோபநிஷத்தில் முதல் அத்தியாயம்
முதல்வல்லீ முற்றிற்று.

அதற்கு சங்கரரின் உரையும் முற்றிற்று.

அத்தியாயம் 1

இரண்டாவது வல்லீ

மந்த்ரம் 1

சங்கரரின் முன்னுரை

மாணவனான நசிகேதஸ்ஸை நன்கு பரிசோதித்து, மெய் யறிவைப் பெறுவதற்குரிய தகுதியுடையவனாகக் கண்டு யமதருமன் சொன்னான்:

अन्यच्छ्रेयोऽन्यदुतैव प्रेयस्ते उभे नानार्थे पुरुषं सिनीतः ।
तयोः श्रेय आददानस्य साधु भवति हीयतेऽर्थाद्य उ प्रेयो वृणीते ॥

அன்யச்-ச்ரேயோஅன்யதுதைவ ப்ரேயஸ்
தே உபே நானார்த்தே புருஷம் ஸிநீத: ।
தயோ: ச்ரேய ஆததானஸ்ய ஸாது
பவதி ஹீயதேஅர்த்தாத்ய உ ப்ரேயோ வ்ருணீதே ॥

''மேலான முக்தியே விரும்ப வேண்டியது; ஆனால் வெறும் சிற்றின்பமும் விரும்பப்படுகிறது; இரண்டும் வேறு வேறானது. இது இரண்டும் வெவ்வேறு பலன்களைத் தருபவை. இவையிரண்டுமே மனிதர்களைப் பிணிப்பவை. இவ் விரண்டினுள் எது பெரிதும் விரும்பப்பட வேண்டியதோ, அதை தேர்ந்தெடுத்தவனுக்கு நன்மை உண்டாகிறது. சிற்றின் பத்தைத் தேர்ந்தெடுப்பவன் இலட்சியத்தை அடையாமல் விழுந்து விடுகிறான்.''

சங்கரரின் உரை

''விரும்பவேண்டியது முக்தி என்ற குறிக்கோள் - என்பது வேறு; வெறும் சிற்றின்பத்தை (எல்லோரும்) விரும்புகிறார்கள்

என்பது வேறு. நியாயமாக விரும்பப்பட வேண்டியதும், ஆனால் - அவரவர் விரும்புவதும் ஆன இவ்விரண்டும் வெவ் வேறு பயன்களைத் தருபவை. இவையிரண்டுமே மனிதனைப் பிணைக்கின்றன. படிக்கும் மாணவனோ அல்லது மணமாகி இல்லறத்தில் இருப்பவனோ, சாதி, இனம் எதுவாகயிருந்தாலும் இவ்விரண்டிற்குள் ஏதேனும் ஒன்றைப் பின்பற்றலாம். எல் லோருமே இந்த இரண்டிலும் கடமை உணர்ச்சியினால் தூண்டப் படுகிறார்கள். உலகத்தில் செல்வத்தையோ அல்லது உலக வாழ்க்கையிலிருந்து விடுதலையையோ விரும்புகின்றவன், அதற்கேற்ப இன்பங்கள் தரும் வழிகளையோ அல்லது பெரும் பலனான மெய்யறிவு என்ற வழியையோ முறையே தேர்ந் தெடுக்கிறான். எனவே, இவ்விரண்டினாலும் மனிதர்கள் பிணைக்கப்படுகிறார்கள் எனலாம். இவற்றில் ஏதாவதொன் றைத் தேர்ந்தெடுத்து அதைப் பின்பற்ற வேண்டுமென்ற கடமை உணர்ச்சி - அவர்களுக்கு உண்டாகிறது.

''இவையிரண்டு வழிகளும், செழிப்பான வாழ்க்கை, முக்தி என்ற இரு இலக்குகளைக் கொண்டவை என்ற முறையில் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்றாலும், இவை எதிரெதிரானவை. முக்தி என்பது மெய்யறிவை அடிப்படை யாகக் கொண்டது; செழிப்பான வாழ்க்கை என்பதோ அறியாமையை அடிப்படையாகக் கொண்டது.

''இவையிரண்டையும் ஒரே மனிதன் மேற்கொள்ள முடியாது. இவற்றில் ஏதாவது ஒன்றை விட்டுவிடத்தான் வேண்டும். எனவே, இவ்விரண்டில், மேலான நன்மையைத் தரும் முக்தியை வேண்டத்தக்கதாக மதித்து அதைத் தேடு பவன், அறியாமையின் காரணமாக வரும் உலக இன்பங்களை விலக்கி, அதனால் பெருநன்மையை அடைகிறான். குறுகிய நோக்கோடு அறியாமையின் விளைவாக உலக இன்பங்களை நாடுகின்றவன், இந்தப் பேரின்பமாகிற பெரு நன்மையிலிருந்து விலகி, நித்தியமான இலட்சியத்திலிருந்து நழுவி விழுந்து

விடுகிறான். இவன் யார் என்றால், உலகத்து இன்பங்களையே நாடி ஓடுபவன்.''

மந்த்ரம் 2

சங்கரரின் முன்னுரை

(சிற்றின்பமும் பேரின்பமுமாகிய) இவ்விரண்டு இலக்கு களையுமே ஒரு மனிதன் தன்னிச்சையாக மேற்கொள்ள முடியும் என்றால், உலகத்தில் எல்லாரும் ஏன் சிற்றின்பங் களையே நாடுகிறார்கள்? இதற்கு யமதருமன் சொல்லுகிறான்:

श्रेयश्च प्रेयश्च मनुष्यमेतस्तौ संपरीत्य विविनक्ति धीरः ।
श्रेयो हि धीरोऽभि प्रेयसो वृणीते प्रेयो मन्दो योगक्षेमाद्वृणीते ॥

ச்ரேயஸ்ச ப்ரேயஸ்ச மனுஷ்யமேதஸ்-
தௌ ஸம்பரீத்ய விவிநக்தி தீர: ।
ச்ரேயோ ஹி தீரோஅபி ப்ரேயஸோ வ்ருணீதே
ப்ரேயோ மந்தோ யோகக்ஷேமாத் வ்ருணீதே ॥

''சிற்றின்ப வாழ்க்கையும் பேரின்ப முக்தியும் மனிதனை வந்தடைந்திருக்கின்றன. அறிவுள்ள மனிதன் இவற்றை நன்கு ஆராய்ந்து பார்த்து, இவற்றை வெவ்வேறாகப் பிரித்து அறி கிறான். இப்படி அறியும் ஆற்றல் பெற்றவன் பேரின்ப முக்தி யைப் பற்றிக் கொண்டு, சிற்றின்ப வாழ்க்கையைப் புறக்கணிக் கிறான். இந்த அறிவாற்றல் இல்லாதவன் தனது உடம்பை வளர்த்துக் காப்பாற்றுவதையே தொழிலாகக் கொள்கிறான்.''

சங்கரரின் உரை

(சிற்றின்ப வாழ்க்கையோ, பேரின்ப முக்தியோ) இவ் விரண்டில் எதை வேண்டுமானாலும் ஒரு மனிதன் தன்னிச்சைப் படித் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்பது உண்மைதான். இருந்தாலும், குறைவான அறிவு உள்ளவர்களால் இவற்றை

எளிதாகப் பிரித்து உணர முடிவதில்லை. இவற்றை அடையும் வழி என்ன? பெறக்கூடிய பயன் என்ன? என்பதை அவர்கள் ளால் தெரிந்து கொள்ள முடிவதில்லை. எனவே, சிற்றின்ப வாழ்க்கையும் பேரின்ப முக்தியும் சேர்ந்தே மனிதன் முன் நிற்கின்றன. ஆதலால், ஓர் அன்னப்பறவை பாலைத் தண்ணீரிலிருந்து பிரிப்பது போல, அறிவுடைய ஒரு மனிதன் இவற்றில் எது சிறந்தது என்று முழுவதுமாய் மனதில் நன்கு ஆராய்ந்து பார்த்து இவற்றைப் பிரித்து அறிகிறான். இப்படிப் பகுத்தறிந்து, பேரின்ப முக்தியைத் தேர்ந்தெடுக்கிறான். சிற்றின்ப வாழ்க்கையை ஒதுக்கித்தள்ளி விடுகிறான். இப்படிச் செய்பவனே தீரன், புத்திசாலி. இதற்கு மாறாக அறிவில் குறைந்தவன், பகுத்தறிய இயலாதவனாய் தனது உடலுக்கு இன்பந்தரும் பொருட்களைச் சேர்ப்பதிலும், அப்படிச் சேர்த்ததைக் காப்பாற்றிக் கொள்வதிலுமே நாட்டங்கொண்டவனாய், மக்கள், மாடு, மனை என்று இவற்றைத்தான் வேண்டுகிறான்.

மந்த்ரம் 3

யமதருமன் மேலும் சொல்லுகிறான் :

स त्वं प्रियान्प्रियरूपांश्च कामान् अभिध्यायन्नचिकेतोऽत्यस्राक्षीः ।
नैतां सृङ्कां वित्तमयीमवाप्तो यस्यां मज्जन्ति बहवो मनुष्याः ॥

ஸ த்வம் ப்ரியான் ப்ரியரூபாம்ஸ்ச காமான்
நாபித்யாயன் நசிகேதோஅத்யஸ்ராக்ஷீ: ।
நைதாம் ஸ்ருங்க்காம் வித்தமயீமவாப்தோ
யஸ்யாம் மஜ்ஜந்தி பஹவோ மநுஷ்யா: ॥

''நசிகேதஸ்ஸே! சிற்றின்பங்களைத் தரக்கூடிய அனைத்தையும், அனைவரும் விரும்புகின்ற எல்லாவற்றையும் நன்கு யோசித்து, வேண்டாம் - என்று உதறித் தள்ளி விட்டாய். உலகத்துப் பொருட்செல்வம் தரும் இந்த வழியை நீ

ஏற்கவில்லை. இந்த வழியை விரும்பும் மனிதர்கள் பெரும் துன்பங்களைத்தான் முடிவில் அடைகிறார்கள்.''

சங்கரரின் உரை

''நசிகேதஸ்ஸே! என்னால் மீண்டும் மீண்டும் ஆசை காட்டப்பட்டும் கூட, அன்புக்குரிய மக்கள், சுற்றம் (வீடு, வாசல்) என்ற பற்றுக்களெல்லாம் அழியக்கூடியவை என்றும், ஸாரமில்லாதவை என்றும், அவற்றின் குற்றங்களை நன்கு ஆராய்ந்து பார்த்துத் தள்ளிவிட்டாய். அதேபோல் உள்ளத்தைக் கவரும் பெண் ஆசை முதலியவற்றையும் ஒதுக்கிவிட்டாய். உன்னுடைய அறிவுக்கூர்மையைப் பாராட்டுகிறேன். உலகத்துச் செல்வங்களைத் தேடும் வழியை நீ ஏற்கவில்லை. அறிவு குறைந்தவர்கள் அந்த வழியைப் பின்பற்றி அதில் விழுந்து பெருந்துக்கத்தை அடைகிறார்கள்.''

மந்த்ரம் 4

சங்கரரின் முன்னுரை

''சிற்றின்பம், பேரின்பம் இவ்விரண்டினுள் பேரின் பத்தை விரும்புகிறவன் நன்மையை அடைகிறான்; சிற்றின் பத்தை நாடுகிறவன் உண்மையான இலட்சியத்திலிருந்து நழுவி விடுகிறான்'' என்று கடோபநிஷத் (I.2.1) கூறியது. இப்படிச் சொல்லக் காரணம் என்ன என்றால்,

दूरमेते विपरीते विषूची अविद्या या च विद्येति ज्ञाता ।
विद्याभीप्सिनं नचिकेतसं मन्ये न त्वा कामा बहवोऽलोलुपन्त ॥

தூரமேதே விபரீதே விஷூசீ
அவித்யா யா ச வித்யேதி ஞாதா ।
வித்யாபீப்ஸினம் நசிகேதஸம் மன்யே
ந த்வா காமா பஹவோலுலோலுபந்த ॥

''மெய்யறிவு எனப்படுவதும் அறியாமை எனப் படுவதும் ஒன்றுக்கொன்று மிகவும் எதிரானவை; அவற்றின் வழிகளும் தனித்தனியானவை மெய்யறிவை மட்டுமே விரும்பு பவனாக உன்னை நான் எண்ணுகிறேன். சிற்றின்பத்தைத் தரும் பொருட்கள், அவை எவ்வளவுதான் நிறைய இருந்தாலும், உன்னைக் கவரமுடியவில்லை.''

சங்கரரின் உரை

(பேரின்ப முக்தி, சிற்றின்பங்கள் என்ற) இவை யிரண்டும் ஒன்றுக்கொன்று மிகவும் வேறுபட்டிருக்கின்றன. ஒன்று இருக்குமிடத்தில் இன்னொன்று இருக்கமுடியாமல் அவ்வளவு வேறுபட்டிருக்கின்றன. இருட்டும் வெளிச்சமும் போல, எதிரெதிராக இருக்கின்றன. பேரின்பமுக்தி மெய்யறிவி னால் பெறக்கூடியது; சிற்றின்பங்களோ அறிவின்மையால் விரும்பப்படுகின்றன. ஒன்று விடுதலையளிக்கிறது; மற் றொன்று உலகத்தில் பந்தங்களை உண்டாக்குகிறது. இவ்வாறு இவற்றின் பயன்கள் மாறுபடுகின்றன.

அறிவாளிகளால் அறியாமை என்று ஒன்று தெளிவு படுத்தப்பட்டிருக்கின்றது. இதன் விளைவு உலகத்துச் சிற்றின்பங்களாகும். மற்றொன்று நாம் விரும்பத்தக்க பேரின்ப முக்தியை அளிக்கும் மெய்யறிவாகும். ''இவையிரண்டினுள், நசிகேதஸ்ஸே! நீ மெய்யறிவையே விரும்புகிறாய் என்று எண்ணுகிறேன். நடன மாதர்கள் முதலிய பற்பல ஆசைகளை நான் காட்டியும் நீ அவற்றினால் கவரப்படவில்லை. அறி வில்லாத மூடர்கள் அவற்றிற்கு வசப்பட்டிருப்பார்கள். நலம் தரும் வழியிலிருந்து உன்னை அவை விலக்க முடியவில்லை. சிற்றின்பங்களில் மகிழலாமே - என்ற அவாவை அவை உன்னிடம் உண்டாக்க முடியவில்லை. எனவே, மெய்யறிவு ஒன்றை மட்டுமே அடைவதற்கு நீ உயர்ந்த ஆர்வம் கொண்டிருக்கிறாய். பேரின்ப முக்திக்கு நீ மிக்க தகுதி

யுள்ளவன் என்பது எனக்குத் தெரிகிறது'' என்றான் யமதருமன். இதுதான் இங்கு கருத்து.

மந்த்ரம் 5

யமதருமன் தொடர்ந்து சொல்கிறான் :

अविद्यायामन्तरे वर्तमानाः स्वयं धीराः पण्डितं-मन्यमानाः ।
दन्द्रम्यमाणाः परियन्ति मूढाः अन्धेनैव नीयमाना यथान्धाः ॥

அவித்யாயாம் அந்தரே வர்த்தமானா:
ஸ்வயம் தீரா: பண்டிதம்-மன்யமானா: ।
தந்த்ரம்யமாணா: பரியந்தி மூடா:
அந்தேனைவ நீயமானா யதாந்தா: ॥

அறியாமையின் நடுவில் சிக்கிக்கொண்டு, மெத்தப் படித்தவர்களாகவும் - எல்லாம் தெரிந்த அறிவாளிகளாகவும் தங்களைத் தாங்களே நினைத்துக் கொண்டு உண்மை அறியாத மூடர்கள் சுற்றிச்சுற்றி, தவறான வழிகளில் வளைய வந்து கொண்டிருக்கிறார்கள். குருடர்களால் வழிகாட்டப்படும் குருடர் களைப் போன்றது தான் இவர்கள் நிலையும்.

சங்கரரின் உரை

அறியாமையின் நடுவில் வசிப்பவர்களோ, அடர்ந்த இருட்டின் நடுவில் மாட்டிக் கொண்டவர்களைப் போலத் தவிக்கிறார்கள். மக்கள், சுற்றம், மாடு, மனை என்ற ஆசா பாசங்கள் ஏற்படுத்தும் நூற்றுக்கணக்கான சங்கிலிகளால் கட்டப் பட்டு உலக இன்பங்களை அடைவதற்கு மட்டும் தகுதி பெறு கிறார்கள். ஆனால், அவர்கள் தங்களைப் பற்றித் தாங்களாகவே ''நாம் மிகுந்த அறிவுள்ள மேதாவிகள். சாத்திரங்களையெல் லாம் கற்றுவிட்டோம்'' என்று எண்ணுபவர்கள். அறிவிலிக ளாய், ஆராய்ந்து உணரும் ஆற்றலும் அற்றவர்களாய் தவறான

பாதைகளில் சென்று, சுற்றிச் சுற்றி வந்து அலைகிறார்கள். மூப்பு, மரணம், நோய் முதலியவற்றால் தாக்கப்படுகிறார்கள். குருடர்கள் தங்களைப்போன்ற குருடர்களால் வழிகாட்டப் பட்டு, கரடு முரடான வழிகளில் அலைந்து மிகுந்த துன்பங்களை முடிவில் அடைவது போல, இந்த அறிவற்ற மனிதரும் துன்பங்களுக்கு ஆளாகிறார்கள்.

மந்த்ரம் 6

சங்கரரின் முன்னுரை

இந்த அறியாமை ஒன்றின் காரணமாகவே விண்ணுலகம் அடையும் வழி அவர்களுக்குப் புலப்படுவதில்லை.

न सांपरायः प्रतिभाति बालं प्रमाद्यन्तं वित्तमोहेन मूढम् ।
अयं लोको नास्ति पर इति मानी पुनः पुनर्वशमापद्यते मे ॥

ந ஸாம்பராய: ப்ரதிபாதி பாலம்
ப்ரமாத்யந்தம் வித்தமோஹேன மூடம் ।
அயம் லோகோ நாஸ்தி பர இதி மானீ
புன: புனர்-வசமாபத்யதே மே ॥

''பகுத்தறியும் சக்தியில்லாத சிறுவனைப் போல, தவறு களையே செய்து கொண்டு அறியாமையில் உழலுபவர்களுக்கு, விண்ணுலகம் செல்லும் வழி புலப்படுவதில்லை. அவர்கள் உலகத்துச் சொத்து சுதந்திரங்களால் கவரப்பட்டு மயங்கிப் போயிருக்கிறார்கள்; அறிவு குழம்பிப் போயிருக்கிறார்கள். இந்த உலகத்தைத் தவிர வேறு உலகமே கிடையாது என்று எப்போதும் எண்ணிக் கொண்டிருப்பவன், (மரணம் என்னும்) என்னுடைய கட்டுப்பாட்டுக்குள் திரும்பத் திரும்ப வருகிறான்.''

சங்கரரின் உரை

''மரணத்திற்குப் பிறகு அடையப்படும் உலகம் விண்ணுலகம். அது ஸம்பராயம் எனப்படும். இந்த விண்ணுலகத்தை அடைவதற்கு வழியாக, மெய்ந்நூல்கள் எடுத்துக்கூறும் எந்த நல்ல செயலும் ஸாம்பராயம் எனப்படும். இதெல்லாம் பகுத்தறிவில்லாத சிறுவர்களைப் போன்றவர் களுக்குப் புலப்படுவதில்லை; பயன்படுவதில்லை. அவர்கள் தவறான வழிகளிலேயே போகிறார்கள். மக்கள், சுற்றம், மாடு, மனை என்று தங்களுக்குத் தேவையானவற்றிலேயே பற்றுவைக் கிறார்கள். அவர்களது சிந்தனையும் குழம்பியிருக்கிறது. அறியாமை என்னும் இருட்டு அவர்கள் கண்ணை மறைக்கிறது. சொத்து சுதந்திரங்களும் அவர்களைக் கெடுத்துவிடுகின்றன. ''பெண், சோறு, குடி'' என்ற இவை நிரம்பிய உலகம்தான் அவர்களுக்குக் கண்முன் நிற்கிறது. இவர்களுடைய கண்ணுக்குத் தெரியாத வேறு உலகம் ஒன்று இருப்பதாக அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

இப்படியே எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருப்ப தால், மறுபடி மறுபடி, பிறந்துப் பின் இறந்து (மரண தேவதை யாகிய) என்னுடைய ஆதிக்கத்துக்குள்ளேயே வளைய வருகிறார்கள். இடையறாது பிறப்பதும் - இறப்பதுமாகிய துன்பங்களிலே சிக்கிக் கொள்கிறார்கள். இதுதான் பொதுவாக உலகத்தின் நியதியாக இருக்கிறது.''

மந்த்ரம் 7

சங்கரரின் முன்னுரை

''ஆயினும், ஆயிரத்தில் ஒருவனாக, உன்னைப் போன்ற வர்கள் முக்தி என்னும் பேரின்பத்தை, பெரு நலத்தை விரும்பு கிறார்கள். அப்படி விரும்பி மெய்ப் பொருளையும் தெரிந்து கொள்கிறார்கள். இப்படி ஆயிரத்தில் ஒருவன்தான் இதைத்

தெரிந்து கொள்ள முடிகிறது என்பதற்குக் காரணம் என்ன?'' (இதை யமதருமன் இப்போது சொல்கிறான்):

श्रवणायापि बहुभिर्यो न लभ्यः शृण्वन्तोऽपि बहवो यं न विदुः ।
आश्चर्यो वक्ता कुशलोऽस्य लब्धा-(आ)श्चर्यो ज्ञाता कुशलानुशिष्टः ॥

ச்ரவணாயாபி பஹுபிர்யோ ந லப்ய:
ச்ருண்வந்தோஅபி பஹவோ யம் ந விது: ।
ஆஸ்சர்யோ வக்தா குசலோஅஸ்ய லப்தா
(ஆ)ஸ்சர்யோ ஞாதா குசலானுசிஷ்ட: ॥

''(மெய்ப்பொருள் என்ற) அதைப் பற்றிக் கேள்விப்படக் கூட பலருக்கு வாய்ப்பில்லை. அப்படிக் கேள்விப்பட்டாலும் அதைப் புரிந்து கொள்ளப் பலருக்கு முடிவதில்லை. அதைப்பற்றி எடுத்து விளக்குபவர்கள் வியப்புக்குரியவர்கள். அதைப் பெற்றுக்கொள்பவர்களும் வியப்புக்குரியவர்கள். தெரிந்தவர்கள் சொன்னாலும், அதை நன்றாக அறிந்து கொள்பவர்கள் வியப்புக்குரியவர்கள்.''

சங்கரரின் உரை

''அந்த மெய்ப்பொருளைப் பற்றிக் கேள்விப்படக்கூட பலருக்கு வாய்ப்பு இருப்பதில்லை. அப்படி அதைப் பற்றி யாராவது சொல்லிக் கேட்டுக் கொண்டிருந்தாலும், மனத் தூய்மை இல்லாத துரதிருஷ்டசாலிகள் அதைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. இதை (மெய்ப் பொருளை) விளக்குபவர்களே மிகவும் குறைவு; அப்படி விளக்குபவர் யாரேனும் இருந் தால் அவர்கள் வியக்கத்தக்கவர்கள். அதைக்கேட்டுப் புரிந்து கொள்ளும் ஆற்றல் உள்ளவர்களும் வியக்கத்தக்கவர்கள். ஆனால் அவர்களும் மிகமிகச் சிலரே. இவர்களைவிடச் சிறந்த ஆசிரியர் அதைப்பற்றி விளக்கியபின் அதை நன்கு புரிந்து கொண்டவர் மிகமிக வியக்கத்தக்கவர்.''

மந்த்ரம் 8

சங்கரரின் முன்னுரை

ஏன் (இவர்கள் வியக்கத்தக்கவர்கள்) என்றால் :

न नरेणावरेण प्रोक्त एष सुविज्ञेयो बहुधा चिन्त्यमानः ।
अनन्यप्रोक्तो गतिरत्र नास्ति अणीयान् ह्यतर्क्यमणुप्रमाणात् ॥

ந நரேணாவரேண ப்ரோக்த ஏஷ
ஸுவிக்ஞேயோ பஹுதா சிந்த்யமான: ।
அநன்யப்ரோக்தோ கதிரத்ர நாஸ்தி
அணீயான் ஹ்யதர்க்யம் அணுப்ரமாணாத் ॥

''தரமில்லாத மனிதரினால் இந்த மெய்ப்பொருள் பேசப் பட்டால் அதைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது. ஏன் எனில், அது பலவிதமாக நிச்சயப்புத்தியில்லாமல் இருக்கும். மெய்ப்பொருளோடு ஒன்றாகிவிட்ட ஒருவர் அதைச் சொல்லி விளக்கும்பொழுது, அதைப் பற்றி அப்புறம் பலபடியாகச் சிந்தித்துக் குழம்ப வேண்டியதில்லை. அது வாதப்பிரதிவாதங் களுக்கு அப்பாற்பட்டது. ஓர் அணுவை விட அது இன்னும் அதிக நுட்பமானது.''

சங்கரரின் உரை

''(நசிகேதஸ்ஸே!) நீ என்னிடமிருந்து அறியவிரும்பும் இந்த மெய்ப்பொருள் உலக அறிவை மட்டும் உடைய யாராவது தரம் கெட்ட ஒரு சாதாரண மனிதரால் பேசப் பட்டால், கண்டிப்பாக அதைப் புரிந்து கொள்ள முடியாது. அதைப் பற்றிப் பலவிதமாக விவாதிப்பவர்களால் அது பல விதமாக எண்ணத்தூண்டும். ''அது இருக்கிறது'' என்றும் ''அப்படி ஒன்று இல்லவே இல்லை'' என்றும், ''அது காரியம்

செய்கிறது''. ''அது காரியமே செய்யாமல் சும்மா இருக்கிறது'' என்றும் இப்படிப் பலவிதமான எண்ணக்குழப்பங்களை உண்டு பண்ணுகிறது.

அப்படியானால், அதை எப்படித்தான் நன்றாக அறிந்து கொள்வது என்றால், அறிந்து கொள்ள முடியும். அந்த மெய்ப்பொருள் தன்னைவிட வேறில்லை என்றும், வேற்றுமை களை எல்லாம் பொய் என்றும் உணர்ந்து மெய்ப்பொருளோடு இரண்டறக் கலந்துவிட்ட ஓர் ஆசிரியன் அதை விளக்கிக் காண்பிக்கும்பொழுது, அதை நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். அதைப் பற்றிப் பலபடியாக எண்ணிக் குழம்புவதும் நின்று விடும். அது இருக்கிறதா, இல்லையா என்ற விவாதங்கள், சந்தேகங்கள் எதுவும் இந்த மெய்ப்பொருளில் இடம் பெற முடியாது.

அல்லது (இதை வேறு விதமாகச் சொன்னால்) தன்னை விட வேறல்லாத, தானாகவே உள்ள இந்த ஆத்மா என்ற மெய்ப்பொருளை நன்கு விளக்கமாகக் கூறிவிட்டால், அதன் பிறகு தெரிந்து கொள்ள வேண்டியது ஒன்றுமே மிச்சமில்லை. இந்த மெய்ப்பொருளில் வேறு ஒன்றும் இல்லவும் இல்லை. மெய்ப்பொருளும் - தானும் ஒன்று, வேறில்லை - என்று மனிதன் உணர்வதுதான் அறியவேண்டிய முடிவான எல்லை யாகும். (மெய்ப்பொருளைத் தவிர) வேறு எல்லாமே பொய்த் தோற்றங்கள் என்பதால், மெய்ப்பொருளைப் பற்றிய இந்த உண்மையை உணர்ந்தபிறகு, தெரிந்துகொள்ள மிச்சமாக ஒன்றும் இல்லை.

அல்லது (இன்னும் வேறு விதமாகச் சொன்னால்) இரண்டற்ற ஒரே உண்மையான மெய்ப்பொருள் பற்றிய விளக்கத்தை (ஓர் ஆசாரியன்) கூறிவிட்டால், பிறகு பிறத்தல், இறத்தல், மறுபடிப் பிறத்தல் என்ற தொடர்ச் சங்கிலி

அறுபட்டுவிடும். ஏனெனில், மெய்யறிவு ஏற்பட்ட அந்தக் கணத்திலேயே, விடுதலை அல்லது முக்தி கிட்டி விடுகிறது.

அல்லது (இதையே இன்னும் வேறு ஒரு வகையில் பொருள் கொண்டால்) தன்னை மெய்ப்பொருளாக உணர்ந்த ஓர் ஆசிரியன், இந்த மெய்ப் பொருளை விளக்கிக் கூறும் பொழுது, அதில் புரிந்து கொள்ள முடியாதது என்ற ஒன்றும் மீதம் இருக்காது; உண்மையைத் தெரிந்து கொள்வதற்கும் தடையில்லை. அத்தகைய ஆசிரியர் அதை விளக்க அதைக் கேட்கும் ஒருவனுக்கு ''நான் அந்த மெய்ப் பொருளான ஆத்மாவே'' என்ற உணர்வு நிச்சயமாக உண்டாகும். அந்த ஆசிரியருக்கு அவர் மாணாக்கனாக இருந்த பொழுது அப்படித்தானே ஏற்கனவே அனுபவம் உண்டாயிற்று? இது தான் கருத்து. மெய்ந்நூல்களை நன்கு கற்றுணர்ந்த ஓர் ஆசிரியர், 'மெய்ப்பொருள் நம்மைத் தவிர வேறில்லை' என்று தன் மாணவனுக்கு எடுத்துக் கூறும்பொழுது, அது அவனுக்குத் தெளிவாகப் புலப்படுகிறது. இல்லாவிட்டால், இந்த மெய்ப் பொருள் (அறிந்து கொள்ள முடியாதபடி) ஓர் அணுவைவிட மிகுந்த நுட்பமாகி விடுகிறது.

இந்த மெய்ப்பொருளை வெறும் ஆராய்ச்சியினால் மட்டும் தெளிவாக்கிவிட முடியாது; சொந்த அறிவின் திறத்தைக் கொண்டு மட்டும் அலசி ஆராய்ந்து அதை உணர்ந்து கொள்ள முடியாது. அப்படி அறிவின் திறத்தைக் கொண்டு மட்டும் தெரிந்து கொள்ளக்கூடியதாக அந்த மெய்ப்பொருள் கருதப்பட்டால், ஓர் அணுவைவிட நுட்பமானது என்றெல்லாம் சொன்னால், யாரேனும் ஒருவன் ''இல்லை இல்லை; இது நீ நினைத்ததைவிட இன்னும் நுட்பமானது'' என்றோ, ''இதை விட இன்னும் நுட்பமான ஒன்று இருக்கிறது'' என்றோ சொல்லக் கூடும். இந்த மாதிரி அறிவின் விளையாட்டுக்களுக் கெல்லாம் நிலையான முடிவே கிடையாது.

மந்த்ரம் 9

नैषा तर्केण मतिरापनेया प्रोक्तान्येनैव सुज्ञानाय प्रेष्ठ ।
यां त्वमापः सत्य-धृतिर्बतासि त्वादृङ्नो भूयान्नचिकेतः प्रष्टा ॥

நைஷா தர்கேண மதிராபனேயா
ப்ரோக்தான்யேனைவ ஸுக்ஞானாய ப்ரேஷ்ட்ட ।
யாம் த்வமாப: ஸத்ய-த்ருதிர் பதாஸி
த்வாத்ருங் நோ பூயான் நசிகேத: ப்ரஷ்டா ॥

''அன்பிற்குரியவனே! உள்ளனுபவமாக உணர்ந்த ஓர் (ஆசிரியரால்) உபதேசிக்கப்படும்பொழுது உண்டாகிற இந்த மெய்யறிவு, வெறும் வறட்டு ஆராய்ச்சியினால் மட்டும் உண்டாகாது. உறுதியான உள்ளம் கொண்டவனே! நசிகேதஸ்ஸே! நீ பரிவிற்குரியவன்! உன்னைப் போலக் கேள்விகள் கேட்கும் மாணாக்கன் எங்களுக்குக் கிடைக்கட்டும்.''

சங்கரரின் உரை

''எனவே, வேதங்களெல்லாம் சொல்லும் இந்த மெய்ப் பொருளைப்பற்றிய அறிவு, 'அந்த மெய்ப்பொருளைவிடத் தான் வேறில்லை' என்று உணர்ந்த பெரியோர்களால் விளக்கப் பட்டால்தான் மற்றவரும் அதைப் பெறமுடியும். இப்படி யல்லாமல், தன் சொந்த வறட்டு அறிவின் பலத்தைக் கொண்டு மட்டும் ஒருவன் ஆராய்ச்சி பண்ணி இதைத் தெரிந்து கொள்ள முடியாது. அல்லது இந்த ஒன்பதாவது மந்த்ரத்திலுள்ள ''ஆபநேயா'' என்பதை ''அபநேயா'' என்று எடுத்துக் கொண்டால், இத்தகைய மெய்யறிவு, வெறும் அறிவின் பலத்தினால் அழிக்க முடியாதது; வறட்டுத் தர்க்கத்தினால் மறுக்க முடியாதது.

''மெய்ந்நூல்களான வேதங்களின் பொருளை உணராமல் தன் சொந்த அறிவை மட்டும் நம்புகின்ற தர்க்கவாதி, தன் புத்திக்கு எட்டியதையெல்லாம் பேசுவான்.

எனவே, மிகவும் அன்பிற்குரியவனே! வேதத்திலிருந்து அறியப்படும் இந்த மெய்யுணர்வுதான் உண்மையான அறிவாகும். வெறும் வறட்டுத் தர்க்கவாதியாக இல்லாமல், வேதங்களைக் கற்றுணர்ந்த ஆசிரியர்தான் இந்த உண்மையான அறிவைத் தரமுடியும்.

''தர்க்கத்திற்கு அப்பாற்பட்ட இந்த உண்மையறிவு என்பது என்ன? சொல்லுகிறேன். நான் உனக்கு வரமாகக் கொடுத்து, நீ பெற்றதுதான் அது. மாறாத உறுதியுள்ளவன் நீ. உன்னுடைய பிடிவாதமெல்லாம் உண்மைகளை உணர்வதிலேயே இருக்கின்றது'' என்றான் யமதருமன். இந்த மந்த்ரத்தில் உள்ள 'பத' என்ற யமதர்மனின் சொல், நசிகேதஸ்ஸின் பேரில் அவனுக்கு இருந்த பரிவைக் காண்பிக்கிறது. நசிகேதஸ்ஸுக்கு யமதருமன் உபதேசிக்கப்போகும் மெய்யறிவைப் புகழ்வதாக இது இருக்கிறது. ''நசிகேதஸ்ஸே! எங்களுக்குக் கிடைக்கும் மாணவனோ, மகனோ உன்னைப் போலக் கேள்விகள் கேட்பவனாக இருக்கவேண்டும்'' என்று யம தருமன் வேண்டிக் கொள்கிறான்.

மந்த்ரம் 10

மகிழ்ச்சியோடு அவன் மேலும் பேசுகிறான்:

जानाम्यहं शेवधिरित्यनित्यं न ह्यध्रुवैः प्राप्यते हि ध्रुवं तत् ।
ततो मया नाचिकेतश्चितोऽग्निः अनित्यैर्द्रव्यैः प्राप्तवानस्मि नित्यम् ॥

ஜானாம்யஹம் சேவதிரித்யநித்யம்
ந ஹிஅத்ருவை: ப்ராப்யதே ஹித்ருவம் தத் ।
ததோ மயா நாசிகேதஸ்ரிதோஅக்னி:
அநித்யைர் த்ரவ்யை: ப்ராப்தவானஸ்மி நித்யம் ॥

''இந்தச் செல்வமெல்லாம் நிலையில்லாதவை என்று நான் அறிவேன். நிலையில்லாதவற்றைக் கொண்டு நிலையான ஒன்றை அடைய முடியாது. நான் நிலையில்லாத நாசிகேத அக்னியை வளர்த்தேன். அதன் பயனாக, விண்ணுலகத்தை அடைந்தேன். (ஆனால் இந்த விண்ணுலகமெல்லாம் எவ் வளவு நீண்ட காலம் இருந்தாலும், நிரந்தரமானதன்று.)''

சங்கரரின் உரை

''காரியங்கள், வைதிகச் சடங்குகள் இவற்றால் வரும் பயன்கள் இவற்றைப் பெருநிதியாக எண்ணி, இவை மனிதர் களால் வேண்டப்படுகின்றன. இந்தப் பெருநிதி நிலையில் லாதது என்பதை நான் அறிவேன். ஆனால் இவற்றிற்கெல்லாம் உயர்ந்த பெருநிதியான மெய்ப்பொருள் என்றும் நிலையானது. அது நிலையாதவற்றால் அடையமுடியாதது. நிலையில்லாத சிற்றின்பங்கள் என்னும் நிதிதான் நிலையற்ற வழிகளால் அடையப்படும். இதனால், நிலைத்த மெய்ப்பொருளை நிலை யற்ற வழிகளால் அடைய முடியாது - என்பதை நான் அறி வேன். ஆதலால், நாசிகேதாக்னி என்னும் வேள்வி என்னால் செய்யப்பட்டது. விண்ணுலக இன்பங்களைப் பெற இது எனக்கு உதவியது. ஆனால் இதையெல்லாம் நிலையற்ற வழிகளால் தான் நான் அடைந்தேன். இதனால் புண்ணியம் சேர்த்து, நான் யமலோகம் என்ற என்னுடைய உலகத்தை அடைந்தேன். ஆனால் இந்த உலகமும் நிலையானதன்று.''

மந்த்ரம் 11

कामस्याप्तिं जगतः प्रतिष्ठां क्रतोरानन्त्य-मभयस्य पारम् ।
स्तोम-महदुरुगायं प्रतिष्ठां दृष्ट्वा धृत्या धीरो नचिकेतोऽत्यस्राक्षीः ॥

காமஸ்யாப்திம் ஜகத: ப்ரதிஷ்ட்டாம்
க்ரதோரானந்த்யம்-அபயஸ்ய பாரம் ।
ஸ்தோம-மஹதுருகாயம் ப்ரதிஷ்ட்டாம்
த்ருஷ்ட்வா த்ருத்யா தீரோ நசிகேதோஅத்யஸ்ராக்ஷீ: ॥

''நசிகேதஸ்ஸே! நீ நன்கு பொறுமையாக ஆராய்ந்து, தெளிவு பெற்று, ஆசைகளின் எல்லைநிலமானதும், உலகங்களின் நிலைக்களனானதும், தியானத்திற்கும் வேள்விகளுக்கும் பயனானதும், அச்சத்தைக் கடந்ததும், எங்கும் இருப்பதும், புகழத்தகுந்ததும், உனக்கும் இயல்பானதும் ஆன ஹிரண்ய கர்ப்பரை அறிந்து, பரம்பொருளை நாடி உலகத்து இன்பங்களைத் துறந்துவிட்டாய்.''

சங்கரரின் உரை

''நசிகேதஸ்ஸே! நீ நன்றாக ஆராய்ந்து, இவ்வுலகத்து இன்பங்கள், மறுஉலகத்து இன்பங்கள் எல்லாவற்றையும் துறந்து விட்டாய். அறிவினால் உண்மையைக் கண்டாய். ஆசைகளுக்கெல்லாம் எல்லையான ஹிரண்யகர்ப்பரின் உலகமும் வேண்டாம் என்றாய். ஹிரண்யகர்ப்பரின் உலகத்திற்கு அப்பால் ஆசைப்படுவதற்கு ஒன்றுமில்லை. அந்த ஹிரண்ய கர்ப்பர் தான் உலகங்களுக்கெல்லாம் ஆதாரம். ஏனெனில் அவர் எங்கும் நிறைந்திருப்பவர். உயிர்கள், பௌதிக மூலப் பொருட்கள், தெய்வங்களின் உலகங்கள் இவற்றையெல்லாம் அவர் தூண்போல் தாங்குபவர். அவரை நினைந்து வழிபடுவதால் ஏற்படும் பலன்களோ எல்லையில்லாதவை. ஹிரண்ய கர்ப்பராகவே ஆகிவிடுகின்ற பலன்கள் அவை.

''அச்சத்தையெல்லாம் கடந்துவிட்டவன் நீ; ஹிரண்ய கர்ப்பரின் இடம் வரை சென்று பார்த்துவிட்டவன் நீ; புகழ்ச்சிக் குரியதும், அணிமா முதலிய தெய்வீக ஸித்திகள் நிறையப் பெற்றதும், உயர்ந்த பெருமைகளை உடையதுமான அந்த

ஹிரண்ய கர்ப்பரின் உலகம் வரை பார்த்துவிட்டவன் நீ. உன்னுடைய சொந்த நிலையையும் உணர்ந்துவிட்டவன். இவ்வாறு பொறுமையாய் அறிவினால் ஆராய்ந்து, நீ உலக இன்பங்களெல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டாய். மெய்ப்பொருள் ஒன்றையே அறிய விரும்பினாய். ஒப்பிலாத உன் பண்புதான் என்னே!''

மந்த்ரம் 12

யமதருமன் மேலும் பேசினான் :

तं दुर्दर्शं गूढमनुप्रविष्टं गुहाहितं गह्वरेष्ठं पुराणम् ।
अध्यात्मयोगाधिगमेन देवं मत्वा धीरो हर्षशोकौ जहाति ॥

தம் துர்தர்சம் கூடமநுப்ரவிஷ்டம்
குஹாஹிதம் கஹ்வரேஷ்ட்டம் புராணம் ।
அத்யாத்ம யோகாதிகமேன தேவம்
மத்வா தீரோ ஹர்ஷசோகௌ ஜஹாதி ॥

''எளிதில் பார்க்க முடியாததும், அணுக முடியாமல் மறைந்திருப்பதும், புத்தியினுள்ளிருப்பதும், பல துன்பங்களுக்கு இருப்பிடமான இந்த உடம்பினுள் வசிப்பதும், பழமையானதுமான இந்தத் தேவனை (மெய்ப்பொருளை) இடையறாது தியானித்து, அறிவுபடைத்த ஒருவன் அந்த மெய்ப்பொருளைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து இன்பத்தையும் துன்பத்தையும் ஒருங்கே விட்டுவிடுகிறான்.''

சங்கரரின் உரை

மெய்ப்பொருள் எளிதில் காணமுடியாதது. அது அவ்வளவு நுட்பமானது; அணுக முடியாமல் மறைந்திருப்பது. எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும் உலகத்துப் பொருட்களை ஒட்டி, அவற்றைப் பற்றிய அறிவும் மாறிக் கொண்டே

இருக்கிறது. இத்தகைய உலகியல் அறிவால் (மெய்ப்பொருள்) மறைக்கப்பட்டிருக்கிறது.

இது புத்தியில் வசிக்கிறது. ஏனெனில் அங்குதான் அது அறியப்படுகிறது. பல துன்பங்களுக்கு இடமான உடம்பு, அதில் உள்ள புலன்கள் இவற்றிற்கு நடுவில் அது இருக்கிறது. அணுக முடியாமல், புத்தியில் இருப்பதால் அது காண்பதற்கு அரிதாக இருக்கிறது. மிகவும் பழமையான அந்தத் தேவனை, மெய்ப்பொருளை உள்ளனுபவம் என்னும் அத்யாத்ம யோகத்தினால் அறிவுள்ள மனிதன் கண்டு, இன்பத்தையும் துன்பத்தையும் ஒருங்கே விட்டுவிடுகிறான். மெய்ப் பொருளில் வளர்ச்சியும் அழிவும் கிடையாது என்பதால், இன்பமும் இல்லை; துன்பமும் இல்லை. வெளிப் பொருட்களிலிருந்து கவனத்தைத் திருப்பி மெய்ப்பொருளான ஆத்மாவிடத்தில் அதைச் செலுத்துதல் அத்யாத்மயோகம் எனப்படும்.

மந்த்ரம் 13

யமதருமன் மேலும் சொல்லுகிறான் :

एतच्छ्रुत्वा संपरिगृह्य मर्त्यः प्रवृह्य धर्म्यमणुमेतमाप्य ।
स मोदते मोदनीयं हि लब्ध्वा विवृतं सद्म नचिकेतसं मन्ये ॥

ஏதச்-ச்ருத்வா ஸம்பரிக்ருஹ்ய மர்த்ய:
ப்ரவ்ருஹ்ய தர்ம்யமணுமேதம் ஆப்ய ।
ஸ மோததே மோதனீயம் ஹி லப்த்வா
விவ்ருதம் ஸத்ம நசிகேதஸம் மன்யே ॥

"எனது உபதேசத்தைக் கேட்டு - அதை நன்றாக மனத்தில் வாங்கிக் கொண்டு, வெகு நுட்பமான இந்த (மெய்ப் பொருளை) உடம்பு முதலியவற்றின் சேர்க்கையிலிருந்து, பகுத்

தறிவதன் மூலம் அதை உணர்ந்து, ஒரு மனிதன் பேரின்பத்தைப் பெறுகிறான். அவ்வாறு, பேரின்பத்தைத் தரும் (மெய்ப்பொருளை) பெற்றுவிட்ட நசிகேதஸ்ஸுக்கு அந்தப் பேரின்ப மாளிகை வாசல் திறந்திருக்கிறது என்று நினைக்கிறேன்.''

சங்கரரின் உரை

''மேலும், நான் சொல்லப்போகும் ஆத்ம மெய்ப்பொருளை ஆசிரியரின் ஆதரவினால் அவரிடமிருந்து கேட்டு, அந்த மெய்ப்பொருள் தன்னிடமிருந்து வேறானதில்லை என்று நன்கு மனத்தில் வாங்கிக்கொண்டு, அதை (உடல் முதலியவற்றிலிருந்து) பிரித்து அறிந்து, வெகு நுட்பமான அதை உணர்ந்த ஒரு மனிதன் மெய்யுணர்ந்தவனாகிறான். பேரின்பத்தைத் தரும் அதை, அவ்வாறே உணர்ந்து மகிழ்கிறான். எனவே, இவ்விதமான மெய்ப்பொருளின் மாளிகை வாசல் நசிகேதஸ்ஸுக்கு அகலத் திறந்திருக்கிறது. நசிகேதஸ்ஸே! உனக்கு அது கிடைத்திருக்கிறது'' என்று யமதருமன் சொன்னான். ''நான் உன்னை முக்திக்குத் தகுதி வாய்ந்தவனாக மதிக்கிறேன்'' என்பது குறிப்பு.

மந்த்ரம் 14

அப்பொழுது நசிகேதேஸ் சொல்லுகிறான் :

''ஐயா! நான் (முக்திக்குத்) தகுதிவாய்ந்தவனானால், நீரும் என்னிடம் பரிவு உள்ளவரானால் அப்பொழுது (எனக்கு) உபதேசித்தருளும்.''

अन्यत्र धर्मादन्यत्राधर्मात् अन्यत्रास्मात्कृताकृतात् ।
अन्यत्र भूताच भव्याच यत्तत्पश्यसि तद्वद ॥

அன்யத்ர தர்மாத் அன்யத்ர அதர்மாத்
அன்யத்ர அஸ்மாத் க்ருதாக்ருதாத் ।
அன்யத்ர பூதாச்ச பவ்யாச்ச
யத் தத் பச்யஸி தத் வத ॥

''நல்லதிலிருந்து வேறானதும், கெட்டதிலிருந்து வேறானதும், காரணம் காரியம் என்ற இரண்டிலும் வேறானதும் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்றிலும் சேர்ந்த எல்லாவற்றிலும் வேறானதுமாக நீர் அறிந்திருக்கின்ற அந்த மெய்ப்பொருளைப் பற்றி எனக்குக் கூறும்.''

சங்கரரின் உரை

''வேதத்தில் சொல்லப்பட்ட வேள்விகள், சடங்குகள், அவற்றின் பலன்கள், அவற்றிற்கு உதவும் கருவிகள் என்ற இவை நல்லவை எனப்படும். அவற்றிலெல்லாம் வேறானது மெய்ப்பொருள். இதேபோல், கெடுதலாக உள்ளவற்றிலும் வேறானது அது. காரணம், காரியம் என்றவற்றையும்விட வேறானது. கடந்த காலத்தில் நடந்தது, இப்பொழுது நிகழ்வது, இனிவரப்போவது என்ற இவற்றைவிட வேறானது. அதாவது (இந்த மெய்ப்பொருள்) முக்காலங்களையும் தாண்டியது. உலக அநுபவங்களுக்கு அப்பாற்பட்ட இவ்வகையான ஓர் உண் மையை நீர் கண்டிருக்கிறீர். அதைப் பற்றி எனக்குக் கூற வேண்டும்.''

மந்த்ரம் 15

சங்கரரின் முன்னுரை

இப்படி நசிகேதஸ் கேட்டவுடன், அதை அவனுக்குக் கூறும்பொருட்டு, மெய்ப்பொருளினுடைய இன்னும் சில பண்புகளையும் சேர்த்து யமதருமன் பேசினான்:

सर्वे वेदा यत्पदमामनन्ति तपांसि सर्वाणि च यद्वदन्ति ।
यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति तत्ते पदं संग्रहेण ब्रवीमि
ओं इत्येतत् ॥

ஸர்வே வேதா யத்பதம் ஆமநந்தி
தபாம்ஸி ஸர்வாணி ச யத்வதந்தி ।
யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி
தத்தே பதம் ஸங்க்ரஹேண ப்ரவீமி

ஓம் இதி ஏதத் ॥

''எதைப்பற்றி வேதங்களெல்லாம் ஒரே குரலில் பேசுகின்றனவோ, எல்லா ஒழுக்கங்களும் தவங்களும் எதைச் சொல்லுகின்றனவோ, எதை விரும்பி மனிதர் புலனடக்கத்தைக் கைக்கொள்கின்றார்களோ, அந்தக் குறிக்கோளை நான் உனக்குச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். அதுதான் ஓம் எனப் படுவது.''

சங்கரரின் உரை

''எல்லா வேதங்களும் சிறிதும் மாறுபாடில்லாமல் அடையவேண்டிய இலட்சியமாக எதைச் சொல்லுகின்றனவோ, எதன் பொருட்டு எல்லாத் தவங்களும் நோன்புகளும் ஏற்படுத் தப்பட்டிருக்கின்றனவோ, எதை விரும்பி ஓர் ஆசிரியரின் வீட்டில் வசித்துக் கொண்டு (சீடர்கள்) வேதங்களைப் படிக் கிறார்களோ, எதை விரும்பி வாழ்நாள் முழுதும் ஆசைகளை அடக்கிப் பிரம்மசாரிகளாக வாழ்கிறார்களோ, அந்த இலட்சி யத்தை உனக்குச் சுருக்கமாகக் கூறுகிறேன். அதுதான் ஓம் என்பதாகும். நீ அறிய ஆசைப்படுவதெல்லாம், இந்த ஓம் என்ற சொல் குறிப்பிடும் ஒன்றைத்தான். ஓம் என்பது அந்தச் செம்பொருளின் சின்னமாகும்.''

மந்த்ரம் 16

एतद्ध्येवाक्षरं ब्रह्म एतद्ध्येवाक्षरं परम् ।
एतद्ध्येवाक्षरं ज्ञात्वा यो यदिच्छति तस्य तत् ॥

ஏதத்த்யேவாக்ஷரம் ப்ரஹ்ம ஏதத்த்யேவாக்ஷரம் பரம் ।
ஏதத்த்யேவாக்ஷரம் ஞாத்வா யோ யதிச்சதி தஸ்ய தத் ॥

''இந்தச் சொல்லே பிரம்மம்; இந்தச் சொல்லே பரம் பொருள்; இந்தச் சொல்லை அறிந்து கொண்டால், எதை விரும்புகிறார்களோ அது கிடைக்கும்.''

சங்கரரின் உரை

''இந்த 'ஓம்' என்னும் சொல் பரம்பொருளைவிட ஒரு நிலை குறைந்த ஹிரண்யகர்ப்பரைக் குறிக்கும். இந்த 'ஓம்' என்ற சொல்லே பரம்பொருளையும் குறிக்கும். இவ் விரண்டிற்குமே 'ஓம்' என்பதே சின்னம். 'ஓம்' என்ற இந்தச் சொல்லையே ஹிரண்யகர்ப்பராகவோ அல்லது பரம்பொரு ளாகவோ எண்ணி வழிபடுபவன், எதை விரும்புகிறானோ அதை அடைகிறான். அது உயர்நிலைப் பரம்பொருளாக இருந்தால், அதை அவன் தெரிந்து கொள்கிறான். அது தாழ்நிலைப் பரம்பொருளான (ஹிரண்யகர்ப்பராக இருந்தால்) அதை அடைகிறான். பரம்பொருளாக இருந்தால் அதை அறிய வேண்டும். ஹிரண்யகர்ப்பராக இருந்தால் அதை அடைய வேண்டும்.''

மந்த்ரம் 17

एतदालम्बनं श्रेष्ठं एतदालम्बनं परम् ।
एतदालम्बनं ज्ञात्वा ब्रह्मलोके महीयते ॥

ஏததாலம்பனம் ச்ரேஷ்ட்டம் ஏததாலம்பனம் பரம் ।
ஏததாலம்பனம் ஞாத்வா ப்ரஹ்மலோகே மஹீயதே ॥

''இந்தச் சின்னமே சாலச்சிறந்தது. இந்தச் சின்னமே பரம்பொருள். இந்தச் சின்னத்தை அறிந்து, பிரம்மலோகத்தில் துதிக்கப்படுகிறான்.''

சங்கரரின் உரை

பல்வேறு மந்த்ரங்களைவிடப் பரம்பொருளை அடைவதற்கு இதுவே (ஓம்காரமே) சிறந்தது; போற்றத் தகுந்தது. இதுவே பரம்பொருளுமாகும்; அதனினும் தாழ் நிலையிலுள்ள ஹிரண்யகர்ப்பருமாகும். அது பரம்பொருளோடும், ஹிரண்ய கர்ப்பரோடும் தொடர்புடையது. ஒருவன் இந்த ஓம்காரத்தைத் தொடர்ந்து தியானம் செய்வதன் மூலம் ஹிரண்ய கர்ப்பரின் உலகத்தில் துதிக்கப்படுகிறான். இதன் கருத்து என்னவென்றால், பரம்பொருளுடனோ ஹிரண்யகர்ப்பருடனோ ஒன்றாகி, அவன் ஹிரண்யகர்ப்பரைப் போலவே மதிக்கப்படுகிறான்.

மந்த்ரம் 18

சங்கரரின் முன்னுரை

இந்த ஓம்காரம் தியானத்திற்கு ஏற்ற ஒரு பொருளாகவும், மெய்ப்பொருளைக் குறிக்கும் ஒரு சின்னமாகவும் காட்டப்பட்டது. குணங்குறிகளற்றதும், ''நல்லதினின்றும், தீயதனின்றும் வேறாக நீர் அறிகின்ற அதைப் பற்றி எனக்குக் கூறுவீராக!'' (கடோபநிஷத் I.2.14) என்று கேட்கப்பட்டதுமான அந்த மெய்ப்பொருளுக்கு 'ஓம்' என்பது சின்னமாகும் என்று காட்டப்பட்டது. இதே போல், தாழ்நிலையில் உள்ள ஹிரண்யகர்ப்பரைத் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்களுக்கும் அது வழியாக எடுத்துக்காட்டப்பட்டது. கொஞ்சம் அறிவுச் சக்தி குறைந்தவர்களின் பொருட்டு இது கூறப்பட்டது.

இப்பொழுது, 'ஓம்' என்ற சொல்லைத் தன் சின்னமாக உள்ள மெய்ப்பொருளின் இயல்பை நேரடியாகவே நிர்ணயிக்கும் பொருட்டு, அடுத்துவரும் மந்த்ரம் கூறப்படுகிறது.

न जायते म्रियते वा विपश्चित् नायं कुतश्चिन्न बभूव कश्चित् ।
अजो नित्यः शाश्वतोऽयं पुराणो न हन्यते हन्यमाने शरीरे ॥

ந ஜாயதே ம்ரியதே வா விபஸ்சித்
நாயம் குதஸ்சிந் ந பபூவ கஸ்சித் ।
அஜோ நித்ய: சாச்வதோயம் புராணோ
ந ஹந்யதே ஹந்யமானே சரீரே ॥

''அறிவே வடிவான மெய்ப்பொருள் பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை. அது எதிலிருந்தும் உண்டாகவில்லை; அதனின்று எதுவும் உண்டாகவுமில்லை. அது பிறப்பில்லாதது, என்றுமுள்ளது, அழியாதது, பழமையானது, உடம்பு கொல்லப் பட்டாலும், அது கொல்லப்படுவதில்லை.''

சங்கரரின் உரை

அறிவின் வடிவமானது மெய்ப்பொருள். அது ஒருபொழுதும் இல்லாமல் போவது இல்லை; அதற்குப் பிறப்பில்லை. உண்டுபண்ணப்படாதது; அது இறப்பதும் இல்லை; உண்டான பொருளாயிருந்தால் அது மாற்றங்களுக்கு உள்ளாகும்; நிலைத்திருக்காது. மெய்ப்பொருளுக்கு எந்த மாற்றங்களும் கிடையாது என்று காட்டுவதற்காக, பிறப்பு, இறப்பு என்ற தோற்றமும் முடிவுமான இரண்டு மாற்றங்களை மட்டும் சொல்லி, ''அது பிறப்பதுமில்லை; இறப்பதும் இல்லை'' என்று இந்த மந்த்ரம் கூறுகிறது.

'விபஸ்சித்' என்ற சொல், சிறந்த அறிவாளி என்ற பொருளையுடையது. மிகமிகத் தெளிவான அறிவுடையவன் அறிவாளி.

மேலும், இந்த ஆத்மா அல்லது மெய்ப்பொருள் வேறு ஒரு காரணத்தாலும் உண்டு பண்ணப்படவில்லை; அதிலிருந்து

வேறு எதுவும் உண்டாகவும் இல்லை. எனவே, அது பிறப்பில்லாதது; என்றும் இருப்பது; அழிவில்லாதது. நிலைத்து இருக்காத எந்தப் பொருளும் காலப்போக்கில் தேய்ந்து அழியும். ஆனால், இந்த மெய்ப்பொருள் காலத்தைக் கடந்து நிற்பது. இதனாலேயே அது பழமையானது; எனினும் புதுமையானது.

உண்டுபண்ணப்படும் எந்த ஒரு பொருளும் அதன் பல பகுதிகளின் சேர்க்கையால் உருப்பெற்று உண்டாகிறது. அப்பொழுது அது புதிது எனப்படுகிறது. ஒரு பானையைக் குயவன் செய்தால், அதைப் ''புதுப்பானை'' என்று சொல்லுகிறோம். மெய்ப்பொருளோ இப்படி இல்லை. அதற்கு மாறுதல், வளர்ச்சி ஒன்றும் கிடையாது. எனவே அது புராதனமானது. அது எதனாலும் கொல்லப்படுவதில்லை; சேதப்படுத்தப்படுவதில்லை. உடம்பு ஆயுதங்களால் கொல்லப்படும்பொழுது, அதிலிருக்கும் மெய்ப்பொருள் கொல்லப்படுவதில்லை. ஆகாயத்தைப் போல அது எப்பொழுதும் தொடர்ந்து இருக்கிறது. (வெட்ட வெளியைக் கத்தியால் வெட்டி அழிக்க முடியாது அல்லவா?)

மந்த்ரம் 19

हन्ता चेन्मन्यते हन्तुं हतश्चेन्मन्यते हतम् ।
उभौ तौ न विजानीतो नायं हन्ति न हन्यते ॥

ஹந்தா சேந்மன்யதே ஹந்தும்
ஹதஸ்சேந் மன்யதே ஹதம் ।
உபௌ தௌ ந விஜானீதோ
நாயம் ஹந்தி ந ஹந்யதே ॥

அதை அழித்துக் கொல்வதாக நினைப்பவனும், தான் கொல்லப்படுவதாக நினைப்பவனும் இரண்டு பேருமே உண்மை தெரியாதவர்கள். அது கொல்வதுமில்லை, கொல்லப் படுவதுமில்லை.

சங்கரரின் உரை

மெய்ப்பொருளின் தன்மை மேற்சொன்னது போல் அழிக்கமுடியாததாக இருந்தாலும், உடம்பையே இந்த மெய்ப் பொருளாக நினைத்து, அந்த உடம்பைக் கொல்வதனால் அதிலுள்ள மெய்ப்பொருளைக் கொல்வதாக எண்ணி ''நான் இதைக் கொல்வேன்'' என்று நம்புபவனும், இதேபோல ''நான் கொல்லப்படுகிறேன்'' என்று நம்புபவனும், இந்த இரண்டு பேருமே ''அழிவற்ற மெய்ப்பொருளே தங்களது உண்மை இயல்பு'' என்று அறியாதவர்கள். ஏனெனில், இந்த மெய்ப் பொருளுக்கு மாற்றமே இல்லாததால், அது கொல்வதுமில்லை; கொல்லப்படுவதுமில்லை, வெட்டவெளியான ஆகாயத்தைப் போல. (ஆகாயத்தை வெட்டிப் பிளந்து அழிக்க முடியுமா?)

ஆதலால், நல்லதும் கெட்டதும் கலந்து இருக்கும் இந்த உலக வாழ்க்கையானது உண்மை தெரியாதவர்களுக்குத்தான் பொருந்தும். மெய்ப்பொருளின் உண்மை தெரிந்தவர்களுக்கு அதன் தொடர்பு இல்லை. மெய்ப்பொருளை உணர்ந்தவர் களுக்கு நல்லதும் இல்லை; கெட்டதும் இல்லை. வேதங்களும் பகுத்தறிவும் ஒரு குரலாக இப்படித்தான் கூறுகின்றன.

பகவான் கண்ணனுக்கும், ஜனகர் முதலிய ஞானி களுக்கும், அவர்கள் செய்யும் காரியங்களில் பற்று இல்லை.

மந்த்ரம் 20

சங்கரரின் முன்னுரை

இந்த மெய்ப்பொருளை எப்படி ஒருவன் தெரிந்து கொள்வது? (யமதருமன் சொல்கிறான்):

**अणोरणीयान्महतो महीयान् आत्माऽस्य जन्तोर्निहितो गुहायाम् ।
तमक्रतुः पश्यति वीतशोको धातुप्रसादान्महिमानमात्मनः ॥**

அணோரணீயான் மஹதோ மஹீயான்
ஆத்மாஅஸ்ய ஜந்தோர் நிஹிதோகுஹாயாம் ।
தமக்ரது: பச்யதி வீதசோகோ
தாதுப்ரஸாதான் மஹிமானமாத்மன: ॥

''இந்த மெய்ப்பொருள் அணுவிற்கும் அணுவானது; பெரியவற்றிற்கும் பெரிதானது. இந்த உயிரினங்களின் இதயத்தில் இடம் கொண்டிருக்கிறது. ஆசைகளைவிட்ட ஒரு மனிதன் புலன்களின் தெளிவினால் அதன் பெருமையைத் தெரிந்து கொள்கிறான். அதனால், துயரங்களிலிருந்து விடுபடுகிறான்.''

சங்கரரின் உரை

சின்னஞ்சிறிய ஒரு கடுகைவிட இந்த மெய்ப்பொருள் சிறியது; பூமியைப் போன்ற மிகப்பெரியவற்றைவிட அது பெரியது. உலகில் உள்ள அணுவோ அல்லது (பூமியைப் போன்ற) பிரம்மாண்டமானதோ எதாக இருந்தாலும் நித்தியமான மெய்ப்பொருளின் ஆதாரத்திலேதான் இடம்பெற்று நிற்கிறது. மெய்ப்பொருளின் பலம் விலகிவிட்டால், இவையாவும் இல்லாமற்போய்விடும். அதனால், மெய்ப்பொருள் சிறியதினும் சிறியது; பெரியதினும் பெரியது. பல்வேறு வடிவங்களையும் பெயர்களையும் செயல்களையும் மேற்கொண்டு தன்னைத் தானே (தன்னிச்சைப்படி) குறைத்துக் கொண்டு இப்படிச்

சிறிதாகவும், பெரிதாகவும் இந்த மெய்ப்பொருள் தோற்றம் கொள்கிறது. நான்முகன் முதல் புல் பூண்டு வரை எல்லா உயிர்களின் இதயங்களிலும் இது இடம் கொண்டிருக்கிறது.

கேட்டலும், சிந்தித்தலும் மனத்தில் இருத்தித் தியானித் தலும், அந்த மெய்ப்பொருளைத் தெரிந்து கொள்வதற்குரிய வழிகள். ஆசைகளைவிட்ட ஒருவன் அதைக் காண முடியும். கண்ணால் பார்க்கும் பொருட்கள், காணாத விண்ணுலக இன்பங்கள் எல்லா ஆசைகளையும் துறந்தவனாக அவன் இருக்கவேண்டும் – என்பது கருத்து. இப்படிப்பட்ட பற்றின்மை வந்துவிட்டால், மனமும் புலன்களும் அமைதியுறும். மனதும் புலன்களும் 'தாதுக்கள்' எனப்படும். உடலைப் பாதுகாப்பதால் இவை தாதுக்கள் எனப்படுகின்றன. பற்றுக்கள் அற்றால் இந்தத் தாதுக்கள் அமைதியுறும். இவ்வாறு அமைதியடைந்த தாதுக்களின் தெளிவினால், அந்த ஆத்ம மெய்ப்பொருளின் பெருமையை ஒருவன் அறிந்து கொள்கிறான். மாறுவதும் அழிவதும் அதற்குக் கிடையாது என்பதுதான் அந்த மெய்ப்பொருளின் பெருமை. அந்த மெய்ப்பொருளே ''நான்'' என்று நேரடியாக உணரும் ஒருவன், துயரங்கள் எல்லாவற்றி லிருந்தும் விடுபடுகிறான்.

மந்த்ரம் 21

சங்கரரின் முன்னுரை

இவ்வாறின்றி, ஆசை வாய்ப்பட்ட சாதாரண மனிதனுக்கு இந்த மெய்ப்பொருள் அறிய முடியாததாயிருக்கிறது.

आसीनो दूरं व्रजति शयानो याति सर्वतः ।
कस्तं मदामदं देवं मदन्यो ज्ञातुमर्हति ॥

ஆஸீனோ தூரம் வ்ரஜதி சயானோ யாதி ஸர்வத: ।
கஸ்தம் மதாமதம் தேவம் மதன்யோ ஞாதுமர்ஹதி ॥

''இருந்த இடத்தில் இருந்துகொண்டே அது வெகுதூரம் போகிறது; ஒரே இடத்தில் படுத்துக்கொண்டே அது எங்கும் பரவியிருக்கிறது. மகிழ்ச்சிக்கும் துயரத்திற்கும் அப்பாற்பட்ட அந்தத் தேவனை என்னையன்றி யார் அறிய முடியும்?'' (என்று யமதருமன் சொன்னான்).

சங்கரரின் உரை

''இருந்த இடத்தில் அசையாமல் அமர்ந்து கொண்டே இந்த மெய்ப்பொருள் வெகு தூரம் போகிறது. படுத்துக் கொண்டே அது எல்லா இடத்திலும் பரவியிருக்கிறது. இந்த மெய்ப்பொருள் என்ற கடவுள் மகிழ்ச்சிபொருந்தியதாகவும் மகிழ்ச்சியில்லாததாகவும் ஒரே சமயத்தில் விளங்குகிறது.[1] அதாவது, இரு முரண்பட்ட இயல்புகளை ஒருங்கே கொண்டிருக்கிறது. இதனால், அது அறிவதற்கு அரிதாயிருக்கிறது. மகிழ்ச்சியும் மகிழ்ச்சியில்லாமையும் ஒருங்கே கொண்ட அந்தத் தெய்வத்தை என்னைத் தவிர வேறு யார் அறியமுடியும்?

''பல வகையான தடைகளால் தன்னைத்தானே குறுக்கிக் கொண்ட அந்த மெய்ப்பொருள் இருத்தல், செல்லுதல், நித்தியம், அநித்தியம் என்ற இது போன்ற ஒன்றுக்கொன்று எதிரான இயல்புகளோடு கூடி பல்வேறு வண்ணங்களைக் கொண்ட ரத்தினக்கல்லைப் போலும், நினைத்ததையெல்லாம் வகை வகையாகத் தரும் சிந்தாமணியைப்போலும் பலவடிவங் களாகக் காட்சி தருகிறது. எனவே, அறிவுக் கூர்மையுள்ள எங்களைப் போன்ற ஞானிகள் தான் அந்த மெய்ப்பொருளை உணரமுடியும்.'' இப்படி உணர்வதில் உள்ள சிரமத்தைக் காட்டுகிறது, ''என்னைத் தவிர மற்ற யார் அந்த மெய்ப் பொருளை அறிய முடியும்?'' என்ற யமதருமனின் சொற்கள்.

1. இன்பதுன்பங்களுக்கு அப்பாற்பட்டதாக உள்ளது என்பது கருத்து.

உறக்கம் என்பது புலன்களெல்லாம் தங்கள் தொழிலிலிருந்து ஓய்ந்திருக்கும் நிலை; புலன்களால் வரும் பலவகையான உணர்வுகள் உறங்கும் மனிதனுக்குக் கிடையாது. உறக்கத்தில் உணர்வு பலவாறாக இல்லாமல் ஒரே மாதிரிப் பொதுவாக இருக்கிறது. இதனால், அது எங்கும் சீராகப் பரவியிருப்பதாகக் காண்கிறது.

ஒரே சீரான நிலையில், அசையாமல் இருக்கும் தன்மையுடைய பொது உணர்வு, ஏதேனும் பல பொருட்களைப் பற்றிச் சென்று, பல்வேறு அறிவுகளாகப் பிரியும்பொழுது, அது வெகு தூரம் செல்வதுபோல் தோன்றுகிறது. இதற்குக் காரணம், மனத்தின் வேலைதான். மனதோடு சேர்ந்து, தன் சமநிலை மாறி இப்படி அது வெகுதூரம் செல்கிறது. உண்மையில், அது எங்கேயும் எப்போதும் இருக்கிறது.''

மந்த்ரம் 22

சங்கரரின் முன்னுரை

இனி, மெய்ப்பொருளை அறிவதனால் துயரங்கள் தீருகின்றன – என்பதை மேலும் யமதருமன் கூறுகிறான்.

अशरीरं शरीरेष्वनवस्थेष्ववस्थितम् ।
महान्तं विभुमात्मानं मत्वा धीरो न शोचति ॥

அசரீரம் சரீரேஷு அனவஸ்தேஷு அவஸ்த்திதம் ।
மஹாந்தம் விபுமாத்மானம் மத்வாதீரோ ந சோசதி ॥

''உடல்களுக்குள் உடலற்றதாகவும், நிலையாதவற்றுள் நிலைத்ததாகவும், மிகவும் பெரியதாகவும், எங்கும் பரந்திருக்கும் மெய்ப்பொருளைத் தியானம் செய்து உண்மையைத் தெரிந்து கொண்ட ஒருவன் துயரமடைவதில்லை.''

சங்கரரின் உரை

மெய்ப்பொருளான ஆத்மா வெட்ட வெளியான ஆகாயத்தைப் போன்ற இயல்புள்ளது. தேவர்கள், மூதாதையர், மனிதர்கள் என்ற இவர்களின் உடல்களுக்குள் உடலற்றதும், நிலையற்று உறுதியில்லாதவற்றுள் நிலைத்ததும், பெரியதும், எங்கும் பரந்து நிற்பதுமான மெய்ப்பொருளைத் தியானித்து உண்மையறிந்த ஒருவன் துயரப்படுவதில்லை. பெரியது என்று சொன்னால் ஒருவேளை உலகத்திலிருப்பதற்குள் பெரியது என்று யாராவது நினைத்துவிடக்கூடும் என்று எண்ணி, மெய்ப்பொருளை 'எங்கும் நிறைந்தது' என்று சேர்த்து வருணிக்கிறது (யமனுடைய வாக்கு). ''ஆத்மா'' என்ற சொல் முக்கியமாக உடலுக்குள்ளிருக்கும் மெய்பொருளைக் குறிக்கும். ''இந்த மெய்ப்பொருளே நான்'' என்று தியானம் செய்பவனே அறிவுடையவனாவான். அவன் துயரங்களை அடைவதில்லை. தன்னைத்தானே மெய்ப்பொருளாக உணர்ந்தவனுக்குத் துயரம் உண்டாகவே முடியாது.''

மந்த்ரம் 23

சங்கரரின் முன்னுரை

இந்த மெய்ப்பொருளை உணர்வது கடினம் என்றாலும், அதைச் சரியான முறைகளை மேற்கொண்டால் எளிதில் அறியலாம் என்று மேலும் யமதருமன் சொல்கிறான்:

नायमात्मा प्रवचनेन लभ्यो न मेधया न बहुना श्रुतेन ।
यमेवैष वृणुते तेन लभ्यः तस्यैष आत्मा विवृणुते तनूँ स्वाम् ॥

நாயமாத்மா ப்ரவசனேன லப்யோ
ந மேதயா ந பஹுனா ச்ருதேன ।
யமேவைஷ வ்ருணுதே தேன லப்ய:
தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் ॥

''இந்த மெய்ப்பொருளை மிகுந்த படிப்பினால் அறிய முடியாது; வெறும் அறிவினாலும் அறிய முடியாது; நிறையக் கேட்டும் அறிய முடியாது. ஒருவன் விரும்பிப் பிரார்த்திக்கின்ற இந்த மெய்ப்பொருள், அவனுடைய சொந்தத் தன்மையாகவே இருப்பதால், அதுவே அதனை அறியமுடியும். அதாவது அந்த மெய்ப்பொருள் தன்னை அறிய விரும்புகின்ற ஒருவனது சொந்த சொரூபமாக தான் இருப்பதைத் தானே காண்பிக்கிறது.''

சங்கரரின் உரை

பல வேதங்களைக் கற்பதால் இந்த மெய்ப்பொருளை அறியமுடியாது; அந்த வேத வாக்குகளின் பொருளைப் புத்தி யினால் புரிந்து கொள்வதனாலும் (அதை) அறியமுடியாது. நிறைய அதைப் பற்றிக் கேட்பதனாலும் அறிய முடியாது. பின் எப்படி அதை அறிவது?

உபநிஷத் சொல்ல வந்தது இதுதான்: அதை அறிய விருப்பங்கொண்டு வேண்டுகின்ற ஒருவனுடைய சொந்த ஆத்மாவாக இருக்கிறது இந்த மெய்ப்பொருள். அதனால் அவனுடைய ஆத்மாவாகத் தான் இருப்பதை அது தானே காண்பிக்கிறது. இப்படித்தான் அதை அறிய முடியும். இதன் பொருள் என்ன என்றால், ஆசைகளை எல்லாம் துறந்து, மெய்ப்பொருள் ஒன்றைத்தான் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற விருப்பமுடைய ஒருவனுக்கு, அது தன்னைத்தானே வெளிப்படுத்திக் கொள்கிறது. அவனுடைய சொரூபமாகவே இருப்பதைக் காண்பிக்கிறது.

மந்த்ரம் 24

சங்கரரின் முன்னுரை

இன்னும் ஓர் உண்மையையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

नाविरतो दुश्चरितान्नाशान्तो नासमाहितः ।
नाशान्तमानसो वाऽपि प्रज्ञानेनैनमाप्नुयात् ॥

நாவிரதோ துஸ்சரிதாந் நாசாந்தோ நாஸமாஹித: ।
நாசாந்தமானஸோ வாபிப்ரக்ஞானேனைனமாப்நுயாத் ॥

''கெட்ட நடத்தையிலிருந்து விலகாதவனும், புலன்களை நன்கு அடக்காதவனும், மனம் ஒருமுனைப்படாதவனும், கவலைகள் நீங்காதவனும், இந்த மெய்ப்பொருளைப் பற்றிய அறிவைப் பெற முடியாது.''

சங்கரரின் உரை

''வேதத்தினாலும் மற்ற மெய்ந்நூல்களினாலும் தடை செய்யப்பட்ட, கெட்ட நடத்தையிலிருந்து விலகாதவனும், புலன்களை அடக்கி, அவற்றின் கவர்ச்சிகளின்றும் மனத்தைத் திருப்பிக் கொள்ளாதவனும், ஒருமுகப்படாமல் அலைபாய் கின்ற மனதையுடையவனும், மனம் ஒருமுகப்பட்டிருந்தாலும், அதனால் வரக்கூடிய லாபங்களையே எண்ணிக் கொண்டு மனதில் அமைதியில்லாதவனும், இந்த இடத்தில் பேசப்படும் மெய்ப்பொருளை அடைய முடியாது. இதற்கு மாறாக, கெட்ட நடத்தையை ஒதுக்கினவனும், புலன்களினால் ஈர்க்கப்படாதவ னும், மனது ஒருமுகப்பட்டவனும், ஒருமுகப்பட்டதால் வரும் பலன்களைப் பற்றிய எண்ணமில்லாதவனும், ஆசிரியரை அண்டினவனுமான ஒருவன்தான் இந்த மெய்ப் பொருளை மெய்யறிவினால் உணரமுடியும்.'' இதுதான் இங்கு சொல்லப்பட்ட கருத்து.

மந்த்ரம் 25

यस्य ब्रह्म च क्षत्रं च उभे भवत ओदनः ।
मृत्युर्यस्योपसेचनं क इत्था वेद यत्र सः ॥

யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரம் ச உபே பவத ஓதன: ।
ம்ருத்யுர் யஸ்யோபஸேசனம் க இத்தா வேத யத்ர ஸ: ॥

''அந்தணரையும் க்ஷத்ரியரையும் உணவாகக் கொண்டு மரணத்தை ஊறுகாயாக வைத்துக் கொண்ட அந்த மெய்ப் பொருள் எங்கேயிருக்கிறது என்று யார் அறிவார்?''

சங்கரரின் உரை

''மேற்சொன்ன நல்லியல்புகளெல்லாம் இல்லாத ஒருவன் இந்த மெய்ப்பொருளை எப்படி அறிய முடியும்? இந்த மெய்ப் பொருளுக்குத் தருமத்தையே மேற்கொண்ட பிராம் மணரும், காக்குந்தொழிலைச் செய்யும் க்ஷத்திரியரும் உணவா கிறார்கள். எல்லாவற்றையும் அழிக்கும் மரணம் (இந்த உணவுக்கு) தொட்டுக் கொள்ள ஊறுகாயாக இருக்கிறது; அது முக்கிய உணவாக இருக்கக்கூட தகுதியுடையதில்லை. (இப்படி உலகங்களையெல்லாம் அழித்துவிடக்கூடிய மகிமையுள்ள) மெய்ப்பொருள் எங்கிருக்கிறது என்பதை, நல்ல நடத்தையும் நல்ல மனமும் இல்லாத ஒருவன் – எப்படி அறிய முடியும்?'' என்று யமன் நசிகேதஸுக்குச் சொன்னான்.

கடோபநிஷத்தின் முதல் அத்யாயத்தில்
இரண்டாவது வல்லீ முடிவுற்றது.

இதற்குச் சங்கரரின் உரையும் முடிவுற்றது.

அத்தியாயம் 1

மூன்றாவது வல்லீ

சங்கரரின் முன்னுரை

'ரிதம் பிபந்தௌ' (I.3.1) (''உண்மையின் பயனை அருந்துபவர்கள்'') என்று தொடங்குகின்ற இந்தப் பகுதிக்கும். முந்தைய பகுதிக்கும் உள்ள தொடர்ச்சி வருமாறு:

அறிவும் அறியாமையும் வெவ்வேறு மாறான விளைவுகளை உடையன என்று முன்னர் காண்பிக்கப்பட்டது. ஆயினும், அவற்றை நன்கு தெளிவாக நிர்ணயிக்கவில்லை; அவற்றின் பலன்களையும் தெளிவுபடுத்தவில்லை. இப்படி நிர்ணயிப்பதற்காக, ஒரு தேர் உதாரணம் சொல்லப்படுகிறது. இதனால் கருத்துக்களை எளிதில் புரிந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும்.

மேலும், இப்படி (எளிதில் புரிந்து கொள்ள வசதியாக இருக்கும் என்பதற்காகவே) இரண்டு நிலைகள் சொல்லப் படுகின்றன. அடைபவனும் அடையப்படுவதும், இலட்சியமும் இலட்சியத்தை நோக்கிச் செல்லுகின்றவனும் ஆன இரண்டு பேரையும் பிரித்து நன்றாக அறிந்து கொள்வதற்கு இது உதவும்.

மந்த்ரம் 1

ऋतं पिबन्तौ सुकृतस्य लोके गुहां प्रविष्टौ परमे परार्धे ।
छायातपौ ब्रह्मविदो वदन्ति पञ्चाग्नयो ये च त्रिणाचिकेताः ॥

ரிதம் பிபந்தௌ ஸுக்ருதஸ்ய லோகே
குஹாம் ப்ரவிஷ்டௌ பரமே பரார்தே ।
சாயாதபௌ ப்ரஹ்மவிதோ வதந்தி
பஞ்சாக்னயோ யே ச த்ரிணாசிகேதா: ॥

சங்கராின் உரை

'உண்மையை அருந்தும் இரண்டுபேர், அதாவது காரியங்களின் பலன்களை அனுபவிக்கிறவர்கள். (காரியங்களின் பலன்கள் இவ்விடத்தில் 'உண்மை' என்று அழைக்கப்படுகின்றன.) காரியத்தின் பலன்கள் தவறாமல் உண்டாகும் என்பதனால் அவற்றிற்கு உண்மை என்று பெயர்.

அந்த இருவரில் ஒருவர் காரியங்களின் பலன்களை நுகர்கிறார்; மற்றவர் நுகர்வதில்லை. இருப்பினும், இரண்டு பேருமே பலனை நுகர்கிறார்கள் என்று சொல்லுவது ஏன் என்றால், பலனை நுகராதவர், அப்படி நுகருபவரோடு சேர்ந்திருப்பதுதான் காரணம். ஓர் அரசன் ஊர்வலமாகப் போகும்பொழுது, அவனது பரிவாரங்கள் சிலர் குடைகளைப் பிடித்துக் கொண்டு போவார்கள். மக்களும் அதோ! குடைகளைப்பிடித்துக் கொண்டு போகிறார்கள், பார் என்று சுட்டிக் காட்டுவார்கள். ஊர்வலத்தில் எல்லோருமே குடைபிடித்துக் கொண்டு போகமாட்டார்கள். எனினும் எல்லோரும் குடை பிடித்துக்கொண்டு போகிறார்கள் என்று சொல்வது போல, இங்கு ஒருவர்தான் தன் வினைகளின் பலன்களை நுகர்ந்தாலும், இருவருமே அப்படி நுகர்வதாகப் பேச்சு அமைந்திருக்கிறது.

இருவருள் ஒருவர், செய்த வினைப்பயன்களை நுகர்கிறார். ஆயினும் பலனை நுகர்பவர் பலனை நுகராதவர் இருவருமே சேர்ந்து உடலில் உள்ள அறிவு என்னும் குகையில், நுழைந்திருக்கிறார்கள். இந்தக் குகையில் உள்ள இடம் 'பரம் பொருள்' ஆகும். இது ஏன் 'பரம்பொருள்' என்று அழைக்கப் படுகிறது என்றால், உடலுக்கு வெளியே உள்ள ஆகாயத்தோடு ஒப்பிடும்பொழுது இது மேலான பரம் பொருளாகிறது. 'பரார்த்தம்' என்பது இதய வெளியில் இருக்கும் பரம்பொருள். அவரவர் இதயத்தில்தான் அதை நன்கு உணரமுடியும்.

எனவே, அந்த இருவரும் (உயிரும் பரம்பொருளும்) இதய வெளியில் பிரவேசித்து அங்கு இடங்கொண்டிருக் கிறார்கள் (என்று உபநிஷத் சொல்கிறது).

இவ்விருவரும் ஒளியும் நிழலும்போல வேறு வேறானவர்கள் என்று மெய்யறிவு பெற்ற பெரியவர்கள் சொல்லுகிறார்கள். இவ்விருவரில் ஒருவர் உலக வாழ்க்கையில் சிக்கி உழல்பவர்; மற்றது பரம்பொருள்; அது சுயேச்சையாக இருப்பது. தீ வளர்த்து அதில் செய்யும் சடங்குகளைத் துறந்தவர்கள் மட்டும் இவ்வாறு சொல்லவில்லை. கார்ஹபத்யம், ஆஹவனீயம், தக்ஷிணாக்னி, ஸப்யம், ஆவஸத்யம் என்ற ஐந்து அக்னிகளை வளர்த்து வைதிகக் காரியங்களைச் செய்யும் இல்லறத்தாரும் அப்படிச் சொல்லுகிறார்கள். இன்னும் நாசிகேத அக்கினியை மும்முறை தினந்தோறும் வளர்த்து வழிபடுபவர் களும் இப்படித்தான் கூறுகிறார்கள்.

வர்க்கம், மழை, பூமி, ஆண், பெண் என்ற ஐந்தையும் அக்கினியாகப் பாவிப்பது பஞ்சாக்னி வித்யை எனப்படும். இதையே இங்கு இந்த உபநிஷத் சொல்லுவதாகக் கூட வைத்துக் கொள்ளலாம்.

மந்த்ரம் 2

यः सेतुरीजानानां अक्षरं ब्रह्म यत्परम्
अभयं तितीर्षतां पारं नाचिकेतँ शकेमहि ॥

ய: ஸேதுரீஜானானாம் அக்ஷரம் ப்ரஹ்ம யத்பரம் |
அபயம் திதீர்ஷதாம் பாரம் நாசிகேதம் சகேமஹி ||

''வேதவேள்விகள் செய்பவர்க்குப் பாலம் போன்றதும், பயம் என்பதே இல்லாததும், அழிவற்றதுமான பரம்பொருளை அடைந்து (துன்பத்தின்) அக்கரைக்குச் செல்ல விரும்புபவர் களுக்கு வழியானதுமான அந்த நாசிகேத அக்னியை நாங்கள் அறிந்திருக்கிறோம்.''

சங்கரரின் உரை

யமதருமன் தொடர்ந்து உபதேசிக்கிறான். ''நாசிகேத அக்னியை அமைப்பதற்கும் அதை அறிவதற்கும் நாங்கள் சக்தி யுள்ளவர்கள். வைதிகக் கிரியைகளையும் வேள்விகளையும் செய்பவர்களுக்கு அந்த (நாசிகேத) அக்னி ஒரு பாலம் போன்றது. துன்பத்தைக் கடப்பதற்கு அது உதவுகின்றது அல்லவா?

மேலும், பயம் என்பதே இல்லாத இடமான அழிவற்ற பரம்பொருளையும் நாங்கள் அறிவோம். அதுவே வாழ்வின் பெரும் பயனாகும். அதற்கு ''ஆத்மா'' என்று பெயர். பிறவிப் பெருங்கடலைக் கடக்க விரும்புகின்றவர்களுக்குப் பரம் பொருளைப் பற்றிய அறிவே துணை.

உலகத்தின் உள்ளும் புறமுமாக பரம்பொருள் இரண்டு தோற்றங்கள் உள்ளதாக இருக்கிறது. (i) உடலுக்குள் உயிர் (ii) ஒன்றிலும் சேராத தூய பரம்பொருள். முதலாவது, வேள்வி முதலான காரியங்களைச் செய்பவர்களுக்கு உரியது. இரண்டாவது, மெய்யறிவு பெற்றவர்களுக்கு உரியது. இவ்விரண்டு வடி வங்களையுமே நன்றாக அறியவேண்டும். உள்ளும் புறமுமாக இரண்டு வடிவங்களைக் கொண்டிருக்கும் பரம்பொருளைத் தான் முதல் மந்த்ரத்தில் ''உண்மையை விரும்புகின்ற இரண்டு பேரும்'' என்று கடோபநிஷத் (III-1) அறிமுகப்படுத்துகிறது.

சங்கரரின் முன்னுரை

பரம்பொருளின் இந்த இரண்டு வடிவங்களில் ஒன்று உடம்பினுள் உயிராக (ஜீவனாக) இருக்கிறது. அதுதான் பிறப்பு இறப்பு முதலியவற்றை உடையது. உடம்போடு சேர்ந்திருப் பதால் இந்த நிலை அதற்கு ஏற்படுகிறது. ஆயினும், அது முயன்றால் உண்மையறிவைப் பெறமுடியும்; அறியாமையி லேயே உழல்வது என்று முடிவு செய்து அது சும்மா இருந்து

விடவும் முடியும். உண்மையறிவினால் அது விடுதலை பெறலாம். அறியாமையினால் அது பிறப்பு, இறப்பு இவற்றி லேயே சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கலாம். இதை உணர்த்து வதற்காக உடம்பை ஒரு தேராக உருவகப்படுத்துகிறது உபநிஷத்.

மந்த்ரம் 3

आत्मानं रथिनं विद्धि शरीरं रथमेव तु ।
बुद्धिं तु सारथिं विद्धि मनः प्रग्रहमेव च ॥

ஆத்மானம் ரதினம் வித்தி சரீரம் ரதமேவ து ।
புத்திம் து ஸாரதிம் வித்தி மன: ப்ரக்ரஹமேவ ச ॥

''தன்னைத் தேராளியாகவும், உடம்பைத் தேராகவும், புத்தியைத் தேரோட்டியாகவும் மனத்தை லகானாகவும் தெரிந்து கொள் !''

சங்கரரின் உரை

''வினைகளின் பலனை நுகரும் உயிரான உன்னைத் தேராளியாக அறிக ! உடம்பைத் தேராக அறிக. ரதத்தில் பூட்டப் பட்ட குதிரைகளைப் போலப் புலன்களெல்லாம் உடம்பை இழுக்கின்றன. ஒரு விஷயத்தை நிச்சயித்து முடிவெடுக்கும் புத்தியை தேரோட்டியாக அறிக! உடம்பிலே புத்திதான் சிறப் பான இடத்தை வகிக்கிறது. உடம்பின் எல்லாச் செயல்களும் பொதுவாக, புத்தியினால்தான் ஏவப்பட்டு நடக்கின்றன, தேரோட்டிதான் தேரைச் செலுத்துவதில் முக்கியமான மனிதன் என்பது போல. மனத்தை லகானாக அறிக ! அதுதான் 'இதுவேண்டும்' 'அதுவேண்டும்' என்று விரும்புகிறது. 'இதுவோ, அதுவோ' என்று சந்தேகங்களையும் எழுப்புகிறது.

தேரில் பூட்டப்பட்ட குதிரைகள் லகானால் இழுத்துப் பிடிக்கப் படும்பொழுது ஒழுங்காக நடப்பதுபோல் மனத்தால் இழுத்துப் பிடிக்கப்படும்பொழுது கண், காது முதலியவை ஒழுங்காக வேலை செய்கின்றன.

மந்த்ரம் 4

इन्द्रियाणि हयानाहु-र्विषयांस्तेषु गोचरान् ।
आत्मेन्द्रियमनोयुक्तं भोक्तेत्याहुर्मनीषिणः ॥

இந்த்ரியாணி ஹயானாஹு ர்–
விஷயாம்ஸ் தேஷு கோசரான் ।
ஆத்மேந்த்ரிய மனோயுக்தம்
போக்தேத்யாஹு ர் மநீஷிண: ॥

''புலன்களைக் குதிரைகள் என்று சொல்லுகிறார்கள். அவற்றிற்குரிய பொருட்களைத் தேர் ஓடும் பாதைகளாகச் சொல்லுகிறார்கள். உடம்பு, புலன்கள், மனது இவற்றோடு கூடிய உயிரை (ஜீவனை) இன்பதுன்பங்களை அனுபவிப் பவனாக, உண்மை தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள்.''

சங்கரரின் உரை

(உடம்பைத்) தேராக உருவகப்படுத்திப் பேசிய பெரியவர்கள், கண் முதலிய புலன்களை அந்தத் தேரில் பூட்டிய குதிரைகள் என்று அழைக்கிறார்கள். குதிரைகள் தேரை இழுக்கின்றன; அதுபோல, புலன்கள் இந்த உடம்பை இழுக்கின்றன. இரண்டிற்கும் உள்ள இந்த ஒற்றுமை கருதி, புலன்களைக் குதிரைகள் என்றனர் பெரியோர்.

புலன்களைக் குதிரைகள் என்று சொன்னபிறகு, புலன்களால் அறியப்படும் நிறம் முதலிய பொருட்களை தேர் ஓடும் பாதையாகச் சொல்லுகிறார்கள். எதையும் நன்கு ஆராயும் பெரியவர்கள், உடலோடும், புலன்களோடும், மனத்தோடும் கலந்து நிற்கும் ஆத்மாவை, எல்லாவற்றையும் அனுபவித்துப் பிறவிகளை எடுக்கும் உயிராகச் சொல்கிறார்கள்.

ஆனால், எல்லாவற்றையும் கடந்து, ஒன்றிலும் ஒட்டாமல் நிற்கும் பரம்பொருளுக்கு இன்பம், துன்பம் முதலிய அநுபவங்களே கிடையாது. உடல், மனம், புத்தி இவற்றோடு கலந்து ஒரு கட்டுக்குள் வந்துவிட்ட பரம்பொருள், ஜீவன் எனப்படுகிறது. இந்த ஜீவனுக்குத்தான் அநுபவங்கள் ஏற்படுகின்றன. பரம்பொருளுக்கு எந்த விதமான அனுபவமும் ஏற்படுவதில்லை. இதை வேதமே சொல்லுகிறது: ''அது நினைப்பதுபோலும், அசைவது போலும் தோற்றமளிக்கிறது.'' (பிருஹதாரண்யக – உபநிஷத் IV - iii. 7)

இப்படி இருந்தால்தான், விஷ்ணுவின் நிலையை அடைவதாகச் சொல்வதில் (கடோபநிஷத் I-3.9)பொருள் உண்டு. விஷ்ணுவின் நிலைதான் முக்தி; அதுவே நமது சொந்த நிலை.

இதைத்தான் தேர் என்ற உருவகத்தின் மூலம் நமக்கு விளக்கமாகத் தெரிவிக்கப் போகிறது உபநிஷத். தன்னைப் பற்றிய மெய்யறிவு இல்லாமல், முக்தி பெறமுடியாது. தன் சொந்த நிலையை யாரும் மீறிப் போகமுடியாது அல்லவா?

மந்த்ரம் 5

यस्त्वविज्ञानवान्भवत्ययुक्तेन मनसा सदा ।
तस्येन्द्रियाण्यवश्यानि दुष्टाश्वा इव सारथेः ॥

யஸ்து அவிக்ஞானவான் பவத்–
யயுக்தேன மனஸா ஸதா ।
தஸ்யேந்த்ரியாணி அவச்யானி
துஷ்டாச்வா இவஸாரதே: ॥

''எவனுடைய புத்தி, அடக்கமில்லாத மனத்தோடு சேர்ந்து, நல்லது கெட்டது தெரியாமல் திகைத்துவிடுகிறதோ, அவனுடைய புலன்களும் கட்டுக்கடங்காமல், தேரோட்டிக்கு அடங்காத முரட்டுக் குதிரைகளைப் போல, தாறுமாறாக வேலை செய்கின்றன.''

சங்கரரின் உரை

தேரோட்டி என்று உருவகப்படுத்தப்பட்ட புத்தி செய்ய வேண்டியது, செய்ய வேண்டாதது என்று பிரித்தறிய முடியாமல், உண்மையான தேரோட்டி தேரைக் கவனமாக ஓட்டுவதைப் போலல்லாமல், கட்டுக்கடங்காத மனத்தோடு கூட்டுச் சேர்ந்து விடுகிறது. அப்பொழுது, திறமை குன்றிய புத்தியின் கீழ் வேலைசெய்யும் புலன்களும் கட்டுக்கடங்காமல் தறிகெட்டு நெறி தவறிவிடுகின்றன. தேரோட்டியின் கட்டளைக்கு அடங்காமல் தறிகெட்டு ஓடும் முரட்டுக் குதிரைகளைப்போல, இந்தப் புலன்களும் கண்டபடி வேலைசெய்கின்றன.

மந்த்ரம் 6

यस्तु विज्ञानवान्भवति युक्तेन मनसा सदा ।
तस्येन्द्रियाणि वश्यानि सदश्वा इव सारथेः ॥

யஸ்து விக்ஞானவான்பவதி யுக்தேன மனஸா ஸதா ।
தஸ்யேந்த்ரியாணி வச்யானி ஸதச்வா இவ ஸாரதே: ॥

''நல்லது-கெட்டதைப் பிரித்தறியும் திறனைப் பெற்ற புத்தி, கட்டுப்பாடுள்ள மனத்தோடு சேர்ந்து, செயற்படும் பொழுது, அதைச் சேர்ந்த புலன்களும், தேரோட்டியின் கட்டளைக்குப் பணிந்து நடக்கும் நல்ல குதிரைகளைப் போல, ஒழுங்காக அடங்கி வேலை செய்கின்றன.''

சங்கரரின் உரை

திறமையற்ற தேரோட்டியைப் போலல்லாமல், பகுத் தறியும் ஆற்றல் பெற்ற திறனுள்ள புத்தி, கட்டுப்பாட்டோடு கூடியதும் ஒருமுனைப்பட்டதுமான மனத்தோடு சேர்ந்து செயல்படும் பொழுது, அதைச் சார்ந்த புலன்களும், கட்டுப் பாட்டோடு இயங்குகின்றன. தேரோட்டி ஓடச் சொன்னால் ஓடி, நிற்கச் சொன்னால் நிற்கின்ற நல்ல குதிரைகளைப்போல, புலன்கள் ஆகிவிடுகின்றன.

மந்த்ரம் 7

சங்கரரின் முன்னுரை

தனது புத்தியைச் சாரதியாகப் பயன்படுத்தாத ஒருவனுக்கு என்ன தீமை வரும் என்பதை அடுத்த மந்த்ரம் சொல்லுகிறது.

यस्त्वविज्ञानवान्भवति अमनस्कः सदाऽशुचिः ।
न स तत्पदमाप्नोति संसारं चाधिगच्छति ॥

யஸ்து அவிக்ஞானவான் பவதி அமனஸ்க: ஸதா அஸுசி: ।
ந ஸ தத்-பதமாப்னோதி ஸம்ஸாரம் ச அதிகச்சதி ॥

''எவனுக்குப் பகுத்தறியும் புத்தி இல்லையோ, எவனு டைய மனம் அடங்கவில்லையோ, அவன் இலட்சியத்தை அடைவதில்லை. எப்போதும் தூய்மைகெட்டு, பிறவிச் சுழலில் விழுகிறான்.''

சங்கரரின் உரை

பகுத்தறிவில்லாத புத்தியும் கட்டுக்கடங்காத மனமும் படைத்த காரணத்தால் தூய்மை இழந்து நிற்கும் ஒருவன், உடம்பென்னும் தேரில் சென்று நித்தியமான பரம்பொருளை அடையும் இலட்சியத்தை எட்ட முடிவதில்லை. அப்படி எட்டு வதற்கு உதவ அவனுடைய புத்தி சக்தியற்று விடுகிறது. அது மட்டுமல்ல; பிறவி, மரணம் என்ற இந்தச் சுழலிலும் அகப் பட்டுக்கொள்கிறான்.

மந்த்ரம் 8

यस्तु विज्ञानवान्भवति समनस्कः सदा शुचिः ।
स तु तत्पदमाप्नोति यस्माद्भूयो न जायते ॥

யஸ்து விக்ஞானவான் பவதி ஸமனஸ்க: ஸதா சுசி: ।
ஸ து தத்பதமாப்னோதி யஸ்மாத்பூயோ ந ஜாயதே ॥

''எவன் பகுத்தறியும் புத்தியைப்பெற்று, அடங்கிய மனமுடையவனாக எப்போதும் தூய்மையோடு இருக் கிறானோ, அவன் தன் இலட்சியத்தை அடைகிறான். மறுபடி வந்து பிறப்பதில்லை.''

சங்கரரின் உரை

எவன் திறமையுள்ள தேரோட்டியைப் போன்ற புத்தி யைப் பெற்றிருக்கிறானோ, அடங்கிய மனமுடையவனாக இருக்கிறானோ இந்தக் காரணத்தினாலேயே தூயவனாக விளங்குகிறானோ, அவன் மிக உயர்ந்த இலட்சியத்தை அடைகிறான். அந்த இலட்சியத்திலிருந்து பிரிக்க முடியாதவ னாய், உலகில் மறுபடி பிறவி எடுப்பதில்லை.

மேலே சொன்ன இலட்சியம் என்பது என்ன? உபநிஷத் சொல்லுகிறது.

மந்த்ரம் 9

विज्ञानसारथिर्यस्तु मनः प्रग्रहवान्नरः ।
सोऽध्वनः पारमाप्नोति तद्विष्णोः परमं पदम् ॥

விக்ஞான ஸாரதிர் யஸ்து மன:ப்ரக்ரஹவாந்—நர:
ஸோஅத்வன: பாரமாப்னோதி தத்—விஷ்ணோ: பரமம் பதம் ॥

''எவன் பகுத்தறியும் ஆற்றலுடைய புத்தியைத் தன் உடம்பென்னும் தேரில் தேரோட்டியாகப் பெற்று, மனம் என்னும் லகானையும் தன் வசம் வைத்துக் கொண்டிருக்கிறானோ அவன், தான் போகவேண்டிய இடத்தைச் சென்றடைகிறான். அந்த இடமே விஷ்ணுவின் பரமபதமாகும்.''

சங்கரரின் உரை

ஏற்கனவே கூறியபடி, எவன் பகுத்தறியும் திறனுள்ள புத்தியைத் தனக்குத் தேரோட்டிபோல வைத்துக்கொண்டிருக்கிறானோ, எவன் தன் மனத்தை லகானைப் போல இழுத்துப் பிடித்துப் புலன்களை அடக்கிவைக்கிறானோ, எவன் ஒரு முனைப்பட்ட மனதினால் மிகவும் புனிதனாகி விடுகின்றானோ, அத்தகைய அறிவில் சிறந்த மனிதன் தன்னுடைய இலட்சியப் பாதையின் முடிவான, உலகியல் வாழ்க்கைக்கெல்லாம் அப்பாலுள்ள இடத்தை அடைகிறான். உலகத்துப் பந்தங்களிலிருந்தெல்லாம் விடுதலை பெறுகிறான். அந்த இடமானது எங்கும் நிறைந்த பரம்பொருளான விஷ்ணுவினுடைய இடமாகும். அதாவது விஷ்ணுவினுடைய ஸ்வரூபமாகும். அதுவே பரமாத்மா எனப்படுகிறது. 'வாஸுதேவன்' என்று அழைக்கப்படுகிறது. எல்லாவற்றிற்கும் வசிக்கும் இடமாக இருப்பதால் அது வாஸு தேவனாக இருக்கிறது. இந்த வாஸுதேவனை மெய்யறிவு பெற்றவன் அடைகிறான்.

மந்த்ரம் 10

சங்கரரின் முன்னுரை

இனி, இந்த இலட்சியப் பரம்பொருளை எவ்வாறு தன் சொந்த ஆத்மாவாக ஒருவன் தெரிந்து கொள்வது ? புறப் புலன்களிலிருந்து தொடங்கி, உள்நோக்கிப் போய், மிகவும் நுட்பமான அந்த ஆத்மாவைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

இதை உபநிஷத் சொல்லுகிறது:

इन्द्रियेभ्यः पराह्यर्थाः अर्थेभ्यश्च परं मन ः ।
मनसस्तु परा बुद्धि-र्बुद्धेरात्मा महान्परः ॥

இந்த்ரியேப்ய: பராஹ்யர்த்தா: அர்த்தேப்யஸ்ச பரம் மன: ।
மனஸஸ்து பரா புத்திர் புத்தேராத்மா மஹான் பர: ॥

''புலன்களால் அறியப்படும் (மணம், சுவை, ஒளி, ஊறு, ஓசை என்ற) பொருட்கள் புலன்களைவிட நுட்பமானவை; அந்தப் பொருட்களைவிட நுட்பமானதுமனது. மனத்தைவிட புத்தி நுட்பமானது; மஹத் அல்லது உலகத்து புத்திகளின் மொத்தமான வடிவம், தனித்தனியான புத்திகளைவிட நுட்ப மானது.''

சங்கரரின் உரை

புலன்கள் ஸ்தூலமானவை. புலன்களால் அறியப்படும் பொருட்களோ புலன்களைவிட நுட்பமானவை, பரவியிருப் பவை; அப்புலன்களின் உட்தத்துவமானவை. இந்தப் பொருட் களைத் தெரிவிப்பதற்காகத்தான் புலன்கள் படைக்கப்பட்டிருக் கின்றன. இன்னும் சொல்லப் போனால், புலன்களால் அறியப் படும் பொருட்களாலேதான் புலன்களே அமைக்கப் பெற்றிருக் கின்றன.

இந்தப் பொருட்களைவிட, மனம் இன்னும் நுட்பமானது, பரவியது; அப்பொருட்களுக்கும் உட்தத்துவமானது. 'மனம்' என்ற சொல்லினால், மிக நுட்பமான பௌதிகக் கூறுகள் குறிப்பிடப்படுகின்றன. இவை ''தன்மாத்திரைகள்'' என்று அழைக்கப்படுகின்றன. இவைதான் மனத்தை உண்டாக்கு கின்றன. ''இதைச் செய்வேன்'' என்ற மனத்தின் உந்துதலை யும், ''இதுவோ, அதுவோ'' என்று ஆராய்தலையும் இந்தத் தன் மாத்திரைகள் என்ற நுட்பமான பௌதிகக் கூறுகள்தான் தோற்றுவிக்கின்றன.

மனத்தை விடவும் புத்தி இன்னும் நுட்பமானது, உயர்ந்தது; பரவியது; மனத்தின் உட்தத்துவமானது, ''இதுவோ அதுவோ'' என்று ஊசலாடாமல், ''இதுதான் ''என்று தீர்மானிக் கும் ஆற்றல் உள்ளது புத்தி. 'புத்தி' என்ற சொல்லால், அதன் ஆற்றலை உண்டாக்கும் அடிப்படையான பௌதிகக்கூறுகள் குறிப்பிடப்படுகின்றன.

புத்தியோடு ஒப்பிடும்போது, அதைவிட 'மஹத்' இன்னும் நுட்பமானது. (எல்லாப் புத்திகளினுடைய மொத்த வடிம்தான் இந்த மஹத் என்பது.) எல்லா உயிர்களினுடைய புத்திக்குள்ளும் இது உட்தத்துவமாக இருப்பதால் இது ஆத்மா எனப்படுகிறது. எல்லாவற்றிலும் ஊடுருவிப் பரவியிருப்பதால் அது 'மஹத்' அல்லது 'பெரியது' எனப்படுகிறது. இதற்கு 'ஹிரண்யகர்ப்பர்' என்றும் பெயருண்டு. மாயையிலிருந்து முதலில் தோன்றியவர் ஹிரண்யகர்ப்பர். ஹிரண்யகர்ப்பருக்கு அறிவும் செயலும் இயல்பாகவே அமைந்தவை. அவர் தனித்தனி புத்தியைவிட உயர்ந்தவர்; நுட்பமானவர்.

மந்த்ரம் 11

महतः परमव्यक्तं अव्यक्तात्पुरुषः परः ।
पुरुषान्न परं किंचित्सा काष्ठा सा परा गतिः ॥

மஹத: பரம் அவ்யக்தம் அவ்யக்தாத் புருஷ: பர: ।
புருஷாந் ந பரம் கிஞ்சித் ஸா காஷ்டா ஸாபராகதி: ॥

'மஹத்' என்ற ஹிரண்ய கர்ப்பரைவிட, வெளிப் படையாகத் தெரியாத மிக நுட்பமான மாயை மேலானது. இந்த மாயைக்கும் மேலானது 'புருஷன்' என்ற பரம்பொருள். புருஷனைவிட மேலானது கிடையாது. அதுவே கடைசி; அதுவே எல்லாவற்றிற்கும் மேலான இலட்சியம்.

சங்கரரின் உரை

ஹிரண்யகர்ப்பரைவிட வெளிப்படையாகத் தோன்றாத மாயை உயர்ந்தது; நுட்பமானது; பரவலானது; அதன் பின்னர் தோன்றும் எல்லாவற்றிற்கும் உட்தத்துவமானது. கருவானது. அதுவே உலகங்கள் எல்லாவற்றிற்கும் வித்தாகும். பெயர்கள், உருவங்கள் என்ற இவை, வெளிப்படையாகத் தோன்றாத இடம் இந்த மாயை.

காரணங்கள், காரியங்கள் என்ற எல்லா இயக்கங்களும் கலந்து கருவாக இருக்கின்ற நிலை இது. 'வெளிப்படாமல் கருநிலையில் இருப்பது' (அவ்யக்தம்) என்றும், 'பல படியாக இன்னும் வளர்ச்சி பெறாதது' (அவ்யாக்ருதம்) என்றும்,' 'ஆகாயம்' என்றும் பல பெயர்களால் இது அழைக்கப்படுவ துண்டு. முழுக்க முழுக்க, மெய்ப்பொருளில் அடங்கியது இது. ஆலமரத்தின் விதையில் கப்பும் கிளையும் விழுதுமாகப் பின்னர் தோன்றப் போகிற ஆலமரம் கருவாக ஒடுங்கி யிருப்பது போல, மாயை பரம்பொருளில் ஒடுங்கியிருக்கிறது.

இந்த மாயையைக் காட்டிலும், 'புருஷன்' என்றழைக்கப் படுகிற பரம்பொருள் உயர்ந்தது; நுட்பமானது; பெரியது. எல்லாவற்றிற்கும் உட்தத்துவமானது. காரணங்களுக்கெல்லாம் முதற் காரணமானது. அது 'புருஷன்' என்று அழைக்கப் படுவதற்குக் காரணம், எல்லாவற்றிலும் அது பரந்து கலந்து பூர்ணமாக, முழுமுதற்பொருளாக இருப்பதுதான்.

அந்தப் புருஷன் என்ற பரம்பொருளைவிட மேலானது எதுவும் இருக்க முடியாது என்று உபநிஷத் சொல்லுகிறது. அறிவே உருவான பரம்பொருளைத் தவிர வேறு ஒரு பொருளும் கிடையாது. எனவே அந்தப் பரம்பொருள் முடிவான இலட்சியமாகச் சொல்லப்படுகிறது. மிக நுட்பமாக வும், மிகப் பெரியதாகவும், எல்லாவற்றிற்கும் உட்தத்துவமாக வும் உள்ளது அந்தப் புருஷன் என்ற பரம்பொருள்.

புலன்களிலிருந்து தொடங்கி மேன்மேலும் அதிகமாகிக் கொண்டேபோன நுண்மை முதலிய இயல்புகள் பரம் பொருளிடத்தில் உச்சநிலையை அடைகின்றன. எனவே, அது மிக உயர்ந்த இலட்சியமாகிறது. பிறவிகளை அடுத்தடுத்து எடுத்துக் களைக்கும் உயிர்களுக்கு அதுவே வீடு. ''எங்கு சென்றால் மறுபடித் திரும்புவதில்லையோ'' என்று கீதையும் (VIII-21; XV-6) இதைக் குறிப்பிடுகிறது.

கேள்வி : போவது என்று இருந்தால் வருவது என்பதும் இருக்கத்தானே வேண்டும். அப்படியிருக்க, ''அந்தப் (பரம் பொருள் என்ற) உயர்ந்த இடத்திலிருந்து ஒருவன் திரும்பி வந்து பிறப்பதில்லை'' (கடோபநிஷத்: I-3.8.) என்று உபநிஷத் எப்படிச் சொல்ல முடியும் ?

பதில் : இதில் பிழையொன்றும் இல்லை. எல்லா வற்றிற்கும் உட்தத்துவமாக அந்தப் பரம்பொருள் இருப்பதால், அதை உணர்வது என்பதைத்தான் ''அதை அடைவது'' என்று, ஒரு பேச்சுக்காகச் சொல்லப்படுகிறது. அது எல்லாவற்றிற்கும்

உள்ளே ஆத்மாவாக இருக்கின்ற நிலை. ''புத்தியையும் மனத்தையும் புலன்களையும் விட அது மேலானது, நுட்பமானது'' என்றெல்லாம் சொன்னதனாலேயே தெளி வாயிற்று.

பிரயாணி ஒருவன் தான் இருக்குமிடத்தைவிட வேறான புது இடத்துக்குத்தான் பிரயாணம் செய்வான். தான் ஏற்கனவே இருக்குமிடத்திற்கே பிரயாணம் செய்ய மாட்டான். (அது போலவே, தன்னுள்ளே தானாகவே இருக்கும் ஆத்ம மெய்ப் பொருளை உள்ளது உள்ளபடித் தெரிந்து கொள்வதைத் தவிர வேறு எங்கும் போகவேண்டியதில்லை; எதுவும் செய்ய வேண்டியதுமில்லை.) வேதமும் ''உலகத்து வாழ்க்கையி லிருந்து நீங்கி, உண்மைப் பொருளை அடைய விரும்புகின்ற வர்கள் எந்த வழியாகவும் போவதில்லை'' (இதிஹாஸ உபநிஷத், 18) என்று சொல்லியிருக்கிறது.

எல்லாவற்றிற்குள்ளும் ஆத்மாவாகப் பரம்பொருள் இருப்பதை, மேலும் இந்தக் கடோபநிஷத் காண்பிக்கிறது.

மந்த்ரம் 12

एष सर्वेषु भूतेषु गूढोऽऽत्मा न प्रकाशते ।
दृश्यते त्वग्र्यया बुद्ध्या सूक्ष्मया सूक्ष्मदर्शिभिः ॥

ஏஷ ஸர்வேஷு பூதேஷு
கூடோஆத்மா ந ப்ரகாசதே ।
த்ருச்யதே து அக்ர்யயா
புத்த்யா ஸூக்ஷ்மயா ஸூக்ஷ்மதர்சிபி: ॥

''எல்லாவற்றிலும் இப்பரம்பொருள் மறைந்து இருக் கிறது. அதனால், வெளிப்படையாக எல்லோருக்கும் அது

தெரிவதில்லை. ஆனால், நுட்பமான பார்வையுள்ளவர்களுக்கு, தெளிந்த அறிவின் மூலம் அது தெரிகிறது.''

சங்கரரின் உரை

நான்முகனில் தொடங்கிப் புல் பூண்டு வரை எல்லாப் பொருட்களிலும் பரம்பொருள் மறைந்து வசிக்கிறது. பார்ப்பது, கேட்பது முதலிய காரியங்களை அது செய்து கொண்டிருந் தாலும் அது மாயையினால் (அல்லது அறியாமையினால்) மறைக்கப்பட்டிருக்கிறது. அதனால், அது எல்லாவற்றிலும் உட்தத்துவமாக இருந்தாலும், ஒருவருக்கும் அது தெரிவ தில்லை.

என்ன பரிதாபம் ! எல்லா உயிர்களும் பரம்பொருளைத் தவிர வேறில்லை என்பது உண்மையாயிருக்க, அந்த உண் மையை எவ்வளவோ எடுத்துச் சொன்னாலும், ''நான் அந்தப் பரம்பொருளே'' என்று ஒருவரும் அறிந்து கொள்வதில்லை. அப்படி அறிந்து கொள்வதைத் தடுக்கும் மாயைதான் எவ் வளவு ஆழங்காண முடியாதது, புரிந்துகொள்ள முடியாதது! விந்தையானது. இதற்கு மாறாக, யாரும் எதுவும் சொல்லா மலே, பொய்யான உடல், புலன்கள் முதலியவற்றின் கூட்டத் தைத் தன்னோடு கலந்து மயங்கி, ''அவற்றைவிட தான் வேறு இல்லை,'' என்று ஐயமில்லாமல் மனிதன் நம்பிக் கொண்டு இருக்கிறான் ''நான் இன்னாருடைய மகன்'' என்றெல்லாம் தன்னைத்தானே எண்ணிக்கொண்டு அதில் உறுதியாக இருக் கிறான். தன்னை விட அவற்றை வேறாகக் கண்ணால் பார்த்து, அவற்றைத் தனக்கு வெளியே இருப்பதாக அறிந்தும் கூட, அவற்றைத் 'தான்' என்றே நினைக்கிறான். சட்டி, பானை முதலியவற்றைக் கண்ணால் பார்க்கும்பொழுது, அவற்றைத் தன்னைவிட வேறாகத் தெரிந்து கொள்ளவில்லையா? உடல்

முதலியவற்றை மட்டும் 'தான்' என்று ஏன் நினைக்க வேண்டும்? இதிலிருந்தே இதெல்லாம் ஏமாற்று வித்தையான மாயையின் வேலை என்று தெரியவில்லையா? அந்த மாயை யினால்தான் உயிர்களெல்லாம் வேலை செய்கின்றன. மறுபடி-மறுபடி மண்ணில் வந்து பிறக்கின்றன. ''என்னுடைய யோக மாயையினால் என்னை மறைத்துக் கொள்கிறேன். அதனால் எல்லோருக்கும் நான் தெரிவதில்லை'' என்று பகவத் கீதை (VII-25) யில் பகவான் சொல்லுவதும் இதுவே.

கேள்வி : ''உண்மையை அறிந்த ஒருவன் துயரமடைவ தில்லை'' (கடோபநிஷத், II-1.4) என்று சொல்லிவிட்டு, ''அந்த உண்மை தெரிவதில்லை'' என்றும் கூறுவது, முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறதே?''

பதில் : அப்படியில்லை, பண்படாத அறிவுக்கு அது புலப்படுவதில்லை என்றுதான் உபநிஷத் சொல்லியது. ஆனால், பண்பட்ட, கூரிய அறிவுள்ளவனுக்கு அது நன்றா கவே புலப்படுகிறது. அப்படிப்பட்டவனுடைய அறிவு ஒரு முகப்பட்டு, நுட்பமான விஷயங்களையெல்லாம் கூடத் தெளி வாகத் தெரிந்து கொள்ளும் ஆற்றலைப் பெறுகிறது. புலன் களில் தொடங்கி மேன்மேலும் நுண்மை மிகுந்து கொண்டே போய், பரம்பொருளில் முடியும் உண்மையை அறியும் ஆற் றலை உடைய பெரியவர்களுக்குத்தான் இது சாத்தியமாகும். (கடோபநிஷத் I. 3.10)

மந்த்ரம் 13

சங்கரரின் முன்னுரை

பரம்பொருளை அடையும் வழியை இப்பொழுது உபநிஷத் காண்பிக்கிறது.

यच्छेद्वाङ्मनसीप्राज्ञः तद्यच्छेज्ज्ञान-आत्मनि ।
ज्ञानमात्मनि महति नियच्छेत् तद्यच्छेच्छान्त आत्मनि ॥

யச்சேத் வாங் மனஸீ—ப்ராக்ஞ:
தத் யச்சேத் ஞான—ஆத்மனி ।
ஞானமாத்மனி மஹதி நியச்சேத்
தத்யச்சேத் சாந்த ஆத்மனி ॥

''அறிவாற்றல் உள்ள மனிதன் தன்னுடைய வாக்கை மனதில் ஒடுக்கவேண்டும்; அந்த மனதை, புத்தியில் ஒடுக்க வேண்டும்; புத்தியை ஹிரண்யகர்ப்பரிடத்தில் ஒடுக்க வேண்டும். ஹிரண்ய கர்ப்பரை அமைதியான மெய்ப் பொருளில் ஒடுக்கவேண்டும்.''

சங்கரரின் உரை

அறிவாற்றல் உள்ள மனிதன், தன்னுடைய வாக்கை மனதில் ஒடுக்கவேண்டும். (வாக்கு என்று சொல்லும்போது மற்ற எல்லாப் புலன்களையும் அதோடு சேர்த்துக்கொள்ள வேண்டும். அதாவது வாக்கை மட்டுமன்றி எல்லாப் புலன் களையும் மனதில் ஒடுக்கவேண்டும். மந்த்ரத்தில் மனஸி என்று இருக்கவேண்டியதை மனஸீ என்று நீட்டியது வேதத்தில் இலக்கண விதி விலக்காகும்.) பின் அந்த மனதை, அதன் உட்தத்துவமானதும் ஒளிபொருந்தியதுமான புத்தியில் ஒடுக்க வேண்டும். மனதையும் புலன்களையும் பரவிநிற்கிறது புத்தி என்பதால், அது அவற்றின் உட்தத்துவமாகச் சொல்லப் படுகிறது. இதன்பின் இந்தப் புத்தியை ஹிரண்யகர்ப்பரிடத்தில் ஒடுக்கவேண்டும். அவர்தான் உலகப் படைப்பில், முதல் உயிராகத் தோன்றியவர். இப்படிச் சொல்லுவதன் கருத்து என்ன என்றால், ஒருவன் தனது புத்தியை ஹிரண்யகர்ப் பரைப்போல் அவ்வளவு ஒளியுடன் தெளிந்து இருக்குமாறு

பண்ணிக்கொள்ளவேண்டும். இதன் பின், அந்த ஹிரண்ய கர்ப்பரையும் அமைதியே உருவான மெய்ப்பொருளில் ஒடுக்க வேண்டும். இந்த மெய்ப்பொருள் வேற்றுமைகளற்றது; மாற்றம் என்பது இல்லாதது; எல்லாவற்றிற்கும் உட்தத்துவமாக இருப்பது; புத்தியின் பல செயல்களுக்கும் சாக்ஷியாக இருப்பது.

பாலைவனத்தில் தெரியும் கானல் நீர், கயிற்றில் தோன்றும் பாம்பு, ஆகாயத்தில் பார்க்கப்படும் தூசி என்ற இது போன்ற பொய்த்தோற்றமெல்லாம் எப்படி அவற்றின் உண்மை தெரிந்தபின் மறைந்துவிடுகின்றனவோ, அப்படியே தன்னைத் தான் அறிந்து கொண்ட மெய்யறிவினால், பொய்யான மாயத் தோற்றங்களெல்லாம் மெய்ப்பொருளில் மறைந்து விடுகின்றன. செயல்கள், அவற்றின் கருவிகள், அவற்றின் விளைவுகள் எல்லாம் உண்மை தெரியாத அறியாமையால் தோற்றுவிக்கப் படுகின்றன. பெயரும், உருவமும் செயலும்தான் மற்ற எல்லா வற்றையும் உண்டாக்குகின்றன. இவற்றை மெய்யறிவினால் நீக்கினால் மெய்ப் பொருளில் ஒருவன் நிலை பெற்று அமைதி பெறுகிறான்; வாழ்வின் பெரும் பயனையும் பெற்று விடுகிறான்.

இதை நன்கு உணருவதற்காக உபநிஷத் மேலும் சொல்லுகிறது.

மந்த்ரம் 14

उत्तिष्ठत जाग्रत प्राप्य वरान्निबोधत ।
क्षुरस्य धारा निशिता दुरत्यया
दुर्गं पथस्तत्कवयो वदन्ति ॥

உத்திஷ்டத ஜாக்ரத ப்ராப்ய வராந்–நீபோதத ।
க்ஷுரஸ்ய தாரா நிசிதா துரத்யயா
துர்கம் பதஸ் தத் கவயோ வதந்தி ॥

எழுங்கள் ! விழித்துக் கொள்ளுங்கள்! உயர்ந்த பெரியோர்களை அணுகி அறிவு பெறுங்கள்! அந்த அறிவைப் பெறும் வழியைப் பெரியோர்கள் ஒரு கத்தி முனைக்கு ஒப்பிடு கிறார்கள். கத்திமுனை கூராகத் தீட்டப்பட்டிருக்கும்போது, அதன் மேல் நடப்பது மிகக் கடினம் என்று விவரமறிந்த பெரியோர் சொல்லுகிறார்கள்.

சங்கரரின் உரை

''என்று தொடங்கியது'' — என்று அறிய முடியாத அறியாமையில் உறங்கிக் கொண்டிருக்கும் மனிதர்களே! எழுந் திருங்கள்! மெய்ப்பொருளை அறியும் முயற்சியைச் செய்யுங் கள்! விழித்துக் கொள்ளுங்கள்! அறியாமை என்னும் தூக்கத் திற்கு முடிவு கட்டுங்கள்! அது பயங்கரமானது; எல்லாத் தீமைகளுக்கும் அதுதான் வித்து.

இந்த அறியாமையை எப்படி அழிப்பது? மெய் யுணர்ந்த பெரியோர்களை, ஆசிரியர்களை அணுகுவதுதான் அதற்கு வழி. அவர்கள் ''பரம் பொருள் உன்னைத் தவிர வேறல்ல'' என்று உனக்குச் சொல்லுவார்கள். எங்கும் நிறைந்த அந்த உண்மைப்பொருளை நன்கு புரிந்து கொள்ளுங்கள்.

இப்படியெல்லாம் உபநிஷத் ஒரு தாயைப் போல பேரன் போடு பேசுகிறது. இதில் நாம் அசட்டையாக இருக்கக் கூடாது என்று பரிவோடு உபதேசிக்கிறது.

கூர்மையான நுண்ணறிவினால்தான் இந்தப் பரம் பொருளை உணரமுடியும். கூர்மையான நுண்ணறிவு எதைப் போன்றது? ஒரு கத்தியின் கூர்மையான நுனியைப் போன்றது. அதைக் காலால் மிதித்துக் கொண்டு அப்பால் கடந்து செல்வது மிகவும் கடினம். அதைப் போல, இந்த மெய்ப்பொருளை அறியும் வழியும் மிகவும் கடினமானது.

மந்த்ரம் 15

சங்கரரின் முன்னுரை

நாம் அறியவேண்டிய பொருள் நுட்பமானது என்றால், எவ்வளவு நுட்பமானது? இதை இந்த மந்த்ரம் சொல்லுகிறது.

மண் என்று எடுத்துக் கொண்டால், அது ஓசை, ஊறு, ஒளி, சுவை, மணம் என்ற ஐந்தினால் ஆனது. ஐந்து புலன்களாலும் அறியக்கூடியது. இதே போலத்தான், உடம்பும் ஐந்து மூலப்பௌதிகக் கூறுகளால் ஆனது.

அந்த மண்ணிலிருந்து தொடங்கி, மண்ணைவிட நுட்பமான நீர், அதைவிட நுட்பமான நெருப்பு, அதைவிட நுட்பமான காற்று, அதைவிட நுட்பமான ஆகாயம் என்று மேலும் மேலும் நுணுகிநுணுகிப் போனால், நுண்மையும், தூய்மையும், பொன்றாமையும் மிகுந்து கொண்டே போகும். மண்ணில் ஐந்து என்றால் நீரில் இவை நான்காகக் குறைந்து விடுகின்றன. ஓசை, ஊறு, ஒளி, சுவை, மணம் என்பதில், மண்ணின் குணமான மணம் நீரில் இல்லை. மற்ற நான்கும் இருக்கின்றன. நெருப்பில் சுவையும் குறைந்து, மூன்று குணங்கள் மட்டும் மிஞ்சுகின்றன. காற்றில் ஊறு, ஒலி என்ற இரண்டுதான் உள்ளன. ஆகாயத்திலே ஒலி மட்டுமே மிஞ்சு கிறது. அதனால் ஆகாயம் மிக நுட்பமானது. ஒலியென்னும் ஒரே ஒரு குணமுள்ள பௌதிகச் சடப் பொருளான ஆகாயமே இவ்வளவு நுட்பமானது என்றால், எந்த விதமான குணங்கள் இல்லாத பரம்பொருள் எவ்வளவு நுட்பமாக இருக்க வேண்டும்? குணங்கள் சேரச் சேரத் தானே பொருள்கள் பருத்துக் கொண்டே போகின்றன?

இதைத்தான் உபநிஷத் இப்போது எடுத்துக் காண்பிக்கிறது.

अशब्दमस्पर्शमरूपमव्ययं तथाऽरसं नित्यमगन्धवच्च यत् ।
अनाद्यनन्तं महतः परं ध्रुवं निचाय्य तन्मृत्युमुखात्प्रमुच्यते ॥

அசப்தம் அஸ்பர்சம் அரூபம் அவ்யயம்
ததா அரஸம் நித்யம் அகந்தவத் ச யத் ।
அநாத்–யனந்தம் மஹத: பரம் த்ருவம்
நிசாய்ய தன் ம்ருத்யு முகாத் ப்ரமுச்யதே ॥

''ஒலி, ஊறு, உருவம், சுவை, மணம் இவை இல்லாததும் அழியாததும் என்றும் இருப்பதும், தொடக்கமும், முடிவும் அற்றதும், எல்லாப் புத்திகளுக்கும் மேற்பட்டதும், நிலைத்ததும் ஆன பரம்பொருளை, உள்ளபடி அறிந்தவன், மரணத்தின் வாயிலிருந்து விடுபடுகிறான்.

சங்கரரின் உரை

ஒலி, ஊறு, உருவம், சுவை, மணம் அற்றது என்றும், அழியாமல் எப்பொழுதும் உள்ளது என்றும் சொல்லப்படு கின்றது இந்தப் பரம்பொருளே. ஒலி முதலிய குணங்களை யுடைய எந்தப் பொருளும் அழிந்து போகும். ஒலி முதலிய குணங்களேதும் இல்லாத காரணத்தால் பரம்பொருள், தேய் வதில்லை, குறைவதில்லை, அது நித்தியமாக இருக்கிறது. தேய்ந்து குறையும் எதுவும் நித்தியமாக இருக்க முடியாது.

மேலும், பரம்பொருள் அதற்கு மேற்பட்ட இன்னோரு காரணத்திலிருந்து உண்டானது இல்லை. இதனால் அது பிறப்பில்லாதது. ஏதேனும் ஒரு காரணத்தினால் புதிதாக உண்டாகும் பொருள் ஒரு காலத்தில் அழிந்துதான் போகும். அப்படி அழிவதென்பது தன்னை உண்டாக்கிய காரணத்தில் ஒடுங்குவதே. மண், தன் காரணமான நீரில் ஒடுங்கும்; நீர் நெருப்பில் ஒடுங்கும்; என்பதெல்லாமே காரண காரிய நிய தியால் ஏற்பட்டதுதான்.

ஆனால் பரம்பொருளுக்குக் காரணம் கிடையாது. ஏனைய பொருட்களைப்போல அது ஒரு காலத்தில் புதிதாக உண்டான

தில்லை. அது எப்போதுமே இருப்பது. அது சென்று ஒடுங்கக் கூடிய காரணமும் ஒன்றும் கிடையாது.

இன்னும், பரம்பொருள் முடிவில்லாதது. குலை தள்ளிய பிறகு வாழைமரம் அழிந்து விடுவதைப்போல, பரம்பொருள் அழிவதில்லை. அனைத்து புத்திகளுக்கும் மேலான நித்திய மான அறிவாயிருப்பதால், எல்லாவற்றிற்கும் அது சாக்ஷியாக இருக்கிறது. எல்லாப் பொருட்களுக்கும் உட்தத்துவமாகவும் அது இருக்கிறது. ஏற்கனவே, இந்த கடோபநிஷத் இது பற்றிக் கூறுகையில், எல்லாவற்றிலும் மெய்ப்பொருள் மறைந்திருக் கிறது (I.3.12) என்று காண்பித்திருக்கிறது. மெய்ப் பொருள் தன் நிலை மாறாமலிருப்பது. ஏதோ சில காலம் இருந்துவிட்டுப் பின்னொரு காலத்தில் மறைந்துபோகும் மண் முதலிய பொருட் களைப் போன்றதல்ல – அது.

இத்தகைய இயல்புடையது பரம்பொருள் என்று தெளிந்து உணர்ந்தவன் மரணத்தின் வாயிலிருந்து தப்பிக்கிறான்.

அறியாமை, காமம், ஓயாத அலைச்சல் என்பவைதான் இங்கு மரணம் எனப்படுகிறது.

மந்த்ரம் 16

சங்கரரின் முன்னுரை

மேற்சொன்ன மெய்யறிவைப் புகழ்வதற்காக உபநிஷத் இன்னும் சொல்கிறது.

नाचिकेतमुपाख्यानं मृत्युप्रोक्तं सनातनम् ।
उक्त्वा श्रुत्वा च मेधावी ब्रह्मलोके महीयते ॥

நாசிகேதம் உபாக்யானம் ம்ருத்யு ப்ரோக்தம் ஸநாதனம் ।
உக்த்வா ச்ருத்வா ச மேதாவீ ப்ரஹ்மலோகே மஹீயதே ॥

யமதருமனால் நசிகேதஸுக்குச் சொல்லப்பட்டதும், மிகப்பழமையானதுமான இந்த நாசிகேத–உபாக்யானத்தைச் சொல்லுகின்ற கேட்கின்ற அறிவுடைய ஒருவன், பரம் பொருளாகவே ஆகிறான்.

சங்கரரின் உரை

காலத்தினால் அழியாத இந்த நாசிகேத உபாக்யானம் என்ற வரலாற்றை ஆசிரியர்களிடமிருந்து கேட்டு, பிறருக்குச் சொல்லி அறிவுடைய ஒருவன் பெருமையடைகிறான். பரம் பொருளோடு ஒன்றாகி வணக்கத்திற்கு உரியவனாகிறான். 'பிரம்மலோகம்' என்று அழைக்கப்படுகிற பிரம்மமாகவே இருக்கிறான்.

இந்த நாசிகேத உபாக்யானம் யமதருமனால் நசிகேத ஸுக்குச் சொல்லப்பட்டது. இது காலத்தால் அழியாதது, ஏனெனில் அது வேதத்தில் சொல்லப்பட்டது.

மந்த்ரம் / 7

य इमं परमं गुह्यं श्रावयेत् ब्रह्मसंसदि ।
प्रयतः श्राद्धकाले वा तदानन्त्याय कल्पते ।
तदानन्त्याय कल्पत इति ॥
इति काठकोपनिषदि प्रथमाध्याये तृतीया वल्ली ॥

ய இமம் பரமம் குஹ்யம் ச்ராவயேத் ப்ரஹ்ம ஸம்ஸதி ।
ப்ரயத: ச்ராத்தகாலே வா தத் ஆநந்த்யாய கல்பதே ।
தத் ஆநந்த்யாய கல்பத இதி ॥
இதி காடகோபநிஷதி ப்ரதமாத்யாயே த்ருதீயாவல்லீ ॥

சுத்தமான மனதோடு இந்த உயர்ந்த ரஹஸ்யமான உபதேசத்தை அந்தணர்கள் அவையில் ஒருவன் ஒப்பித்தாலும், முன்னோர்களுக்குச் செய்யும் சிராத்த காலத்தில் சொன்னாலும், அது எல்லையில்லாத நன்மையைத் தரும்.

சங்கரரின் உரை

சுத்தமான மனதோடு, இந்த உயர்ந்த ரகசியத்தை (மறை பொருளை) அந்தணர்கள் அவையில் எவன் ஒன்றையும் விடாமல் விளக்கத்தோடு சொல்லச்செய்கிறானோ, அல்லது, தனது முன்னோர்களின் பொருட்டுத் தான் செய்யும் சிராத்த காலத்தில், உணவருந்த அமர்ந்திருக்கும் அந்தணர்கள் முன்னிலையில் சொல்லுகிறானோ, அவனுக்கு எல்லையில்லாத நலன்கள் உண்டாகும். அவன் செய்யும் சிராத்தமும் பலனைக் கொடுக்கும்.

''ஆநந்த்யாய கல்பதே ஆநந்த்யாய கல்பதே'' என்று இரண்டு முறை உபநிஷத் சொன்னது — இந்தப் பகுதி முடிவுற்றதைக் காண்பிக்கிறது.

கடஉபநிஷத்தில் முதலாவது அத்தியாயத்தில்
மூன்றாவது வல்லீ முற்றியது.

இதற்குச் சங்கரரின் உரையும் முற்றிற்று.

அத்தியாயம் 2

முதல் வல்லீ

சங்கரரின் முன்னுரை

''இறைவன் எல்லாவற்றிலும் உள்ளே மறைந்து இருக்கிறான். அதனால் அவன் அப்படி இருப்பது எல்லோருக்கும் தெரியவில்லை. ஆயினும், கூரிய அறிவிற்கு அவன் தெரிகிறான்'' என்று இந்த உபநிஷத் (I. 3.12) முன்னர் தெரிவித்தது. அப்படியானால், இத்தகைய கூரிய அறிவு உண்டாகாமல் தடுத்து, மெய்ப்பொருளைத் தெரிந்துகொள்ள முடியாமல் செய்வது எது?

அதைச் சொல்வதற்காக இந்தப் பகுதி தொடங்கப்படுகிறது. நல்லதை அடைய விடாமல் தடுக்கும் காரணத்தைத் தெரிந்து கொண்டால்தான் அதை நீக்குவதற்கு முயற்சி செய்யலாம்; இல்லாவிடில் முடியாது.

மந்த்ரம் 1

पराञ्चि खानि व्यतृणत् स्वयंभूः
तस्मात्पराङ पश्यति नान्तरात्मन् ।
कश्चिद्धीरः प्रत्यगात्मानमैक्षत्
आवृत्तचक्षुः अमृतत्वमिच्छन् ॥

பராஞ்சி கானி வ்யத்ருணத் ஸ்வயம்பூ:
தஸ்மாத் பராங் பச்யதி நாந்தராத்மன் ।
கஸ்சித்தீர: ப்ரத்யகாத்மானம் ஐக்ஷத்
ஆவ்ருத்தசக்ஷு: அம்ருதத்வம் இச்சன் ॥

தானே உண்டான இறைவன், எப்பொழுதும் வெளி நோக்கிச் செல்லும்படி, புலன்களை அமைத்தார், இதனால்தான் வெளியிலிருக்கும் பொருட்களை ஒருவன் பார்க்கின்றான்; உள்ளே மறைந்திருக்கும் தன் ஆத்மாவைப் பார்ப்பதில்லை. ஆனால், நிலையான முக்தியை விரும்பும் ஓர் அறிவுடைய மனிதன், ஆய்ந்து உணரும் தனது ஆற்றலினால், புலன்களை உள்முகமாகத்திருப்பி, உள்ளே இருக்கும் ஆத்மாவைப் பார்க்கிறான்.

சங்கரரின் உரை

'கானி' என்றால் காது முதலிய புலன்கள். இவை ஒலி முதலியவற்றை அறிவதற்காக, வெளிநோக்கிச் செல்கின்றன. இறைவன் இவற்றை வெளிநோக்கிச் செல்லும்படி அமைத் திருக்கிறார்.

இறைவன் பிறிதொரு காரணத்தைச் சாராமல் தானே தோன்றியவர், எப்போதும் இருப்பவர். இறைவன் புலன்களை இவ்வாறு அமைத்த காரணத்தால், ஒருவன் தனக்கு வெளியில் இருக்கும் உலகத்தையே பார்க்கிறான். இவை, உள்ளிருக்கும் ஆத்மாவிற்கு நேர் எதிரான இயல்புள்ளவை. (அதாவது, 'அனாத்மாக்கள்'), அவனுக்கு வெளியிலிருப்பவை. உள் ளிருக்கும் தன் ஆத்மாவைப் பார்க்காமல், வெளியிலிருக்கும் பொருட்களைப் பார்ப்பது என்ற நிலை, மனிதனுக்கு இயற்கை யாக ஏற்பட்டிருக்கிறது.

இருப்பினும், ஓர் ஆற்றின் நீரோட்டத்தைத் தடுத்து அதை நேர் எதிர்த்திசையில் திரும்பிப் பாயும்படிச் செய்வது போல, யாராவது சிறந்த அறிவுடைய ஒருவன் தன் பார் வையை உட்பக்கமாகத் திருப்பி, உள்ளிருக்கும் ஆத்மாவைப் பார்க்கிறான். உள்ளிருப்பதாலும், ஆத்மாவாக இருப்பதாலும், மெய்ப்பொருள் 'ப்ரத்யக்-ஆத்மா' என்று அழைக்கப்படுகிறது. ப்ரத்யக் என்றால் ''உள்ளே இருப்பது'' என்று பொருள்.

பொதுவாக, பேச்சு வழக்கில், 'ஆத்மா' என்பது தனி யொரு உயிரைத்தான் குறிக்கும்; வேறொன்றையும் குறிக்காது. 'ஆத்மா' என்ற சொல்லின் இலக்கணப்படி பார்த்தாலும், இதே பொருளைத்தான் தருகிறது. மெய்வழி நூல்களும் இப்படித் தான் கூறுகின்றன. லிங்க புராணத்தில், ''எல்லாவற்றிலும் பரவி, அவற்றைத் தன்னுள் இழுத்து, அவற்றை நுகர்ந்து, உலக மெல்லாம் அதனிடமிருந்தே தனது இருப்பைப் பெறுகின்றன வாக இருப்பதால் அது ஆத்மா எனப்படுகிறது'' என்று விளக்கம் தரப்பட்டிருக்கிறது.[1]

இப்படிப்பட்ட ப்ரத்யக் – ஆத்மாவை (உட்தத்துவமான மெய்ப்பொருளை), தேர்ந்த அறிவுடையவன் காண்கிறான் என்பது கருத்து. உபநிஷத்தில் 'கண்டான்' என்று இறந்த காலத்தில் இருக்கிறது. அதை 'காண்கிறான்' என்று நிகழ்கால மாக மாற்றிக் கொள்ளவேண்டும்.

'எப்படிக் காண்கிறான்?' என்றால், வழக்கமாக வெளி நோக்கிச் செல்லும் செவிமுதலிய புலன்களைத் திருப்பித் தடுத்து, உள்ளிருக்கும் ஆத்மாவைக் காண்கிறான். (புலன்களை அடக்கி ஆள்கிறான் என்பது கருத்து.) இப்படிப் புலனடக்கம் பெற்று, பண்பட்ட அறிவினால் ஆத்மாவைக் காண்கிறான். வெளி உலகத்திலேயே கவனம் செலுத்தும் பழக்கமுள்ளவன் தன் ஆத்மாவைக் கவனிக்க முடியாது.

கேள்வி : தேர்ந்த அறிவுடைய ஒருவன் இவ்வளவு கஷ்டப்பட்டுத் தன் இயற்கையான பழக்கங்களைத் தடுத்து, உள்ளேயிருக்கும் ஆத்மாவைக் காண்கிறான் என்கிறீர்களே ? எந்த நோக்கத்தோடு இப்படிச் செய்கிறான் ?

பதில் : அழிவே இல்லாததும், நித்தியமானதும், தன் சொந்த சுயரூபமுமான ஆத்மாவைத் தெரிந்து கொள்ளும் ஆசையில்தான் இவ்வளவு முயற்சியும் செய்கிறான்.

---

(1) யச்ச ஆப்னோதி, யத் ஆதத்தே, யச்ச அத்தி விஷயான் இஹ । யச்ச அஸ்ய ஸந்ததோ பாவ: தஸ்மாத் ஆத்மா இதி கீர்த்யதே ।

மந்த்ரம் 2

पराचः कामाननुयन्ति बालाः ते मृत्योर्यन्ति विततस्य पाशम् ।
अथ धीरा अमृतत्वं विदित्वा ध्रुवमध्रुवेष्विह न प्रार्थयन्ते ॥

பராச : காமானனுயந்தி பாலா :
தே ம்ருத்யோர் – யந்தி விததஸ்ய பாசம் ।
அத தீரா அம்ருதத்வம் விதித்வா
த்ருவம் அத்ருவேஷ்விஹ ந ப்ரார்த்தயந்தே ॥

அறிவில் குறைந்த மனிதர் வெளியுலகத்தைப் பற்றிய ஆசைகளையே தொடர்ந்து போகிறார்கள். இதன் விளைவாக, மரணத்தின் வலையில் விழுகிறார்கள். எங்கு போனாலும் அந்த வலையிலிருந்து அவர்கள் தப்ப முடிவதில்லை. எனவே, அறிவுத்திறன் உள்ளவர்கள், அழியாதது எது என்று நன்கு புரிந்து கொண்டு, எதற்குமே ஆசைப்படுவதில்லை.

சங்கரரின் உரை

இயற்கையாகவே வெளியுலகத்துப் பொருட்களைப் பற்றிக்கொண்டு ஓடிக்கொண்டிருக்கும் சிற்றறிவுதான், ஆத்மா வைப்பற்றிய மெய்யறிவு வருவதற்குத் தடையாக உள்ளது. அதுவே அவித்யை அல்லது பொய்யறிவு எனப்படுகிறது. மெய்யறிவிற்கு அது நேர் எதிரானது. இதன் காரணமாக, இந்த அவித்யையினால் தோற்றுவிக்கப்பட்ட சிற்றின்பங்களைக் குறித்து மனதில் வேட்கை உண்டாகிறது. இந்த வேட்கை கண்ணுக்குத் தெரிந்த பொருட்களின் மீதும் உண்டாகிறது; கண்ணுக்குத் தெரியாத பொருட்களிலும் உண்டாகிறது.

அவித்யை, அதனால் விளையும் சிற்றின்ப ஆசை என்ற இந்த இரண்டினாலும் மெய்யறிவு தடைபடுவதன் விளைவாக,

சிறுபிள்ளைத்தனமான சிற்றறிவு படைத்தவர்கள் வெளி யுலகத்தில் உள்ள சிற்றின்பங்களை நாடி ஓடுகிறார்கள்.

இதன் பலனாக, பொய்யறிவு, ஆசை, சிற்றின்ப விளை யாட்டு என்ற இம்மூன்றின் மொத்த உருவமான மரணத்தினால், எங்கும் வீசப்பட்ட பாசவலையில் சிக்குகிறார்கள். (உடம்பும் அதில் இருக்கும் புலன்களும் இங்கு பாச வலை எனப்படு கின்றன. அதாவது, பிறப்பு, இறப்பு, முதுமை, பிணி முதலிய பலவகைப்பட்ட தீங்குகளுக்கு எந்நேரமும் உள்ளாகிறார்கள்.)

இதைக்கண்டு தேர்ந்து தெளிந்த அறிவு பெற்றவர்கள், நித்தியமான முக்தியையே தங்களது உண்மையான நிலை என்று உணர்ந்து, உறுதியான அந்நிலையிலேயே நிலைத்து நிற்கிறார்கள். விண்ணுலகத்தில் வசிக்கும் தேவர்களின் வாழ்வும் ஒருநாள் அழியக்கூடியது. ஆனால், தன் சொந்த ஆத்மாவிலேயே எப்பொழுதும் நிலைத்து நிற்பது என்ற நிலை, என்றும் அழியாதது. ''அது எந்தக் காரியத்தினாலும் வளர்வது மில்லை, தேய்வதுமில்லை'' என்று இதை பிருஹதாரண்யக உபநிஷத் (IV. 4.23) கூறுகிறது.

அழிகின்ற எல்லா பொருட்களுக்கு நடுவே அழிவற்ற அசைக்க முடியாத முக்தி நிலையை, நன்றாக உணர்ந்த மெய்யுணர்ந்த பெரியோர்கள், தீமைகள் நிறைந்த இந்த உலகில் எதற்குமே ஆசைப்படுவதில்லை. தன் சொந்த உண்மைப் பொருளான ஆத்மாவைத் தெரிந்து கொள்வதற்கு அந்த ஆசைகளே பெருந்தடை என்பதுதான் — அவர்கள் ஆசைப் படாததற்குக் காரணம். சுருக்கமாகச் சொன்னால், மக்கள், செல்வம், உலக இன்பங்கள் என்ற ஆசைகளினின்று அவர்கள் விடுதலையடைகிறார்கள்.

மந்த்ரம் 3

சங்கரரின் முன்னுரை

எதைத் தெரிந்து கொண்ட பின்னர் மெய்யுணர்ந்த பெரியோர்கள் எதற்குமே ஆசைப்படுவதில்லையோ, அதை மற்றவர்கள் எப்படித் தெரிந்து கொள்வது? இதை அடுத்த மந்த்ரம் சொல்லுகிறது.

येन रूपं रसं गन्धं शब्दान् स्पर्शांश्च मैथुनान् ।
एतेनैव विजानाति किमत्र परिशिष्यते - एतद्वै तत् ॥

யேன ரூபம் ரஸம் கந்தம் சப்தான்
ஸ்பர்சாம்ஸ்ச மைதுனான் ।
ஏதேனைவ விஜாநாதி கிமத்ர
பரிசிஷ்யதே ஏதத் வை தத் ॥

உருவம், சுவை, மணம், ஒலிகள், தொடு உணர்ச்சி, உடலின்பங்கள் இவற்றை தம் ஆத்மாவினால் (உயிர்கள்) அறிகின்றன. இந்த ஆத்மாவினால் அறியப்படாதது ஒன்றும் மிச்சம் இல்லை, இதுவே மெய்ப்பொருள்.

சங்கரரின் உரை

ஆத்மா என்ற மெய்ப்பொருள் அறிவே உருவானது. இந்த ஆத்மாவினால் உருவம், சுவை, மணம், ஒலிகள், தொடு உணர்ச்சி, உடலின்பங்கள் முதலியவற்றை எல்லாரும் நன்கு அறிகிறார்கள்.

கேள்வி : ''உடல் முதலியவற்றிலிருந்து வேறான ஆத்மாவினால் எல்லாவற்றையும் அறிகிறேன்'' என்பது எல்லாருக்கும் நன்றாகத் தெரிந்த பொதுவான அநுபவமல்ல; மாறாக, ''உடல் முதலியவை ஒன்று சேர்ந்த கூட்டமான நான் அறிகிறேன்''

என்றுதான் பொதுவாக எல்லோருடைய அநுபவமுமிருக்கிறது. இதை ஏற்றுக்கொண்டால் என்ன?

பதில் : இது சரியன்று. உடம்பு முதலியவற்றின் கூட்ட மைப்பு — ஒலி முதலிய ஏனைய பொருட்களிலிருந்து அடிப் படையில் வேறல்ல. அதுவும் அறியப்படும் பொருட்களில் ஒன்றுதான்; அறியும் அறிவு அன்று.

ஒலி முதலிய பல ஜடப்பொருட்களால் ஆன உடல் முதலியவற்றின் கூட்டமைப்பு, ஒலி முதலியவற்றை அறிய முடியுமானால், ஒலிகளும் தங்களைத் தாங்களே அறியும் சக்தி பெற்றிருக்கும். மேலும் ஓர் ஒலி இன்னொரு ஒலியை அறியும் சக்தி பெற்றிருக்கும். (இதுபோலவே, உலகத்துப் பொருட்க ளெல்லாம் ஒன்றையொன்று அறியும் சக்தியையும், தன்னைத் தானே அறியும் சக்தியையும் பெற்றுவிடும்.) ஆனால், இப்படி உலகத்தில் நடப்பதில்லை.

எனவே, காய்ச்சப்பட்ட இரும்பு பிற பொருட்களை, எரிப்பதைப் பார்க்கும் பொழுது, இரும்பின் எரிக்கும் சக்தி உண்மையில் நெருப்பினுடையதே தவிர, இரும்பினுடையது அல்ல — என்று எப்படி ஊஹித்துத் தெரிந்து கொள்கிறோமோ, அதைப்போல, ஒலி முதலியவற்றை அறிவது அறியும் இயல்புள்ளதும், உடலைவிட வேறானதுமான ஆத்மா தான் — என்று மக்கள் ஊஹித்துத் தெரிந்து கொள்கிறார்கள்.

இந்த ஆத்மாவிற்குத் தெரியாதது ஒன்றும் உலகத்தில் இல்லை. அது நிச்சயமாக எல்லாவற்றையும் அறிகிறது. அதற்குத் தெரியாத ஒன்றுமே கிடையாது என்பதால் அது முற்று முணரும் ஆற்றல் பெற்றது. இந்த ஆத்மா என்னும் மெய்ப் பொருளைப் பற்றித்தான் நசிகேதஸ் தெரிந்து கொள்ள விரும்பினான். அதைத் தெரிந்துகொள்வதில் தேவர்களுக்குக் கூட சந்தேகங்கள் தோன்றுகின்றன. அது தருமத்தினின்றும்

வேறானது என்றும், அதருமத்தினின்றும் வேறானது என்றும் புரிந்து கொள்வதற்குக் கடினமான இயல்புடையதாக இருக்கிற அதுவே விஷ்ணுவின் உயர்ந்த நிலை. அதற்கு மேற்பட்டது ஒன்றும் இல்லை. இப்படியெல்லாம் விவரிக்கப்பட்ட அந்த மெய்ப் பொருளே இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. என்பது கருத்து.

மந்த்ரம் 4

சங்கரரின் முன்னுரை

ஆத்மா என்ற மெய்ப் பொருள் அறிவதற்கு அரிதாக இருப்பதால், உபநிஷத் அதைப் பற்றித் திரும்பத் திரும்பப் பேசுகிறது.

स्वप्नान्तं जागरितान्तं च उभौ येनानुपश्यति ।
महान्तं विभुमात्मानं मत्वा धीरो न शोचति ॥

ஸ்வப்நாந்தம் ஜாகரிதாந்தம் ச
உபௌ யேநாநுபச்யதி ।
மஹாந்தம் விபும் ஆத்மானம்
மத்வா தீரோநசோசதி ॥

கனவில் தோன்றும் பொருட்களையும் விழித்துக் கொண்டிருக்கும் போது பார்க்கும் பொருட்களையும் இந்த இரு நிலைகளிலும் எந்த ஆத்மாவினால் பார்க்கிறானோ, அந்த ஆத்மாவை அறிந்த அறிஞன் துயரங்களை அடைவதில்லை.

சங்கரரின் உரை

கனவில் வரும் பொருட்களையும் விழிப்பு நிலையில் காணும் பொருட்களையும், இந்த இரு நிலைகளிலும் எந்த ஆத்மாவினால் ஒருவன் அறிகிறானோ, பெரியதும் எங்கும்

இருப்பதுமான அந்த எவன் மெய்ப்பொருளை ''அதை விட நான் வேறில்லை'' என்று. நேரடியாக உணர்கிறானோ, அவன் துயரங்களை அடைவதில்லை.

மந்த்ரம் 5

य इमं मध्वदं वेद आत्मानं जीवमन्तिकात् ।
ईशानं भूतभव्यस्य न ततो विजुगुप्सते एतद्वै तत् ॥

ய இமம் மத்வதம் வேத
ஆத்மானம் ஜீவமந்திகாத் ।
ஈசானம் பூதபவ்யஸ்ய ந ததோ
விஜுகுப்ஸதே ஏதத்வை தத் ॥

வினைப்பயன்களை நுகர்ந்து, உயிர் வாழ்க்கைக்குக் காப்பாக இருக்கும் இந்த ஆத்மாவை எவன் மிக நெருக்கமாக (தன்னை விட) வேறில்லை என்றும் கடந்த காலம், எதிர் காலம் இரண்டிற்கும் இறைவனாகவும் காண்கிறானோ, அவன் தன்னைப்பற்றி எந்தப் பயமும் கொள்வதில்லை. (இத்தகைய மெய்ப்பொருளைப்பற்றித்தான் நசிகேதஸ் தெரிந்து கொள்ள விரும்பினான்.)

சங்கரரின் உரை

உயிர்ச்சக்தியைத் தாங்கி நிற்பதும் வினைப் பயன்களை நுகர்வதுமான இந்த உயிரின் உண்மையை யார் தனக்கு மிக நெருக்கமானதாகவும் கடந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம் என்ற முக்காலத்திற்கு இறைவனாகவும் உணர்கிறானோ, அவன் பயத்தை அடைவதில்லை. தன்னை எப்படியாவது (ஆபத்திலிருந்து) காத்துக் கொள்ளவேண்டும் என்று நினைப்பதுமில்லை.

தான் அழிந்துபோய் விடுவோமோ என்று அச்சப்படு பவர்கள்தான், தன்னைக் காத்துக் கொள்ள முயல்வார்கள். ஆனால் என்றும் அழியாத, தன்னைத் தவிர வேறு ஒன்றும் இல்லாத இரண்டற்ற ஆத்மாவை அறிந்து விட்ட போது, யாரிடமிருந்து எதைக் காப்பாற்றுவது?

'ஏதத்வைதத்' என்பதற்கு முன்மந்த்ரத்தில் சொன்னது போலவே பொருள் கொள்ளவேண்டும். (அதாவது, இத்தகைய ஆத்மா என்ற மெய்ப் பொருளைப் பற்றித்தான் நசிகேதஸ் யமதருமனிடம் கேட்டான்.)

மந்த்ரம் 6

சங்கரரின் முன்னுரை

உள்ளுறை ஆத்மாவே இறைவன் என்று இரண்டையும் ஒன்றாக்கிச் சொன்ன பிற்பாடு அதுவே எல்லாவற்றிற்கும் உள்ளார்ந்த உண்மை என்று உபநிஷத் சொல்லுகிறது.

यः पूर्वं तपसो जातमद्भ्यः पूर्वमजायत ।
गुहां प्रविश्य तिष्ठन्तं यो भूतेभिर्व्यपश्यत ।
एतद्वै तत् ॥

ய: பூர்வம் தபஸோ ஜாதம் அத்ப்ய: பூர்வமஜாயத ।
குஹாம் ப்ரவிச்ய திஷ்ட்டந்தம் யோ பூதேபிர் வ்யபச்யத ।
ஏதத் வைதத் ॥

பரம்பொருளினிடத்திலிருந்து நீர் முதலிய ஐந்து மூல பௌதிகப் பொருள்களும் தோன்று முன்பே பிறந்தவரும், வசிப்பவரும், ஐந்து பௌதிகப் பொருட்களாலான (உடம்பு) புலன்கள் இவற்றின் வழியாக (ஒலி முதலியவற்றை) அறிபவரு மான ஹிரண்ய கர்ப்பரை அறிந்தவன், பரம்பொருளையே அறிந்தவனாகிறான்.

சங்கரரின் உரை

முக்தியை விரும்பிய எவரும், நீர் தோன்றுவதற்கு முன்பே தோன்றிய ஹிரண்யகர்ப்பரை அறியவேண்டும். நீர் மட்டுமல்ல, நீரும் அதுபோன்ற மற்ற மூல பௌதிகப் பொருள் களும் தோன்றுவதற்கு முன்னரே தோன்றியவர் அவர். பரம் பொருளிலிருந்து உண்டானவர். தேவர்கள் முதலியவர் களுடைய உடம்புகளை உண்டாக்கிக் கொடுத்து விட்டு, எல்லா உயிர்களின் இதயத்திலும் இடங்கொண்டவர் உடம்பிலும் புலன்களிலும் ஊடே (மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்று) பஞ்சபூதங்களோடு சேர்ந்து, ஒலி முதலியவற்றை அறிகின்றவர். அவரை யார் இவ்வாறு தெரிந்து கொள்கிறார் களோ, அவர்களே உண்மையை அறிந்தவர்கள்.

இதுதான் உபநிஷத் இங்கு சொல்லுவதாகும்.

மந்த்ரம் 7

या प्राणेन संभवत्यदितिर्देवतामयी ।
गुहां प्रविश्य तिष्ठन्तीं या भूतेभिर्व्यजायत एतद्वै तत् ॥

யா ப்ராணேன ஸம்பவதி அதிதிர் தேவதாமயீ ।
குஹாம் ப்ரவிச்ய திஷ்டந்தீம் யா
பூதேபிர் வ்யஜாயத ஏதத் வைஏ தத் ॥

எல்லாத் தேவர்களினுடைய மொத்த உருவமானவளும், பரம்பொருளிலிருந்து ஹிரண்யகர்ப்பராக உதித்தவளும், ஐந்து பூதங்களோடு சேர்ந்து தோன்றுபவளும், உயிர்களின் இதயக் குகையில் பிரவேசித்து விளங்குபவளும் ஆன அதிதி தேவ தையை அறிந்தவன் பரம்பொருளையே அறிந்துவிடுகிறான்.

சங்கரரின் உரை

ஒலி முதலிய பொருட்களை 'நுகர்பவள்' ஆனதால் அவள் 'அதிதி' எனப்படுகிறாள். 'அதனம்' என்ற சொல்லிற்கு 'நுகர்தல்' அல்லது 'உண்ணுதல்' என்று பொருள். தேவர்களுடைய மொத்தமான உருவம் அவள் (அவளுக்குள் எல்லாத் தேவர்களும் அடக்கம்). அதிதி பரம்பொருளிலிருந்து உதித்தவள். ''உயிர்களின் இதயக்குகையில் பிரவேசித்து அங்கு விளங்கும் அதிதியை அறிகின்றவன் (பரம்பொருளை அறிந்து விடுகிறான்)'' என்பதெல்லாம் முன் மந்த்ரங்களில் சொன்னது போலவே பொருள் செய்து கொள்ள வேண்டும்.

ஐந்து பௌதிகக் கூறுகளுடன் சேர்ந்தே அந்த அதிதி பிறந்தாள் என்று சிறப்பித்துச் சொல்கிறது உபநிஷத்.

மந்த்ரம் 8

अरण्योर्निहितो जातवेदा गर्भ इव सुभृतो गर्भिणीभिः ।
दिवे दिवे ईड्यो जागृवद्भि-र्मनुष्येभिरग्निः ।
एतद्वै तत् ॥

அரண்யோர் நிஹிதோ ஜாதவேதா
கர்ப்ப இவ ஸுப்ருதோ கர்ப்பிணீபி: ।
திவே திவே ஈட்யோ ஜாக்ருவத்பி:
மனுஷ்யேபி—ரக்னி: ।
ஏதத்வை தத் ॥

அரணிக் கட்டைகளில் நெருப்பு மறைந்திருக்கிறது. கருவுற்றிருக்கும் கர்ப்பிணிப் பெண்கள் தங்கள் கருவிலிருக்கும் குழந்தையைக் காப்பாற்றுவது போல, இந்த நெருப்பை வேள்வி செய்யும் (வேதியர்) காப்பாற்றுகிறார்கள். எதையும் எச்சரிக்கையுடன் ஜாக்கிரதையாகச் செய்யும் இந்த மனிதர்களால் நாள் தோறும் இந்த நெருப்பு வழிபடுவதற்குரியது. இந்த நெருப்பும் பரம்பொருளின் வடிவமே.

சங்கரரின் உரை

வேள்வியின் தேவதையான நெருப்பு (அக்கினி) மேலும் கீழுமான அரணிக்கட்டைகளில் மறைந்திருக்கிறது. (இந்த அரணியின் மேல்கட்டையையும் கீழ்க்கட்டையையும் கடைந்தால் நெருப்பு உண்டாகும்.)

வேள்வியில் அளிக்கப்படும் அவிகளை இந்த நெருப்புத் தேவதை உண்ணுகிறது. உயிர்களின் இதயத்தில் இது வசிக்கிறது. வேள்வி செய்யும் வேதியர்களால் இது நன்கு பாதுகாக்கப்படுகிறது. கர்ப்பிணிகளினால் அவர்களுடைய கருப்பையில் வளரும் குழந்தை எப்படித் தாங்கள் அருந்தும் குற்றமில்லாத உணவினாலும், அருந்தும் நீரினாலும் காப்பாற்றப் படுகிறதோ அதுபோல் உலகில் கருப்பையில் இருக்கும் குழந்தை போல, இந்த வேள்வித்தீ வேதியர்களினாலும், உபாஸகர்களினாலும் காப்பாற்றப்படுகிறது என்பது கருத்து. மேலும், இந்த நெருப்புத் தேவதை (அக்னி) வழிபாட்டுக் குரியது, போற்றுதற்குரியது. வேள்விகளில் வேதியர்களினாலும், தங்கள் இதயங்களில் உபாஸகர்களாலும், ஒவ்வொரு நாளும் மிகவும் விழிப்புடன் வேள்வியில் இடப்படும் நெய் முதலிய வற்றாலும், இதயத்தில் நினைத்துத் தியானம், தொடர்ந்த சிந்தனை இவற்றினாலும் வழிபடப்படுகிறது.

இந்த அக்னிதேவதை, இங்கு உபநிஷத் விளக்கமாகச் சொல்லிக் கொண்டிருக்கும் பரம்பொருளேயாகும்.

மந்த்ரம் 9

यतश्चोदेति सूर्योऽस्तं यत्र स गच्छति ।
तं देवाः सर्वे अर्पितास्तदु नात्येति कश्चन एतद्वैतत् ॥

யதஸ்சோதேதி ஸுர்யோ
அஸ்தம் யத்ர ச கச்சதி ।
தம் தேவா: ஸர்வே அர்ப்பிதாஸ்
தது நாத்யேதி கஸ்சன ஏதத் வை தத் ॥

எதனிடத்திலிருந்து சூரியன் உதித்து, பின் எதனிடத்தில் அஸ்தமிக்கிறானோ அதனிடத்தில் எல்லாத் தேவதைகளும் நிலை பெற்றிருக்கிறார்கள். எதுவும் அதைக் கடந்து செல்ல முடியாது. இதுவே அது.

சங்கரரின் உரை

மேலும் எல்லா உயிர்களுக்கும் உயிர்க் காற்றான எந்த ஹிரண்ய கர்ப்பரிடத்திலிருந்து சூரியன் உதிக்கிறானோ, எதனிடத்தில் தினந்தோறும் அஸ்தமிக்கிறானோ, அந்த உயிர்க் காற்றான ஆத்மாவில், அக்கினி முதலிய எல்லாத் தேவதை களும் நிலைபெற்றிருக்கின்றனர். அதேபோல பேச்சு முதலிய வையும் இடம் பெற்றிருக்கின்றன. முன்னது தேவதைகளைப் பற்றியது (அதிதைவதம்). பின்னது, தனி மனிதர்களைப் பற்றியது (அத்யாத்மம்). உலகம் உள்ள வரை இவைகள் அந்த உயிர்க்காற்றான ஹிரண்யகர்ப்பரிடத்தில், தேரின் சக்கரத்தில் உள்ள குடத்தில் கோர்க்கப்பட்டிருக்கும் ஆரக்கால்கள்போல, கோர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த உயிர்க்காற்றும் பரம் பொருளேயாகும். இதுதான் எங்கும் நிறைந்த பிரம்மம் எனப் படுகிறது. அதை ஒருவரும் கடந்து அப்பால் செல்லமுடியாது. அதனின்றும் பிரிந்து அதைவிட வேறாக இருக்க முடியாது. இதுவே இங்கு விளக்கப்படும் பரம்பொருள்.

மந்த்ரம் 10

சங்கரரின் முன்னுரை

அடுத்துவரும் 10 ஆவது மந்த்ரம் ஏதேனும் இங்கே ஐயப்பாடு வருமானால் அதை மறுக்கிறது. என்ன ஐயப்பாடு? நான்முகன் முதல் அசையாமல் நிற்கும் மரம் முடிய உள்ள வேறுவேறு வகையாகக் காணப்படும் எல்லாவற்றிலும் ஒரே சத்தியப்பொருள் தான் உள்ளது. ஏதோ தடைகளினால் கட்டுண்டு தனித்தனி உயிராகத் தோற்றமளிக்கிறது என்பது

தான் உண்மை. ஆனால் இந்த உயிர்கள் பரம்பொருளைவிட வேறானவை. பிறப்புக்கும் இறப்புக்கும் உட்பட்டவை.

(இவ்வாறு எழக்கூடிய ஐயப்பாட்டைப் பின்வரும் மந்த்ரம் மறுக்கிறது.)

यदेवेह तदमुत्र यदमुत्र तदन्विह ।
मृत्योः स मृत्युमाप्नोति य इह नानेव पश्यति ॥

யதேவேஹ ததமுத்ர யதமுத்ர ததன்விஹ ।
ம்ருத்யோ: ஸ ம்ருத்யும் ஆப்னோதி ய இஹ நாநேவ பச்யதி ॥

இங்கு இருப்பதுதான் அங்கு இருக்கிறது. அதேபோல அங்கிருப்பதுதான் இங்கும் இருக்கிறது. எவன் இங்கு வேற்றுமைகளை உண்மை என்று நம்புகிறானோ, அவன் ஒரு மரணத்திலிருந்து இன்னொரு மரணத்தை அடைகிறான்.

சங்கரரின் உரை

இங்கே இந்த உலகத்தின் காரணகாரிய விவகாரங்களில் சிக்கிக்கொண்டதுபோலும், பிறப்பிறப்பு, இன்பதுன்பங்கள் அனுபவிப்பதாகவும் பாமரர்களுக்குத் தோன்றும் மெய்ப் பொருள், ஒரே அறிவின் உருவமாக அங்கே தன் சொந்த நிலையில் உலக விவகாரங்களோடு யாதொரு தொடர்புமின்றி விளங்குகிறது.

இப்படி அங்கே தன் சொந்த நிலையில் இருக்கிற அதே பரம்பொருள்தான் இங்கே உடம்பு, புலன்கள், உருவம், பெயர் முதலியவற்றில் குறுகிக் கட்டுண்டு பலபல வகையாகக் காட்சியளிக்கின்றது. எனவே அங்கும் இங்கும் (எங்கும்) இருப்பது ஒன்றே.

உண்மை இப்படி இருக்கும்போது, தன்னைப் பிணித் துள்ள உடம்பு முதலிய கட்டுப்பாட்டுக்குள் இருப்பதன்

காரணமாக, எல்லாவற்றையும் வெவ்வேறாகப் பார்க்கும் அறியாமையினால் மயக்கத்தை ஒரு பாமரன் அடைகிறான். உண்மையில், பரம்பொருள் வேற்றுமைகளே இல்லாதது. அதில் ஏதோ வேற்றுமைகள் இருப்பதுபோல் பாமர மனிதன் தவறாக எண்ணுகிறான். ''பரம்பொருள் என்னைவிட வேறானது'' என்றும் ''நான் பரம்பொருளைவிட வேறானவன்'' என்றும் வேற்றுமைகளை உண்டுபண்ணிக் கொள்கிறான்.

இத்தகைய மனிதன், திருப்பித் திருப்பிப் பிறப்பதும் இறப்பதுமாகத் துன்பப்படுகிறான். ஆகையினால், ஒரே உண்மைப்பொருளை வேறுபடுத்திப் பார்ப்பதை விட்டு விட்டு, ''ஆகாயத்தைப் போல நீக்கமற எங்கும் நிறைந்திருப்பதும், இரண்டில்லாத ஒரே அறிவின் உருவமாக இருப்பதும் ஆகிய அந்தப் பரம்பொருளே நான்'' என்று ஒருவன் எப்பொழுதும் நினைக்கவேண்டும். இதுதான் உபநிஷத் வாக்கியத்தின் பொருள்.

மந்த்ரம் 11

मनसैवेदमाप्तव्यं नेह नानाऽस्ति किञ्चन ।
मृत्योः स मृत्युं गच्छति य इह नानेव पश्यति ॥

மனஸைவ இதம் ஆப்தவ்யம்
நேஹ நாநா அஸ்தி கிஞ்சன ।
ம்ருத்யோ: ஸ ம்ருத்யும் கச்சதி ய
இஹ நாநேவ பச்யதி ॥

இது மனத்தினால் மட்டும் அடையப்படக் கூடியது. இங்கு எந்த விதமான வேற்றுமைகளும் கிடையாது. எவன் வேற்றுமைகளை உண்மையென்று நம்புகிறானோ, அவன் ஒரு மரணத்திலிருந்து இன்னொரு மரணத்தை அடைகிறான்.

சங்கரரின் உரை

தன்னைத் தவிர வேறொன்று இல்லாததும், தானே எல்லா உயிர்களுமாக இருப்பதும், ஒரே சீரான தன்மை யுள்ளதுமான இந்தப் பரம்பொருளை ஆசிரியரின் உதவி யோடும், மெய்ந்நூல்களைக் கற்றுணர்ந்தும், பண்பட்ட மனத்தி னால் அறியவேண்டும். இப்படி அறியும் போது, அறியாமை யால் விளைந்த வேற்றுமைகளெல்லாம் அழிந்து போகின்றன. எனவே, பரம்பொருளில் ஒரு சிறிது வேற்றுமை கூடக் கிடை யாது. இதற்கு மாறாக, இருட்டை ஒத்த அறியாமையை அகற்றிக்கொள்ளாத ஒருவன், வேற்றுமைகளை உண்மை என்றே நம்புகிறான். சிறிதளவு வேற்றுமையை ஒருவன் நம்பினாலும், அவன் ஒரு மரணத்தினின்று இன்னொரு மரணத்தை அடைகிறான். (இடையறாத பிறவிச் சுழலில் சிக்கிக் கொள்கிறான் என்பது கருத்து.)

மந்தரம் 12

சங்கரரின் முன்னுரை

இதே பரம்பொருளைப் பற்றி உபநிஷத் மேலும் பேசுகிறது:

अङ्गुष्ठमात्रः पुरुषो मध्य आत्मनि तिष्ठति ।
ईशानं भूतभव्यस्य न ततो विजुगुप्सते ।
एतद्वै तत् ॥

அங்குஷ்ட்ட மாத்ர: புருஷ: மத்ய ஆத்மனி திஷ்ட்டதி ।
ஈசானம் பூதபவ்யஸ்ய ந ததோ விஜுகுப்ஸதே ॥
ஏதத் வை தத் ॥

இந்தப் பரம்பொருள் கட்டை விரல் அளவுள்ளதாய், (நமது) உடம்பில் இருக்கிறது. வருங்காலம், கடந்தகாலம்

இவற்றைக் கட்டி ஆளுகின்ற இறைவனாக இவரை அறிந்து கொண்ட ஒருவன் எதையும் வெறுப்பதில்லை, இதுவே அது.

சங்கரரின் உரை

இதயத் தாமரை ஒரு கட்டை விரல் அளவுள்ளது. அந்த இதயத் தாமரையினுள்ளிருக்கும் ஆகாய வெளியில் குடி கொண்டிருக்கும் பரம்பொருளும் கட்டை விரல் அளவுக்குத் தன்னை ஒடுக்கிக் கொண்டிருக்கிறது. ஒரு மூங்கிலுக்குள் இருக்கும் ஆகாயம் அந்த மூங்கிலின் அளவுக்குத் தன்னை ஒடுக்கிக்கொள்ளுவது போலத்தான் இதுவும்.

'புருஷன்' என்றால் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந் தவன் என்பது பொருள். இவ்வாறு, நமது உடம்பினுள் தங்கி யிருக்கும் பரம்பொருளை (புருஷனை), கடந்தகாலம், எதிர் காலம் முதலியவற்றைக் கட்டியாளும் இறைவனாக யார் உணர்ந்து கொள்கிறார்களோ, அவர்கள் தங்களை எதிலிருந்தும் காத்துக் கொள்ள முனைவதில்லை. (அவர்கள் எதைக் குறித்தும் கவலைப்படுவதில்லை; பயப்படுவதில்லை.) தானே பரம்பொருளாய் உணர்ந்துவிட்ட பின், எதிலிருந்து யார் யாரைக் காப்பாற்றுவது — என்பது கருத்து.

மந்த்ரம் 13

अङ्गुष्ठमात्रः पुरुषो ज्योतिरिवाधूमकः ।
ईशानो भूतभव्यस्य स एवाद्य स उश्वः ।
एतद्वै तत् ॥

அங்குஷ்ட்ட மாத்ர: புருஷ : ஜ்யோதிரிவ அதூமக: ।
ஈசானோ பூதபவ்யஸ்ய ஸ ஏவ அத்ய ஸ உ ச்வ: ॥
ஏதத்வை தத் ॥

கட்டை விரல் அளவுள்ள இறைவனாகிற (புருஷன்) புகையில்லாத நெருப்பைப் போன்றவன். கடந்த காலத்தையும் வருங்காலம் எல்லாவற்றையும் கட்டியாள்பவன். அவன் இன்றும் இருக்கிறான்; நாளையும் இருப்பான், இதுவே இங்கு விளக்கப்பட்டது.

சங்கரரின் உரை

கட்டைவிரல் அளவுள்ள இந்த இறைவன் புகையில்லாத நெருப்பைப் போன்றவன். (அதூமக: என்பது இந்த உபநிஷத் மந்த்ரத்திலுள்ள சொல்; இது 'அதூமகம்' என்று இருக்க வேண்டும். ஏனெனில், 'ஜ்யோதிஸ்' என்ற அஃறிணைப் பொருளுக்கு அது அடைமொழியாக இங்கு வருகிறது.) யோகிகளால் தங்கள் இதயத்தில் இவ்வாறு உணரப்படுகிற இறைவன், கடந்தகாலம், எதிர்காலம் இவற்றை ஆளுபவன். என்றும் மாறாத அவன், எல்லாப் பொருட்களிலும் இன்றும் இருக்கிறான்; நாளையும் இருப்பான். அவனுக்கு நிகரானது இன்றும் இல்லை, நாளையும் இல்லை என்பது குறிப்பு.

இந்த உபநிஷத்தில் (I-1.20) ஏற்கனவே நசிகேதஸ்ஸி னால் ''மரணத்திற்குப்பின் ஆத்மா என்பது இல்லை என்று சிலர் கூறுகிறார்களே.'' என்று கேட்கப்பட்ட கேள்விக்கு இடமே யில்லை என்றாலும், இங்கு உபநிஷத் அந்தக் கூற்றைத் தனது சொற்களினாலேயே மறுக்கிறது. இதனால், பௌத்தர்கள் கூறும் க்ஷணிக வாதமும் மறுக்கப்படுகிறது. (ஒவ்வொரு பொருளும் ஒரு கணத்திற்குமேல் நீடித்து இருப்பதில்லை என்றும், ஆத்மா வும் அதுபோலக் கணநேரம் இருந்து அழிவதுதான் என்றும் க்ஷணிக வாதம் கூறுகிறது).

மந்த்ரம் 14

சங்கரரின் முன்னுரை

பரம்பொருளில் எந்தவிதமான வேற்றுமைகளும் கிடையாது என்பதை உபநிஷத் மறுபடியும் எடுத்துக்கூறுகிறது.

यथोदकं दुर्गे वृष्टं पर्वतेसु विधावति ।
एवं धर्मान् पृथक् पश्यन् तानेवानुविधावति ।

யதோதகம் துர்கம் வ்ருஷ்டம்
பர்வதேஸு விதாவதி ।
ஏவம் தர்மான் ப்ருதக்
பச்யன் தானேவ அநுவிதாவதி ॥

நெருங்கமுடியாத உயரத்திலிருக்கும் இடத்தில் (மலையுச்சிகளில்) பெய்யும் மழை, கீழே மலையடிவாரங்களில் ஓடிப் பாய்வது போல, உலகில் பொருட்களை வேறுவேறாகப் பார்க்கும் ஒருவன் அவற்றை நோக்கி ஓடுகிறான்.

சங்கரரின் உரை

நெருங்க முடியாத வெகு உயரத்தில் இருக்கும் இடத்தில் பெய்யும் மழைத் தண்ணீர், கீழ் நோக்கி ஓடிப் பள்ளங்களில் உள்ள மலைப்பிரதேசங்களில் பலகிளைகளாகப் பிரிந்து பாய்வதுபோல, ஒவ்வொரு உடம்பிலும் இருக்கும் ஒரே ஆத்மாவை, வெவ்வேறு உயிர்களாகப் பார்ப்பவன் அவற்றைக் குறித்து ஓடுகிறான். அதாவது, பலவேறு உடல்களில் மறுபடி மறுபடிப் பிறக்கிறான்.

மந்த்ரம் 15

சங்கரரின் முன்னுரை

மெய்யுணர்வு பெற்றவன் எவ்வாறு அந்த உணர்வைப் பெற்றான் என்பது இப்பொழுது கூறப்படுகிறது. உடம்பு முதலிய தடைகளினால் ஒடுக்கப்பட்ட பார்வையுடையவனுடைய வேற்றுமை எண்ணங்களை இந்த மெய்யுணர்வு அழித்து விடுகிறது. ஒரே சீரான அறிவே தன்மையாகக் கொண்ட இரண்டற்ற மெய்ப்பொருளை உணர்ந்து, மெய்யறிவு பெற்றவன், அதை எப்பொழுதும் நினைந்து எவ்வாறு வேற்றுமைப் பார்வைகளை வென்று அழித்தான் என்பது, அடுத்துக் கூறப்படுகிறது.

யமதருமன் சொன்னான் :

यथोदकं शुद्धे शुध्दं आसिक्तं तादृगेव भवति ।
एवं मुनेर्विजानत आत्मा भवति गौतम ॥
इति काठकोपनिषदि
द्वितीयाध्याये प्रथमा वल्ली ॥

யதோதகம் சுத்தே சுத்தம்–ஆஸிக்தம் தாத்ருகேவ பவதி ।
ஏவம் முநேர் விஜாநத ஆத்மாபவதி கௌதம ॥
இதி காடகோபநிஷதி த்விதீய–அத்யாயே ப்ரதமா வல்லீ ॥

''ஓ கௌதம ! நசிகேதஸ்ஸே ! தூய நீரில் ஊற்றப்பட்ட தூயநீர், அதோடு வேற்றுமையில்லாமல் கலந்துவிடுவது போல, உண்மையை ஆராய்ந்து மெய்யுணர்வு பெற்றவனுடைய ஆத்மா பரம்பொருளோடு (இரண்டறக்) கலந்து ஒன்றாகி விடுகிறது.''

சங்கரரின் உரை

தூய நீரில் ஊற்றப்பட்ட தூயநீர் எவ்வாறு தூய்மை மாறாமல் அந்த நீரோடு இரண்டறக் கலந்து விடுகிறதோ, அதுபோல, உண்மையை ஆராய்ந்து, இரண்டற்ற மெய்ப் பொருளை உணர்ந்தவனுடைய ஆத்மா அந்த மெய்ப் பொருளாகவே ஆகிவிடுகிறது.

எனவே, ஓ கௌதம! தவறான வழியில் செல்லும் வறட்டுத் தருக்கவாதிகள் பின்பற்றும் வேற்றுமை உணர்வு களை உதறித்தள்ளிவிட்டு, நம்பிக்கையில்லாதவர்களுடைய பொய்ம்மைகளை ஒதுக்கிவிட்டு, 'தான்' என்னும் அகந்தையை அறவே வென்று இரண்டற்ற பரம்பொருளும் தாமும் வேறல்ல - என்ற ஒருமை அறிவை நாடித் தேடிப் பெறவேண்டும். இதுவே வேதங்கள் நமக்குச் சொல்லிக் கொடுக்கும் அத்வைத மெய்யறிவு. ஆயிரம் தாய்களுக்கும், தந்தைகளுக்கும் இல்லாத பரிவும், கருணையும் வேதங்களுக்கு உண்டு. இதுதான் இங்கு கருத்து.

**கடோபநிஷத்தில் இரண்டாவது அத்யாயத்தில்
முதல் வல்லீ முற்றுப்பெற்றது.**

**கட உபநிஷத்தில் இரண்டாவது அத்யாயத்தில்
முதல் வல்லீக்கு சங்கரரின் உரை முற்றிற்று.**

அத்தியாயம் 2

இரண்டாவது வல்லீ

சங்கரரின் முன்னுரை

பரம்பொருளை அறிவது அரியதாதலால், அதை நன்கு அறிவதற்கு இன்னொரு வழியை நமக்குக் காண்பிக்கிறது உபநிஷத்.

மந்த்ரம் 1

पुरं एकादश-द्वारं अजस्य-अवक्रचेतसः ।
अनुष्ठाय न शोचति विमुक्तश्च विमुच्यते ।
एतद्वै तत् ॥

புரம் ஏகாதச—த்வாரம் அஜஸ்ய—அவக்ரசேதஸ: ।
அநுஷ்டாய ந சோசதி விமுக்தஸ்—ச விமுச்யதே ।
ஏதத்வை தத் ॥

பிறப்பு இல்லாததும், மாறாத அறிவே உருவமானதும் ஆன (பரம்பொருளுக்கு) பதினோரு வாசல்களுள்ள பட்டணம் ஒன்று இருக்கிறது. அதை எப்பொழுதும் நினைந்து தியானம் செய்பவன் துயரமடைவதில்லை. ஏற்கனவே விடுதலை பெற்ற அவன் விடுதலை பெறுகிறான். இதுவே அது.

சங்கரரின் உரை

பட்டணம் என்றால் 'பட்டணம் போன்றது' என்று பொருள். நம் உடம்புதான் பட்டணம். அதிலே ஒரு பட்டணத்தின் அமைப்புக்களெல்லாம் இருக்கின்றன. வாயில் காப்போர், அதிகாரிகள் முதலியோர் அதற்கு உண்டு. எல்லாச் சிறப்புக்களுடனும் கூடிய ஒரு பட்டணம் - ஓர் அரசனுக்குச் சொந்தமாக இருக்கிறது - என்றால், அந்த அரசன் அந்தப் பட்டணத்தைவிட வேறானவன்.

இதுபோலவே, இந்த நம் உடம்பும் பல அங்கங்களோடு கூடி ஒரு பட்டணத்தை ஒத்திருக்கிறது. பட்டணத்திற்குச் சொந்தக்காரனான ஓர் அரசன் இருப்பதுபோலவே, உடம் பாகிற பட்டணத்திற்கும் ஒரு சொந்தக்காரத் தலைவன் வேண்டும். அவன் உடம்பை விட வேறாக இருக்கவும் வேண்டும்.

இந்த உடம்பு என்னும் பட்டணம் பதினொரு வாயில் களை உடையது : தலையில் ஏழு, உடலின் கீழ்ப்பாகத்தில் தொப்புள் உட்பட மூன்று, தலையின் உச்சியில் ஒன்று (என்று இவை பதினொன்று). இந்த ஒற்றுமையால், இந்த உடம்பு பதினொரு வாசல்களுள்ள பட்டணம் எனப்படுகிறது.

யாருடைய பட்டணம் இது? பிறப்பில்லாததும், எந்த வித மாறுதல்களும் இல்லாததும் ஆன ஆத்மா என்ற மெய்ப் பொருளை, அரசனாக உடைய பட்டணம் இது. இதைவிட வேறானது அதன் அரசனான ஆத்மா. பலபடியாகக் கோணாமல் ஒரே சீராயிருப்பதும், என்றும் மாறாததுமான சூரிய ஒளியைப்போன்ற அறிவே அந்த ஆத்மா என்ற மெய்ப்பொருள். அதுவே உடல் என்ற பட்டணத்திற்கு அரசன் போன்றது. முழுமெய்யறிவை நோக்கமாகக் கொண்டு இந்த உடலுக்குச் சொந்தக்காரனான ஆத்மா என்ற அரசனை இடையறாது தியானம் செய்பவன், ஆசாபாசங்களிலிருந்து முற்றும் விடுபட்டு, எல்லா உயிர்களிலும் பொருட்களிலும், அது சமமாக வசிப்பதாகக் கண்டு, துயரங்களிலிருந்து விடுபடு கிறான். அவனுக்கு எதைக் கண்டும் அச்சம் ஏற்படுவதில்லை. எதனாலும் அவன் துயரத்தை அடைவதில்லை. இவ்வுலகில் இந்த உடலில் உயிரோடிருக்கும் பொழுதே அவன் முக்தி பெற்று விடுகிறான். அறியாமையினால் உண்டாகும் ஆசை களிலிருந்தும், அவற்றைப்பெற அவன் ஈடுபடும் செயல்களி லிருந்தும், அவன் விடுதலை பெறுகிறான். (உயிர் வாழும் பொழுதே) விடுதலை பெற்ற அவன், மறுபடிப் பிறந்து ஓர் உடலை அடைவதில்லை.

மந்த்ரம் 2

சங்கரரின் முன்னுரை

ஆத்மா என்ற மெய்ப்பொருள் ஓர் உடம்பில் மட்டுமன்றி எல்லா உடம்புகளிலும் குடியிருக்கிறது. இது எப்படிச் சாத்தியம் என்று உபநிஷத் காண்பிக்கிறது:

हंसः शुचिसत्-वसु-रन्तरिक्षसत्
होता वेदिषत्-अतिथि-र्दुरोणसत् ।
नृषत्-वरसत्-ऋतसत्-व्योमसत्
अब्जा गोजा ऋतजा अद्रिजा ऋतं बृहत् ॥

ஹம்ஸ: சுசிஸத்–வஸுர்–அந்தரிக்ஷஸத்
ஹோதா வேதிஸத்–அதிதிர்–துரோணஸத் ।
ந்ருஸத்–வரஸத்–ருதஸத்–வ்யோமஸத்
அப்ஜா கோஜா ருதஜா அத்ரிஜா ருதம் ப்ருஹத் ॥

ஓடிக்கொண்டேயிருக்கும் (சூரியனாக) இந்த மெய்ப் பொருள் விண்ணில் இருக்கிறது; (காற்று வடிவத்தில்) எல்லா வற்றையும் வியாபித்து விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையே உள்ள வெளியில் (அந்தரிக்ஷத்தில்) இருக்கிறது; (அக்கினி யாக) பூமியில் இருக்கிறது; ஸோமச் சாறாகப் பாத்திரத்தில் இருக்கிறது; மனிதருள் இருக்கிறது; தேவதைகளுள் இருக்கிறது; வெட்ட வெளியில் இருக்கிறது; நீரில் உண்டாகிறது; மண்ணில் உண்டாகிறது; வேள்வியில் பிறக்கிறது; மலைகளிலிருந்து தோன்றுகிறது; அது மாறாத தன்மையுடையது; மிகப்பெரியது.

சங்கரரின் உரை

'ஹம்ஸ' என்ற சொல், 'ஹந்' என்ற அடியிலிருந்து பிறந்தது. ''போவது'' என்பது அதன் பொருள். (இந்த ஆத்மா) ஹம்ஸ அல்லது சஞ்சரிப்பது. அது தூயது. தூய விண்ணில் சூரியனின் வடிவமாக இருப்பதால் அது தூயது; எங்கும் நிறைந்த காற்றாக இடைப்பட்ட ஆகாய வெளியில் (அந்தரிக்ஷத்தில்) வசிக்கிறது; 'ஹோதா' என்பது அக்னிக்குப் பெயர். ''அக்னி என்பது ஹோதா அல்லவா?'' என்று வேதம் சொல்லியிருக்கிறது. (பார்க்க : சிதி–உபநிஷத், III-1, VII-1) எனவே, அக்கினியாக இந்த ஆத்மா பூமியில் வசிக்கிறது. பூமிக்கு 'வேதி' (யாகபூமி) என்று பெயர். ''யாகபூமியாக இருப்பதுதான் பூமியின் மிக உயர்ந்த நிலை'' என்று ரிக்வேதம் (II. 3.20) சொல்லுகிறது. எனவே யாகபூமியான மண்ணுலகில் (ஆத்மா) வசிக்கிறது. ஸோமக் கொடியைப் பிழிந்து எடுத்த சாறாக, அது துரோணம் என்ற பாத்திரத்தில் இருக்கிறது; (அல்லது வேறு பொருள்கொண்டால்) அது வீடுகளில் அந்தண விருந்தாளியாக வசிக்கிறது.

அது மனிதருள் வசிக்கிறது; வணக்கத்திற்குரிய தேவதை களிடையே வசிக்கிறது; யாகத்தில் அல்லது ஸத்தியத்தில் வசிக்கிறது. வெற்று வெளியில் இருக்கிறது. நீரில் தோன்று கிறது. சங்கு, கிளிஞ்சல், திமிங்கிலம் முதலிய பொருட்களாக நீரில் தோன்றுகிறது. பூமியில் நெல், கோதுமை முதலிய தானி யங்களாக முளைக்கிறது; வேள்வியின் அங்கங்களாக இருக் கிறது; மலைகளிலிருந்து நதிகளாக அது, பெருகி ஓடுகிறது.

எல்லாவற்றிற்கும் உட்தத்துவமாக இருந்து கொண்டு, மாறாமல் ஒரே உண்மையாக இருக்கிறது. எல்லாவற்றிற்கும் காரணமாய்ப் பெரிதாக இருக்கிறது.

இந்த மந்த்ரத்தில் சூரியனே முக்கியமாகப் பேசப் பட்டாலும், சூரியனும் ஆத்மாவின் ஒரு வடிவமானதால்,

இங்கு ஆத்மாவே பேசப்படுவதாகப் பிராம்மணங்கள் என்ற வேதப்பகுதிகள் பொருள் செய்கின்றன.

உலகமெல்லாம் எங்கும் நீக்கமற நிறைந்த ஒரே மெய்ப்பொருளையே உட்தத்துவமாகக் கொண்டிருக்கின்றது என்பதும், ஆத்மாக்கள் பல அல்ல; ஒன்றுதான் - என்பதும் இங்கு தெரிவிக்கப்பட்ட கருத்து.

மந்த்ரம் 3

சங்கரரின் முன்னுரை

இத்தகைய மெய்ப்பொருளின் இயல்பை நன்கு தெரிந்து கொள்ளும் பொருட்டாக அதற்குரிய ஆதாரத்தை உபநிஷத் இப்பொழுது காட்டுகிறது.

ऊर्ध्वं प्राण-मुन्नयति अपानं प्रत्यगस्यति ।
मध्ये वामनमासीनं विश्वे देवा उपासते ॥

ஊர்த்வம் ப்ராணம் உந்நயதி அபானம் ப்ரத்யகஸ்யதி ।
மத்யே வாமனம் ஆஸீனம் விச்வேதேவா உபாஸதே ॥

நடுவில் வீற்றிருப்பதும், பிராண வாயுவை மேல் நோக்கிச் செலுத்துவதும், அபான வாயுவை உள்முகமாகச் செலுத்துவதுமான அந்த போற்றுதற்குரிய பரம்பொருளை எல்லா தேவர்களும் தொழுகிறார்கள்.

சங்கரரின் உரை

வெளிவிடும் மூச்சான உயிர்க்காற்றை மேலே செலுத்துவதும், உள்ளிழுக்கும் மூச்சான உயிர்க்காற்றை உள்முகமாகச் செலுத்துவதுமான அப்பரம்பொருள் - இதய வெளியில் வசிக்கிறது; புத்தியில் அறிவாக விளங்குகிறது; எல்லா

வற்றிற்கும் நடுவில் இருக்கிறது; அதைக் கண், காது முதலிய தேவர்கள் பணிகின்றனர். பார்ப்பது, கேட்பது முதலிய தம் தம் செயல்களையே, அதற்குக் காணிக்கையாக அவர்கள் செலுத்து கின்றனர், குடிமக்கள் தம் அரசனுக்குக் காணிக்கை செலுத்து வதுபோல. பரம்பொருளின் ஆணையில் செயற்படும் புலன்கள் தத்தம் தொழில்களை நிறுத்துவதில்லை - என்பது கருத்து. யாருக்காக, யாருடைய கட்டளைக்குப் பணிந்து உயிர் மூச்சும் புலன்களும் தத்தம் தொழில்களைச் செய்கின்றனவோ அந்தப் பரம்பொருள் அவற்றைவிட வேறானது. இதைத்தான் உபநிஷத் வாக்கியம் சொல்லுகிறது.

மந்த்ரம் 4

अस्य विस्रंसमानस्य शरीरस्थस्य देहिनः ।
देहाद्विमुच्यमानस्य किमत्र परिशिष्यते ।
एतद्वै तत् ॥

அஸ்ய விஸ்ரம்ஸமானஸ்ய சரீரஸ்தஸ்ய தேஹின: ।
தேஹாத் விமுச்யமானஸ்ய கிமத்ர பரிசிஷ்யதே ।
ஏதத் வை தத் ॥

இந்த உடலை விட்டு அதனுள் இருக்கும் ஆத்மா பிரியும் பொழுது, இங்கு என்ன மிஞ்சுகிறது ? இதுவே அது.

சங்கரரின் உரை

உடலினுள் வசிக்கும் மெய்ப்பொருளாகிற ஆத்மா, அந்தக் கட்டு அவிழ்ந்து உடற்கூட்டிலிருந்து விடுபடும் பொழுது, இங்கு மிச்சம் என்ன இருக்கிறது? பிராணன் முதலிய இந்தக் கூட்டில் ஒன்றும் மிஞ்சாது. ஆத்மா உடலை விட்டு நீங்கும்பொழுது, உடலும், அதிலுள்ள கண் முதலிய கருவி களும் சக்தியையெல்லாம் இழந்து செயலற்று அழிகின்றன. ஒரு

தலைநகரத்தின் அரசன் அதை விட்டு நீங்கி விட்டால், எல்லாக் குடிமக்களும் அவனைத் தொடர்ந்து தாங்களும் வெளியேறி விடுகிறார்களல்லவா? இதிலிருந்து, மெய்ப்பொருளாகிற ஆத்மா உடலைவிட வேறானது என்று தெளிவாகிறது.

மந்த்ரம் 5

சங்கரரின் முன்னுரை

கேள்வி : ''பிராணன், அபானன் என்ற உயிர் மூச்சுக்கள் நீங்கும்பொழுது, உடல் அழிகிறதே தவிர, (நீங்கள் சொல்வது போல்) உடலைவிட வேறானதாகக் கூறப்படும் ஆத்மா அதை விட்டு நீங்குவதனால் அல்ல. மூச்சு இருக்கும் வரை மனிதன் உயிர் வாழ்கிறான்.''

பதில் : இந்தக் கேள்வி சரியன்று :

न प्राणेन नापानेन मर्त्यो जीवति कश्चन ।
इतरेण तु जीवन्ति यस्मिन्नेतौ उपाश्रितौ ॥

ந ப்ராணேன ந அபானேன மர்த்யோ ஜீவதி கஸ்சன ।
இதரேண து ஜீவந்தி யஸ்மின் ஏதெள உபாச்ரிதெள ॥

பிராணன், அபானன் என்ற மூச்சுக்களினால் ஒருவன் உயிர் வாழவில்லை; இவையிரண்டுமே வேறொன்றின் சக்தி யினால் இயங்குகின்றன; அதை நம்பியிருக்கின்றன.

சங்கரரின் உரை

வெளிவிடும் மூச்சான பிராணனாலோ உள்ளிழுக்கும் மூச்சான அபானனாலோ, கண் முதலிய புலன்களினாலோ, எதுவும் உயிர் வாழ்வதில்லை. வேறு ஒரு தலைமையின் கீழ் இவை கூட்டாக வேலை செய்கின்றன. எனவே, இவை உயிர்

வாழ்க்கைக்கு ஆதாரமாக இருக்க முடியாது. செயற்கையாகக் கட்டப்படும் வீடு முதலியன தமக்காகவே பயன்படுவதில்லை. வேறு ஒரு சொந்தக்காரன் வசிப்பதற்காக அவை கட்டப் படுபவை. அந்தச் சொந்தக்காரன் வீட்டைவிட வேறானவன். இதைப் போலத்தான், பிராணவாயு முதலியவையும், வேறு ஒரு தலைவரின் உபயோகத்திற்காக வேலை செய்கின்றன. இவையெல்லாம் தம்மை விட வேறான ஒரு சக்தியினால் கூட்டமைக்கப்பட்டு வேலை செய்கின்றன;

மெய்ப்பொருளும் பரம்பொருளுமான ஆத்மா, செயற்கையான உடற் கூட்டிலிருந்து வேறானது; பிராண-அபான வாயுவும், கண் முதலியனவும் இந்த ஆத்மாவைச் சார்ந்து இருக்கின்றன; இந்த ஆத்மாவின் நன்மைக்காக அவை தத்தம் வேலையைச் செய்கின்றன. இவற்றினின்றும் ஆத்மா வேறுபட்ட தன்மையுடையது. இது உபநிஷத்தின் கருத்து.

மந்த்ரம் 6

யமதருமன் சொல்கிறான்:

हन्त त इदं प्रवक्ष्यामि गुह्यं ब्रह्म सनातनम् ।
यथा च मरणं प्राप्य आत्मा भवति गौतम ॥

ஹந்த த இதம் ப்ரவக்ஷ்யாமி குஹ்யம் ப்ரஹ்ம ஸநாதனம் ।
யதா ச மரணம் ப்ராப்ய ஆத்மா பவதி கௌதம ॥

''நல்லது, ஓ கௌதம ! என்றுமுள்ளதும் ரகஸ்யமுமான இந்தப் பரம்பொருளைப் பற்றி உனக்குச் சொல்லுகிறேன்.

மரணத்திற்குப்பின் இந்த உயிருக்கு என்ன நேரிடுகிறது - என்பதையும் சொல்லுகிறேன்.''

சங்கரரின் உரை

''நல்லது ! கௌதம ! ரஹஸ்யமானதும் என்றுமுள்ளது மான இந்தப் பரம்பொருளைப்பற்றி உனக்குச் சொல்லுகிறேன். இதைப் பற்றி அறிந்து கொண்டால், எப்படிப் பிறவி — மரணம் இரண்டும் வராது என்பதையும், இதைத் தெரிந்துகொள்ளாமல் மரணத்தை அடைந்து உயிர்கள் எப்படிப் பிறவிச் சுழலில் அகப் பட்டுக் கொள்கின்றன என்பதையும் சொல்கிறேன்; கேட்டுக் கொள்.

மந்த்ரம் 7

योनिमन्ये प्रपद्यन्ते शरीरत्वाय देहिनः ।
स्थाणुमन्येऽनुसंयन्ति यथाकर्म यथाश्रुतम् ॥

யோனிம் அன்யே ப்ரபத்யந்தே சரீரத்வாய தேஹின: ।
ஸ்தாணும் அன்யே அநுஸம்யந்தி யதாகர்ம யதாச்ருதம் ॥

சில உயிர்கள் மறுபடி உடலை எடுப்பதற்காகக் கருப் பையை அடைகின்றன; மற்றும் சில, அசையாதவையாக (மரம் முதலியவையாகப்) பிறக்கின்றன. இதெல்லாம் அவற்றின் வினைகளையும் அறிவையும் பொறுத்து ஏற்படுகிறது.

சங்கரரின் உரை

உண்மையைத் தெரிந்து கொள்ளாத சில உயிர்கள் உடலில் பிறப்பதற்காக (ஒரு தாயின்) கருப்பையை அடை கின்றன. அறியாமை மிகுந்த மூடர்கள் வேரூன்றி நிற்கும் மரம் முதலியவையாகப் பிறக்கிறார்கள். அவரவர் வாழ்வில் செய்த வினைகளின் பயனாகவும், அவரவர் பெற்ற அறிவின் பக்குவத்திற்கு ஏற்பவும், இப்பிறவிகள் உயிர்களுக்கு ஏற்படு கின்றன. ''அவரவர் அறிவைப் பொறுத்து உயிர்கள் பிறவி யெடுக்கின்றன'' என்ற இன்னொரு வேதவாக்கும் இதை வலி யுறுத்துகிறது.

மந்த்ரம் 8

சங்கரரின் முன்னுரை

தான் கூறுவதாகச் சொன்ன ரகசியமான பரம்பொருளைப் பற்றி, உபநிஷத் இப்போது கூறுகிறது :

य एष सुप्तेषु जागर्ति कामं कामं पुरुषो निर्मिमाणः ।
तदेव शुक्रं तद्ब्रह्म तदेवामृतमुच्यते ।
तस्मिन् लोकाः श्रिताः सर्वे तदु नात्येति कश्चन ।
एतद्वै तत् ॥

ய ஏஷ ஸுப்தேஷு ஜாகர்த்தி
காமம் காமம் புருஷோ நிர்மிமாண : ।
ததேவ சுக்ரம் தத் ப்ரஹ்ம ததேவாம்ருதம் உச்யதே ।
தஸ்மின் லோகா: ச்ரிதா: ஸர்வே
தது நாத்யேதி கஸ்சன । ஏதத் வை தத் ॥

எல்லாப் புலன்களும் உறங்கும்போதுகூட, தான் விழித்திருந்து, தனக்கு வேண்டியதையெல்லாம் படைத்துக்கொள்ளும் மெய்ப்பொருள் - தூய்மையானது. அதுவே ப்ரம்மம். அது இறவாது என்றுமிருப்பது என்று சொல்லப்படுகிறது. எல்லா உலகங்களும் அதில் பொருத்தப்பட்டிருக்கின்றன; யாரும் அதை மீறிச் செல்ல முடியாது. இதுதான் உண்மை.

சங்கரரின் உரை

தூக்கத்தில் புலன்களெல்லாம் அயர்ந்து ஒய்ந்திருக்கும் போது கூட, (அவரவர் மனத்திற்குப் பிடித்த ஆசைப்பொருட்களை ஆத்மா என்ற மெய்ப் பொருள், அவர்களுடைய கனவுகளில் தோற்றுவிக்கிறது.) ஆத்மா தூங்குவதில்லை. இந்தக் கனவுக்காட்சிகளையெல்லாம் உயிர்களுடைய அறியாமையைப் பயன்படுத்திக்கொண்டு மெய்ப்பொருள் தோற்றுவிக்கிறது.

அந்த மெய்ப்பொருள் ஒளிபொருந்தியது, தூய்மை யானது; அதுவே பிரம்மம். அதைத்தவிர வேறு இரண்டாவது பொருள் ஒன்றும் இல்லை. அதுவே 'அழிவற்றது' என்று மெய்ந்நூல்களில் சொல்லப்படுகிறது.

பூமி முதலிய உலகங்களெல்லாம் அந்த மெய்ப் பொருளால் காப்பாற்றப்படுகின்றன. எல்லா உலகங்களுக்கும் அதுவே ஆணிவேரானது ''எதுவும் அதை மீறிச் செல்ல முடியாது'' என்ற உபநிஷத்தின் வாக்கியத்தை (கடோபநிஷத் II.1.9) முன்போலவே பொருள் செய்து கொள்ளவேண்டும்.

மந்த்ரம் 9

சங்கரரின் முன்னுரை

இரண்டற்ற மெய்ப்பொருளை எவ்வளவுதான் ஆதாரங் களுடன் திரும்பத் திரும்ப எடுத்துச் சொன்னாலும், சிலருடைய இதயங்களில் அது இடம் பெறுவதில்லை. இதற்குக் காரணம், உண்மையான ஆர்வம் அவர்களிடத்தில் இல்லாததுதான். பலவேறுவகையாக வாதம் செய்யும் தார்க்கவாதிகளினால், அவர்களுடைய அறிவு குழம்பிப் போயிருக்கிறது. இது பற்றியே, அவர்களுக்கு உண்மையைப் புகட்டும் பொருட்டு, மீண்டும் மீண்டும் உபநிஷத் சலிப்பில்லாமல் பேசுகிறது :

अग्निर्यथैको भुवनं प्रविष्टो रूपं रूपं प्रतिरूपो बभूव ।
एकस्तथा सर्वभूतान्तरात्मा रूपं रूपं प्रतिरूपो बहिश्च ॥

அக்னிர் யதைகோ புவனம் ப்ரவிஷ்ட்டோ
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பபூவ ।
ஏகஸ்-ததா ஸர்வபூதாந்தராத்மா
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பஹிஸ்ச ॥

எப்படி ஒரே அக்கினி, உலகில் எரியும் பலபொருட்களின் வடிவங்களை எடுத்துக் கொள்கிறதோ - அதேபோல எல்லாப் பொருட்களிலும் உள்ளிருக்கும் மெய்ப்பொருள் ஒன்றாக இருந்தாலும், அந்தந்தப் பொருட்களுக்கு ஏற்பப் பல வடிவங்களை எடுத்துக் கொள்கிறது. அதே சமயம் அவற்றிற்கு வெளியேயும் இருக்கிறது.

சங்கரரின் உரை

ஒளிவீசும் தன்மையுடைய நெருப்பு ஒன்றாக இருந்தாலும், உலகில் பிரவேசித்து, எரியக்கூடிய மரக்கட்டை போன்ற பொருட்களினுடைய அந்தந்த உருவங்களுக்கேற்ப தானும் பல வேறு வடிவங்களை எடுத்துக்கொள்கிறது. அதே போல, எல்லாவற்றிலும் உள்ளே இருக்கும் மெய்ப்பொருள் தான் ஒன்றாக இருந்தாலும், தன் நுண்ணிய தன்மையால், பலவேறு பொருட்களின் உருவங்களுக்கேற்றபடி தானும் உருவங்கொள்கிறது.

அதே சமயம், அந்த மெய்ப்பொருள் எல்லாவற்றிற்கும் வெளியேயும் இருக்கிறது, ஆகாயம் போல. (குடம் முதலிய வற்றின் உள்ளே இருக்கும் ஆகாயம் ஒரு குடவடிவத்தில் காணப்படும். அதே சமயத்தில், அக்குடத்தைவிட வேறாக அதற்கு வெளியிலேயும் இருக்கிறது).

மந்த்ரம் 10

சங்கரரின் முன்னுரை

இதே போன்று, இன்னொரு உதாரணத்தையும் உபநிஷத் சொல்கிறது.

वायुर्यथैको भुवनं प्रविष्टो रूपं रूपं प्रतिरूपो बभूव ।
एकस्तथा सर्वभूतान्तरात्मा रूपं रूपं प्रतिरूपो बहिश्च ॥

வாயுர் யதைகோ புவனம் ப்ரவிஷ்ட்டோ
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பபூவ ।
ஏகஸ் ததா ஸர்வபூதாந்தராத்மா
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பஹிஸ்ச ॥

காற்று ஒன்றேயானாலும், அது உலகில் புகுந்து பல பொருட்களின் அமைப்பைப்பொறுத்துப் பல்வேறு வடிவங் களை எடுத்துக் கொள்வதைப்போல், எல்லாப் பொருட்களிலும் உள்ள ஒரே மெய்ப்பொருள், அந்தந்த பொருட்களுக்கேற்ற வாறு பல வடிவங்களாகத் தோன்றுகிறது. அதே சமயம், அது அவற்றிற்கு வெளியேயும் இருக்கிறது.

சங்கரரின் உரை

உயிர்மூச்சாக இருக்கும் காற்று, பல உடம்புகளில் புகுந்து அவற்றிற்கேற்ற வடிவங்களாகிறது. இதெல்லாம் முன்னால் சொன்ன விளக்கம் போலப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மந்த்ரம் 11

சங்கரரின் முன்னுரை

''எல்லாவற்றிலும் ஒரே மெய்ப்பொருள்தான் இருக்கிறது என்றால், உலகில் ஏற்படும் துன்பங்களெல்லாம் அந்த மெய்ப் பொருளையும் பாதிக்குமே'' என்ற சந்தேகம் உண்டாகலாம். அதற்குப் பதிலை இந்த மந்த்ரம் சொல்லுகிறது.

सूर्यो यथा सर्वलोकस्य चक्षुः न लिप्यते चाक्षुषै-र्बाह्यदोषैः ।
एकस्तथा सर्वभूतान्तरात्मा न लिप्यते लोकदुःखेन बाह्यः ॥

ஸூர்யோ யதா ஸர்வலோகஸ்ய சக்ஷு:
ந லிப்யதே சாக்ஷுஷைர்–பாஹ்யதோஷை: ।
ஏகஸ்–ததா ஸர்வபூதாந்தராத்மா
ந லிப்யதே லோக துக்கேன பாஹ்ய: ॥

உலகம் எல்லாவற்றிற்கும் கண்ணாக விளங்கும் சூரியன், (அதைப்பார்க்கும்) கண்களினுடைய குற்றத்தினாலோ அல்லது வேறு வெளியிலிருக்கும் மாசுகளினாலோ பாதிக்கப்படுவதில்லை. இதேபோல, எல்லாவற்றிலும் உள்ள ஒரே மெய்ப் பொருள், உலகத்துத் துக்கங்களினால் பாதிக்கப்படுவதில்லை. அது எல்லாவற்றையும் கடந்து நிற்பதுதான் அதற்குக் காரணம்.

சங்கரரின் உரை

கண்ணிற்கு ஒளி கொடுத்து உதவுவதும், சுத்தமான பொருட்களையும், மலம், மூத்திரம் முதலிய அசுத்தமான பொருட்களையும் கூட கண்ணிற்குத் தெரியும்படி வெளிச்சம் தருவதுமான சூரியன், இவற்றையெல்லாம் பார்க்கும் உயிர்களுக்குக் கண்ணாகி விளங்குகிறது. இருந்தாலும், அழுக்கும் அசுத்தமும் நிறைந்த பொருட்களைப் பார்ப்பதால் உண்டாகும் பாவங்களால் மாசுபட்ட கண்ணின் குற்றங்களினாலும், அசுத்தமான பொருட்களோடு தொடர்பு கொண்டதால் வரும் வேறு குற்றங்களினாலும், சூரியன் பாதிக்கப் படுவதில்லை. இதுபோலவே, உலகில் உள்ள எல்லாவற்றிலும் குடிகொண்டிருக்கும் ஒரே மெய்ப்பொருள் உலகத்துத் துயரங்களினால் பாதிக்கப்படுவதில்லை. அது எல்லாவற்றையும் கடந்து நிற்பதே அதற்குக் காரணம். ஆசாபாசங்களினாலும், பலவிதமான செயல்களைச் செய்வதனாலும், துன்பங்கள் மக்களுக்கு ஏற்படுகின்றன.

ஒன்றிலும் கலக்காத மெய்ப்பொருளின்மேல், தங்கள் அறியாமை காரணமாகப் பல வேறு குற்றங்களையும் குணங்

களையும் மனிதன் சுமத்தி விடுவதுதான் இதற்குக் காரணம். ஆனால், குற்றங்கள் ஒன்றுமே மெய்ப்பொருளில் கிடையாது. பாம்பாகத் தோன்றும் கயிறு, வெள்ளியாகத் தோன்றும் சிப்பி, தண்ணீர் போல் தோன்றும் பாலைவன மணல், தூசி படிந்தது போல் தோன்றும் ஆகாயம் இவற்றிலெல்லாம், பாம்பு, வெள்ளி, தண்ணீர், தூசி என்பவை வெறும் பொய்த் தோற்றங்களே. கயிறும், சிப்பியும், பாலைவன மணலும், ஆகாயமும்தான் உண்மையில் இருப்பவை. பாம்பு முதலிய பொய்த் தோற்றங்களெல்லாம் கயிறு முதலிய உண்மை யானவற்றில் இருப்பது போல் தவறாகப் பார்க்கப்படுகின்றன. உதாரணமாக, கயிற்றைப் பாம்பாகப் பார்க்கும் தவறு, கயிற்றைச் சரியாகத் தெரிந்து கொள்ளாததனால் ஏற்படுகிறது. அதாவது, கயிற்றைப்பற்றிய அறியாமையினால் உண்டாகிறது. ஆனால், அந்தக் கயிறுதான் - பாம்பு என்ற பொய்த் தோற்றத் திற்கும் இடமளிக்கிறது. எனினும் பாம்பின் தோற்றம் கயிற் றைப் பாதிப்பது கிடையாது. இது போல, மெய்ப்பொருள்தான் உலகத்தின் தோற்றங்களுக்கு எல்லாம் இடமளிக்கிறது. எனினும், அதை இத்தோற்றங்கள் பாதிப்பதில்லை. அதாவது, அறியாமை என்ற குற்றம் மெய்ப்பொருளைத் தீண்டாது. காரியம், அவற்றின் பலன் என்பது போன்ற பொய்யான எண்ணங்களை மெய்ப்பொருளான ஆத்மாவிற்கு இருப்பதாக மனிதர்கள் தவறாகக் கற்பனை செய்து கொள்கிறார்கள், இந்தத் தவற்றினால், பிறவி, மரணம் முதலியவற்றிலிருந்து மீள முடியாமல் துன்பப்படுகிறார்கள். ஆனால், எல்லாவற்றிற் குள்ளும் இருக்கும் மெய்ப்பொருளோ - பொய்யறிவினால் வரும் துன்பங்களை அடைவதில்லை. ஏனென்றால், இந்தப் பொய்யான மாய உலகத்தின் நடப்புக்களையெல்லாம் அது கடந்து அவற்றிற்கு வெளியே இருக்கிறது. கயிற்றைப் பாம்பாக எண்ணும் தவற்றை ஒருவன் செய்தால், கயிற்றுக்கு அதனால் ஒரு கெடுதியும் இல்லை. அது எப்போதும் தன்னிலை மாறாமல் அப்படியேதான் இருக்கிறது. அதற்கும் பொய்யான

பாம்பிற்கும் சம்பந்தமே கிடையாது. இதைப் போல, பொய் யான அறிவின் குற்றத்தினால் தோன்றும் உலகம், அதில் ஒட்டாமல் இருக்கும் மெய்ப்பொருளைத் தீண்டாது.

மந்த்ரம் 12

एको वशी सर्वभूतान्तरात्मा एकं रूपं बहुधा यः करोति ।
तमात्मस्थं येऽनुपश्यन्ति धीराः तेषां सुखं शाश्वतं नेतरेषाम् ॥

ஏகோ வசீ ஸர்வ—பூதாந்தராத்மா
ஏகம் ரூபம் பஹுதா ய:கரோதி ।
தம் ஆத்மஸ்த்தம் யே அநுபச்யந்தி தீரா:
தேஷாம் ஸுகம் சாச்வதம் நேதரேஷாம் ॥

ஒன்றாய், (எல்லாவற்றையும்) ஆள்வதாய், எல்லா வற்றிலும் உறையும் மெய்ப்பொருளாய், மாறாத ஒரே தன்மையதாய் இருந்து கொண்டு, பலவேறு உருவங்களாகத் தன்னைத் தோற்றுவிக்கும் அவரவர் இதயத்தில் வசிக்கும் ஆத்மாவை உணருகின்ற மெய்யறிவாளர்களுக்குத்தான் நிரந்தர மான அமைதி கிடைக்கிறது; மற்றவர்களுக்குக் கிடைக்காது.

சங்கரரின் உரை

மேலும், மெய்ப்பொருளே எல்லாவற்றிற்கும் மேலான இறைவன்; எங்கும் நிறைந்திருப்பவர்; தன்னிச்சையானவர்; தன்னைத்தவிர வேறு ஒன்றில்லாத தனியொருவர்; அவருக்கு இணையான, அல்லது - மேலான வேறு எதுவும் இல்லாதவர்; உலகங்கள் எல்லாவற்றையும் அடக்கி ஆள்பவர்; ஏனென்றால், அவர் எல்லாவற்றிற்கும் உள்ளிருக்கும் உண்மைத்தத்துவம். யாரும் புரிந்து கொள்ள முடியாத தன்னுடைய சக்தியினால் தன்னைப் பல்வேறு உருவங்களாகச் செய்து கொள்பவர். தான்

இருந்தபடியே இருந்துகொண்டு, இதெல்லாம் செய்பவர்; அவர் தான் (ஒன்றும் செய்யாமலே) எல்லாவற்றையும் இயக்குபவர். ஒரே சீரான தன்மையுடையவர். கலப்பில்லாத தூய அறிவானவர்.

ஒரு தனிப்பொருளாய் இருக்கும் அவர் மாயையினால் பலவேறு உருவங்களையும், அதற்கேற்ற பெயர்களையும் உண்டு பண்ணிக் கொள்பவர். உயிர்களின் உடல்களுக் குள்ளேயே அந்தரங்க இதய வெளியிலே தங்கியிருப்பவர். கண்ணாடியில் முகம் பிரதிபலிப்பதுபோல, அவரவர் புத்தியிலே அறிவாகத் தோன்றுபவர்.

உண்மையைப் பொய்த் தோற்றங்களிலிருந்து பிரித் தறியும் ஆற்றலுள்ள பெரியோர்கள், வெளியுலக நடவடிக்கை களை நிறுத்திவிட்டு, உள் முகமாக இந்த மெய்ப்பொருளை உணருகிறார்கள். சான்றோராகிய ஆசிரியரிடமிருந்து மறைகள் கூறும் உண்மையைத் தெரிந்து கொண்டு, மெய்ப்பொருளாகிற இறைவனைத் தங்களது சொந்த ஆத்மாவாக, நேரடியாகப் பார்க்கிறார்கள். அவர்களுக்குத்தான் நித்தியமான, பேரின்பம் கிடைக்கிறது; மற்றவருக்கு அது கிடைக்காது. நிலைத்த உண் மையை நிலையாத பொய்களிலிருந்து பகுத்தறிய முடியாமல், உலகத்து விவகாரங்களில் ஊறிப்போன மனிதர்களுக்கு இந்த சத்திய தரிசனம் கிட்டாது. எல்லையில்லாத பேரின்பம் தங்கள் உள்ளங்களிலேயே எப்போதும் ததும்பிக் கொண்டிருந்தும், அது அவர்களுக்குத் தெரிவதில்லை. அறியாமை அவர்களை அவ்விதம் தடுக்கிறது.

மந்த்ரம் 13

नित्योऽनित्यानां चेतनश्चेतनानां एको बहूनां यो विदधाति कामान् ।
तमात्मस्थं येऽनुपश्यन्ति धीराः तेषां शान्तिः शाश्वती नेतरेषाम् ॥

நித்யோ–அநித்யானாம் சேதனஸ்–சேதனானாம்
ஏகோ பஹூனாம் யோ விததாதி காமான் ।
தம் ஆத்மஸ்த்தம் யே அநுபச்யந்தி தீரா:
தேஷாம் சாந்தி: சாச்வதீ நேதரேஷாம் ॥

அழியும் பொருட்களுக்கு நடுவே அழியாதவராய், உணர்வுகளுக்கெல்லாம் நுண்ணுணர்வாய், தனியொரு தலைவனாய், வேண்டியது வேண்டியபடி எல்லோருக்கும் பகிர்ந்து வழங்குபவராய் உள்ள அந்த இறைவனைத் தங்கள் இதயத்துக்குள்ளேயே யார் காண்கிறார்களோ, அந்தப் பகுத் தறிவாளர்களே நித்யமான பேரின்பத்தைப் பெறுகிறார்கள்; மற்றவர்கள் அதைப் பெறுவதில்லை.

சங்கரரின் உரை

அழியும் பொருட்களுக்கிடையே தான் அழிவற்றதாய், பிரம்மா முதல் எல்லா உயிர்களின் உணர்வுகளுக்குள்ளே நுண்ணுணர்வாய் இருப்பது பரம்பொருள். சுடும் சக்தி இல்லாத தண்ணீர் முதலியவை, நெருப்பின் மூலம் எரிக்கும் சக்தி பெறுவதுபோல், உயிர்களுக்குள் இருக்கும் உணர்வுக ளெல்லாம் ஆத்மா என்ற மெய்ப்பொருளின் உணர்வினால் உண்டானவையாகும்.

முற்றுமுணர்ந்த தலைவர் இந்த ஆத்மா. உலகில் அவரவர் வினைக்கேற்ப பலன்களை எளிதாகப் பகிர்ந் தளிக்கும் ஓர் அருளாளர். அவரது உண்மையைப் பொய்த் தோற்றங்களிலிருந்து பிரித்து அறிபவர்கள், இதயத்தில் அவரை உணர்கிறார்கள். அவர்களுக்கு எல்லையற்ற அமைதி கிடைக் கிறது. இந்த அமைதியே அவர்களது ஆத்மா. மற்றவர்களுக்கு இந்த அமைதி கிட்டுவதில்லை.

மந்த்ரம் 14

நசிகேதஸ் கேட்பான்:

तदेतत् इति मन्यन्ते अनिर्देश्यं परमं सुखम् ।
कथं नु तद्विजानीयां किमु भाति विभाति वा ॥

ததேதத் இதி மன்யந்தே அநிர்தேச்யம் பரமம் ஸுகம் ।
கதம் நு தத்–விஜானீயாம் கிமு பாதி விபாதி வா ॥

''சொற்களினால் சொல்ல முடியாததும், ஒப்புயர்வில் லாததும் 'இது' என்று மெய்யுணர்ந்த பெரியோர்களனால் சுட்டிக் காட்டப்படுவதுமான பேரின்பப்பொருளை நான் எப்படி அறிவேன்? அது தன் ஒளியினாலேயே தானே விளங்குவதா? அல்லது வேறு விதமானதா?''

சங்கரரின் உரை

அந்த மெய்யறிவு, சொற்களினால் எடுத்துக்கூற முடியாத பேரின்பமாகும். சாதாரண மக்களுடைய அறிவுக்கும் பேச்சுக்கும் மெய்ப்பொருள் அப்பாற்பட்டது. எனினும், ஆசைகளைத் துறந்த சான்றோர்கள், அதை ''இது தான்'' என்று நேரிடையாகச் சுட்டிக்காட்டுகிறார்கள். ''அதை நான் எப்படி அறிவேன்? ஆசைகளை முற்றும் துறந்த சான்றோர்களைப் போல், நானும் அந்தப் பேரின்பப் பொருளை என் மனத்தில் எப்படி உணர்வேன்? அது தன்னொளியினால் (வேறு ஒன்றையும் எதிர்பாராமல்) தானே விளங்குகிறதா? அவ்வாறு தெளிவாக நம் மனத்தினால் உணர முடியுமா? அல்லது முடியாதா?'' (என்பது நசிகேதஸ்ஸின் கேள்வி.)

மந்த்ரம் 15

சங்கரரின் முன்னுரை

இந்தக் கேள்விக்குப் பதில், அந்தப் பரம்பொருள் தன் சொந்த ஒளியினாலேயே தனித்துத் தெளிவாகப் பிரகாசிக்கிறது என்பதுதான். இது எப்படி என்பதை அடுத்த மந்த்ரம் சொல்லு கிறது.

न तत्र सूर्यो भाति न चन्द्रतारकं नेमा विद्युतो भान्ति कुतोऽय मग्निः ।
तमेव भान्तं अनुभाति सर्वं तस्य भासा सर्वमिदं विभाति ।।

इति काठकोपनिषदि द्वितीयाध्याये द्वितीया वल्ली ।

நதத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம்
நேமா வித்யுதோ பாந்தி குதோஅயம் அக்னி: ।

தமேவ பாந்தம் அநுபாதி ஸர்வம்
தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி ।

இதி காடகோபநிஷதி த்விதீயாத்யாயே த்விதீயா வல்லீ ॥

அந்தப் பரம்பொருளில் சூரியன் பிரகாசிப்பதில்லை; சந்த்ரனும் நக்ஷத்ரங்களும் பிரகாசிப்பதில்லை; மின்னல்களும் கூடப் பிரகாசிப்பதில்லை. நெருப்பைப் பற்றிக் கேட்பானேன்? பரம்பொருளின் பிரகாசத்தையொட்டி, மற்ற எல்லாம் பிரகாசிக் கின்றன. அதனுடைய ஒளியினால் இவையெல்லாம் ஒளிபெறு கின்றன.

சங்கரரின் உரை

எல்லாவற்றிலும் உள்ளே விளங்கும் மெய்ப்பொருளில், சூரியன் ஒளிதருவது இல்லை. மற்ற எல்லாவற்றையும் சூரியன் தன் ஒளியினால் காட்டினாலும், மெய்ப்பொருளை அது தன் ஒளியினால் காட்டுவதில்லை. இதேபோல, சந்த்ரனும்,

நக்ஷத்ரங்களும், மின்னல்களும் அதைக் காட்டுவதில்லை. இப்படியிருக்கும் போது, நாம் அன்றாடம் பார்க்கும் நெருப்பு அதைக் காண்பிக்காது என்று சொல்லவே வேண்டாம்.

சுருக்கமாகச் சொன்னால், மேற்சொன்ன ஒளி மண்டலங்களெல்லாம், அந்த மெய்ப்பொருளின் ஒளியினாலேயே ஒளி பெறுகின்றன. எப்படித் தண்ணீர், எரியும் தீவட்டி, முதலியவை நெருப்பின் உதவியினால் அதிலிருந்து ஒளி யூட்டப்பட்டு பிரகாசிக்கின்றனவோ, எப்படி அவற்றிற்குத் தனியே ஒளிவீசும் சக்தி கிடையாதோ, அதுபோலவே பரம் பொருளின் ஒளியினாலே சூரியன் முதலிய இவை எல்லாம் ஒளிபெற்று வெளிச்சம் தருகின்றன.

பரம்பொருள் ஒன்றுதான் ஒளியுள்ளது. அதுதான் சூரியன் முதலிய பலவேறு பொருட்களுக்கு ஒளிதந்து பலவேறு வகை ஒளி மண்டலங்களாகக் காட்சியளிக்கிறது. இவ்வாறு பரம்பொருளின் மூலம் ஒளிபெறும் பல வேறு ஒளி மண்டலங்களின் பிரகாசத்திலிருந்து, பரம்பொருளின் ஒளி இயல்பானது என்பது தெரிகிறது. மற்ற எல்லாம் அதனுடைய ஒளியைப் பெற்று வெளிச்சம் கொடுக்க, பரம்பொருள் வேறொன்றையும் எதிர்பாராமல் தானே பிரகாசிக்கிறது. தன்னிடத்தே இயல்பாகவே ஒளி இல்லாவிட்டால், பிறவற்றிற்கு அதைக் கொடுக்கமுடியாது. பானை முதலிய பொருட்கள் பிறவற்றைக் காண்பிக்கும் ஒளி உடையவை அல்ல. ஆனால் சூரியன் முதலியவை, பிறவற்றை ஒளிவீசிக் காண்பிக்கின்றன. அந்தச் சூரியன் முதலியவையும் பரம்பொருளின் ஒளியினாலேயே ஒளிபெறுகின்றன.

கடோபநிஷத்தில் இரண்டாவது அத்தியாயத்தில்
இரண்டாவது வல்லீயும்

சங்கரரின் உரையும் முற்றிற்று.

அத்தியாயம் 2

மூன்றாவது வல்லீ

சங்கரரின் முன்னுரை

பஞ்சு இருப்பதைப் பார்த்து, அது காய்க்கும் மரம் ஒன்று இருக்கவேண்டும் என்பதை, நாம் ஊகத்தினால் அறிந்து கொள்வதைப் போல, இந்த உலகம் என்ற மரத்திற்கு ஆணிவேராக இருக்கும் பரம்பொருளின் இயல்பை, நன்கு நிச்சயித்துத் தெரிந்து கொள்வதற்காக உபநிஷத்தின் இந்தப் பகுதி தொடங்குகிறது.

மந்த்ரம் 1

ऊर्ध्वमूलोऽवाक्शाख एषोऽश्वत्थःसनातनः ।
तदेव शुक्रं तद्ब्रह्म तदेवामृतमुच्यते ।
तस्मिंल्लोकाः श्रिताः सर्वे तदु नात्येति कश्चन एतद्वै तत् ॥

ஊர்த்வ மூலோஅவாக்சாக ஏஷோஅச்வத்த: ஸநாதன:
ததேவ சுக்ரம் தத் ப்ரஹ்ம ததேவ அம்ருதம் உச்யதே ।
தஸ்மிம்ல்லோகா: ச்ரிதா: ஸர்வே தது நாத்யேதி
கஸ்சன ஏதத்வை தத் ॥

எப்பொழுதிலிருந்து இருக்கிறது என்று தெரிந்துகொள்ள முடியாத அநாதியான இந்த உலகம் என்ற அரசமரத்தினுடைய வேர்கள் மேலேயும், கிளைகள் கீழேயும் இருக்கின்றன. அதன் ஆணிவேர் தூய பரம்பொருளாகும்; அது அழியாதது என்று சொல்லப்படுகிறது. அதில் எல்லா உலகங்களும் பொருத்தப் பட்டிருக்கின்றன. அதைத் தாண்டி ஒருவரும் மேலே போக முடியாது. இதுவே அது.

சங்கரரின் உரை

இந்த உலகம் என்ற மரத்தின் வேர்கள் மேலே இருக்கின்றன. அதுவே பகவானான விஷ்ணுவின் இடமாகும். வெளிப்படாது இருக்கும் மாயையிலிருந்து, அசையாமல் நிற்கும் மரங்கள் வரை உள்ள இந்த உலகத்தின் வேர்கள், மேலே இருக்கின்றன. இதற்கு 'வ்ருக்ஷம்' (மரம்) என்று பெயர் ஏற்பட்டதற்கே காரணம் - அது என்றாவது ஒரு நாள் வெட்டி வீழ்த்தப்படுவது என்பதுதான். பிறப்பு, இறப்பு, முதுமை, துன்பம் முதலிய பல தீமைகள் இதில் உள்ளன.

கணத்துக்குக் கணம் இது மாறிக் கொண்டேயிருக்கிறது. பார்த்துக் கொண்டிருக்கும் போதே அது அழிந்து போகிறது. மாயாஜாலம் போலவும், பாலைவனத்துக் கானல் நீர்போலவும், வானத்தில் மேகக் கூட்டங்கள் மாறிமாறி அமைக்கும் கந்தர்வ நகரம் போலவும் இவ்வுலகம் இருக்கிறது.

கடைசியில் இந்த உலகம் என்ற மரம் முற்றும் அழிந்து, இல்லாமற் போய்விடுகிறது. வாழைமரத்தின் தண்டுமாதிரி, இது உள்ளே அச்சு இல்லாமல் இருக்கிறது. நம்பிக்கையில்லாத எண்ணிறந்த மனிதர்களிடத்தில் பல்வேறு ஐயப்பாடுகளுக்கு இடமாயிருக்கிறது. உண்மை தெரிந்தவர்களுக்குத்தான் அதன் உண்மையான இயல்பு வெளிப்படுகிறது. வேதாந்தங்களை விசாரித்து அறியும் பரம்பொருளில்தான் அது வேரூன்றி யிருக்கிறது. அறியாமை, ஆசை, செயல், மாயை என்னும் வித்திலிருந்து அது முளைத்து வளர்கிறது.

முதன் முதலில் அதிலிருந்து முளைவிடுவது, ஹிரண்ய கர்ப்பர் - என்ற காரியப் பிரம்மம் தான். இவர், அறிவும் செயல் களும் தனது உடன்பிறந்த ஆற்றல்களாக உள்ளவர்.

இன்னும், இந்த உலக–மரம் எல்லா உயிர்களுடைய பல வகையான சூக்ஷ்ம உடல்களைத் தன் அடிமரமாகக் கொண்டது.

ஆசை என்னும் நீரினால் இது ஊட்டம் பெற்று, வளர்கிறது. புலன்களின் வழியே அறியப்படுகின்ற பொருட்கள் இதன் இளம் துளிர்கள். வேதங்களும், அதன் வழிவந்த மெய்ந் நூல்களும், தர்க்கமும், கல்வியும், போதனையும் அதன் இலைகள்.

வேள்விகளும், தானமும், தவமுமாகிய செயல்க ளெல்லாம், அதன் அழகிய மலர்கள். இன்பதுன்பங்கள் அதன் சுவைகள்; எல்லா உயிர்களும் வாழ்வதற்கு, அதன் பழங்களே உணவாகும். அதன் சல்லிவேர்கள் நன்கு முதிர்ந்து ஒன்றுக் கொன்று பின்னிப் பிணைந்து, உறுதியாகப் பற்றிக் கொண்டு, இந்தப் பழங்களுக்குச் சத்தூட்டுகின்றன.

பிரம்மா வசிக்கும் சத்தியலோகம் தொடங்கி ஏழு உலகங்களும் அதில் உள்ள பறவைக் கூடுகள். பிரம்மா முதலிய உயிரினங்களெல்லாம் இந்தக் கூடுகளைக் கட்டும் பறவைகள்.

இந்த மரம் மிகுந்த இரைச்சல் உடையது. நாட்டியம், பாட்டு, இசைக் கருவிகள், விளையாட்டு, கைதட்டல், சிரிப்பு, ஒன்றையொன்று கட்டி இழுத்தல், கூச்சல், ''ஆகா ஊகூ'' என்ற மகிழ்ச்சியுடன் கூடிய வியப்பொலிகள், ''என்னை விடு; என்னை விட்டுவிடு'' என்று துன்பத்தில் மக்கள் இடும் ஓலங்கள் - எல்லாமாகச் சேர்ந்து ஒரே சந்தடியும் சத்தமுமாக இருக்கிறது இந்த மரம்.

வேதாந்தத்தைக் கற்று, 'பரம்பொருளும் நானும் வேறு அல்ல' என்ற மெய்யுணர்வினால் தோன்றும் வைராக் கியத்தினால், இந்த மரம் வெட்டிச் சாய்க்கப்படுகிறது. இந்த உலகம் என்ற மரத்திற்கு ''அச்வத்தம்'' என்று பெயர். காரணம், இது நிலைகொள்ளாமல் இருப்பதே. காற்றினால் அசைக்கப் படும் மரம்போல, இந்த உலகமென்னும் மரமும் ஆசாபாசங் களினாலும், ஓயாத வேலைகளினாலும் அலைக்கழிக்கப் படுகிறது.

இதன் கிளைகள் கீழ்நோக்கிப் படர்ந்திருக்கின்றன. சுவர்க்கம், நரகம், விலங்குகள், பேய்கள் என்பவைதான் இதன் கிளைகள். எப்பொழுது இது தொடங்கியது — என்பது தெரியாமல், அநாதி காலமாக இது இருந்து வருகிறது.

(இத்தகைய உலக மரத்தின் ஆணிவேராக இருப்பது மெய்ப்பொருள். அது தூய்மையை எடுத்துக்காட்டும் வெண் மையாக ஒளி வீசுகிறது; அது அறிவே வடிவானது. அதைத் தவிர வேறொன்று கிடையாது. அதுவே எல்லாவற்றிற்கும் பெரியது. அது என்றுமுள்ளது; அழியாதது.)

இந்தப் பரம்பொருளைத்தவிர மற்றதெல்லாம் பொய் யான தோற்றங்கள்; அவை மாறிக் கொண்டேயிருப்பவை; வெறும் பேச்சளவில் இடம் பெறும் பெயர்கள் மட்டுமே. (பார்க்க: சாந்தோக்கிய உபநிஷத் VI. 1.4) எனவே, அவை அழிந்து போகின்றன. மேகக் கூட்டங்களில் தோன்றும் நகரங்கள் போலவும், கானல் நீர் போலவும் இவை பொய்த் தோற்றங்கள். இவையாவும் உண்மையான பரம்பொருளைச் சார்ந்திருக்கின்றன. உண்மை தெரியவரும்பொழுது, இவை மறைந்து போகின்றன. படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று நிலைகளிலும் உலகம் தோற்றங்கொள்கிறது. பரம் பொருளோ என்றும் உள்ளது, அதை எதுவும் கடக்கமுடியாது; அதில் மாறுதலே உண்டாக முடியாது என்பது கருத்து. மண்ணால் செய்யப்படும் பானை முதலியவை மண்ணின் குணத்தையே பெற்று எப்பொழுதும் மண்ணாகவே இருப்பது போல, உலக மாறுதல்கள் எதுவும் பரம்பொருளை மாற்ற முடியாது. இதுதான் உண்மை.

மந்த்ரம் 2

சங்கரரின் முன்னுரை

ஒருவேளை சிலர் கீழ்க்கண்டவாறு சொல்லக்கூடும் : ''உலகத்தின் ஆணிவேரான பரம்பொருளை அறிந்தவர்கள்

இறவாமையை அடைகிறார்கள் என்று சொல்கிறீர்கள். ஆனால் அப்படிப்பட்ட பரம்பொருள் என்று ஒன்றும் உண்மையில் கிடையாது. இந்த உலகமெல்லாம் வெறும் சூன்யத்திலிருந்து தோன்றியிருக்கிறது.''

இந்தக் கூற்று தவறானது.

यदिदं किं च जगत् सर्वं प्राण एजति निःसृतम् ।
महद्भयं वज्रमुद्यतं य एतद्विदुरमृतास्ते भवन्ति ॥

யதிதம் கிம் ச ஜகத் ஸர்வம்
ப்ராண ஏஜதி நி:ஸ்ருதம் ।
மஹத்–பயம் வஜ்ரமுத்யதம் ய
ஏதத் விது: அம்ருதாஸ் தே பவந்தி ॥

பரம்பொருள் ஒன்று இருப்பதால் இந்த உலகம் முழுவதும் தோன்றுவதும், இயங்குவதுமான நிகழ்ச்சி நடக்கிறது. உயரே தூக்கிப் பிடிக்கப்பட்ட இந்திரனுடைய வஜ்ராயுதம் பெரும் அச்சத்தை உண்டாக்குவது போல, பரம்பொருளிடத்து உள்ள ஓர் அச்சத்தால், உலகம் ஒழுங்காக இயங்குகிறது. இந்த உண்மை புரிந்தவர்கள் இறவா - நிலை என்ற பெரும் பேற்றை அடைகிறார்கள்.

சங்கரரின் உரை

பரம்பொருள் ஒன்று இருப்பதனாலேயே, இந்த உலக மெல்லாம் தோன்றி, ஒழுங்காக இயங்குகிறது. இவ்வாறு உலகம் தோன்றுவதற்குக் காரணமான பரம்பொருள் பெரும் அச்சத்தை உண்டாக்குகிறது, உயரே தூக்கப்பட்ட வஜ்ராயுதத் தைப் போல. வஜ்ராயுதத்தை உயரத் தூக்கிப் பிடித்திருக்கும் தலைவனைக் கண்டு, அவனுடைய வேலைக்காரர்கள் பயந்து

போய், அவனுடைய கட்டளைகளை ஒழுங்காக நிறை வேற்றுவது போல, சூரியனும், சந்திரனும், கிரகங்களும், நட்சத்திரக் கூட்டங்களும் அடங்கிய இந்த உலகம், ஒரு கணநேர ஓய்வும் இன்றி ஒழுங்காக நடந்து கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம், அதை ஆட்டுவிக்கும் ஆண்டவன் ஒருவன் இருப்பதுதான். இந்த ஆண்டவன் என்ற பரம்பொருள் அவரவர் மனத்தின் செயல்களையெல்லாம் சாக்ஷியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று புரிந்துகொண்டவர்கள், மரணமிலாப் பெரு வாழ்வை அடைகிறார்கள்.

மந்த்ரம் 3

சங்கரரின் முன்னுரை

பரம்பொருளிடத்தில் உள்ள அச்சத்தினால் உலகம் எப்படி ஒழுங்காக நடக்கிறது என்பதைச் சொல்லுகிறது இந்த மூன்றாவது மந்த்ரம்.

भयादग्निस्तपति भयात्तपति सूर्यः ।
भयादिन्द्रश्च वायुश्च मृत्युर्धावति पञ्चमः ॥

பயாதக்னிஸ்–தபதி பயாத் தபதி ஸூர்ய: ।
பயாத் இந்த்ரஸ்ச வாயுஸ்ச ம்ருத்யுர் தாவதி பஞ்சம : ॥

பரம்பொருளிடத்தில் உள்ள பயத்தினால் நெருப்பு சுடுகிறது; அந்த பயத்தினால் சூரியன் ஒளி தருகிறான்; அந்த பயத்தினால் இந்திரனும், வாயுதேவனும் செயற்படுகிறார்கள்; அதேபோல், ஐந்தாவதாக மரண தேவதையும் செயல்படுகிறது.

சங்கரரின் உரை

பரம்பொருளிடத்து உள்ள பயத்தால் நெருப்பு எரிக் கிறது; அதே பயத்தால் சூரியன் ஒளிகொடுக்கிறான்; அதே பயத்தால் இந்திரனும், வாயு தேவனும் - தத்தம் வேலையைச்

செய்கிறார்கள். ஐந்தாவதாக யமனும் தன் பணியைச் செய் கிறான். கையில் வஜ்ராயுதத்தை எடுத்து உயர்த்திக் கொண்டு, இந்த உலகக் காவலர்களை மேற்பார்வையிடும் அரசன் ஒருவன் இல்லாவிட்டால், ஒழுங்காக எதுவும் நடக்காது. தலைவனிடம் உள்ள அச்சத்தினால் நடுங்கி, வேலைக்காரர்கள் ஒழுங்காகத் தம் பணிகளைச் செய்கிறார்கள் அல்லவா? அதுபோல.

மந்த்ரம் 4

इह चेदशकद्बोद्धुं प्राक्शरीरस्य विस्रसः ।
ततः सर्गेषु लोकेषु शरीरत्वाय कल्पते ॥

இஹசேத் அசகத்–போத்தும் ப்ராக் சரீரஸ்ய விஸ்ரஸ: ।
தத: ஸர்கேஷு லோகேஷு சரீரத்வாய கல்பதே ॥

உடல் (மரணமடைந்து) விழுவதற்கு முன்னால் ஒருவன் இங்கேயே உண்மையைத் தெரிந்து கொண்டால், அவன் வீடு பேறு பெறுகிறான். இல்லாமற்போனால், மறுபடி-மறுபடி இந்த உலகங்களில் உடலெடுத்துப் பிறந்துகொண்டே இருப்பான்.

சங்கரரின் உரை

எதனிடத்துள்ள பயத்தினால், எல்லாம் தத்தம் வேலையைச் செய்கின்றனவோ, அதை, இந்தப் பிறப்பிலேயே, உடல் மரணமடைந்து விழுவதற்கு முன்னமே, ஒருவன் அறிந்து கொள்வதில் வெற்றி பெற்றுவிட்டால், அவன் உலகக்கட்டுக் களிலிருந்து விடுதலை அடைகிறான். அப்படி வெற்றி பெறா விட்டால், உண்மையை அறிந்துகொள்ளாத காரணத்தால், எல்லா உயிர்களும் பிறந்து-இறந்து உழல்வதைப்போல, இவனும் உடல்களை எடுத்து, மறுபடி-மறுபடிப் பிறக்கிறான்.

மந்த்ரம் 5

சங்கரரின் முன்னுரை

எனவே, உடல் சாய்வதற்கு முன்னமே, தன்னைத்தான் ஒருவன் உணர முயலவேண்டும். ஏனெனில், இந்த உடலில்தான், ஒரு கண்ணாடியில் பார்ப்பது போல, ஆத்மா என்ற தன்னையே - தெளிவாகப் பார்க்க முடியும்; வேறு உலகங்களில், இது சாத்தியமில்லை. ஒருவேளை பிரம்ம தேவன் என்ற நான்முகக் கடவுளின் உலகத்தில் இது முடியலாம். ஆனால், அந்த உலகத்தை அடைவது மிகமிகக் கடினம். எப்படி? இதை இந்த மந்த்ரம் சொல்கிறது.

यथाऽदर्शे तथाऽत्मनि यथा स्वप्ने तथा पितृलोके ।
यथाऽप्सु परीव ददृशे तथा गन्धर्वलोके
छायातपयोरिव ब्रह्मलोके ॥

யதா ஆதர்சே ததா ஆத்மனி
யதா ஸ்வப்னே ததா பித்ருலோகே ।
யதா அப்ஸு பரீவ தத்ருசே ததா
கந்தர்வலோகே சாயாதபயோரிவ ப்ரஹ்மலோகே ॥

கண்ணாடியில் பார்ப்பதுபோலத் தன் புத்தியிலும், கனவில் பார்ப்பதைப் போல மூதாதையரின் உலகத்திலும், நீரில் தன் பிரதிபிம்பத்தைப் பார்ப்பதைப் போல கந்தர்வர்களின் உலகத்திலும், தெளிவில்லாமல் மெய்ப்பொருளை ஒருவன் பார்க்கிறான். பிரம்மாவின் உலகத்திலேயோ, நிழலையும் ஒளியையும் பிரித்து அறிவது போல, ஒருவன் தெளிவாகப் பார்க்கிறான்.

சங்கரரின் உரை

கண்ணாடியில் தெளிவாகத் தன் உருவத்தைப் பார்ப்பது போல, தன் புத்தியில் ஒருவன் மெய்ப்பொருளைப் பார்க்கிறான். அதாவது, அப்பழுக்கில்லாத கண்ணாடியைப்போலத் தெளிந்த புத்தியில் சத்திய தரிசனம் தெளிவாகக் கிடைக்கிறது.

கனவில் நிகழ்ச்சிகளும் நினைவுகளும் எப்படித் தெளிவாக இல்லாமல் மங்கித் தோன்றுகின்றனவோ - அதுபோல மூதாதையர்களின் உலகத்திலும், இந்த மெய்ப்பொருள் தெளிவின்றி ஒருவனுக்குத் தோன்றுகிறது. ஏனெனில், அந்த உலகத்தில் மூதாதையர், தாங்கள் செய்த வினைப் பயன்களை நுகர்வதில் ஆழ்ந்திருக்கிறார்கள்.

எப்படி நீரில் பிரதிபலிக்கும் பொருட்கள் தெளிவில்லாமல் கலங்கிக் குழம்பித் தெரிகின்றனவோ, அதுபோல, கந்தர்வரின் உலகத்தில் மெய்ப்பொருளுணர்வும் தெளிவின்றித் தோன்றுகிறது. மற்ற உலகங்களிலும் இதுபோலத்தான் ஏற்படுகிறது என்பது - வேதங்களின் சொற்களால் தெரிகிறது.

பிரம்மாவின் உலகம் ஒன்றிலேதான், இந்த ஆத்ம-அநுபூதி, மிகத் தெளிவாகக் கிடைக்கிறது. நிழலும் ஒளியும் எப்படித் துல்லியமாக வேறுபட்டுத் தெரிகின்றனவோ, அது போல, மெய்க்காட்சி, பிரம்மாவின் உலகத்தில் மிகத் தெளிவாகக் கிடைக்கிறது. ஆனால் படைப்புக் கடவுளான பிரம்மாவின் உலகம் கிடைப்பதரிது. அதற்கு எவ்வளவோ நல்வினைகளைச் செய்து வைத்து, அறிவையும் வளர்த்துக் கொண்டிருக்கவேண்டும். எனவே, அந்த மெய்ப்பொருளை இங்கு உலகத்தில் உயிரோடு இருக்கும் போதே அறிவதற்கு முயற்சி செய்ய வேண்டும் - என்பது கருத்து.

மந்த்ரம் 6

சங்கரரின் முன்னுரை

அந்த மெய்ப்பொருளைத் தெரிந்து கொள்வது எப்படி? அப்படி அதைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம்தான் என்ன? என்பதை இந்த மந்த்ரம் சொல்கிறது.

इन्द्रियाणां पृथग्भावं उदयास्तमयौ च यत् ।
पृथगुत्पद्यमानानां मत्वा धीरो न शोचति ॥

இந்த்ரியாணாம் ப்ருதக்பாவம் உதய–அஸ்தமயௌ ச யத் ।
ப்ருதக்–உத்பத்யமானானாம் மத்வா தீரோ ந சோசதி ॥

கண் முதலிய புலன்கள், தமக்குள் வேறுபட்டவை, தனித்தனியே உண்டாகி அழிபவை, என்பதை அறிந்த மனிதன் துயரத்தை அடைவதில்லை.

சங்கரரின் உரை

கண் - காது முதலிய புலன்கள் தத்தம் காரணங்களி லிருந்து தனித்தனியே உண்டானவை; தந்தமக்குரிய பொருட் களை அறிபவை. இவற்றிற்கிடையே உள்ள வேற்றுமைகளை அறிந்தவன், துயரம் அடையமாட்டான். இவை அனைத்தும் ஆத்மா என்ற மெய்ப்பொருளிலிருந்து வேறானவை. அந்த மெய்ப்பொருளோ மிகத் தூய்மையானது; எதையும் சாராமல் சுயேச்சையாக இருப்பது; அறிவே வடிவானது. புலன்கள் உண்டாவதையும் அழிவதையும் நன்கு ஆராய்ந்து அறிந்தவன் துயரமடையமாட்டான். ஒருவன் தூங்கும் பொழுது, அவனுடைய புலன்கள் அடங்குகின்றன; மறுபடி இவன் விழித்துக் கொள்ளும் பொழுது தாமும் தோன்றிச் செயல்படத் துவங்குகின்றன. எனவே இவை, பல மாறுபட்ட நிலைகளை உடையவை. ஆதலின் மெய்ப்பொருளிற்கும் - இவற்றிற்கும் சம்பந்தம் இல்லை. மெய்ப்பொருளோ மாறாது ஒரே நிலையில்

இருப்பது; ஒரே தன்மையை உடையது. எனவே, துயரத்திற்குக் காரணமாக, அது ஒரு போதும் இருக்காது. ''மெய்ப்பொருளான ஆத்மாவை அறிந்தவன் துயரத்தைக் கடக்கிறான்'' (சாந்தோக்ய உபநிஷத் : VII. 1.3) என்று வேதமும் கூறியிருக்கிறது.

மந்த்ரம் 7

சங்கரரின் முன்னுரை

(கண் முதலிய) புலன்களைவிட ஆத்மா வேறானது என்று உபநிஷத் எடுத்துச் சொல்லிற்று. எனவே, தன் ஆத்மாவை வெளியிலிருக்கும் உலகில் ஒருவன் காண முடியாது; அது ஒருவனின் உள்ளத்தின் உள்ளே அல்லவா இருக்கிறது.

சரி; இப்படி உள்ளத்திற்கும் உள்ளே அது இருப்பது எப்படி? இதை இந்த மந்த்ரம் சொல்லுகிறது.

इन्द्रियेभ्यः परं मनो मनसः सत्त्वमुत्तमम् ।
सत्त्वादधि-महानात्मा महतोऽव्यक्तमुत्तमम् ॥

இந்த்ரியேப்ய: பரம் மன: மனஸ: ஸத்த்வம் உத்தமம் ।
ஸத்த்வாததி–மஹான் ஆத்மா மஹத: அவ்யக்தம் உத்தமம் ॥

புலன்களைவிட மனம் உயர்ந்தது; மனதைவிட புத்தி உயர்ந்தது; தனித்தனி புத்தியைவிட மொத்த புத்தி உயர்ந்தது; அதைவிட வெளிப்படாது உள்ள மாயை உயர்ந்தது.

சங்கரரின் உரை

புலன்களைச் சொன்னபோதே, புலன்களுக்குரிய பொருட்களையும் சேர்த்துச் சொன்னதாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், இரண்டும் ஒரே வகையானவைதான். மற்றப்படி, இந்த மந்த்ரத்திற்கு முன்னர் வந்த உபநிஷத் மந்த்ரத்திற்கு (I. 3.10) என்ன விளக்கம் சொல்லப்பட்டதோ அதை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டும். இந்த

மந்த்ரத்தில் வரும் 'ஸத்த்வம்' என்ற சொல் 'புத்தி'யைக் குறிப்பிடுகிறது.

மந்த்ரம் 8

**अव्यक्तात्तु परः पुरुषः व्यापकोऽलिङ्ग एव च ।
यं ज्ञात्वा मुच्यते जन्तुः अमृतत्वं च गच्छति ॥**

*அவ்யக்த்தாத்து பர: புருஷ: வ்யாபகோ அலிங்க ஏவச
யம் ஞாத்வா முச்யதே ஜந்து: அம்ருதத்வம் ச கச்சதி*

உலகமாக இன்னும் வெளிப்படாத மாயையைவிட பரம்பொருள் உயர்ந்தது; அது எங்கும் நிறைந்தது; உலகத்தில் காணப்படும் எந்த குணங்களும் இல்லாதது; இதைத் தெரிந்து கொண்ட ஒருவன் விடுதலையடைந்து, இறவாமையைப் பெறுகிறான்.

சங்கரரின் உரை

மாயையைவிட பரம்பொருள் உயர்ந்தது. அந்த பரம் பொருள் எங்கும் நிறைந்தது. ஆகாயம் போன்றவற்றிற்கு, அதுதான் ஆதாரம். 'அலிங்கம்' என்றால் அறிவதற்குரிய அறிகுறி, அடையாளம். இவையொன்றும் பரம்பொருளுக்குக் கிடையாது என்று பொருள். அதாவது, புத்தி முதலிய அடையாளம் எதுவும் இல்லாதது - இந்த பரம்பொருள். உலகத்துப் பொருட்களின் குணங்கள் ஒன்றும் அதில் கிடையாது. இதை ஆசிரியரிடமிருந்தும் மெய்ந்நூல்களிலிருந்தும் அறிந்து கொண்டு, அறியாமை முதலிய இதயப் பாசக்கயிறுகளை ஒருவன் உயிருடனிருக்கும் பொழுதே அறுத்து எறிந்து விடுதலை பெறுகிறான். மரணமடையும்பொழுது, அந்த உடம்பு என்ற கட்டும் நீங்கி, இறவாமையை அடைகிறான்.

மந்த்ரத்தின் இந்தப் பகுதி, முன்சொன்னவற்றோடு சேர்த்துப் பின்வருமாறு பொருள் கொள்ளவேண்டும்.

அறிதற்கரிய பரம்பொருளை அறியும் ஒருவன் விடுதலை பெற்று இறவாமையை அடைகிறான்; அந்தப் பரம் பொருள் மாயையைவிட உயர்ந்தது.

மந்த்ரம் 9

சங்கரரின் முன்னுரை

அறிதற்கரிய ஒன்றை நாம் எப்படிக் காண முடியும்? இதுபற்றி இந்த மந்த்ரம் கூறுகிறது.

न संदृशे तिष्ठति रूपमस्य न चक्षुषा पश्यति कश्चनैनम् ।
हृदा मनीषा मनसाऽभिक्लृप्तो य एतद्विदुरमृतास्ते भवन्ति ॥

ந ஸம்த்ருசே திஷ்ட்டதி ரூபமஸ்ய
ந சக்ஷுஷா பச்யதி கஸ்சனைனம் ।
ஹ்ருதா மனீஷா மனஸாஅபிக்ல்ருப்த:
ய ஏதத் விது: அம்ருதாஸ்தே பவந்தி ॥

இந்தப் பரம்பொருளின் உருவத்தைப் பார்க்க முடியாது; அதை ஒருவரும் கண்ணால் கண்டதில்லை. மனதை நடத்துவதும் இதயத்தில் இருப்பதுமான புத்தியினால் இது அறியப் படுகிறது; இதை இவ்வாறு அறிகின்றவர்கள் இறவாமையை அடைகிறார்கள்.

சங்கரரின் உரை

உள்ளார்ந்த இந்த ஆத்மாவின் உருவம் நம் சாதாரணப் பார்வைக்குள் வராது. எனவே கண்களாலோ, மற்றப் புலன்களாலோ இதை ஒருவரும் காணமுடியாது. அப்படியானால், அதை எப்படித்தான் அறிவது? என்றால், இதயத்துள் இருக்கும் புத்தியினால்தான் அதை அறியவேண்டும்.

நினைக்கும் ஆற்றலுள்ள ஒருவனுடைய புத்திதான் மனதையும் நடத்துகிறது. இதயத்தில் இருக்கும் அத்தகைய புத்தி வேறொரு பொருளையும் நினையாமல், மெய்ப்பொருளான ஆத்மாவையே உறுதியாக ஆராய்ந்து அறியும் பொழுது, அது தெரிகிறது. (''மெய்ப்பொருள் தெரிகிறது'' என்ற சொற்களை, வாக்கியம். முழுமை பெறுவதற்காகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.) இவ்வாறு ஆத்மாவே பரம்பொருள் என்பதை உணர்ந்தவர்கள் மரணமில்லாப் பெருவாழ்வு பெறுகிறார்கள்.

மந்த்ரம் 10

சங்கரரின் முன்னுரை

இதயத்தில் இருக்கும் இறைவனை அடைவது எப்படி ? அதற்கான யோகப்பயிற்சி இங்கு தரப்படுகிறது.

यदा पञ्चावतिष्ठन्ते ज्ञानानि मनसा सह् ।
बुद्धिश्च न विचेष्टते तामाहुः परमां गतिम् ॥

யதா பஞ்சாவதிஷ்ட்டந்தே ஞானானி மனஸா ஸஹ ।
புத்திஸ்-ச ந விசேஷ்டதே தாமாஹு: பரமாம் கதிம் ॥

எப்பொழுது பொருட்களை அறியும் அறிவு வாயில்களான ஐந்து புலன்களும் மனத்தோடு சேர்ந்து ஒடுங்கிவிடுகின்றனவோ, எப்பொழுது புத்தியும் தன் தொழிலை நிறுத்திவிடுகின்றதோ, அந்த நிலையை மிக உயர்ந்ததாகச் சொல்லுகிறார்கள்.

சங்கரரின் உரை

கண், காது முதலிய ஐந்து புலன்களும் அறிவுகள் எனப்படுகின்றன. அறிவிற்குக் காரணமாயிருப்பதால் அவை

'அறிவுகள்' என சொல்லப்படுகின்றன. இந்த ஐந்து புலன்களும் தத்தம் பொருட்களின் பால் செல்லாமல், சிந்திக்கும் தொழில் செய்யும் மனமும் ஒய்ந்து, ஆத்மாவில் ஒடுங்குகின்றன. இதே போல், பகுத்தறிந்து முடிவெடுக்கும் புத்தியும் தன் தொழிலை நிறுத்திவிடுகிறது. இந்த நிலையை மிக உயர்ந்த நிலை என்று சொல்கிறார்கள்.

மந்த்ரம் 11

तां योगमिति मन्यन्ते स्थिरामिन्द्रियधारणाम् ।
अप्रमत्तस्तदा भवति योगो हि प्रभवाप्ययौ ॥

தாம் யோகம் இதி மன்யந்தே ஸ்திராம் இந்த்ரிய தாரணாம் ।
அப்ரமத்தஸ்ததாபவதி யோகோ ஹி ப்ரபவ அப்யயௌ ॥

புலன்களை உறுதியாக நிலைப்படுத்துவதையே யோகம் என்று கருதுகிறார்கள். அந்த நிலையில் யோகிகள் மிகவும் விழிப்புடன் இருக்கிறார்கள். ஏனெனில், யோகம் வளர்வது முண்டு; தளர்வதும் உண்டு.

சங்கரரின் உரை

உள்ளேயும் வெளியேயும் உள்ள புலன்களை உறுதியான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதை யோகம் என்று (சான்றோர்) கருதுகிறார்கள். இந்த ''யோகம்'' என்ற சொல் உலகத்துப் பொருட்களின் தொடர்பிலிருந்து ''பிரிதல்'' என்று தான் பொதுவாகக் கூறப்பட்டாலும், இங்கு அதை ''தன்னி லையில் நிற்பது'' என்ற பொருளில் உபநிஷத் பயன்படுத்தி யிருக்கிறது. அறியாமை முற்றுமாக அழிந்த நிலை - இந்த யோகம். இது கைவரப் பெற்றபொழுது, ஒருவன் தவறு செய்வ தில்லை. எப்பொழுதும் இடைவிடாத எச்சரிக்கையுடன் மனத்தை ஒரு முனையில் நிறுத்துகிறான். இந்த எச்சரிக்கை, யோகத்தைத் தொடங்கும் நேரத்தில் இருக்கவேண்டும். இந்தச்

சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமாக இப்படித்தான் சொல்லியிருக்க வேண்டும். ஏனெனில், யோகம் தொடங்கிவிட்ட பின்னர், புத்தி முதலியவை தம் தொழிலை நிறுத்திவிடுவதால், எச்சரிக்கை இல்லாமலிருப்பதற்கு இடமேயில்லை. எனவே யோகத்தைத் தொடங்குவதற்கு முன்னமேயே, அதாவது, புத்தி முதலியவை தம் தொழிலை நிறுத்துவதற்கு முன்னமேயே - எச்சரிக்கையுடன் இருப்பது, வற்புறுத்தப்படுகிறது.

அல்லது (வேறுவிதமாக இதைச் சொன்னால்), புலன்களெல்லாம் உறுதியான கட்டுக்குள் இருக்கும் பொழுதுதான் இடையறாத கவனம் சாத்தியமாகும். இதைக் கருத்தில் கொண்டுதான் ''யோகத்தைப் பயிலும் அந்தச் சமயத்தில் யோகி தவறுகள் செய்வதேயில்லை'' என்று இந்த உபநிஷத் மந்த்ரம் (11) சொல்கிறது. ஏனென்றால், யோகம் வளர்வதும் உண்டு; தளர்வதும் உண்டு. யோகத்தைத் தளரவிடாமல் கவனமாக இருக்கவேண்டும் என்பது கருத்து.

மந்த்ரம் 12

சங்கரரின் முன்னுரை

புத்தியின் மூலம் அறியக்கூடிய பொருளாகப் பரம் பொருள் இருக்குமானால், அது ''இப்படிப்பட்டது'' என்று குறிப்பிட்டு அறியப்படவேண்டும். புத்தி முதலியவற்றின் தொழில் நின்றுவிட்டபின், அந்தப் பரம்பொருளை அறிவதற்குக் கருவியே இல்லாது போய்விடுவதால், பரம்பொருள் இருப்பதே கேள்விக்குரியதாகிவிடும். புத்தி முதலிய - அறிவுக் கருவிகளுக்குப் பொருளாக ஒன்று இருக்கும்பொழுதுதான், அது இருக்கிறது என்பதே தெரிய வரும். இது உலகத்தில் கண்கூடான உண்மை; அப்படியில்லாவிடில், அது இல்லை என்றுதான் முடிவு செய்யவேண்டும். அப்பொழுது யோகத்தால் பயனொன்றுமில்லை.

மாறாக, பரம்பொருள் என்ற ஒன்று இல்லவே இல்லை என்றுதான் தெரிந்து கொள்ளவேண்டும். அதைப் புத்தி முதலியவற்றால் அறிய முடியவில்லை என்பதுதான் இதற்குக் காரணம். இப்படியொரு சங்கடமான நிலைமை உண்டாகிவிட்டதால், அதற்கு இந்த மந்த்ரம் பதில் சொல்கிறது:

नैव वाचा न मनसा प्राप्तुं शक्यो न चक्षुषा ।
अस्तीति ब्रुवतोऽन्यत्र कथं तदुपलभ्यते ॥

நைவ வாசா ந மனஸா ப்ராப்தும் சக்யோ ந சக்ஷுஷா ।
அஸ்தீதி ப்ருவதோஅன்யத்ர கதம் தத் உபலப்யதே ॥

அந்த, பரம்பொருள் வாக்கினாலோ, மனத்தாலோ கண்ணாலோ அறிய முடியாதது. அதைப்பற்றி ''பரம்பொருள் இருக்கிறது'' என்று சொல்கின்றவர்கள், தன்னைத்தானே (பரம் பொருளாக) அறிவதல்லாமல், பிறர் மூலம் எப்படி அதை அறியமுடியும்?

சங்கரரின் உரை

பரம்பொருளை வாக்கினாலோ, மனத்தினாலோ, கண்ணால் பார்த்தோ, மற்றப் புலன்களாலோ தெரிந்து கொள்ள முடியாது - என்பதென்னவோ உண்மைதான். இருப்பினும், குணங்குறிகள் ஏதும் அதற்கு இல்லையென்றாலும், அந்தப் பரம்பொருள் இருக்கிறது என்பதில் எந்த ஐயமும் இல்லை. உலகங்களுக்கெல்லாம் அடிப்படையாக அது இருப்பதனால், அது இருப்பது உண்மை. காரியங்களாக விளைந்தவைகளை ''அவை இல்லை'' என்று மறுத்துக் கொண்டேபோனால், அவற்றின் மூலகாரணம் எதுவோ அதில் போய்த்தான் முடியும்; அந்த மூலகாரணமே அவற்றின் எல்லையாகும்; அந்தக் காரணம் இருக்கத்தான் வேண்டும். இதே போல, இந்த உலகங்களை அவற்றின் மூல காரணம் வரையில் தொடர்ந்து பின்னோக்கிச் சென்று பார்த்தால், ஓர் எல்லை வரும்.

அதற்கும் மேல் ஒரு காரணமும் இல்லை என்ற இடம் வரும். அது நிச்சயமான உண்மை. (அது இல்லையென்றால் உலகமே தோன்றியிருக்கமுடியாது.) இதேபோல, புத்தியால் அறிவதற் குரிய பொருட்களையெல்லாம் பொய் என்று தள்ளிவிட்ட பிறகு, புத்தியும் இல்லை என்றாகிவிடும். ஆனால், அப் பொழுது கூட, உண்மையான பரம்பொருள் இருக்கும்; அது அழியாது.

எது உள்ளது, எது இல்லாதது என்று நிச்சயிப்பதற்கு ஒரே ஒரு கருவி அறிவுதான். உலகத்திற்கு ஒரு மூல காரணம் கிடையாது என்றால் உலகம் எல்லாம் இல்லாமல் போய்விடும். ''பொருட்களே இவ்வுலகில் இல்லை'' என்ற அறிவுதான் உண்டாகும். ஆனால், அநுபவம் வேறாயிருக்கிறது. உலகத்தி லுள்ள பொருள்களைப் பற்றி ''இருக்கின்றன'' என்றுதான் அனுபவம் இருக்கிறது. மண்ணால் செய்யப்பட்ட பானை முதலியவை, அவற்றின் மூலகாரணமான மண்ணின் பல வடிவங்களாக இருப்பதாகத்தான் பார்க்கப்படுகின்றன.

ஆகையினால், உலகத்தின் மூலகாரணமான பரம் பொருள் உண்மை என்றே உணரப்படுகிறது. இதைச் சொல் கின்ற வேதத்தை நம்புகின்றவர்களைத்தவிர, ''ஒன்றுமே இல்லை'' என்று விபரீதமாகச் சொல்கின்ற சூன்யவாதிகள், ''உலகத்திற்கு மூலகாரணமான ஆத்மா என்ற ஒன்று இல்லை; உலகத்திற்குக் காரணம் என்று ஒன்றும் கிடையாது; அது இருப்பதுபோல் தோன்றி, முடிவில் இல்லாமல் போய்விடும்'' என்று பேசுகிறார்கள். இவர்கள் சொல்வது உண்மையானால், பரம்பொருள்பற்றிய அறிவு ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லா மற் போய்விடும். அதாவது, அதைத் தெரிந்துகொள்ளவே முடியாது என்பது கருத்து.

மந்த்ரம் 13

अस्तीत्येव-उपलब्धव्य: तत्त्वभावेन चोभयो: ।
अस्तीत्येवोपलब्धस्य तत्त्वभाव: प्रसीदति ॥

அஸ்தி இத்யேவ உபலப்தவ்ய: தத்த்வ-பாவேன ச உபயோ: ।
அஸ்தி-இத்யேவ உபலப்தஸ்ய தத்த்வ-பாவ: ப்ரஸீததி ॥

''இருக்கிறது'' என்றுதான் முதலில் பரம்பொருளை உணர வேண்டும். பின் அதை உள்ளபடி அறியவேண்டும். இவ்விரண்டு உணர்வுகளில், ''இருக்கிறது'' என்று பொதுவாக உணர்ந்ததையே, ''சிறப்பாக அறிவது'' என்பது மெய்யறிவு உண்டாவதற்கு மிகவும் உதவுகிறது.

சங்கரரின் உரை

'ஒன்றுமே இல்லை' என்று சாதிக்கும் சூன்ய வாதிகளின் தீய தொடர்பினை உதறித் தள்ளிவிட்டு மெய்ப்பொருளை இருக்கின்றதோர் உண்மையாக உணரவேண்டும். (அந்தப் பரம் பொருள்தான்) எல்லாவற்றையும் தோற்றுவித்து, அவற்றுள் எல்லாம் உட்தத்துவமாக இருக்கிறது. உயிர்களின் புத்தி முதலிய வற்றோடு கலந்து, தானே விளங்குகிறது. இப்படி ஒன்றிலும் கலக்காமல், எந்த ஒரு மாறுதலும் இன்றி, தன்னைத் தவிர வேறானதொன்றும் இல்லாமல், தான் தோற்றுவித்த உலக மெல்லாம் தன்னிடத்திலேயே ஒடுங்கிவிட, ''இருக்கிறது'' ''இல்லை'' என்ற பேச்சுக்களுக்கெல்லாம், அப்பாற்பட்டு, குணங்குறிகளற்று, எதனாலும் கட்டுப்படுத்தப்படாமல், தானே யாய், சுயேச்சையாக விளங்கும் மெய்ப்பொருளைத் தெரிந்து கொள்ள வேண்டும். வேதமும் ''உலகத்துப் பொருட்க ளெல்லாம் வெறும் பெயர்களே; பேச்சளவில் இருப்பவையே. மண்ணால் செய்யப்பட்ட சட்டி, பானை முதலியவை மண்ணைத் தவிர வேறல்ல. ''சட்டி என்றும் பானை என்றும் பெயர்பெற்று வழக்கில் இருந்தாலும், அவையெல்லாம்

உண்மையில் மண்ணைத் தவிர வேறில்லை; அவற்றில் மண்தான் சத்தியம்'' (சாந்தோக்ய உபநிஷத், VI. 1.4) என்று கூறியிருக்கிறது.

''இருக்கிறது'' என்று மட்டும் பொதுவாகத் தெரிந்து கொள்ளப்பட்ட மெய்ப்பொருளின் உண்மையான இயல்பைச் சிறப்பாகத் தெரிந்து கொள்ளும்பொழுது, அதை உலகத்தினுள்ளே இருக்கும் பொருளாக மட்டும் உணராமல், இன்னும் சிறப்பாக - உலகங்கள் எதுவும் இல்லாமல் தான் மட்டும் இருக்கும் உண்மையை உணர்வதே மெய்யறிவாகும். உலகத்தின் மூலாதாரமாய் விளங்குகின்ற நிலை ஒன்றும், உலகம் என்பதே இல்லாத தூய தனித்த நிலை ஒன்றுமாகப் பரம்பொருளுக்கு இரண்டு நிலைகள் உண்டு. இவ்விரண்டிற்குள், முதல் நிலையானது இரண்டாவது நிலைக்கு அழைத்துச் செல்லும் வழியாகும்.

பலபடியாகத் தோற்றமளிக்கும் உலகத்தினுள்ளேயும் பரம்பொருளைக் காணலாம். ''எல்லாவற்றிலும் அது இருக்கிறது'' என்று உலகத்துப் பொருட்களிடையேயும் கூட பரம் பொருள் விளங்குவதை உணர்ந்தால், உலகம் என்பதே இல்லாத, குணங்குறிகளற்றுத் தன்னைத் தவிர வேறொன்றும் இல்லாத, தனித்த, தூய, இரண்டற்ற பரம்பொருளை உணர்வதற்கு அது உதவுகிறது. ''இது அன்று; இது அன்று'' என்று பிருஹதாரண்ய – உபநிஷத் (II. 3.6; III. 9.26) கூறி, அது தூலமன்று; நுட்பமன்று; குட்டையன்று, நெட்டையன்று (III. 8.8) என்று மேலும் சொல்லி எதையும் சாராத பரம் பொருளை அதன் சிறப்பான சொந்த நிலையில் காண்பிக்கிறது. ''உலகத்துப் பொருட்கள் எதுவும் பரம்பொருளில் இல்லை'' என்ற உண்மையைத்தான் இப்படி வேதம் சொல்கிறது. தைத்திரீய உபநிஷத்தும் (II. 7.1) ''மாறாதது, உருவமில்லாதது, சொற்களினால் சொல்ல முடியாதது'' என்றெல்லாம் காண்பிக்கிறது.

மந்த்ரம் 14

यदा सर्वे प्रमुच्यन्ते कामा येऽस्य हृदि श्रिताः ।
अथ मर्त्योऽमृतो भवत्यत्र ब्रह्म समश्नुते॥

யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யே அஸ்ய ஹ்ருதி ச்ரிதா: ।
அத மர்த்யோ அம்ருதோ பவதி அத்ர ப்ரஹ்ம ஸமச்னுதே ॥

இதயத்தைக் கவ்வியிருக்கும் ஆசாபாசங்களெல்லாம் உதிர்ந்துவிட்ட பொழுது, மனிதர் இறவாமை பெறுகிறார்கள்; இந்த உலகிலேயே பரம்பொருளாகிறார்கள்.

சங்கரரின் உரை

மெய்யறிவு பிறப்பதற்கு முன் ஒருவனுடைய இதயத்தைப் பிடித்திருந்த ஆசாபாசங்களெல்லாம், மெய்யறிவு பிறந்த பிறகு பொடிப்பொடியாகி அழிந்து விடுகின்றன. மெய்யறிவு பெற்றபிறகு, ஒருவன் ஆசைப்படக்கூடியது என்ன இருக்க முடியும் ? உண்மையில் ஆசைகளும் பாசங்களும் ஒருவனது ஆத்மாவில் இல்லை; அவனது புத்தியாகிற இதயத்தில்தான் இடம் பிடித்திருக்கின்றன. ''ஆசை, சிந்தனை, சந்தேகம் முதலியவை எல்லாம் மனதைத் தவிர வேறில்லை'' என்று (பிருஹதாரண்யக–உபநிஷத் I. 5.3) கூறியிருக்கிறது அல்லவா?

மெய்யறிவு பிறப்பதற்குமுன், பிறவி, மரணம் இரண்டிற்கும் ஆட்பட்டிருந்த மனிதன், மெய்யறிவு பெற்றவுடன் இறவாமையை அடைகிறான். அறியாமையும், ஆசாபாசங்களும், அதன் விளைவான செயல்களும் தான் மரணம் எனப்படுகின்றன. அவை அழிந்தவுடன், மரணமும் இல்லை. உடம்பிலிருந்து உயிர் வெளியேறுவதற்குக் காரணமான மரணம் இல்லை என்று ஆகிவிட்டால், உடலை விட்டு வெளியேறுவது என்பதும் இல்லை. ஆகவே, மெய்யறிவு பெற்றவன் இந்த உடல் உயிரோடிருக்கும் பொழுதே, ஆசாபாசங்களெல்லாம் நீங்கி,

பரம்பொருளை அடைகிறான். அதாவது பரம்பொருளாகவே இருக்கிறான்.

மந்த்ரம் 15

சங்கரரின் முன்னுரை

ஆசாபாசங்களெல்லாம் எப்பொழுது அழியும்? இதை அடுத்த மந்த்ரம் சொல்லுகிறது.

यदा सर्वे प्रभिद्यन्ते हृदयस्य इह ग्रन्थयः ।
अथ मर्त्यो अमृतो भवति एतावत् हि अनुशासनम् ॥

யதா ஸர்வே ப்ரபித்யந்தே ஹ்ருதயஸ்ய இஹ க்ரந்தய: ।
அத மர்த்யோ அம்ருதோ பவதி ஏதாவத் ஹி அநுசாஸனம் ॥

இந்த உடம்பில் வாழ்ந்து கொண்டிருக்கும்பொழுதே, இதயத்தின் ஆசாபாச முடிச்சுக்களையெல்லாம் அவிழ்த்து விட்டால், மனிதன் அமரனாகிறான். இதுதான் எல்லா உபநிஷத்துக்களும் கூறும் அறிவுரையாகும்.

சங்கரரின் உரை

அறியாமையால் விளைந்து - ஒருவனைக் கெட்டியாகக் கட்டிப்போடும் இதயத்தின் ஆசாபாச முடிச்சுக்களெல்லாம் சிதறி அழிந்து போகின்றபொழுது, இங்கே உயிருடன் இருக்கும் பொழுதே அவன் விடுதலை பெறுகிறான்.

''இந்த உடம்பே நான்'', என்றும் ''இந்தச் செல்வம் எல்லாம் என்னுடையது'' என்றும், ''நான் சுகமாக இருக்கிறேன்; நான் துயரத்தில் இருக்கிறேன்'' என்றெல்லாம் நினைப்பதுதான் அறியாமை (அவித்யை) எனப்படுகிறது.

இதற்கு நேர் மாறாக ''பரம்பொருளும் நானும் ஒன்றே, வேறுவேறல்ல; ஓயாமல் பிறந்து இறந்து வளையவரும் சிற்றுயிர் அல்ல நான்'' என்ற மெய்யறிவு உண்டாகி, அறியா மையின் தளைகள் அற்று விழும் பொழுது, இதயத்தின் முடிச் சுக்களான ஆசாபாசங்களெல்லாம் முழுதும் அழிந்து விடுகின்றன. அப்பொழுது, மரணத்திற்குட்பட்டிருந்த மனிதன் அமர நிலையை அடைகிறான். இவ்வளவுதான் உண்மை. இதற்கும் மேலாக - இன்னும் ஏதோ சொல்வதற்கு இருக்குமோ என்று எதிர்பார்க்க வேண்டியதில்லை.

இதுவே (எல்லா உபநிஷத்துக்களும் சொல்லும்) முடிவான உபதேசம்

மந்த்ரம் 16

சங்கரரின் முன்னுரை

''இங்கேயே பரம்பொருளை அடைகிறான்'' (கடோப நிஷத் II. 3.14) என்று சொன்னதன் மூலம், ''மெய்யறிவு பெற்ற ஒருவன் விடுதலை பெற்றபின் இடம் பெயர்ந்து வேறு எங்கும் போவதில்லை; இந்த உடலிலேயே மெய்யுணர்வோடு வாழ் கிறான்'' என்று உபநிஷத் தெரிவித்தது. அப்படி மெய்யறிவு பெற்றவனுக்கு இதயமுடிச்சுக்களெல்லாம் அழிகின்றன. ''எங்கும் நிறைந்ததும், குணங்குறிகளற்றதும், எதையும் சார்ந்து நில்லாமல் சுயேச்சையானதுமான பரம்பொருளும் நானும் வேறல்ல; ஒன்றே'' என்ற அந்த மெய்யறிவைப் பெற்றவன் உடலில் உயிர் வாழ்ந்திருக்கும்போதே - இந்த உடலிலிருந்து விடுதலையடைந்து விடுகிறான்.

மரணமடைந்து வேறு உலகங்களுக்கு - மெய்யறிவு பெறாதவர்கள் போவது போல, இவன் போவதில்லை. இதையே வேதமும் உறுதிப்படுத்துகிறது. இப்படி மெய்யறிவு பெற்றவன் மரணமடைந்தால் அவனுடைய புலன்கள் எங்கும்

போவதில்லை. பரம்பொருளாகவே இருந்து பரம்பொருளி லேயே ஒடுங்குகிறான்'' (பிருஹதாரண்யக-உபநிஷத், (V-4.6) என்று கூறப்பட்டிருக்கிறது.

ஆனால், மெய்யறிவு பெறுவதில் அதிக முதிர்ச்சி பெறாதவர்களும், வேள்வி முதலிய சமயச் சடங்குகளையும் உபாஸனைகளையும் மட்டுமே செய்பவர்களும், நான்முகனு டைய உலகத்தை அடைவதற்கு மட்டும் தகுதி உள்ளவர்களும், இதற்கெல்லாம் நேர் எதிராகத் தீயசெயல்களைச் செய்து கொண்டு இந்தப் பூவுலகத்தில் வசிக்கும் தகுதியை மட்டுமே பெற்றவர்களும் கூட நல்ல கதியைப் பெறுவதற்காக - ஒரு குறிப்பிட்ட பாதையை - அடுத்துவரும் பதினாறாவது மந்த்ரம் எடுத்துச் சொல்கிறது. இந்தக் கட உபநிஷத் விளக்கிக் கொண்டிருக்கும் மெய்யறிவைப் பெற்றால், வரும் பெரும் பயனைப் புகழ்வதற்காக, இப்படி ஒரு பாதையை அது காட்டுகிறது.

மேலும், நாசிகேத–அக்னியைப் பற்றிய கேள்வி முன்னர் எழுப்பப்பட்டு, அது விளக்கவும் பட்டது. அந்த நாசிகேத–அக்னியைப் பற்றிய அறிவின் பலனை அடைவதற்குரிய முறையும் இப்பொழுது கூறப்படவேண்டும். இதற்காக இந்த மந்த்ரம் தொடங்கப்படுகிறது.

शतं चैका च हृदयस्य नाड्यः
तासां मूर्धानं अभिनिःसृतैका ।
तयोर्ध्वमायन्-अमृतत्वमेति
विष्वङ्ङन्या उत्क्रमणे भवन्ति ॥

சதம் சஏகா ச ஹ்ருதயஸ்ய நாட்ய:
தாஸாம் மூர்தானம் அபிநிஸ்ஸ்ருதைகா ।
தயோர்த்வம்–ஆயந் அம்ருதத்வமேதி
விஷ்வங்ஙன்யா உத்க்ரமணே பவந்தி ॥

இதயத்திலுள்ள நாடிகள் மொத்தம் நூற்றி ஒன்றாகும். அவற்றில் ஒன்று தலை வழியாகப் போகிறது. இறைவனைத் தியானித்து மரணமடைபவர்கள் அந்த நாடி மூலமாக வெளியேறுகிறார்கள்; பின் இறவாமையை அடைகிறார்கள். வேறு திக்கில் செல்லும் இதர நாடிகள், மரணத்தைப்பின் தொடர்ந்து செல்வதற்கு வழிகளாகின்றன.

சங்கரரின் உரை

மனிதனுடைய இதயத்திலிருந்து வெளிச்செல்லும் நாடிகள் நூறு. அவற்றோடு ஸுஷும்ணா நாடியும் சேர்ந்து மொத்தம் நூற்றி ஒன்று. ஸுஷும்ணா நாடி தலையின் உச்சியைப் பிளந்துகொண்டு வெளிச் செல்கிறது. ஒருவனது மரண காலத்தில், இந்த ஸுஷும்ணா நாடி மூலமாக மனதைக் கட்டுப் படுத்தி, இதயத்தில் அது ஒருமுனைப்படும்படி நிறுத்த வேண்டும். மரணத்திற்குப்பின் இந்த ஸுஷும்ணா நாடி வழியாக வெளிச் சென்று, சூரியனுடைய வீதியை அடைந்து, அமர நிலையை ஒருவன் அடைகிறான். ஆயினும் இந்த நிலை முக்தியன்று; மிக உயர்ந்த நிலை; அவ்வளவே. ''உலகமெல்லாம் ஊழிக்காலத்தில் ஒடுங்கும் இடமான பிரம்மாவின் உலகம் 'அமரநிலை' என்ப்படும்' என்று விஷ்ணு–புராணம் கூறுகிறது. (ஆபூத–ஸம்ப்லவம் ஸ்தானம் அம்ருதத்வம் ஹி. பாஷ்யதே.)

அல்லது, இதற்கே வேறுவிதமாகவும் பொருள் சொல்லலாம். பிரம்மாவின் உலகத்தில் தங்கி அங்கு ஒப்பில்லாத இன்பங்களை அநுபவித்து, பின்னர் ஒருவன் பிரம்மாவுடன் கூடவே அமரநிலையை அடைகிறான்.

இந்த அமரநிலையை முக்தியாகவே கொள்ளலாம்.

மற்ற நூறு நாடிகளும் பலவேறு திக்குகளில் பிரிந்து சென்று, மறுபடி-மறுபடி பிறவி, மரணம் என்ற நிலைகளுக்கு வழியாகின்றன. அதாவது, இந்த மண்ணுலக வாழ்க்கைக்கே காரணமாகின்றன.

மந்த்ரம் 17

சங்கரரின் முன்னுரை

இப்பொழுது உபநிஷத் எல்லா அத்தியாயங்களின் ஸாராம்சத்தையும் எடுத்து முடிவாகச் சொல்லுகிறது.

अङ्गुष्ठमात्रः पुरुषोऽन्तरात्मा सदा जनानां हृदये सन्निविष्टः ।
तं स्वाच्छरीरात्प्रवृहेन्-मुञ्जादिवेषीकां धैर्येण ।
तं विद्याच्छुक्रममृतं तं विद्याच्छुक्रममृतमिति ॥

அங்குஷ்ட மாத்ர: புருஷோ அந்தராத்மா
ஸதா ஜனானாம் ஹ்ருதயே ஸந்நிவிஷ்ட்ட: ।

தம் ஸ்வாச்—சரீராத் ப்ரவ்ருஹேந்—
முஞ்ஜாதிவ இஷீகாம் தைர்யேண ।
தம் வித்யாச்—சுக்ரமம்ருதம் வித்யாச்—
சுக்ரமம்ருதம் இதி ॥

மனிதரின் இதயத்துள் கட்டைவிரல் அளவுள்ள மெய்ப் பொருள் என்றும் வசிக்கிறது. உடலிலிருந்து வேறாக அதை ஒருவன் பிரித்து அறிய வேண்டும். முஞ்ஜைப் புல்லிலிருந்து அதன் நடுத்தண்டைப் பிரித்து எடுப்பதுபோல பிரித்து அறிய வேண்டும். அந்த மெய்ப்பொருளைத் தூயதாகவும் - அழியாத தாகவும் அறியவேண்டும்.

சங்கரரின் உரை

மனிதருடைய இதயத்தில் கட்டைவிரல் அளவுள்ள மெய்ப்பொருள் சிற்றுயிராக எப்பொழுதும் வசிக்கிறது. இதற் கெல்லாம் கடோபநிஷத் மந்த்ரங்களை (II. 1.12,13) விளக்கும் போது ஏற்கனவே பொருள் சொல்லியாயிற்று. அந்த மெய்ப்

பொருளை தன்னுடைய உடம்பிலிருந்து ஒருவன் பிரித்து அறியவேண்டும்.

முஞ்ஜைப் புல்லிலிருந்து அதன் உள்ளிருக்கும் தண்டைப் பிரித்து எடுப்பதுபோலத் திறமையாக எடுக்க வேண்டும்.

அப்படி உடம்பைவிட வேறானது என்று பிரித்து அறியப் பட்ட அறிவே வடிவமான மெய்ப்பொருளை, தூயதாகவும் என்றுமுள்ளதாகவும் அறியவேண்டும்; ஏற்கனவே உபநிஷத் சொன்ன பரம்பொருள் அதுவே.

இந்த மந்த்ரத்தின் மூன்றாவது அடியில் ''அதை அறிவாயாக! அதை அறிவாயாக!'' என்று இரண்டு முறை சொன்னது உபநிஷத் முடிவுற்றதைக் காண்பிக்கும் பொருட்டாக.

மந்த்ரம் 18

சங்கரரின் முன்னுரை

நசிகேதஸ்ஸைப்பற்றிய வரலாற்றோடு கடோபநிஷத் தொடங்கியதல்லவா? அந்த வரலாற்றின் உட்கருத்தை இந்த 18ஆம் மந்த்ரம் இப்பொழுது சொல்லி, மெய்யறிவின் உயர்வைப் புகழ்கிறது.

मृत्युप्रोक्तां नचिकेतोऽथ लब्ध्वा
विद्यामेतां योगविधिं च कृत्स्नम् ।
ब्रह्मप्राप्तो विरजोऽभूद्विमृत्युः
अन्योऽप्येवं यो विदध्यात्ममेव ॥

ம்ருத்யுப்ரோக்தாம் நசிகேதோஅத லப்த்வா
வித்யாமேதாம் யோகவிதிம் ச க்ருத்ஸ்னம் ।
ப்ரஹ்மப்ராப்தோ விரஜோ–அபூத் விம்ருத்யு:
அன்யோஅப் ஏவம் யோ வித் அத்யாத்மமேவ ॥

புண்ணியம், பாவம், குணம், குற்றம், ஆசாபாசம், அறியாமை என்பவற்றை முதலில் நீக்கி, மரணத்திற்கு அதிபதியான யமனால் உபதேசிக்கப்பட்டு - இந்த மெய்யறிவை நசிகேதஸ் பெற்றான்; யோகத்தையும் முழுதும் கற்றான். இவ்வாறு பரம் பொருளை அடைந்தான்.

இந்த நசிகேதஸ்ஸைப் போலவே யார் தமக்குள்ளிருக்கும் ஆத்மாவை - அல்லது - மெய்ப்பொருளை அறிகிறார்களோ அவர்களும் அந்த பரம்பொருளை அடைகிறார்கள்.

சங்கரரின் உரை

யமதருமனிடமிருந்து வரங்களைப் பெற்று, அவரால் உபதேசிக்கப்பட்ட இந்தப் பிரம்ம–வித்யை என்ற மெய்யறிவையும் அடைந்து, யோகத்தையும் அதன் துணைச் சாதனங்களோடும் பலன்களோடும் முழுவதும் கற்றுப் பரம் பொருளை உணர்ந்து, நசிகேதஸ் முக்தி பெற்றான். பாவ புண்ணியங்களையும் ஆசாபாசங்களையும் அறியாமையையும் மெய்யறிவினால் ஏற்கனவே கடந்தவன் அவன்.

நசிகேதஸ் மட்டும்தான் இந்தப் பெரும் பேற்றைப் பெற்றான் என்பதில்லை. எல்லோருமே அவனைப்போல மெய்யறிவைப் பெறமுடியும். அவரவர் உடலுக்குள்ளேயே தங்கியிருக்கும் மெய்ப் பொருளை (ஆத்மாவை), பேருண்மையாக அறிந்த எவரும் முக்தி பெறலாம். ஆனால் தன்னைத் தவிர வேறாக அதை எண்ணும் மற்ற எந்த வழியினாலும் - இந்த முக்தியைப் பெறமுடியாது.

இவ்வாறு, மெய்ப்பொருளும் தானும் வேறல்ல - என்று தன்னைத் தானே யார் மேற்சொன்னவாறு உணர்கிறார்களோ, அவர்களும் தூய்மை பெற்று முக்தியடைகிறார்கள் என்பதைச் சேர்த்துச் சொல்லவேண்டும்.

மந்த்ரம் 19

சங்கரரின் முன்னுரை

ஆசிரியரும் மாணவனும் மெய்யறிவைப் பெறும் இந்த முயற்சியில் நேரக்கூடிய குற்றங்களை நீக்கும் பொருட்டு இந்தச் சாந்தி மந்த்ரம் என்ற அமைதிப் பிரார்த்தனை செய்யப் படுகிறது.

सह नाववतु । सह नौ भुनक्तु । सह वीर्यं करवावहै ।
तेजस्विनावधीतमस्तु । मा विद्विषावहै ॥
ओं शान्तिः शान्तिः शान्तिः ॥
इति काठकोपनिषदि द्वितीयाध्याये तृतीया वल्ली ॥

ஸஹ நாவவது । ஸஹ நௌ புனக்து ।
ஸஹ வீர்யம் கரவாவஹை । தேஜஸ்வினௌ
அதீதம் அஸ்து । மா வித்விஷாவஹை ।
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।

இதி காடகோபநிஷதி த்விதீயாத்யாயே த்ருதீயா வல்லீ ॥

பரம்பொருளான அவர் நம்மிருவரையும் காப்பாற்றட்டும்; நம்மிருவருக்குமே மெய்யறிவின் பலனை அவர் அளிக்கட்டும்; நாம் இருவரும் சேர்ந்தே அந்த அறிவின் சக்தியைப் பெறுவோம்; நாம் கற்கும் கல்வி நமக்கு ஆற்றலைப் பெருக்கட்டும்; நாம் ஒருவரை ஒருவர் பகைக்காமலிருப் போமாக !

அமைதி! அமைதி! அமைதி! இதோடு காடகோப நிஷத்தில் இரண்டாவது அத்தியாயத்தின் மூன்றாவது வல்லீ முடிந்தது.

கடோபநிஷத் முற்றுப்பெற்றது.

சங்கரரின் உரை

மெய்யறிவைப் புகட்டி, பரம்பொருள் நம்மிருவரையும் காக்குமாக ! அந்த மெய்யறிவின் பலனையும் அளித்து அது நம்மைக் காப்பாற்றுமாக ! மெய்யறிவினால் பிறக்கும் சக்தியை நாமிருவரும் சேர்ந்தே பெறுவோமாக !

மேலும், அறிவுக் கூர்மையுள்ள நாம் இருவரும் கற்றது, கசடறக் கற்கப்பட்டதாகட்டும் ! நாம் கற்றது அனைத்தும் நமக்கு ஆற்றலை அளிக்கட்டும் ! நாமிருவரும் ஒருவரை ஒருவர் பகைக்காமலிருப்போமாக ! கல்வி கற்கும்போதும் கற்பிக்கும் போதும் தெரியாமல் நேர்ந்துவிட்ட தவறுகளின் காரணமாக, ஆசிரியன்-மாணவன் என்ற நம்மிருவரிடையே மனக்கசப்பு ஏற்பட வேண்டாம். அமைதி ! அமைதி ! அமைதி !

மூன்று முறை அமைதிக்காக வேண்டிக்கொண்டது எல்லாவகையான தீமைகளும் ஒருசேர விலகுவதன் பொருட்டாகவே.

ஓம் !

ஸ்ரீ சங்கரரின் கடோபநிஷத் உரை முற்றிற்று.

Printed By : **BALAJI OFFSET PRINTERS.**
Chennai - 106. Ph: 4759094, 4751794.